# காலமும் கவிஞர்களும்

# 02

'அருங்கலைக்கோன்', வித்துவான்,
டாக்டர் N. சுப்புரெட்டியார், M.A., B.SC., L.T., Ph.D.,
தமிழ்த்துறைத் தலைவர், பேராசிரியர்,
திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி

விற்பனை உரிமை
பாரி நிலையம்
184, பிராட்வே, சென்னை-600 108.

முதற் பதிப்பு ஜனவரி 1958
இரண்டாம் பதிப்பு நவம்பர் 1971

© S. இராமலிங்கம் M.SC.,
(ஆசிரியரின் முதல் மகன்)

KAALAMUM KAVIG'NARKALUM

Price : Rs. 6-00

Available at :
S. R. SUBRAMANIA PILLAI
Publishers,
9, Philips Street, MADRAS-1.

ஷண்முகம் பிரஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை-1.

காரைக்குடி அழகப்பா பயிற்சிக் கல்லூரி

முதல்வர்

## உயர்திரு. ப. துரைக்கண்ணு முதலியார்

அவர்கள் அளித்த

# முன்னுரை

கவிஞர்கள் காலத்தையும் வாழ்க்கையையும் சித்திரிக்கும் மேதைகள். அன்னாருடைய கவிதைகள் கற்பனைகளைத் தம்மகத்தே ஏற்று, சொல்லோவியங்களைத் தருகின்றன. இயற்கையோடு இயைபு காண்பவர்களும் கவிஞர்களே. அவர்கள் இயற்கைக் கூத்தினை இறுகப் பிடித்து இடத்திற்கேற்பத் தாம் சித்திரிக்கும் காட்சிகளில் இணக்கத்தையும் காண்பார்கள். அவர்களுடைய சித்திரங்கள் பலபடியாகப் பெருகிவிட்டால் காவிய நிலை எய்துகின்றன. காவியப் பாத்திரங்கள் நிலவும் நாடு பல்வேறுபாடுகளுக்கிடையே எல்லா நாட்டினர்க்கும் எக்காலத்திற்கும் உடன்பாடாக அமைகின்றது. நாட்டு மக்கள் நலம்பெற இறை வழிபாட்டினை மேற்கொண்டு ஆன்ம ஆற்றலுக்கு வழி தேடுகின்றனர்; உள்ளம் தூய்மை எய்தியபிறகு அவர்களது அறிவு ஊற்றுப் பெருக்கடைகின்றது; அதனல் அறிவியல் வளர்ச்சி பெற்று நாட்டுக்கு அப்பாலுள்ள அறிவினைத் தழுவுவதற்கு வேற்று மொழிகளில் அமைந்துள்ள கருத்துக்களையும் அவாவுகின்றனர். அத்தகைய முயற்சியில் தமது மொழியின் அகலத்தையும் ஆழத்தையும் கண்டு வியக்கும் நிலை ஏற்படுகின்றது. பிறநாட்டு நோக்கினெடு ஏற்படும் தொடர்பு காரணமாக வாணிகம் வளர்கின்றது. அங்ஙனம் தொடர்பு கொள்ளும் பொழுது தூய்மை நெறியினை அடிப்படையாகக்கொண்டு உறவினை அறநெறியில் அமைக்கும் முயற்சி உருவாகின்றது. வழிவழியாக அறநெறி தழைக்க வளரும் பயிர்களான வருங்கால மக்களுக்குப் பண்பூட்டும் வழியினைக் காணவும் வேண்டியதாகின்றது.

மேற்கூறிய வகைகளில் பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார் அவர்கள் எழுதி உதவியுள்ள 'காலமும் கவிஞர்களும்' என்ற முதற் கட்டுரைத் தலைப்பையே மகுடமாகக் கொண்டது இந்நூல். கவிஞர்களின் வழியாக அமைந்து மிளிரும் நந்தமிழ் நாட்டுக் கவிதைகள், காவியங்கள், இறைவழிபாடுகள், அறிவியல் ஆற்றல்கள், வாணிக முறைகள், நமது மொழியின் வரலாற்று இலக்கணங்கள் ஆகிய கருத்துக்களைத் திறனாய்வு முறையில் தெளிந்த நடையில் பன்னிரு கட்டுரைகளாக அடக்கிக்கொண்டு ஒரு கட்டுரைக் கருவூலமாகத் திகழ்கின்றது. சிறப்பாக, பாரதியின் பாஞ்சாலி சபதத்தின் காப்பியப் பெருமைகளும், பண்டைத் தமிழரின் அறிவியல் அறிவுத் துறைகளும், திராவிடமொழி நூலின் தெளிந்த வரலாறும், ஆசிரியரின் ஆராய்ச்சித் திறனைப் புலனாக்குகின்றன. 'தமிழுடன் ஆங்கில உறவு' என்னும் தலைப்புக் கொண்ட கட்டுரை நந்தமிழுக்கு இந்நிலையில் ஆக்கம் காணும் வழிகளை வகுக்கின்றது. அவற்றினைத் தமிழ்கூறு நல்லுலகம் நன்கு சிந்தித்துப் புதிய துறைகளில் தமிழை வளர்க்க முனைதல் வேண்டும். 'புத்தர் காட்டிய நெறி' தமிழ் நெறியாகவே மணிமேகலையிலிருந்து பிழிந்தெடுக்கப்பட்டிருக்கின்றது. 'வளரும் பயிர்' நம் நாட்டு வருங்கால மக்களுக்கு வழுவாது வகுக்கவேண்டிய வகையினை வற்புறுத்துகின்றது.

இந்நூலினைத் தமிழ் மக்கள் நன்முறையில் வரவேற்பார்களென்பது திண்ணம். கட்டுரைகள் யாவும் பழமையையும் புதுமையையும் இணைத்து வழுவின்றி வருங்காலத்திற்குஏற்ற கருத்துக்களை வழங்குகின்றன. தமிழ் மாணவர்களும், பொது மக்களும் இவற்றினைப் படித்துத் தமிழ்க் கலையின் பல கோணங்களைக் காணலாம். இந்நூலினைக் கல்லூரி வகுப்புக்களுக்கும் பாடமாக்கி ஆசிரியரை ஊக்குவிப்பது நமது கடமையாகும்.

சுப்பிரமண்ய புரம்<br>24—1—58

**ப. துரைக்கண்ணு முதலியார்**

# நூல்முகம்

“வெண்டா மரைக்கன்றி நின்பதம்
தாங்களன் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோசகம் ஏழும்அளித்(து)
உண்டான் உறங்க ஒழித்தான்பித்
தாகஉண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே !
சகல கலாவல்லியே.”[1]

—குமரகுருபர அடிகள்

தமிழ் இலக்கிய வரலாற்றில் உரைநடை அண்மைக் காலத்தது. தமிழர்களின அறிவுச் செல்வமெல்லாம் கவிதை வடிவில் காட்சியளிக்கின்றன. இலக்கியங்களேயன்றி இலக் கணங்கள், அகராதிகள், நிகண்டுகள், வாழ்க்கை வரலாற்று நூல்கள், நூலின் முகவுரைகள், கல்வெட்டுக்கள், மருத்துவ, சோதிட, வானநூல்கள் முதலியவை யாவும் கவிதை வடி விலேயே எழுந்துள்ளன. தமிழில் உரைநடை உரையாசிரி யர்கள் காலத்தில் அரும்பி, ஐரோப்பியர் வருகையால் போதாகி, அச்சுப்பொறி வளர்ச்சியால் மலர்ந்து, நவீன வாழ்க்கைத் தேவைகளை யொட்டி மணம் வீசத் தொடங்கி யுள்ளது. எனினும், ஆங்கில மொழியிலுள்ளன போல் தமிழில் உரைநடைச் செல்வங்கள் பல்வேறு வடிவில் பல்கிப் பெருகவில்லை.

உரைநடைச் செல்வத்தின் பல வடிவங்களில் கட்டுரை யும் ஒன்று. கட்டுரையைக் ‘கோப்புரை’ என்பர் மறைமலை யடிகள். ஒரு பொருளைப்பற்றிப் பல கருத்துக்களை இசைத்துக் கோவைப்பட வரையப்பெறும் சொற்பெருக்கே கட்டுரையாகும்.

---

1. சகல கலாவல்லி மாலை.

**'காலமும் கவிஞர்களும்'** என்ற இச் சிறு நூல் பன்னிரண்டு கட்டுரைகளின் தொகுப்பு. இவை 'குமரிமலர்' 'அமுதசுரபி','ஜனநாயகம்', 'கலைமகள்', 'தமிழ்நாடு' ஆகியவற்றின் மலர்களில் வெளிவந்தவை. நான்கு கட்டுரைகள் வானொலிப் பேச்சுக்களுக்காகத் திரட்டப்பெற்ற குறிப்புக்களிலிருந்து எழுதப்பெற்று 'குமரி மலரிலும்', 'ஜனநாயகத்திலும்' வெளிவந்தவை. கட்டுரைகளைப் பதிப்பித்துக்கொள்ள இசைவு தந்த மேற்குறிப்பிட்ட இதழ்களாசிரியர்கட்கு என் இதயம் நிறைந்த நன்றி.

இக்கட்டுரைகள் கல்லூரி மாணாக்கர்கட்கு ஏற்றவையாக இருக்கக்கூடும் என்று எண்ணி அவற்றைத் தொகுத்து இச்சிறு நூலாக வெளியிடுகின்றேன். அறிஞருலகமும் தமிழ் கூறு நல்லுலகமும் இதனை ஏற்றுத் தக்க முறையில் பயன் படுத்திக்கொள்ளும் என்று நம்புகின்றேன்.

இந்நூலுக்குத் தக்கதொரு முன்னுரை பெறவேண்டும் என்று எண்ணி என் அரிய நண்பரும் எங்கள் கல்லூரி முதல்வருமான திரு. ப. **துரைக்கண்ணு முதலியார்** அவர்களை அண்மி முன்னுரை வழங்கி ஆசி கூறுமாறு வேண்டினேன். அவர்களும் மனமுவந்து அரியதொரு முன்னுரையை அளித்தார்கள். திரு. முதலியார் அவர்களை அறியாத ஆசிரியர் உலகமும் இல்லை; மாணாக்கர் உலகமும் இல்லை. கிட்டத்தட்ட முப்பதாண்டுகளாகக் கல்வித்துறையில் பணியாற்றி வரும் பெரியார் இவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் நல்ல சொல்வன்மை பெற்றவர். வகுப்பறைகளிலும் சரி, பேச்சு மேடைகளிலும் சரி, கருத்துச் செறிவுடன் 'கேட்டார்ப் பிணிக்குத் தகையவாய்க் கேளாரும் வேட்கும்' வண்ணம் சுவைபடப் பேசும் திறமை வாய்ந்தவர். தமிழ் நாட்டில் தமிழ் எம்.ஏ., பட்டதாரிகளுள் முதன்முதலாகக் கல்லூரி முதல்வராக வந்தவர். இத்தகைய பேரறிஞரைக் கல்லூரிக்கு முதல்வராக ஆக்கியதன்மூலம் தமிழ் நாட்டிற்கே எங்கள் வள்ளல் அழகப்பர் அவர்கள் வழிகாட்டியுள்ளார் என்று கூறின், அது சிறிதும் மிகையன்று. இத்தகைய பெரியார் இந்நூலுக்கு முன்னுரை அளித்து ஆசி கூறினமைக்கு என் இதயம் கனிந்த நன்றி.

இந்நூலை அழகுற அட்சிட்டுக் கற்போர் கரங்களில் கவின் பெறச் செய்த **எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை** பதிப்பகத் தார்க்கு என் மனமுவந்த நன்றி உரித்தாகும்.

யான் கல்லூரி தொடங்கப்பெற்றதிலிருந்து எட்டாண்டு களாக இக்கல்லூரியில் பணியாற்றி யிருந்தாலும், கடந்த மூன்றுண்டுகளாகத்தான் திரு. **C.V.CT.V. வேங்கடாசலம் செட்டியார்** அவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. வள்ளல் அழகப்பர் அவர்கள் நோய்வாய்பட்ட திலிருந்தே வள்ளல் நிறுவிய கலைக்கூடங்களை யெல்லாம் கருத்துடன் கண்காணித்து வருகின்றுர்; தம்முடைய முழு நேரத்தையும் கலைக் கூடங்களின் வளர்ச்சிக்கான முயற்சி களிலேயே செலவிடுகின்றுர். இராமநாதபுரம் மாவட்டக் கழகத் தலைவர் பதவியையும் இந்தியன் பாங்கி இயக்குநர் பதவியையும் பல ஆண்டுகள் வகிந்துவந்த திரு. செட்டியார் அவர்கள் அவற்றில் பெற்ற நிருவாகத் திறமை முழுவதையும் வள்ளல் தோற்றுவித்த கலைக்கூடங்களின் முன்னேற்றத் திற்கு அர்ப்பணித்துள்ளது அவரது பண்பிற்கு ஓர் எடுத்துக் காட்டாகும். கூர்த்த மதியும் நிதானமான இயல்பும் நியாயத் துடன் அன்பையும் தயையையும் ஒன்று சேர்க்கும் தன்மை யும் திரு. **வேங்கடாசலம் செட்டியார்** அவர்களின் ஆட்சி முறையை என்றென்றும் நினைவிற் கொள்ளுமாறு செய் துள்ளன. இவ்வாறு பல்லாற்றுனும் சிறந்துள்ளவரும் என் பால் அன்புகொண்டுள்ளவருமான திரு. செட்டியார் அவர் கட்கு இந்நூலைச் 'அன்புப்படையலா'க்குகின்றேன்.

இளைஞர் உலகம் இந்நூலிலுள்ள கருத்துக்களால் பயன் அடைவதாயின், அதுவே யான் பெற்ற பேறு. எந்தப் பிரச் சினையையும் காய்தல் உவத்தலின்றி அறிவியல் முறையில் அணுகவேண்டும் என்பது என் அவா. அதற்கு இந்நூல் சிறிதளவாவது துணைபுரியக்கூடும் என்பது எனது திடமான நம்பிக்கை.

அழகப்பா பயிற்சிக் கல்லூரி
காரைக்குடி
௨4-1-58

இங்ஙனம்
**ந. சுப்பு ரெட்டியார்**

# உள்ளுறை


| | | | |
|---|---|---|---|
| 1. | காலமும் கவிஞர்களும் | ... | 1 |
| 2. | கவிதையும் கற்பனையும் | ... | 10 |
| 3. | இயற்கைக் கூத்து | ... | 29 |
| 4. | பாரதியின் பாஞ்சாலி சபதம் | ... | 37 |
| 5. | திருவள்ளுவர் கண்ட நாடு | ... | 65 |
| 6. | பாவை [illegible] | | 84 |
| 7. | பண்டைத் தமிழரின் அறிவியல் அறிவு | ... | 98 |
| 8. | தமிழுடன் ஆங்கில உறவு | ... | 109 |
| 9. | திராவிட மொழிநூலின் வரலாறு | ... | 121 |
| 10. | சோழர் கால வாணிகம் | ... | 135 |
| 11. | புத்தர் காட்டிய நெறி | ... | 148 |
| 12. | வளரும் பயிர் | ... | 162 |

# 1. காலமும் கவிஞர்களும்

மனிதனிடம் இயல்பாக அமைந்து கிடக்கும் ஆற்றல்களுள் படைப்பாற்றலும் ஒன்று. அவன் தன் கடமைகளைச் செய்வதற்கு அதுவே பெருந்துணையாக உள்ளது. அந்த ஆற்றல்தான் அவனுக்கு நம்பிக்கையை ஊட்டி அவன் வெற்றியை அடையவும் அதனால் ஒருவித மன நிறைவு கொள்ளவும் இன்றியமையாததாகின்றது. இப்படைப் பாற்றல் இலக்கியத்துறை, கலைத்துறை ஆகியவற்றில்தான் செயற்படும் என்பதில்லை; பிற துறைகளிலும் செயற்படக் கூடும்; செயற்படத்தான் செய்கின்றது. அங்ஙனமில்லையாயின் மனிதன் மனநிறைவை எட்டிப் பிடிக்கவே முடியாது. எனவே, இவ்வாற்றல் கைத்தொழிலில் செயற்படலாம்; கற்பதில் செயற்படலாம்; திறனாய்விலும் செயற்படலாம். ஏன்? சந்தி, தெரு இவற்றினைப் பெருக்குவதிலும் கூடச் செயற்படலாம். எல்லா மொழிகளிலுமுள்ள பேரிலக்கியங்கள் தோன்றுவதற்கு இவ்வாற்றலே முதற் காரணமாகும். ஆனால், இவ்வாற்றல் மட்டிலும் செயற்பட்டால் போதாது; ஏற்ற சூழ்நிலையும் அமைதல் வேண்டும்.[1] உலக இலக்கிய வரலாற்றைக் கூர்ந்து நோக்கினால் எல்லாக் காலங்களிலும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பேரிலக்கியங்கள் தோன்றவில்லை என்பது புலனாகும். இதிலிருந்து அக்காலத்தில் கவிதை புனையும் ஆற்றலுடையவர்களே தோன்றவே இல்லை என்று முடிவு

[1] For a creation of master-work of literature two powers must concur, the power of the man and the power of the moment, and the man is not enough of the moment- Mathew Arnold.

கட்டுதல் தவறு. பெரும் புலமையும் பேராற்றலுமுடைய கவிஞர்கள் தோன்றியிருந்துமிருக்கலாம். ஆனால், அந்தக் காலத்து அரசியல், பொருளியல் முதலிய காரணங்களால் அவர்களுக்குத் தக்க சூழ்நிலை வாய்க்கவில்லை எனக் கருதுவதே பொருத்தமாகும். ‘ பருவத்தாலன்றிப் பழா ’ என்ற முதுமொழியின் உண்மை இலக்கிய உலகுக்கும் பொருந்தும். தக்க சூழ்நிலை அமையாதபொழுது பேரிலக்கியங்களைப் படைக்க மேற்கொள்ளும் முயற்சி பயனற்றுப் போய்விடும். உலக இலக்கிய வரலாற்றில் இதற்கு எத்தனையோ சான்றுகள் உள்ளன.

படைப்பாற்றல் செயற்படுவதற்குச் சில பொருள்கள் இன்றியமையாதவை. பக்குவப்பட்ட நிலையில் அப் பொருள்கள் அமையாவிடின் படைப்பு எங்ஙனம் முகிழ்க்கும்? அப் பொருள்கள் பக்குவ நிலையினை எய்தும்வரை இலக்கிய ஆசிரியன் காத்திருக்கத்தான் வேண்டும். இலக்கியத்தைப் பொறுத்த மட்டிலும் கருத்துக்கள்தாம் அப்பொருள்கள்; கருத்துக்களே இலக்கியங்களின் தனிக்கூறுகள். கருத்துக்கள் கலையுணர்ச்சியுடன் திறமையாகக் கையாளப்பெற்றால் அவை பேரிலக்கியங்களாக வடிவெடுக்கும். இலக்கியங்களில் காணப்பெறும் கருத்துக்கள் யாவும் சிறந்தவை; பண்பட்ட நிலையிலிருப்பவை. இதனால் வாழ்க்கையே இலக்கியமாக வடிவெடுக்கின்றது என்பது பெறப்படுகின்றது. அங்ஙனமே, இலக்கியமும் வாழ்க்கையை வழிப்படுத்துகின்றது என்பதையும் நன்கு உணரலாம். மொழியின் துணைக்கொண்டு வாழ்க்கை முறையினை எடுத்துக் காட்டுவதுதான் இலக்கியமாகும். சில ஆசிரியர்கள் இத்தகைய உண்மைகளைக் குறிப்பாகப்

[2]Literature is thus fundamentally an expression of life through the medium of language. —W. H. Hudson.

புலப்படுத்துவர்; வேறு சிலர் வெளிப்படையாக எடுத்துரைக்கவும் செய்வர்.

சமுதாய வாழ்வு இலக்கியத்தில் பிரதிபலிக்கும் என்று கூறினோம். இலக்கியத்தைப் படைக்கும் ஆசிரியன் தன் காலத்தில் தான் வாழும் சமுதாயத்தில் நடைமுறையில் உள்ள கருத்துக்களை இலக்கியத்தில் காட்டுவான். அவன், நிலவும் கருத்துக்களை ஒன்று சேர்த்து விளக்கம் செய்வானேயன்றிப் புதிய கருத்துக்களைக் கண்டறிவது அவன் நோக்கம் அன்று. புதிய கருத்துக்களைக் கண்டறிவதும் அவற்றை வெளிப்படுத்துவதும் மெய்ப்பொருளறிஞனின் செயலாகும். இலக்கிய ஆசிரியன் அக் கருத்துக்களைக் கலைத்திறத்துடன் காட்டுவதற்கு ஏற்ற வாய்ப்பு ஒன்றினை உண்டாக்கிக் கொள்ளுவான்; தான் காட்ட நினைக்கும் கருத்துக்களைக் கவர்ச்சிகரமானவையாய் ஓர் ஒழுங்கில் கோவையாக அமைத்துக் கொள்ளுவான். அவற்றைத் தான் ஏற்படுத்திக்கொண்ட வாய்ப்பில் மிகத் திறனுடன் கவர்ச்சிகரமாக அமையும்படியும் செய்வான். இவ்வாறு செய்வது எளிதான செயலன்று. எனவேதான், எல்லாக் காலங்களிலும் சிறந்த இலக்கியங்கள் தோன்றுவதில்லை; பேராற்றல் வாய்ந்த ஒரு சில ஆசிரியர்கள் தோன்றியிருந்தாலும் அவர்கள் சிறப்புடன் திகழ முடியாது போய்விட்டது என்றுதான் கொள்ளவேண்டும். ஆசிரியனிடம் திறனிருந்தும் ஏற்ற சூழ்நிலை அமையாததால் அவன் படைப்பு சிறப்புடன் மிளிர்வதில்லை. படைப்புக்கேற்ற சூழ்நிலையை அமைத்துக் கொள்வது அவன் கையிலுமில்லை.

சிறந்த இலக்கிய ஆசிரியன் தன் காலத்திலிருந்து விடுபட்டு நிற்பவன் அல்லன். தமிழ் இலக்கிய வரலாறு இவ்வுண்மையை விளக்கிக் காட்டும். சங்க இலக்கியங்கள் தமிழர்களின் பண்பாட்டையும் வாழ்க்கை முறை

யினையும் பளிங்குபோல் எடுத்துக் காட்டுகின்றன. அவை சங்ககாலத் தமிழர்களின் கலைவளத்தையும் உயர் நிலையினையும் புலப்படுத்துகின்றன; தமிழ் அணங்கின் கன்னிப் பருவ எழிலை வீசி நிற்கின்றன. கற்பனைக்கும் உயர்வு நவிற்சிக்கும் அவைகளில் இடம் இல்லை. பிற பண்பாடு தமிழ்ப் பண்பாட்டுடன் கலக்கத் தொடங்கிய நாள்தொட்டுத் தமிழர் வாழ்வில் மாறுபாடு தென்-பட்டது. வீரத்திலும் காதலிலும் ஈடுபட்ட தமிழர் கருத்தில் ஒழுக்க உணர்ச்சியும் தெய்வ பக்தியும் சிறப்பிடம் கொள்ளலாயின. பௌத்த சமயமும் சமண சமயமும் சில காலம் தமிழ் நாட்டில் செல்வாக்குப் பெற்றிருந்தன. அக் காலத்தில் அச் சமயத் துறவிகள் மெய்ப்பொருளியல் நூல்களையும் இலக்கண இலக்கிய நூல்களையும் இயற்றினர். நாளடைவில் சைவ வைணவ சமயங்கள் புத்துயிர் பெறத் தொடங்கின. பக்தி இயக்கம் வீறுடன் எழுந்து தமிழ் நாடெங்கும் பெருக்கெடுத்துப் பரவிற்று. இக் காலத்தில் வாழ்ந்த அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்ற நாயன்மார்கள் தத்துவம் பொதிந்த தேனினும் இனிய தோத்திரப் பாடல்களைப் பாடிக் குவித்தனர். ஆழ்வார்களும் கல்நெஞ்சத்தையும் கனிவிக்கும் இன்பப் பாசுரங்களை அருளிச் செய்தனர். பக்தி இயக்கம் பொதுமக்கள் இயக்கமாக விளங்கியது. நாயன்மார்களும் ஆழ்வார் களும் ஞானச் செல்வர்களேயாயினும், அவர்கள் வெறும் அறிவுக்கு மட்டிலும் ஆளாகியவர்கள் அல்லர்; அறிவுக்கும் எட்டாத பரம்பொருளை அகத்துள் உணர்ந்து அதற்கே ஆளான பக்திப் பெருமக்கள். ஆனதால்தான், அவர்கள் பொது மக்களுடைய ஆதரவைப் பெருத்த அளவில் பெற முடிந்தது. சமய நெறியையும் மெய்ப்பொருள் உண்மையையும் சமயக் கடவுளர்பற்றிய • வரலாறுகளையும் பொதுமக்கள்

கேட்டுணரப் பெரிதும் விழைந்தனர். அரசர்களையும் அரச குடும்பத்தினர்களையும் பக்தி இயக்கம் ஈர்த்தது. எனவே, அவர்கள் அவ் வியக்கத்திற்குப் பேராதரவு காட்டினர். ஆம்; அரசர்களும் மனிதர்கள்தாமே? பக்தி இயக்கம் கோயில்களுக்கு முக்கியத்துவம் அளித்தது. வானளாவும் கோபுரங்களைக் கொண்ட பல கோயில்கள் எழுந்தன; சிற்பம் போன்ற பல கலைகள் செழித்தன. அக் காலத்தில் எழுந்த பாடல்கள் பொது மக்கள் வாழ்வைப் பெரிதும் பிரதிபலித்துக் காட்டுவதை அறியலாம்.

பக்தி இயக்கம் சிறப்புற்றோங்கிய காலத்தில் தமிழ் நாட்டில் சமணச் சான்றோர்கள் தம் சமயத்தைப் பரப்ப இயலவில்லை; தம் சமயச் சார்பான நூல்களைச் செய்—தாலும், மக்களிடையே அவை ஓரளவு நன்மதிப்பைப் பெற்றாலும் செல்வாக்குப் பெறவில்லை. உலக வாழ்வில் வெறுப்பும், துறவு நெறியில் விருப்பும் கொண்டிருந்த அவர்களால் தமிழர் வாழ்வில் உரம் பெற்றிருந்த அகப் பொருள் நலங்களும் புறப்பொருள் துறைகளும் மலிந்த நூல்களை இயற்ற முடியவில்லை. பக்தி இயக்க வெள்ளம் பெருகியோடிய காலத்தில் அவர்கள் தமிழ் மொழியின் இலக்கணத் துறையில் பெருந்தொண்டு புரிந்தனர்; செய்யுளியலில் பல புதுநெறிகளையும் இயல்களையும் கண்டனர். கற்றவர்களையும் மற்றவர்களையும் பிணிக்கக் கூடிய பல புது யாப்பு வகைகளையும் அணிவகைகளையும் தமிழ் மொழிக்குக் கொணர்ந்தனர். பல புதிய பாவினங்கள் தமிழ் மொழியில் வழங்கி வருவதற்கு அவர்களே முதற் காரணமாவர். நிகண்டுகளை உருவாக்கியவர்களும் அவர்களே. இடைக்காலத் தமிழர் வாழ்வில் வைதிக சமயக் கருத்துக்கள் வேரூன்றியிருந்ததையும் தம் சமயத் தொண்டில் குறைபாடுகளையும் நன்குணர்ந்த அவர்கள் பிற்காலத்தில் தமிழர்கள் கூட்டத்தில் நிலவிய

சமய நூல்களைப் பயின்று அவற்றைப்போலச் சிறு நூல்களையும் இலக்கியங்களையும் இயற்றுவாராயினர். சிந்தாமணி, யசோதர காவியம், மேருமந்தர புராணம் போன்ற நூல்கள் யாவும் சமண சமயக் கருத்துக்களைக் கதை வடிவில் விளக்குபவை. அன்றியும், அவர்கள் இலக்கியச் சுவை ததும்பும் பல்வேறு சிற்றிலக்கியங்களையும் இயற்றினர். எனவே, தமிழில் பெருங்காப்பியங்கள் எழுவதற்கு ஏற்ற சூழ்நிலை அவற்றால் உருவாயிற்று என்று கருதுதல் பொருத்தமாகும். இக்காலத்தில் வாழ்ந்தவன்தான் கவிச்சக்கரவர்த்தி கம்பன். அவன் இச் சூழ்நிலையை நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு தமிழர்கள் மனங்கவர்ந்திருந்த இராமன் கதையைச் சிறந்த காவியமாகப் புனைந்தான். செய்யுள் இலக்கணங்களும், அணியிலக்கணங்களும் துணை செய்ய, கேட்போரை இன்புறுத்தவல்ல சிற்றிலக்கிய வகைகள் வழிகாட்ட, சமய நூல்களும் மெய்ப்பொருளியல் நூல்களும் இலக்கியங்களில் வரும் கருத்துக்களை ஆழமுடையனவாகவும் உர முடையனவாகவும் செய்ய உதவ, இத்தனைக்கும் மகுடமாகத் தன்னையே முற்றும் ஆண்டவனுக்கு ஆட்படுத்துவதான பக்தி நெறி துலங்க, கம்பன் தன் காவிய மாளிகையைச் சமைத்து அழியாப் புகழ் பெற்றான். அக்காவியம் இன்று நம்மிடையே தமிழ்க் கவிதைத் துறைக்கு ஒரு கட்டளைக் கல்லாய், காவியங்களுள் தலைசிறந்ததாய்ச் சிறப்புற்று விளங்குகின்றது.

பொது வாழ்வில் நிலவும் கருத்துக்களை, ஆட்சி செய்ய இயலாது போயினும், இலக்கியங்களுக்கேற்ற சூழ்நிலையை உண்டாக்கும் ஆற்றல் பெற இயலாவிடினும், இலக்கிய ஆசிரியனிடம் திறனும் திறன் அவன் விருப்பப்படி இயக்கவல்லதாகவுள்ளது. இத்திறனும் திறனைக் கொண்டுதான் இலக்கிய ஆசிரியன்

மக்கட் சமுதாயம் ஏற்றுக்கொள்ளக்கூடிய மனநிலையை உண்டாக்குகின்றான்; இத் திறன் மக்கட் சமுதாயத்தில் நிலவும் கருத்துக்களை ஒழுங்குபடுத்தத் துணைபுரிகின்றது; வலிவற்றுக் கிடக்கும் ஒருசில கருத்துக்களை வலிவுறச் செய்கின்றது. மக்கட் சமுதாயத்தில் நிலவும் கருத்துக்கள் ஒழுங்கு பெற்று இலக்கிய ஆசிரியன் படைக்கும் நூல் வாயிலாக வெளிப்படுங்கால் அவை ஒரு புதிய வீறுடன் மீண்டும் மக்கட் சமுதாயத்தை அடைகின்றன; சமுதாய வாழ்வுடன் ஒன்றியும் விடுகின்றன. எனவே, சமுதாய வாழ்வே புத்துயிர் பெற்றுப் புதிய ஊட்டத்தை அடைகின்றது. இப்புதிய ஊட்டம்இன்னும் பல புதிய நூல்கள் தோன்றுவதற்கும் காரணமுமாகின்றது. தோத்திரப் பாக்கள் எழுந்த காலம், காவியங்கள் தோன்றிய காலம், சில்லரைப் பிரபந்தங்கள் இயற்றப் பெற்ற காலம் ஆகிய கால எல்லைகளை ஆராய்ந்தால் இவ்வுண்மை நன்கு புலனாகும்.

இனி, தற்கால இலக்கிய வரலாறும் இவ்வுண்மையை ஓரளவு தெள்ளிதின் விளக்கும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் சமுதாய உணர்ச்சியும் நாட்டுப்பற்றும் விடுதலை வேட்கையும் இந்திய நாடெங்கும் பரவின; நாட்டு மக்களிடம் நல்லதொரு பக்குவம் நிலவியது. இக்காலத்தில்தான் மகாகவி பாரதி வாழ்ந்தான். அந்நியர் ஆட்சியால் மக்களிடையே இயல்பாக அரும்பியிருந்த நாட்டுப் பற்றைப் பேராற்றலுடன் பெருக்கெடுத்தோடச் செய்யக்கூடிய உணர்ச்சி யூட்டும் பாடல்களைப் பாடிக் குவித்தான்.

"செந்தமிழ் நாடென்னும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே."[3]

---

3. பாரதி : செந்தமிழ் நாடு-1.

என்பன போன்ற பாடல்கள் கனிந்த நாட்டுப் பற்றைக் காட்டுபவை. இறுகாறும் கன்னியர் காதலையும் கடவுட் காதலையும் பொருளாகக் கொண்ட கவிதைகளைச் சுவைத்த தமிழர் நாட்டுப் பற்றைப் பொருளாகக் கொண்டு பாடப்பெற்ற கவிதைகளை மிக்க ஆர்வந் துடனும் சுவையுடனும் துய்த்தனர். திருவாசகம், திவ்வியப் பிரபந்தங்களின் நடையையும் பாணியையும் ஒட்டிப் பல பாடல்களைப் பாடியுள்ளான் பாரதி. பழைய யாப்பையும் போக்கையுமே வரையறையுடன் கையாண்டால் பொதுமக்கள் வாழ்வுடன் நன்கு கலக்க முடியாது என்பதை உணர்ந்த கவிஞன், புதிய யாப்புக் களையும் வண்ணங்களையும் கையாண்டான். சாதாரண மக்கள், குழந்தைகள் இவர்கள் பேசும் சொற்களைக் கையாண்டு உயர்ந்த கவிதைகளைப் படைத்துள்ளான். இக்காலச் சமுதாய வாழ்வு பாரதியின் பாடல்களைப் பிரதிபலிக்கின்றது. பாரதியின் கல்விப் பயிற்சியைப் பற்றிய செய்திகள் சரியாகப் புலப்படவில்லை. ஆனால், அவன் தமிழை ஆசிரியன் அடிக்கமலத்திருந்து முறை யாகத் திரிபற ஓதி உணரவில்லை என்பது அறிய முடிகின்றது. எனினும், அவன் வாழ்ந்த காலம் ஏற்ற சூழ்நிலையினை நல்கிக் கருவிலே திருவுற்ற அவனிடம் கவிதை புனையும் ஆற்றலை எழுப்பியது. அந்த ஆற்றல் புதிய வடிவெடுத்து மணிமணியான பாக்களைக் கொட்டும் வன்மையையும் அடைந்தது. 'பாட்டுத் திறந்தாலே— இவ்வையத்தைப் பாலித்திட வேணும்'[4] என்ற கவிஞனின் கனவை ஓரளவு நனவாக்கி நமக்கும் பரம்பரைச் சொத்தாகப் பல கவிதைகளைத் தரச் செய்தது.

பொருள் கருவியாகத் துய்க்கும் புற இன்பத்தை விட மனம் கருவியாகத் துயக்கும் இலக்கிய இன்பமே

4. பாரதி: காணிநிலம்-33.

தலைசிறந்தது. முன்னது நிலைத்து நிற்பது அன்று; நாளடைவில் தானும் தேய்ந்து தன்மூலமாகிய பொருளை யும் தேய்த்து விடக்கூடியது. பின்னதோ நிலைத்து நிற்பது; தானும் வளர்ந்து தன்மூலமாகிய மனத்தையும் நெறிப்படுத்திச் செம்மையாக்கும் தன்மையது. மனம் பல்வேறு கருத்துப் பொருள்களைத் துய்க்கும்பொழுது நாம் பெறும் இன்பம் எல்லையற்றது. காட்சிப் பொருள் களைவிடக் கருத்துப் பொருள்களைத் துய்க்கும்பொழுது தான் இவ்வின்பம் பன்மடங்கு மிகுந்து நிற்கும். அறிஞர்கள் யாவரும் இவ்வின்பத்தைத்தான் அவாவி நிற்பர். நம்மிடம் இயல்பாக அமைந்து கிடக்கும் விடுப்பு உந்தல் (Instinct of curiosity) இவ்வின்பத்தை வளர்க்கக் காரணமாகின்றது. இந்த உந்தலின் காரண மாகத்தான் நாம் பல்வேறு நூல்களைக் கற்கின்றோம். மனமும் யாதொரு பயனையும் எதிர்பாராது இத்துறை யில் ஈடுபட்டு இன்பத்தின் எல்லையைக் காண முனைகின்றது. இந்த உந்தல் செயற்படுவதைத்தான் உண்மையான திறனாய்வு என்று சொல்ல வேண்டும். சமயம், அரசியல், காலதேச வர்த்தமானம் ஆகிய எல்லைகளையும் கடந்து அவற்றைச் சிறிதும் சிந்தையிற் கொள்ளாது உலக அறிஞர்களால் சிந்திக்கப்பட்டனவும் அறியப்பட்டனவுமான இலக்கியங்களைத் துய்க்க வேண்டும், அவற்றைப் பரப்ப வேண்டும் என்ற எண்ணங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பெறும் முயற்சிதான் திறனாய்வாகும்.[5] இந்த அடிப்படையில் தான் தமிழ் இலக்கியங்கள் திறனாயப்பெறுதல் வேண்டும்.

---

[5] 'Criticism is a disinterested endeavour to learn and propagate the best that is known and thoght in the World'—Mathew Arnold.

## 2. கவிதையும் கற்பனையும்

கவிதைகளைக் கனிவித்துக் கற்போரின் மனத்தை விரிந்த பார்வையில் செலுத்துவது கற்பனைத்திறன்: கவிதையின் பிற பண்புகளுக்கெல்லாம் அடிநிலமாக அமைவது இதுதான்; முடியாக இருப்பதும் இதுவே. சாட்டை கொண்டு பம்பரம் விட்டு விளையாடும் சிறுவர்களை நாம் பார்த்திருக்கின்றோம். 'அலகிலா விளையாட்டுடை' ஆண்டவன் அண்டங்களை ஆட்டி வைப்பதை இவ்விளையாட்டிற்கு ஒப்புமை காட்டுகின்றான் கவிஞன் ஒருவன்.

" சாட்டிநிற்கும் அண்டமெலாம்
சாட்டை இலாப் பம்பரம்போல்
ஆட்டுவிக்கும் குற்றாலத்து
அண்ணலார் "

என்று கூறுவதில் உள்ள கற்பனைத் திறனைக் காண்க. அண்டங்கள் சுழல்வதையும் பம்பரம் சுழல்வதையும் ஒப்பிட்ட முருகுணர்ச்சியை எண்ணி மகிழ்க. காலை இளம்பரிதியின் எழிலைக் காட்டும் மற்றொரு கவிஞன்,

தங்கம் உருக்கித்
தழல்குறைத்துத் தேனாக்கி
எங்கும் பரப்பியதோர்
இங்கிதமோ ?[1]

என்று கூறுவதில் பொதிந்துள்ள கற்பனையாற்றலைச் சிந்தித்துக் களிக்க. இதைவிட வேறு எவ்வாறு கூற முடியும்? எனவே, கற்பனையாற்றல் இலக்கியத்திற்குக்

---

[1] குற்றாலக் குறவஞ்சி—செய்யுள்-107.
பாரதி : குயில்பாட்டு—இருளும் ஒளியும்-வரி 31-32.

கருவூலமாகவும் இன்றியமையாததாகவும் உள்ளது என்பது பெறப்படுகின்றது. தனிப்பாடல்களாக இருப்பினும் சரி, பெருங்காவியமாக இருப்பினும் சரி, நாடகம் அல்லது சிறுகதையாக இருப்பினும் சரி, கற்பனைப் பண்பு அனைத்திற்குமே இன்றியமையாதது. உணர்ச்சிகளின் நிலைக்களனாக எழுதப்பெறும் எல்லாவகை இலக்கியங்களுக்குமே கற்பனையாற்றல் மிகமிக அவசியமாகும்.

கற்பனையைப்பற்றி முடிந்த முடிபாக இதுகாறும் ஒருவரும் வரையறுத்துக் கூறவில்லை; கூறமுடியும் என்றும் நமக்குத் தோன்றவில்லை. கற்பனையாற்றல் இன்னது என்பதை சொற்களால் எல்லைகட்டி காட்ட இயலாது. 'கற்பனையாற்றல்' என்ற ஒரு சொற்றொடரைக் கொண்டே மனத்தில் தோன்றும் பல்வேறு நிலைகளையும் குறிக்கின்றோம். இரஸ்கின் என்ற மேனாட்டுத் திறனாய்வாளர் "கற்பனையின் தத்துவம் அறிவுக்கு எட்டாதது; சொற்களால் உணர்த்த முடியாதது; அதன் பலன்களை மட்டிலும் கொண்டே அஃது அறியப்படுவதொன்றாகும்"[3] என்று குறிப்பிடுகின்றார். இக்கூற்று எல்லாவிதத் திறன்களுக்குமே பொருந்தக்கூடும்; ஆனால் அவற்றின் தன்மைகளைத் தெளிவாக உணர்த்துவது மிகவும் கடினம். அத் திறன்களால் விளையும் பலன்களைக்கொண்டு ஒருவாறு அவற்றின் தன்மைகளை வரையறை செய்ய இயலும். இத்துறையில் நாட்டம் செலுத்திய வின்செஸ்டர் என்ற திறனாய்வாளர் கற்பனையாற்றலை மூன்று விதமாக வரையறை செய்கின்றார்.

**முதல் வகை :** பறவை முகத்துடனும் நாயின் உடலுடனும் கூடிய ஒரு விலங்கை மனத்தில் உருவகித்துக் கொள்ளுதல், ஒரு சிற்பி கல்லில் சமைக்க வேண்டிய

---

3 'The essence of imaginative faculty is utterly mysterious and inexplicable. and to be recognised in its effect only'—Ruskin.

உருவத்தை மனத்தில் எண்ணுதல், மலைகளிடையே யுள்ள ஒருபள்ளத்தாக்கு, பள்ளத்தாக்கில் பாய்ந்தோடும் அருவி, அருவியின் அருகேயுள்ள புல்வெளிகளில் மேய்ந்து திரியும் ஆடுமாடுகள், புல்வெளிகளில் ஆங் காங்கு காணப்பெறும் மரவகைகள் இத்தகையவற்றைக் கொண்ட, ஆனால் முன்னால் நேரில் காணாத, ஓர் இயற் கைக் காட்சியை மனத்தில் எண்ணுதல் போன்றவற் றைக் கற்பனை என்று சொல்லலாம். இவை யாவும்பொறி களால் காண்பவற்றை அடிப்படையாகக் கொண்டவை. பொய்யும் புனைசுருட்டும் நிறைந்த இவ்வுலகில் நல்ல பண்புகளை யெல்லாம் காண இயலாது துடித்து நிற்கும் கவிஞன் அவற்றையெல்லாம் ஒருங்கே கொண்ட இராமன், இலக்குவன், பரதன், சத்துருக்கன் போன்ற காவிய மாந்தர்களைப் படைப்பதும் கற்பனையாற்றலே; இத்தகைய மாந்தர்களை உண்மை உலகில் காண இய லாது. இம்மாதிரியே தீய குணங்களை யெல்லாம் ஒருங்கே கொண்ட துரியோதனன், சகுனி, துச்சாதனன் போன்றவர்களையும் படைக்கவும் செய்கின்றான். பொறி களின் அடிப்படையில் அமையும் கற்பனையைவிட இவை சிறந்த கற்பனை என்றே சொல்லவேண்டும்.

மேற்கூறிய எடுத்துக்காட்டுக்களில் அடங்கிய செயல்கள் யாவும் ஒரே வகையானவை. பல பண்புகள் தேர்ந்தெடுக்கப்பெற்று அவை கலைப் பண்புடன் புதிய தோர் வடிவம் அமையுமாறு ஒன்று சேர்க்கப்பெறு கின்றன. இப் பண்புகள் கவிஞன் மனத்தில் சிறிது நேரத்திற்குள் தோன்றுபவை; கவிஞன் அவற்றை மிகவும் வலிந்து ஒன்று சேர்ப்பதில்லை. கவிஞன் மனத்தில் அவை இயல்பாக ஒன்று சேர்ந்து புதிய வடிவங்களாகச் சமைகின்றன. நாமும் இத்தகைய காட்சிகளைப் பல சந்தர்ப்பங்களில் காணத்தான் செய்

கின்றோம். ஆனால், அவை நம் மனத்தில் யாதொரு மாற்றத்தையும் உண்டாக்குவதில்லை. கவிஞன் மனத்தில் இக் காட்சிக்குரிய செயல்கள் ஒன்று சேர்ந்து அக் காட்சிகளை மயிர்க்கூச்செறிக்க வல்லனவாகவும் உயிர்ப்புள்ளனவாகவும் செய்துவிடுகின்றன. கவிஞனிடந்தான் இத்தகைய பேராற்றலும் இயல்பாக அமைந்துகிடக்கின்றது. ஒருசில காட்சிகளை ஈண்டுக் காண்போம்.

**ஒரு காட்சி :** மேகங்கள் தவழும் மலைகளை நாமும் தான் காண்கின்றோம். ; அவை நம் மனத்தில் ஒன்றையும் தோன்றச் செய்வதில்லை. அப்படி ஏதாவது தோன்றச் செய்தாலும் அக்கருத்து நிரந்தரமாக நிற்கும் ஆற்றலைப் பெறுவதில்லை. இராம இலக்குமணர்களும் சீதாப் பிராட்டியும் சித்திர கூடத்திற்குப் போனார்கள் என்ற செய்தியைத் தெரிவிக்க வந்த கம்பன் 'மஞ்சுசூழ் சித்திர கூடமலை' என்பதை,

"குளிரும் வான்மதிக் குழவிதன் சூல்வயிற் றுளிப்பப்
பிளிறு மேகத்தைப் பிடியெனப் பெரும்பனைத் தடக்கைக்
களிறு நீட்டுமச் சித்திர கூடத்தைக் கண்டார்."[4]

என்று கூறுகின்றான். ஒளிவிடும் பிறைச்சந்திரன் கருமேகத்தின் கருப்பத்தில் இருக்கின்றதாம் ; அது வெளிப்படுங்கால் மேகங்கள் இடிக்கின்றனவாம் ; இவ்வோசையைக் கேட்ட ஆண்யானை தன் காதலியாகிய பெண்யானைதான் பிளிறுகின்றது என எண்ணி பனைபோன்ற தன் துதிக்கையை நீட்டுகின்றதாம். கவிஞனது இக் கற்பனை மலையின் தோற்றத்தை எவ்வளவு திட்டமாக நம் மனக் கண்முன் கொண்டு நிறுத்துகின்றது ! இயற்கைக் காட்சியை அப்படியே கூறினாலும் கூறும் தன்மையில் நாம் காணும் புதுமெருகு நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றது.

[4] கம்பராமாயணம்—அயோத்-வனம்புகு-47

**இன்னொரு காட்சி :** இராமனது அம்பு தன் மார்பில் பாய்ந்தவுடன் அதனைச் சக்கராயுதமோ சூலமோ என்றெல்லாம் அயிர்த்து இறுதியில் அதைச் சரம் என்று அறிகின்றான் வாலி. வாலாலும் தாள்களாலும் அதனைப் பற்றிவாங்கி 'இராமன்' என்றபெயர் அதில் பொறிக்கப் பெற்றிருப்பதைக் காண்கின்றான். இதனைக் கம்பநாடன்,

"மும்மைசால் உலகுக் கெல்லாம்
மூலமந் திரத்தை முற்றும்
தம்மையே தமர்க்கு நல்கும்
தனிப்பெரும் பதத்தைத் தானே
இம்மையே எழுமை நோய்க்கும்
மருந்தினை 'இராமன்' என்னும்
செம்மைசேர் நாமந் தன்னைக்
கண்களில் தெரியக் கண்டான்"[5]

என்று கூறுகின்றான். இராமன் என்ற சொல்லைக் கூறும் பொழுதே கம்பன் மனத்தில் பல்வேறு கருத்துக்கள் ஒருங்கே எழுகின்றன. பிறிதோர் இடத்தில்.

"நினையும் தேவர்க்கும் நமக்கும்ஒத்
தொருநெறி நின்ற
அனகன் அம்கணன் ஆயிரம்
பெயருடை அமலன்."[6]

என்ற இராமனைக் குறிப்பிடும்பொழுதும் இராமனைப் பற்றிக் கம்பன் கொண்டுள்ள கருத்துக்கள் ஒருங்கு வெளிப்படுகின்றன.

**பிறிதொரு காட்சி :** வாசவதத்தையின் அழகினைக் குறிந்துக் கொங்குவேளிர் கூறுவது :

யாற்றற லன்ன கூந்தல்; யாற்றுச்
சுழியெனக் கிடந்த குழிநவில் கொப்பூழ்;
வில்லெனக் கிடந்த புருவம்; வில்லின்

---

[5] கம்பராமாயணம்—வாலி வதை-71

[6] கம்பராமாயணம்—சித்திரகூட-1.

"அம்பெனக் கிடந்த செங்கடை மழைக்கண் ;
பிறையெனச் சுடரும் சிறுநுதல் ; பிறையின்
நிறையெனத் தோன்றும் கறையில் வாண்முகம் ;
அரவென நுடங்கும் மருங்குல் ; அரவின்
பையெனக் கிடந்த ஐதேந் தல்குல்
கிளியென மிடற்றும் கிளவி ; கிளியின்
ஒளிபெறு வாயின் அன்ன ஒள்ளுகிர் ;
வாழையந் தாளுறழ் குறங்கின் வாழைக்
கூம்புமுகி ழன்ன வீங்கிள வனமுலை ;
வேயெனத் திரண்ட மென்றோள் ; வேயின்
விளங்குமுத் தன்ன துளங்கொளி முறுவல் ;
காந்தள் முகிழன்ன மெல்விரல் ; காந்தள்
பூந்துடுப் பன்ன புன்வலை முன்கை
அன்னத் தன்ன மென்னடை"[7]

இது கேசாதி பாத வருணனை. பொருநராற்றும் படையிலுள்ள விறலியின் வருணனையும் இத்தகையதே. இவைகளில் தாம் கண்ட பல காட்சிகளைக் கவிஞர்கள் ஒருங்கு சேர்த்துத் தருகின்றனர்.

இம்மூன்று காட்சிகளிலும் கவிஞர்கள் தாம் கண்டவற்றை ஒருங்கு சேர்த்துப் புதிய உருவங்களைச் சமைத்துள்ளனர். காட்சிகளில் புதியதொரு பண்பு இல்லை ; காட்சிகளிலும் யாதொரு மாற்றமும் இல்லை. இம்மாதிரியான கற்பனைகளைப் 'படைப்புக் கற்பனை' என்ற வகையில் அடக்கலாம். கவிஞனொருவன் தன் அநுபவத்தில் கண்ட பல பண்புகளை ஒருவிதக் கட்டாயமுமின்றித் தானாகத் தேர்ந்தெடுத்து அவற்றினைத் தொகுத்துப் புதியதொரு வடிவினை உண்டாக்குவதுதான் படைப்புக் கற்பனையாகும்.[8]

---

[7] பெருங்கதை—4-11 : 64-79.

[8] The creative imagination spontaneously selects among the elements given by experience and combiues them into new wholes : If this combination be arbitray or irrational, the faculty in called Fancy.—*C.* T. Winchester.

இரண்டாம் வகை : இவற்றைத் தவிர வேறுவிதமாக நிகழும் செயல்களும் கற்பனை என்ற பெயர்களால் வழங்குகின்றன. ஒரு சிலவற்றை ஈண்டுக் காண்போம்.

பறவைகள் குஞ்சு பொறிப்பது நாள்தோறும் நாம் காணும் காட்சி. இதனை அடிக்கடிக் கண்ணுறும் நம் உள்ளத்தில் ஒருவிதமான புதிய கருத்தும் எழுந்ததில்லை ; எழுவதுமில்லை. வள்ளுவப் பெருமானின் கருத்தில், அக் காட்சி எண்ண கருத்தினை எழுப்பிவிட்டிருக்கின்றது பாருங்கள்.

"குடம்பைத் தனியொழியப் புள்பறந் தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு.''[9]

அக்காட்சியும் மக்கள் இறந்துபடும் நிகழ்ச்சியும் ஒன்று சேர்ந்து உயர்ந்ததோர் உண்மையை யல்லவா விளக்கி நிற்கின்றன ? இதில் பறவை குஞ்சு பொறிக்கும் காட்சி கவிஞனது உணர்ச்சியைத் தூண்டவில்லை. ஆனால் அவன் உள்ளத்தில் படிந்துகிடந்த 'நிலையாமை' என்ற உணர்ச்சியே பறவை குஞ்சு பொறிக்கும் காட்சியை நினைப்பூட்டியது. அவ் வுணர்ச்சிதான் தனக்குப் பொருத்தமான பிறிதொரு காட்சியை நினைவுக்குக் கொணர்ந்து முன்னரே படிந்திருந்த உணர்ச்சியைக் கலை யாக மலரச் செய்தது. புற உலகில் காணும் நிகழ்ச்சி அகத்தில் அடங்கிக் கிடக்கும் உணர்ச்சியைத் தூண்டு கின்றது என்றாலும், பெரும்பாலும் உள்ளநுபவமே (Inner experience) அத்தகைய உணர்ச்சியைக் கிளர்ந்தெழச் செய்கின்றது என்று சொல்லலாம். எனவே, கற்பனையாற்றலைத் தூண்டுவதற்கு உள்ளத் தில் அடங்கியிருக்கும் உள்ளநுபவமே தூண்டு கோலாக அமைகின்றது என்பது தெளிவாகின்றது. இத்தகைய கற்பனையைத்தான் வின்செஸ்டர் இயைபுக்

[9] குறள் 338

கற்பனை' என்று கூறுகின்றார். ஒரு பொருள், கருத்து, உணர்ச்சி ஆகியவை சம்பந்தப்பட்ட உணர்வால் ஒற்றுமையுள்ள காட்சிகளை இணைத்து நிற்பதுதான் இயைபுக் கற்பனையாகும்.[10]

வள்ளுவப் பெருந்தகை துறந்தார் பெருமையைப் பற்றி இவ்வாறு கூறுவர் :

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று.[11]

இக்குறள் மணியில் அடங்கியுள்ள கற்பனையும் இயைபுக் கற்பனையே. துறந்தார் பெருமையை எண்ணிப் பார்த்த கவிஞருக்கு இறந்தாரை எண்ணிப் பார்க்கும் செயல் நினைவுக்கு வருகின்றது. அது மிக அழுத்தமாகத் துறந்தார் பெருமையைச் சிறப்பித்து நிற்கின்றது. நிலமும், கடலும், வானும் மற்றும் இவ் வையகத்திலுள்ள பொருள்களனைத்தும் எல்லை யுடையன. ஆகவே, அவற்றினை ஆசிரியர் குறிப்பிடவில்லை. கடல் மணல், வான உடுக்கள் முதலியவற்றைக் கொண்டு துறந்தார் பெருமையின் சிறப்பை அளவிட்டுக் கூறியிருந்திருக் கலாம் ; எனினும், வள்ளுவர் அவற்றினைக் குறிப்பிட வில்லை. இவ்வையத்தில் அரசினர் பிறப்பு-இறப்புக் கணக்கெடுக்கின்றனர். இக் கணக்குபடி பிறப்பு-இறப்புத் தொகை அளவுபட்டுக் கிடக்கும். உலகம் தோன்றின நாள்தொட்டு இன்றுவரை இறந்தார் தொகை இவ்வளவு தான் என்று அளவுபடுத்திக் கூறவியலாது. தவிர, உயர்

10 The associative imagination associates with an object, idea or emotion images emotionally akin. If such association be not based on emotional kinship, the process must be called Fancy. —C.T. Winchester.

11 குறள்—22

திணையாகிய மக்கள் உலகில்தான் இக்கணக்கு எடுக்கப் பெறுகின்றது. ஆனால், ஆசிரியர் உயர்திணை உலகையும் அஃறிணை உலகையும் உளங்கொண்டு 'இறந்தாரை' என்று அருளியுள்ளார். இதை எண்ணுந்தோறும் துறந்தார் பெருமை அளவின்றி வளர்ந்து நிற்கின்றது. என்னே இக் கற்பனையின் சிறப்பு !

இம்மாதிரியான கற்பனைகள் கம்பநாடனது கலைக் கோவிலில் எண்ணற்றவை உள்ளன. வானர சேனை இலங்கைக்கு வழி யமைத்ததைக் கம்பன்,

"மஞ்சினில் திகழ்தரு மலையை மாக்குரங்கு
எஞ்சுறக் கடித்தெடுத் தெறியவே நளன்
விஞ்சையில் தாங்கினன் சடையன் வெண்ணெயில்
தஞ்சமென் றோர்களைத் தாங்கும் தன்மைபோல்"[12]

என்று குறிப்பிடுகின்றான். வானரங்கள் மஞ்சுசூழ் மலைகளைப் பெயர்த்து வந்து தூக்கி எறியும் காட்சியும், வானர தச்சனாகிய நளன் அவற்றினை எளிதாக வாங்கும் காட்சியும் முறையே இரவலர் பலர் சடையப்ப வள்ளலின் வீடுநோக்கி வரும் காட்சியுடனும், அவ்வள்ளல் அவர்களை ஓம்பும் காட்சியுடனும் ஒப்புமை செய்யப்பெற்றுள்ளன. கம்பநாடன் உள்ளத்தில் ஊறிக்கிடந்த 'செய்ந்நன்றியறிதல்' என்ற உணர்ச்சி இந்த நிகழ்ச்சிகளை ஒன்றுபடுத்தியது என்று கூறலாம்.

அநுமன் மகேந்திர மலையினின்றும் கடல் தாவுதலைக் கூறும் இடத்தில் இவ்வகைக் கற்பனையை விளக்கும் பல அழகான பாடல்கள் உள்ளன. அநுமன் தாவி எழுந்தபொழுது மலையில் உண்டான பெரிய அதிர்ச்சியால், மயிலின் சாயலையொத்த அம்மலையிலிருந்த தேவ மாதர்கள் நடுநடுங்கி விட்டார்களாம் ; உடனே தத்தம்

[12] யுத்த காண்டம்—சேதுபந்—9.

கணவன்மார்களைத் தழுவிக்கொண்டார்களாம். இவர்கள் இம்மாதிரி தழுவிக்கொண்ட காட்சிகள் இராவணன் கயிலைமலையைத் தூக்கும்பொழுது நடுநடுங்கி சிவ பெருமானை உமையம்மை தழுவிக் கொண்டதைப்போல் இருந்தனவாம். இதனைக் கம்ப நாடன்,

"வெயிலியற் குன்றங் கீண்டு
வெடித்தலு நடுக்கம் எய்தி
மயிலியல் தேவி மார்கள்
தழீஇக்கொளப் பொலிந்த வானோர்
அயில் எயிற் றரக்கன் அள்ளத்
திரிந்தநாள் அணங்கு புல்லக்
கயிலையின் இருந்த தேவைத்
தனித்தனிக் கடுத்தல் செய்தார்"[13]

என்று அழகான கற்பனையால் கூறுகின்றான். அநுமன் விண்ணில் பறந்து சென்ற காட்சி, தன்னைத் தூக்கிய இராவணனைப் பழிவாங்கவேண்டு மென்று கருதி கயிலை நாதர் இல்லாத சமயம் பார்த்துச் சீறி எழும் கயிலை மலையை ஒத்திருந்தது என்பதை,

"அண்ணல்வாள் அரக்கன் தன்னை
அமுக்குவாம் இன்னம் என்னாக்
கண்ணுதல் ஒழியச் செல்லும்
கைலையங் கிரியும் ஒத்தான்"[14]

என்ற அடிகளால் வருணித்துள்ளான். பெரும்பாலும் உவமையணி பயின்றுவரும் பகுதிகள் யாவும் இக் கற்பனைக்குள் அடங்கும்.

தமயந்தியின் சுயம்வரத்திற்கு ஐம்பத்தாறு நாட்டு மன்னர்களும் நளன் உருகொண்ட நான்கு தேவர் களும் வந்திருக்கின்றனர். தமயந்தி அவர்கள் இருந்த கொலுமண்டபத்திற்குச் சென்றதை,

---

[13] சுந்தர—கடல்தாவு-11. [14] ஷை-25.

"மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்புக்காள்—மின்னிறத்து
செய்யதாள் வெள்ளைச் சிறையன்னம் செங்கமலப்
பொய்கைவாய்ப் போவதே போன்று"[15]

என்று புகழேந்தி வருணிக்கின்றார். மற்று, காட்டில் நள்ளிரவில் தமயந்தி தூங்கும்பொழுது அவளுடன் உறங்கிய நளன் அவள் ஆடையில் பாதியைக் கிழித்துத் தான் உடுத்திக்கொண்டு அவளை விட்டுப் பிரிந்தகாலை, விழித்தெழுந்த தமயந்தி கணவன் பிரிவுக்கு ஆற்றாது, தலைவிரி கோலமாகத் தரையில் வீழ்ந்த நிலையைப் புகழேந்தி,

"வான்முகிலும் மின்னும் வறுநிலத்து வீழ்ந்ததுபோல்
தானும் குழலும் தனி வீழ்ந்தாள்"[16]

என்று அழகுபடக் கூறுகின்றார். இந்த இரண்டு வருணனைகளில் இருகாட்சிகள் இணைக்கப்பெற்று இருப்பதைக் கண்டு மகிழ்க.

கலிங்கத்துப் பரணியில் ஒரு காட்சியை மட்டிலும் கண்டு மேலே செல்வோம். போருக்குச் சென்ற வீரர்கள் ஊடிக் கதவடைத்து நிற்கும் மகளிரைக் கதவைத் திறக்குமாறு விளிக்கும் பகுதியில் ஒருபாடல்:

"முலைமீது கொழுநர்கைந் நகமேவு குறியை
முன்செல்வ மில்லாத அவர்பெற்ற பொருள்போல்
கலைநீவி யாரேனும் இல்லா இடத்தே
கண்ணுற்று நெஞ்சங்க ளிப்பீர்கள் திறமின்"[17]

இதிலும் இரண்டு காட்சிகள் இணைக்கப்பட்டுள்ளன. காட்சிகளை மனக்கண்முன் கொண்டு நிறுத்தி மகிழ்க.

**மூன்றுவது வகை:** இனி, மூன்றுவது வகைக் கற்பனையை நோக்குவோம். கவிஞன் தான் கண்ட

[15] நளவெண்—131 [16] ஷெ—282

[17] கலிங்கத்துப் பரணி—தாழிசை. 47

காட்சிகளை அப்படியே தொகுத்துக் கூறினால் அதுபடைப்புக் கற்பனையாகும்; அவற்றுடன் தொடர்புள்ள வேறு நிகழ்ச்சிகளுடன் அவற்றை இணைத்துக் கூறினால் அது இயைபுக் கற்பனையாகும். இவ்வாறு கூறாது இயற்கைக் காட்சிகளைக் கண்ணுற்ற கவிஞன் தான் கண்டவற்றை அப்படியே கூறாது அக்காட்சிகளால் தன் உள்ளத்தில் கிளர்ந்தெழுந்த உணர்ச்சிகளை மட்டிலும் சித்திரித்தால், அதனைக் 'கருத்து விளக்கக் கற்பனை' என்றுகூறலாம். ஒரு நிகழ்ச்சியிலிருந்தோ ஒரு பொருளிலிருந்தோ அதன் கருத்து அல்லது தாற்பரியத்தை மட்டிலுங்கண்டு அவை யடங்கிய பகுதிகளையோ அல்லது தன்மைகளையோ எடுத்துக் காட்டுவது 'கருத்து விளக்கக் கற்பனை' யாகும்.[18] ஆங்கிலக் கவிஞர்களான வொர்ட்ஸ்வொர்த், பிரௌனிங் ஆகியோர் யாத்துள்ள கவிதைகளில் இத் தகைய கற்பனைகள் ஏராளமாக உள்ளன. இத்தகைய கற்பனைதான் கவிதைக்கு உண்மையான உணர்வைத் தரு வது. கவிதைத் துறையில் மேதையாக உள்ளவர்கள், தாம் காணும் காட்சிகளையும் நிகழ்ச்சிகளையும் ஒன்று விடாது அப்படியே வருணிப்பதில்லை; வருணிப்பதை விட பொருளுணர்த்துவதில்தான் அவர்கள் கவனம் அதி கமாகச் செல்லும்.

ஒரு காட்சியில் காணும் அனைத்தையும் வெளிப் படையாகக் கூறுவதைவிட அதில் உணர்ந்த பகுதிகளை மட்டிலும் எடுத்துக் காட்டுவது சாலப் பயன் தரும். ஊனக்கண்ணால் பார்க்கும் பொருள்களின் அழகை

---

[18] The interpretative imagination perceives spiritual value or significance, and renders objects by presenting those parts on qualities in which this spiritual value resides.—C. T. Winchester.

மனக்கண்ணால் கண்ணுறும்பொழுதுபன்மடங்கு சிறந்து பொலிவுறும். மனம் அவ்வழகில் ஈடுபடும்போதுதான் நமக்கு எல்லையற்ற மகிழ்ச்சி உண்டாகின்றது. மனத்தில் எழும் கற்பனையாற்றல் பொருள்களில் பொலிந்து நிற்கும் உணர்ச்சி பாவனைகளை மட்டிலும் தேர்ந்தெடுப்பதால், அவை நம் மனத்தில் நிலையாகப் பதிவு பெறுகின்றன.

மேலே கூறிய கருத்து விளக்கக் கற்பனை கலந்த கவிதைகள் தமிழ் இலக்கியப் பூங்காவில் எண்ணற்றவை உள்ளன. ஒருசிலவற்றை மட்டிலும் ஈண்டுக் காண்போம்.

இராமகாதையில் ஒரு கட்டம்: இரு வேறுபட்ட மனங்கள் போராடுகின்றன. இராமனுக்கு முடிசூட்ட எண்ணுகின்றான் தசரதன்; அந்த எண்ணத்தைச் சிதைத்துத் தன் மகன் பரதன் பாராளவேண்டும் என்று வாதாடுகின்றாள் கைகேயி. நாம் என்ன நேரிடுமோ என ஏங்கி முடிவை எதிர்பார்த்து நிற்கின்றோம். நம் ஆவலை முற்றுவிக்கக் கவிஞன் பொழுதுவிடிவதைப் புலப்படுத்து கின்றான். இரவு கழிந்ததை அவன்,

“ சேணு லாவிய நாளெலாம் உயிர்
 ஒன்று போல்வன செய்துபின்
ஏணு லாவிய தோளினாள் இடர்
 எய்த ஒன்றும் இரங்கிலா
வாணிலா நகை மாதராள் செயல்
 கண்டு மைந்தர்முன் நிற்கவும்
நாணி னாளென ஏகினாள் நளிர்
 கங்கு லாகிய நங்கையே”[19]

என்று கூறுகின்றான். இதில் உள்ள கற்பனையில் கவிஞனின் குரல் நம் இதயத்தைத் தொடுகின்றது. தசரது

[19] அயோத் - கைகேயி சூழ்வினை—46

னுடன் உயிர்போல் மருவியிருந்த கைகேயி "கோமுடி நாளைச் சூடவிருந்த இராமனை"க் காட்டிற்கு அனுப்ப எண்ணியதால், இரவாகிய பெண் இச்செய்கை பெண்ணினத்திற்கே என்றும் நீங்காத வசை என்று எண்ணி ஆடவர்முன் நிற்கவும் கூசி மறைந்தாள் என்று கூறுகின்றான் கவிஞன். இராமன் முடி சூடவிருந்த முதல்நாள் இரவு தசரதன் கைகேயியுடன் நெடுநேரம் மன்றாடியதையும் பலனின்றி உளமுடைந்து நிற்கும் மனநிலையையும் பல கவிதைகளால் உரைத்த கவிஞன் படிப்போரின் துயருணர்வு மிகுந்துள்ள நிலையை மாற்றி ஆறுதலளிக்கும் பொருட்டு இப்படி ஒரு கற்பனைப் பேச்சை இடையில் நுழைத்துள்ளான்.

இந்தக் கட்டத்தில் விடியற்காலத்தில் கோழி கூவுகின்ற செய்தியைக் கூறுவதில் கவிஞனின் உயிர்நாடி பேசுகின்றது. கோழி கூவும் ஒலியைக் கேட்கும் கவிஞனின் உணர்ச்சி பாடலில் கொப்புளித்து நிற்கின்றது.

"எண்டருங்கடை சென்ற யாமம்
இயம்புகின்றன ஏழையால்
வண்டு தங்கிய தொங்கல் மார்பன்
மயங்கி விம்மிய வாறெலாம்
கண்டு நெஞ்சு கலங்கி அஞ்சிறை
யான காமர் துணைக்கரம்
கொண்டு தம்வயிற் றெற்றி யெற்றி
விளிப்ப போன்றன கோழியே"[20]

கைகேயியின் கொடுஞ் செயல் கண்டு சகியாமல் "ஐயையோ! இந்தப் பழிகாரி செய்த அநியாயத்தைப் பார்த்தீர்களா! அந்தோ, பெருத்த அநியாயம்!" என்று சிறகுகளால் மார்பில் அடித்துக்கொண்டு அலறி உலக மக்களை நோக்கிக் கோழி ஓலமிடுவதாகக் கூறும் கவிஞன் கூற்றில் உணர்ச்சி பொங்கி வழிகின்றது.

[20] அயோத், கைகேயி சூழ்வினை—47

காரிருளில் கானகத்தில் காதலியை நளன் விட்டேகினபொழுது. துயிலெழுந்த தமயந்தி கணவனைக் காணாது வாடுகின்றாள். இச் சோகக் கட்டத்தை நீட்டிக்க விரும்பாத கவிஞன் புகழேந்தி விடியும் தருணத்தைக் காட்டுகின்றான். கோழி கூவுகின்றதை,

"தையல் துயர்க்குத் தரியாது தன் சிறகாம்
கையால் வயிறலைத்துக் காரிருள் வாய்—வெய்யோனை
வாவுபரித் தேரேறி வாவென்று அழைப்பனபோல்
கூவினவே கோழிக் குலம்."[21]

என்று காட்டுகின்றான். கோழிகள் சிறகுகளால் மார்பில் அடித்துக் கொள்ளுகின்றன என்பதும். தமயந்தியின் துயரை நீக்க வருமாறு கதிரவனை நோக்கிக் கூவுகின்றன என்பதும் கவிஞனின் புனைந்துரைகள். அவன் அச்சமயம் உணர்ந்த உணர்ச்சி இப்படிக் கவிதை வடிவில் வெளிவந்துள்ளது.

கலிங்கத்துப் பரணியில் வரும் சில காட்சிகளைக் காண்போம் : மகளிர் நடந்துவருங்கால் சிலம்பொலிக்கின்றது. இதைச் செயங்கொண்டார்,

"உபய தனமசையில் ஒடியும் இடைநடையை
ஒழியும் ஒழியுமென ஒண்சிலம்பு
அபயம் அபயமென அலற நடைபயிலும்
அரிவை மீர்கடைகள் திறமினோ."[22]

என்று கூறுவர். மகளிர் நடக்குங்கால் கொங்கைகளின் பாரம் தாங்கலாற்றாது அவர்கள் நுண்ணிய இடை முறிந்து போகுமாதலால், அவர்கள் காலிலுள்ள சிலம்புகள் 'அபயம், அபயம்' என ஒலித்து நடையை ஒழிய வேண்டும் என்று முறையிடுகின்றனவாம்.

---

[21] நளவெண்—283 [22] கலிங்—தாழி. 58

"தரைமகள்தன் கொழுநன்றன் உடலந் தன்னைத்
தாங்காமல் தன்உடலால் தாங்கி விண்ணாட்டு
அரமகளிர் அவ்வுயிரைப் புணரா முன்னம்
ஆவிஒக்க விடுவாளைக் காண்மின் காண்மின்."[23]

என்பது போர்களத்தில் காணும் ஒரு நிகழ்ச்சி; போர்க் களத்தில் மகள் ஒருத்தி தன் கணவனுடன் உயிர்துறத் தலைக் கூறுவது. இதில் கவிஞன் கற்பனை செய்திருப் பது மிகவும் இன்பம் பயத்தலை அறிக.

காஞ்சிமா நகர் தேவர் உலகைவிட அழகால் சிறந் துள்ளது என்பதைச் சிவஞான முனிவர் ஓர் அழகான கற்பனை மூலம் விளக்குகின்றார். காஞ்சியம்பதியும் தேவ ருலகும் கீழும் மேலுமாக நிற்கும் இயற்கைக்கு அவரால் பிறிதொரு காரணம் கற்பிக்கப்பெறுகின்றது.

"கச்சிமா நகர்ஓர் தட்டும்
கடவுளர் உலகோர் தட்டும்
வைச்சுமுன் அயனார் தூக்க
மற்றது மீது செல்ல
நிச்சயம் முறுகித் தாழ்ந்து
நிலமிசை விழும்இவ் வூரை
இச்சகத் தூர்க ளோடு
எண்ணுதல் மடமைப் பாற்றே"[24]

என்ற செய்யுளில் கவிஞன் காட்டும் கற்பனையை எண்ணி மகிழ்க. காஞ்சியில் மற்றோரிடத்தில் சைவ மடங்களில் உள்ள துறவியர் மூக்கில் விரலை வைத்துக் கொண்டு நிட்டையில் இருந்ததாகக் கூறும் பாடலும் கற்பனை செறிந்து காணப்பெறுகின்றது.

"காமனை முனிந்து நெடுஞ்சடை தரித்துக்
கவின்றகல் லாடைமேற் புனைந்து

---

[22] தாழிசை—58 [23] தாழிசை—483.

[24] காஞ்சிபுரா—திருநகரப் படலம்.

யாமெலாம் வழுத்தும் துறவியென் றிருந்தும்
ஒருத்திதன் இளமுலைச் சுவடு
தோமுறக் கொண்டார் எனச்சிறை யிடல்போல்
சுடர்மீனக் குகையுள்ஏ கம்பத்து
'ஓம்' மொழிப் பொருளை அடக்கிஆ னந்தம்
உறுநர்வாழ் இடம்பல உளவால்."[25]

என்ற பாடலில் அடிகள் புனைந்துரைக்கும் கற்பனை யைச் சுவைத்து மகிழ்க.

தமிழ் இலக்கியத்தில் பகலவன் தோற்றம், மறைவு, சந்திர உதயம் போன்ற காட்சிகள் சந்தர்ப்பங்களுக் கேற்றவாறு சுவையாக வருணிக்கப் பெற்றுள்ளன. கற்பனையின் பல உயர்ந்த கொடுமுடிகளை ஆங்காங்குக் காணலாம். அவற்றுள் ஒன்றிரண்டை மட்டிலும் ஈண்டுக் காட்டுவோம்.

"எண்ணரிய மறையினொடும் கின்னரர்கள்
இசைபாட உலகம் ஏத்த
விண்ணவரும் முனிவர்களும் வேதியரும்
கரம்குவிப்ப வேலை என்னும்
மண்ணும்அணி முழவுஅதிர வானரங்கில்
நடம்புரிவான் இரவி யான
கண்ணுதல்வா னவன்கனகச் சடைவிரிந்தால்
எனவிரிந்த கதிர்கள் எல்லாம்"[26]

என்பது கம்பன் காட்டும் பகலவனின் தோற்றம். கதிர் களைப் பரப்பி வானரங்கில் எழும் கதிரவன் தோற்றம் ஆனந்தக் கூத்தாடும் ஆண்டவனை யொத்திருக்கின்றான் என்று ஒப்புமை காட்டிப் பாராட்டுகிறான். பாரதியார்

---

[25] காஞ்சிபுரா—திரு நகரப்படலம்—109.

[26] பாலகாண்டம்—மிதிலைக்-153.

[27] பாஞ்சாலிசபதம்—செய். (147—151)

காட்டும் கதிரவன் மறைவு சுவையின் கொடுமுடியையே எட்டிப் பிடித்துவிடுகின்றது.[27] பாரதிதாசன் காட்டும் முழுமதியக் காட்சியைக் காண்போம்.

"நீலவான் ஆடைக்குள் உடல்ம றைத்து
நிலாவென்று காட்டுகின்ருய் ஒளிமு கத்தை
கோல முழுதுங் காட்டிவிட்டால் காதற்
கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ ? வானச்
சோலையிலே பூத்ததனிப் பூவோ நீதான் !
சொக்கவெள்ளிப் பாற்குடமோ ? அமுத ஊற்ருே ?
காலைவந்த செம்பரிதிக் கடலில் மூழ்கிக்
கனல்மாறிக் குளிரடைந்த ஒளிப் பிழம்போ!"[28]

இயற்கையாகிய பெண் தன் உடலையெல்லாம் நீலவானமாகிய ஆடைக்குள் மறைத்துக்கொண்டு முகத்தைமட்டிலும் காட்டுகின்ருளாம்; முழுவடிவையும் காட்டிவிட்டால் இவ்வுலக மக்கள் காதற்கொள்ளையில் இறந்துவிடுவார்களாம். மற்றும் கவிஞனுக்கு குளிர்மதி சோலையிலே பூத்த தனிப்பூவாகவும், சொக்க வெள்ளிப்பாற்குடமாகவும், அமுத ஊற்ருகவும், காலையில் தோன்றிய கதிரவன் கடலில் மூழ்கி எழுந்ததால் குளிரடைந்த ஒளிப் பிழம்பாகவும் தோன்றுகின்றது.

இந்த எடுத்துக்காட்டுக்களையெல்லாம்ஆராய்ந்தால் கவிஞர்கள் இயற்கையை அப்படியே வருணிக்கவில்லையென்றும், காணுங் காட்சிகளைப் பொருளுணர்வு தோன்றச் சொல்லுகின்றனர் என்றும் தெரிகின்றது. கண்டதைக் கண்டவாறு சொல்வது அவர்கள் இயல்பன்று. காணும்பொழுதும் உள்ளத்தில் எழும் உணர்ச்சியுடன் கலந்து காட்சிகளில் சில பகுதிகளை மட்டிலும் தருகின்றனர். அவ்வாறு தருகின்றபொழுது ஏதோ ஒரு வித நோக்கத்தை மட்டிலுந்தான் காட்டுகின்றனர். இவ்

[28] பாரதிதாசன் கவிதைகள் : புரட்சிக்கவி.

வாறு காட்டுவது அவ்வப்பொழுது அவர்கள் கொண் டுள்ள மனப்பாங்கையும் மனநிலையையும் பொறுத்தது. ஆங்கிலக் கவிஞரான வொர்ட்ஸ்வொர்த் என்பார் தமது பாடல்களில் தத்துவத்தைக் கலந்து தருகின்றார் ; கம்ப நாடன் தனது பாடல்களில் பல உலகியல் உண்மைகளை யும் இறைவன் தன்மையையும் குழைத்து வெளியிடு கின்றான். திருத்தக்க தேவர் பாடல்களில் நிலையாமை உணர்ச்சி பொங்கி வழிகின்றது.

ஆராய்ச்சிக்காகக் கற்பனை மூன்றுவகையாக வகுக் கப்பெற்றதேயன்றி. கற்பனை இம்மூன்று பிரிவில்தான் அடங்கும் என்று வலியுறுத்துவதற்காக அன்று; அநுப வத்தில் கவிதைகளில் இம்மூன்றுவிதக் கற்பனைகள் கலந்தும் வரலாம், கலவாமலும் வரலாம். சில சமயம் கற்பனைகளை இனம் வகுக்கவும் இயலாது.

## 3. இயற்கைக் கூத்து

கண்ணால் காணும் நிகழ்ச்சிகளைக் கவிதைகளில் பாய்ச்சி அலங்கரிக்கின்றனர் கவிஞர்கள். சங்க காலத்தி லிருந்து இன்றுவரை தமிழ் இலக்கியக் கருவூலத்தை அணிசெய்து நிற்கும் இலக்கியங்களைப் படிப்போ மானால் இவ்வுண்மை நன்கு விளங்கும்.

இயற்கை வாழ்வில் தோய்ந்து இயற்கைக் காட்சி களைக் கண்ணுற்று மகிழும் சங்ககாலப் புலவர்கள் இயற்கையையே குழைத்துத் தமது பாடல்களில் கலந்துள்ளனர். உள்ளவற்றை உள்ளபடியே கூறினாலும், அவர்கள் படைத்துக் காட்டும் சொல்லோவியம் நமது உளக் கோவிலில் நன்கு தீட்டப்பெற்று விடுகின்றது.

சங்கப் புலவர்களில் கபிலர் தலைசிறந்தவர்; மலை நாட்டு வளங்களைச் சிறப்பித்துப் பாடுவதில் வல்லவர். பெரும்பாலும் அவர் பாடல்கள் குறிஞ்சி நிலத்தைப் பற்றிய வருணனைகளைக் கொண்டவைகளாகவே இருக் கின்றன.

அவர் காட்டும் ஒரு காட்சி: மேகம் தவழும் மலை ஒருபால் அண்ணாந்து நிற்கின்றது. மலைச் சாரல்களில், பக்க மலைகளில் மூங்கில்கள் ஓங்கி வளர்ந்திருக்கின்றன; அவை கோடைக் காற்றால் கம்பீரமாக ஆடி அசை கின்றன. மூங்கிற் சோலைக்கருகில் ஓர் அழகிய அருவி ஓடுகின்றது; அதில் பளிங்கு போன்ற நீர் 'இழும்' என ஒலித்து மேலிருந்து பள்ளத்தாக்கை நோக்கிப் பாய் கின்றது. அத்தகைய அருவியின் அருகில் கலைமான் கூட்டமொன்று தாழ்ந்த குரலை எழுப்பிக் களிப்புடன் விளையாடிக்கொண் டிருக்கின்றது. மலைச்சாரல்களில்

பூக்களுக்குக் குறைவு உண்டா? பூக்கள் 'கம்'மென மணத்தைப் பரப்பி நிற்கின்றன. நிறத்தாலும் மணத்தாலும் கவரப்பெற்ற வண்டுகள் தம் உணவாகிய தேனைக் கொண்டுள்ள அம்மலர்களை நாடி இனிய பண்ணோசையை உண்டாக்குகின்றன. மரங்களின்மேலுள்ள மந்திகள் மருண்டு மருண்டு பார்க்கின்றன. மயில் ஒன்று தோகையை விரித்துக்கொண்டு ஆடுகின்றது. அடிக்கடி மேகங்கள் திரளும்பொழுது மயிலின் ஆட்டம் நடைபெறுகின்றது.

இக்காட்சிகளையெல்லாம் காண்கின்றார் கபிலர். அவர் சிந்தனை வேலை செய்யத் தொடங்குகின்றது. தனது மனக்கண்முன் வேறு ஒரு காட்சியைக் காண்கின்றார். அது என்ன? கழைக்கூத்தன் ஆடும் கூத்து ஒன்று அவர் மனக்கண்முன் வந்து நிற்கின்றது. கழைக்கூத்தனின் மனைவி வளைந்த மூங்கிலின்மீது நின்றாடுவதும், கழைக்கூத்தன் மத்தளம் முழக்குவதும், அவர்களது மக்கள் அருகே நின்றுகொண்டு குழலையும் யானைத் துதிக்கைபோன்ற வங்கியம் என்ற ஒருவகை வாத்தியத்தையும் ஊதுவதும், வேடிக்கைப் பார்க்கும் மக்கள் அந்தக் கூத்தினைப் பார்த்துக்கொண்டு நிற்றலும் அவர் மனக்கண்முன் தோன்றுகின்றன.

தன் மனக்கண்முன் தோன்றிய காட்சியைத் தான் நேரில் கண்ட காட்சிகளுடன் ஒற்றுமைப் படுத்துகின்றார் கவிஞர். கழைக்கூத்தன் மனைவியை யொப்ப மயில் நடனம் ஆடுகின்றது. நடனத்திற்கேற்ற பக்கவாத்தியங்கள் இயற்கையிலேயே அமைந்து கிடக்கின்றன. வண்டுகளால் துளைக்கப்பட்ட மூங்கிலின் துளைகளில் கோடைக்காற்று புகுந்து வெளிப்படும்பொழுது புல்லாங்குழல் வாசிப்பதுபோல் இருக்கின்றது. அருவி நீர் மேட்டிலிருந்து பள்ளங்களில் விழுந்து விழுந்து ஓடும் பொழுது மத்தளம் கொட்டுவதுபோன்ற ஒலி கேட்கின்

றது. கலைமான் கூட்டங்கள் தாழ்ந்த குரலை எழுப்பி விளை யாடுவது வங்கியம் என்ற வாத்தியம் இயங்குவது போலுள்ளது.மலர்களை நாடி நிற்கும் வண்டுகளின் பாட்டொலி யாழோசை போலிருக்கின்றது. *இத்திறத்தினை யுடைய பக்கவாத்தியங்களுடன் மயில் ஆடுகின்றது என்று கபிலர் காட்டும் சொல்லோவியம் :

ஆடமை குயின்ற அவிர்துளை மருங்கில்
கோடையவ்வளி குழல்இசை யாகப்
பாடின் அருவிப் பனிநீர் இன்னிசைத்
தோடமை முழவின் துதை குரலாகக்
கணக்கலை இருக்கும் கருங்குரல் தூம்பொடு
மலைப்பூஞ் சாரல் வண்டுயாழ் ஆக
இன்பல் இமிழ்இசை கேட்டுக் கலிசிறந்து
மந்தி நல்லவை மருள்வன நோக்கக்
கழைவளர் அடுக்கத்து இயலி ஆடும்மயில்
நனவுப்புகு விறலியில் தோன்றும்........[1]

[ஆடு அமை-அசையும் மூங்கில் ; குயின்ற-துளைக்கப் பெற்ற ; கோடை அவ்வளி-மேல்காற்று ; குழல்-புல்லாங் குழல் ; பனி நீர்-குளிர்ந்த நீர் ; தோடு அமை-தொகுதியாக அமைந்த ; முழவு-மத்தளம் ; துதை குரல்-நெருங்கிய இசை; கணக்கலை-கூட்டமான கலைமான்கள் ; தூம்பு-யானைத் துதிக்கை போன்ற வங்கியம் என்ற ஒருவகை வாத்தியம் ; இன் பல்-இனிய பலவாகிய ; இமிழ்-ஒலிக்கும் ; கலி சிறந்து-ஆரவாரம் மிக்கு ; கழை-மூங்கில் ; அடுக்கத்து-பக்க மலையில் ; இயலி ஆடும் மயில்-உலாவி ஆடுகின்ற மயில்கள் ; நனவு-நாட்டியம் ஆடும் களம் ; விறலியில்-விறலி போன்று]

இம்மாதிரியான நடனக்காட்சி ஒன்றைச் சீத்தலைச் சாத்தனார் என்ற புலவர் ஒருவர் காட்டுகின்றார். சங்க இலக்கியங்களைப் பயின்ற அநுபவத்தால் இக்காட்சியை அமைத்தாரோ அல்லது தாமாகவே அமைத்தாரோ

[1] அகநானூறு-82.

அது நமக்குத் தெரியாது ; ஆனால், அக்காட்சியை மணிமேகலை என்ற தமது நூலில் அமைத்துக்காட்டுகின்றார்.

மலர் கொய்வதற்கு மணிமேகலையும் அவள் தோழியாகிய சுதமதியும் உவவனம் என்ற வனத்துக்கு வருகின்றனர். அவ்வனத்திலுள்ள இயற்கைக் காட்சிகளை யெல்லாம் சுதமதி மணிமேகலைக்குக் காட்டிக்கொண்டு வருகின்றாள்.அவற்றுள் இதனை முதற்காட்சியாக அமைத்துக் காட்டுகின்றார் கவிஞர்.

இதுதான் காட்சி : பகலவனின் கதிர்களாகிய சேனைக்குப் பயந்து உலகிலுள்ள இருட்படலங்கள் எல்லாம் திரண்டு ஓரிடத்தில் கூடியிருப்பதைப் போன்ற மரங்கள் செறிந்த சோலை ஒன்று உள்ளது. அங்குத் தும்பி என்ற ஒருவகை வண்டுகள் புல்லாங்குழல் இசை போன்ற ஒலியை எழுப்புகின்றன. இன்னொருவகை வண்டினங்கள் யாழின் இசைபோல் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. கதிரவன் தோன்றி மறையும்வரை அவனுடைய கதிர்கள் சோலையுள் புகமுடியாது. ஆனால், குயில் பறவைகள் அச்சோலையுள் நுழைந்து இன்னிசையை இயக்கும். அத்தகைய சோலையுள் இயற்கையில் கிட்டும் வண்டினங்களின் பாடல்களாகிய பக்க வாத்தியங்களைத் துணையாகக்கொண்டு மயில் நாட்டியம் ஆடுகின்றது. அந்த மயிலின் நடனத்தை மந்திகள் பார்த்து மகிழ்கின்றன. இக்காட்சியைச் சுதமதி மணிமேகலைக்குக் காட்டுகின்றாள்.

பரிதியஞ் செல்வன் விரிகதிர்த் தானைக்கு
இருள்வளைப் புண்ட மருள்படு பூம்பொழில்
குழல்இசை தும்பி கொளுத்திக் காட்ட
மழலை வண்(டு)இனம் நல்லியாழ் செய்ய
வெயில்நுழைபு அறியாக் குயில்நுழை பொதும்பர்
மயிலா(டு)அரங்கின் மந்திகாண் பனகாண். [2]

---

[2] மணிமேகலை: பளிக்கறை புக்க காதை: (1-6 வரிகள்)

[பரிதியஞ் செல்வன்-சூரியன்; தானை-சேனை; இருள் வளைப்பூண்ட-இருட் படலங்களால் முற்றுகையிடப்பட்டன போன்று; பூம்பொழில்-அழகிய சோலை; கொளுத்திக்காட்ட-பொருத்திக் காட்ட; மழலை வண்டினம்-இளைய வண்டு இனங்கள்; பொதும்பர்-இளமரக்கா (park); அரங்கு-நாடக மேடை.]

என்பது சாத்தனாரின் சொல்லோவியம்.

சாத்தனாருக்குப் பிறகு வந்த திருத்தக்க தேவர் என்ற சிந்தாமணியின் ஆசிரியர் இந்த இயற்கை நடனத்தை இன்னொருவிதமாகக் காட்டுகின்றார். அவர் இளவேனிற்காலத்தையே நாட்டியம் ஆடும் ஓர் ஆண் மகனாகவே உருவப்படுத்தி விடுகின்றார்.

அவர் காட்டும் காட்சி: இளவேனிற்காலம். ஓர் அழகிய சோலையில் ஏராளமாகப் பூக்கள் பூத்துக் குலுங்கி நிற்கின்றன. வண்டுகள் இளியென்ற பண்ணைப் பாடும் யாழ்போல் ஒலிக்கின்றன. கரிய கண்களையுடைய தும்பிகள் புல்லாங்குழல் போல் ஓசை எழுப்புகின்றன. குயில்கள் கூவுவது மத்தள ஒலிபோல் கேட்கின்றது. காட்டின் வழியாகத் தூது செல்லும் பாணன் பாடும் பாட்டு நடனத்திற்கான பாட்டாக உதவுகின்றது. இந்தச் சூழ்நிலையில் மேற்காட்டிய இசைக் கருவிகளைத் துணையாகக் கொண்டு இளவேனில் என்ற கூத்தன் நடனம் ஆடுகின்றான். இதோ கவிஞன் காட்டும் நடனக் காட்சி:

"இளிவாய்ப் பிரசம் யாழாக
இருங்கண் தும்பி குழலாகக்
களிவாய்க் குயில்கள் முழவாகக்
கடிபூம் பொழில்கள் அரங்காகத்

தளிர்போல் மடவார் தணந்தார்தம்
தடந்தோள் வளையும் மாமையும்
விளியாக் கொண்(டு) இங்(கு) இளவேனில்
விருந்தா ஆடல் தொடங்கினான்''. [3]

[இளி-ஒருபண்; பிரசம்-வண்டு; தும்பி-ஒருவகை வண்டு; களிவாய்-களிக்கின்ற வாயினையுடைய; முழவு-மத்தளம்: பொழில்கள் - சோலைகள்; அரங்கு - நாடக மேடை; தணந்தார்-பிரிந்தார்; தடந்தோள் வளையும் மாமையும்-வளை கழன்றபடியையும் மாமைநிறம் கெட்ட படியையும் தத்தம் கணவர் உணர்வதற்குத் தூது சென்ற பாணன் யாழ்மேல் வைத்துப் பாடும் பாட்டை; விளியா-பாட்டாக; விருந்தா-புதிதாக; ஆடல்-நடனம்.]

இக் காட்சிகளை யெல்லாம் கண்டுகளித்த கம்பன் இக் கண்கொண்டே தனது காவியத்திலும் இத்தகைய நாட்டியம் ஒன்றை நமக்குக் காட்டுகின்றான். காலத்திற் கேற்றாற்போல் கருத்துக்களும் பாடலும் மாறுவது ஆராய்ந்து மகிழ்வதற் குரியது.

கம்பன் காட்டும் காட்சி: சேலைகளைப் பிடித்துக் கொண்டு விரித்தாடும் நடனமாதர்களைப் போலவே, மயில்கள் தோகைகளை விரித்தாடுகின்றன. விளக்கு களைத் தாங்கி நிற்கும் மகளிர்களைப் போலவே தாமரைக் கொடிகள் கூம்பிய மலர்களைத் தாங்கி நிற்கின்றன. முழவினை இயக்குவோர் முழவினின்று ஒலிகளைக் கிளப்பு வது போலவே, மேகங்கள் இடி முழக்கம்செய்து நிற்கின்றன. கூத்துப் பார்ப்பவராகக் குவளைக்கொடி கள் உள்ளன. அக்குவளைக் கொடிகளாகிய பார்வை யாளர்கள் மலர்களாகிய கண்களால் பார்க்கின்றனர். யாழ்ப்பாணர்கள் இனிய ஒலியை உண்டாக்கி மனத் தைக் களிப்பிப்பது போலவே வண்டுகள் இன்னோசை யால் 'ரீங்காரம்' செய்து நிற்கின்றன. இக் காட்சிகளை யெல்லாம் கண்டுகளித்துக் கொலுவீற்றிருக்கின்றது மருதத்திணை அரசு.

[3] சிந்தாமணி—2691.

இக்காட்சிகளைக் கண்டுகளித்த கம்பன் நம்மையும் களிக்க வைப்பதற்குப் புனைந்த சொல்லோவியம்:

"தண்டலை மயில்க ளாடத்
தாமரை விளக்கம் தாங்கக்
கொண்டல்கள் முழவின் ஏங்கக்
குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை எழினி காட்டத்
தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட
மருதம்வீற்(று) இருக்கு மாதோ!"[4]

[தண்டலை-சோலை; கொண்டல்கள்-மேகங்கள்; முழவின்-மத்தளம் போல; ஏங்க-ஒலிக்க; தென்திரை-தெண்டிரை—தெளிவான அலை; எழினி-நாடகத் திரைச்சீலை; தேம்பிழியாழின்-இனிமையுள்ள தேன் போன்ற இனிய யாழ் ஓசை.]

இன்னும் ஒரு காட்சியைக் காண்போம். இது 'பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டக்' கூறவல்ல சேக்கிழார் பெருமான் காட்டுவது; இது கார்காலத்தில் மாலை நேரத்தைச் சித்திரிப்பது.

"நீலமா மஞ்ஞை ஏங்க
நிரைகொடிப் புறவம் பாடக்
கோலவெண் முகையேர் முல்லைக்
கோபம்வாய் முறுவல் காட்ட
ஆலுமின் இடைசூழ் மாலைப்
பயோதரம் அசைய வந்தாள்
ஞாலநீ டரங்கில் ஆடக்
காரெனும் பருவ நல்லாள்."[5]

[மஞ்ஞை—மயில்; புறவம்—புரு; பயோதரம்—கொங்கை]

---

[4] கம்பரா. நாட்டுப் படலம்—செய்: 4

[5] பெரியபுரா—ஆனாய நாயனார்—19

இது போன்ற காட்சிகளை நன்கு சுவைக்க வேண்டுமானால் நாட்டியக் கலையினைப்பற்றி ஓரளவு நன்கு தெரிந்திருத்தல் வேண்டும்.

இங்ஙனம் வழிவழிவந்த கவிஞர்கள் இயற்கையில் தாம் கண்ட காட்சிகளைத் தமது கற்பனைத் திறத்தால் கவிதைகளாக வார்த்துத் தந்து இடத்தாலும் காலத்தாலும் பிரிக்கப்பட்டிருக்கின்ற நம்மை மகிழ்வித்துக் கொண்டுள்ளனர். அவர்கள் படைத்த கவிதைகள் தமிழ் மொழி உள்ள அளவும் அவற்றைப் படிப்பவர்களை மகிழ்வித்துக் கொண்டிருக்கும் என்பதற்கு என்ன தடை?

## 4. பாரதியின் பாஞ்சாலி சபதம்

ஒரு மொழியின் வளத்தை அம்மொழியிலுள்ள காப்பியங்களே புலப்படுத்தும். பண்டைக் காலந் தொட்டு வளமலிந்த நம் தமிழ் மொழியில் அளவிறந்த காப்பியங்கள் உண்டாயின. காப்பியங்களை இலக்கண நூல்கள் 'பொருள் தொடர் நிலைச் செய்யுட்கள்' என்று குறிப்பிடும். தமிழர்களின் தலைசிறந்த இலக்கணமாகிய தொல்காப்பியத்தில் தோல், விருந்து போன்ற பெயர் களாற் குறிப்பிடப்பெறும் காப்பியங்கள் இன்று வழக் காற்றில் இல்லை. அவை உரையாசிரியர்களின் காலத்தே வழக்கு வீழ்ந்தமையின் அவர்கள் அவற்றைக் கூருமல் இலக்கணத்தை விளக்குவதற்குத் தத்தம் காலத்து வழங்கிய நூல்களை மேற்கோள் காட்டிச் சென்றனர். நம்மிடையே இன்று பயின்று வரும் சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை, சிந்தாமணி, கம்பராமாயணம், பெரியபுராணம், கலிங்கத்துப்பரணி, பல்வேறு தலபுராணங்கள் போன்ற காப்பியங்களையும், பிறசமய அறிஞர்கள் அண்மையில் இயற்றிய தேம்பாவணி, இரட்சண்ய யாத்திரிகம், சீருப்புராணம் போன்றவைகளையும் வரலாற்று வரிசையில் வைத்து எண்ணிப் பார்த்தால் அவற்றினிடையே உள்ள பொதுத்தன்மை எளிதில் புலனுகும். கி. பி. ஏழாம் நூற்ருண்டு வரையில் தோன்றிய காப்பியங்களில் பெரும்பாலும் அகவல் நடை (Blank Verse) கையாளப் பெற்றிருப்பதையும் அதற்குப் பிறகு தோன்றிய காப்பியங்களில் பாவினங்கள் பயின்று வருவதையும் காணலாம். சிந்தாமணிதான் விருத்த யாப்பில் தோன் றிய முதற் காப்பியம். அதை யொட்டியே கம்பராமா

யணம், பெரியபுராணம் போன்ற காப்பியங்கள் விருத்த யாப்பில் எழுந்தன. காப்பிய நடையில் எழுந்த தலபுராணங்களில் ஒன்றிரண்டைத் தவிர அனைத்தும் வெறும் செய்யுட் குவியல்களாகக் காட்சி யளிக்கின் றனவேயன்றி, அவற்றில் கவிதை நயமும் இல்லை; காப்பியச் சுவையும் இல்லை. கிறித்தவக் கவிஞர்களும், முகம்மதியப் புலவர்களும் இயற்றியுள்ள காப்பியங்களில் ஓரளவு இவை நன்கு அமைந்துள்ளன. இவர்கள் யாவரும் பழைய முறையினையே கையாண்டிருக் கின்றனர். சிந்தாமணிக்குப் பிறகு எழுந்த காப்பி யங்கள் யாவும் அதையே முன்மாதிரியாகக் கொண்டு யாக்கப்பட்டன என்று கூறலாம். கலிங்க நாட்டுப் படையெடுப்பைப் பொருளாகக் கொண்டு தாழிசையில் எழுதப்பெற்ற முதற் காப்பியமான 'கலிங்கத்துப் பரணி'யை முன்மாதிரியாகக் கொண்டு பின்னர் எழுந்த பரணி நூல்கள் யாவும் அதனைப்போல் சிறப்பாக அமையவில்லை.

மேனாட்டார் பெருங்காப்பியங்களை இரண்டு வகை யாக பிரித்துள்ளனர். முதல் வகையைத் தேசீய காப்பியங்கள் (National or authentic Epics) என்று குறிப்பிடுவர். பெரும்பாலும் இவை கவிஞனின் நாட் டைச் சார்ந்த ஒரு வீரனின் வீரச்செயல்களையும் வெற்றிச் சிறப்புக்களையும்பற்றியே கூறிச் செல்லும். எண்ணற்ற கட்டுக்கதைகள் (Legends) அவ்வீரர்களைச் சுற்றி இயங்கும். கவிஞன் அவற்றிற்குத் தன் காவியத் தில் அழியாத் தன்மையை அளித்து அவற்றினைப் பாதுகாக்கின்றான். இவற்றிற்கு எடுத்துக் காட்டுக்களாக இலியட் (Iliad), நிபுலன் ஜென்லைட் (Nibulengeniled); பியோ வொல்ஃப் (Beowulf) என்பவற்றைக் குறிப்பிட லாம். இரண்டாவது வகையை இலக்கியக் காப்பி யங்கள் (Literary or artificial-Epics) என்று வழங்

குவர். பெருங்காப்பியங்களுக்குரிய பண்புகள் யாவும் கொண்டிலங்கினும் கவிஞன் தன் நாட்டைப்பற்றியோ தன் நாட்டைச் சார்ந்த வீரனொருவனைப் பற்றியோ சிறப்பிக்க வேண்டுமென்ற கவலை கொள்ளுவதில்லை. ஏதாவது ஒரு புராணக் கதையிலுள்ள (Mythology) வீரனைக் காப்பியத் தலைவனாகக்கொண்டு காவியத்தைப் படைக்கலாம். மில்டனின் சுவர்க்க நீக்கத்தை (Paradise Lost) இதற்குச் சான்றாகக் கொள்ளலாம். நம் நாட்டுக் காவியங்களாகிய சிலப்பதிகாரம், கம்ப ராமாயணம் போன்றவைகள் மேனாட்டு முதல்வகைக் காவியங்களுள் அடங்குமாயினும் அவற்றிற்குத் தனிச் சிறப்புக்கள் உள. இவை வெறும் நாட்டினையோ வீரனையோ சிறப்பிக்காது, மன்பதைக்கு என்றும் அழியாத உண்மைகளை வழங்கிவரும் இலக்கியக் கருவூலங்கள் என்று சொல்லலாம். மன்பதைக்கு என்றுமே ஒரு கலங்கரை விளக்கம் போன்ற ஒன்றினைப் படைக்க வேண்டும் என்று பல ஆண்டுகள் கனவு கண்ட மில்டனைப்போலவே, இளங்கோவும் கம்பனும் சாவா இலக்கியங்களைப் படைத்துள்ளனர்.

பாரதி இயற்றிய 'பாஞ்சாலி சபதம்' இருபதாவது நூற்றாண்டில் உருவான ஒரு தமிழ்க் காப்பியம். தருமன் இந்திரப்பிரத்தத்தில் இராசசூய வேள்வி செய்து முடித்த பிறகு துரியோதனன் முதலிய கௌரவர்கள் அத்தினா புரத்தில் மண்டபம் ஒன்று சமைத்துப் பாண்டவர்களுக்கு அழைப்பு அனுப்பி அவர்களை வரவழைத்து, வஞ்சக மாகச் சூதுக் கிழுத்து, அவர்களை அவமானப்படுத்திய கதைப் பகுதியைக் காப்பியப் பொருளாகக்கொண்டு ஆக்கப் பெற்றது. பழைய கதையைக் கையாண்டு அதற்குப் புது உருவமும் புதிய உயிரும் கொடுத்துக் காப்பியப் படைப்பு செய்வது கவிஞனின் தனிச் சிறப் பாகும். பழைய கதையைப் புதிய காப்பியமாக

வார்ப்பது நாம் நினைப்பது போலவே அவ்வளவு எளி தல்ல; உயிரொளி வீசும் கவிதா சக்தியைப் பெற்ற பெரிய கவிஞர்களால்தான் அவ்வாறு செய்ய முடியும். விவிலியத்தில் காணப்பெறும் சாத்தானின் வீழ்ச்சியைக் குறித்து அழியாப் புகழுடன் விளங்கும் சுவர்க்க நீக்கம் போன்ற காப்பியப் படைப்பும் மேனாட்டு வரலாற்று நூல்களில் காணக்கிடக்கும் ஒரு சில செய்திகளைக் கொண்டு ஜூலியஸ் சீஸர், நாலாம் ஹென்றி, ஐந்தாம் ஹென்றி, இரண்டாம் ரிச்சார்டு போன்ற இறவாத புகழுடைய நாடக இலக்கியங்களின் படைப்பும் ஒப்புயர்வற்ற ஒரு மில்டன், ஒரு ஷேக்ஸ்பியர் போன்ற பெருங் கவிஞர்களால்தான் ஆக்க முடியும். அது போலவே, பாரதியின் படைப்பும் கவிதைச் சுவை யுடனும், நாடகப் பண்புகளுடனும், புதிய கருத்துக்க ளுடனும்' இலங்குகின்றது. சுமார் இரண்டாயிரத்து ஐந்நூற்றுக்கு மேற்பட்ட வரிகளையுடைய 'பாஞ்சாலி சபதம்' காப்பியப் படைப்பில் பாரதியின் சிறந்த வெற்றி யென்று சொல்வது எள்ளளவும் மிகையாகாது.

பாரதியின் 'பாஞ்சாலி சபதம்' ஒரு காப்பியமாகுமா? காப்பியத்திற்குரிய இலக்கணம் இதற்குப் பொருந்து கின்றதா ? எந்தெந்த முறைகளில் பாரதி தன் திறமை யைக் காட்டுகின்முன்? என்பன போன்ற செய்திகளை ஈண்டு ஆராய்வோம். நமது மொழிக்குரிய பெருங் காப்பிய இலக்கணத்தையும் மேனாட்டார் காப்பியங் களைப் பற்றிக் கூறும் சில கருத்துக்களையும் முன் நிறுத்தி ஆராயத் தொடங்குவோம். பெருங்காப்பிய இலக்கணத்தைக் கூறும் தண்டியலங்காரம்,

''பெருங்காப் பியநிலை பேசுங் காலை
வாழ்த்து வணக்கம் வருபொருள் இவற்றினென்(று)
ஏற்புடைத் தாகி முன்வர இயன்று
நாற்பொருள் பயக்கும் நடைநெறித் தாகித்

தன்நிகர் இல்லாத் தலைவனை யுடைத்தாய்
மலைகடல் நாடு வளநகர் பருவம்
இருசுடர்த் தோற்றம் என்(று) இனையன புனைந்து
நன்மணம் புணர்தல் பொன்முடி கவித்தல்
பூம்பொழில் நுகர்தல் புனல்விளை யாடல்
தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்
புலவியிற் புலத்தல் கலவியிற் களித்தல் என்(று)
இன்னன புனைந்த நன்னடைத் தாகி
மந்திரம் தூது செலவு இக(ல்) வென்றி
சந்தியில் தொடர்ந்து சருக்கம் இலம்பகம்
பரிச்சேதம் என்னும் பான்மையின் விளங்கி
நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பிக்
கற்றோர் புனையற் பெற்றிய தென்ப" [1]

என்று கூறுகிறது. மற்றும்,

"கூறிய உறுப்பில் சிலகுறைந்து இயலினும்
வேறுபா(டு) இன்(று)என விளம்பினர் புலவர்" [2]

என்ற ஒரு புறனடையும் தந்து, காப்பியங்களின் யாப்பைக் (Form) குறித்து,

"ஒருதிறப் பாட்டினும் பலதிறப் பாட்டினும்
உரையும் பாட்டையும் விரவியும் வருமே" [3]

என்றும் கூறுகின்றது. உரை நடையும் பா நடையும் விரவி வரும் காப்பியத்தைத் தொல்காப்பியம் 'தொன்மை' என்ற பெயரால் குறிப்பிடும். வடநூலார் இதனைச் 'சம்பு' என்று குறிப்பிடுவர்.

மேனாட்டு இலக்கிய வரலாற்றைப் பார்த்தால் அங்கும் இந்தப் பெருங்காப்பிய நடை காலத்துக் கேற்ற வாறு மாற்றம் அடைந்து வந்துள்ளது. மேனாட்டு ஆசிரியர்கள் அனைவருமே ஹோமரையும் வர்ஜிலையும் தமக்கு முன் மாதிரியாகக்கொண்டு காப்பியங்களை இயற்றியுள்ளனர். ஆங்கில மகா கவிஞரான மில்டன்

---

[1] தண்டிய—சூ. 8. [2] தண்டிய—சூ. 9. [3] ஷை—சூ. 11.

மேற்கூறிய இருவரைப் பின்பற்றியே தமது காவியமாகிய சுவர்க்க நீக்கத்தை எழுதினுரெனினும், அவருக்கு முன்னிருந்த கவிஞர்களைவிட தமது காவியப் படைப்பால் அழியாப் புகழ்பெற்றுர். சுவர்க்க நீக்கத்தின் தலைவனுகிய சாத்தானின் விடாப்பிடியான தீவிரமான மனவேதனை தற்கால மாந்தரின் அறநெறி பற்றிய கருத்தினை எடுத்துக் காட்டும்படியாக அமைந்துள்ளது.[4] இதுகாறும் பெருங்காப்பியத் தலைவர்கள் மனிதரில் ஒரு தேவன்போல் (Superhuman) இருந்தனர். ஆனுல், மில்டனின் காப்பியத் தலைவன் ஒரு தேவனுகவே (Supernatural) இருக்கின்றுன். எல்லாக் காலத்திற்கும் பொருந்தும்படியான பல அரிய கருத்துக்களைக் கொண்டு காப்பியத்தை ஆக்கியுள்ளார் மில்டன். மேனுட்டு அறிஞர் பெருங்காப்பியங்கள் பற்றிக் கூறியிருக்கும் கருத்துக்களை ஆறு பகுதியாகப் பிரித்து வைத்துக்கொண்டு அவை எவ்வாறு பாரதியின் காப்பியத்திற்குப் பொருந்துகின்றன என்பதைக் காண்போம்.

**முதலாவது :** தேர்ந்தெடுக்கும் கதைப் பொருள் ஒரு காப்பியத்துக்கேற்றவாறு சிறப்புடையதாக இருக்க வேண்டும். அது வாழ்க்கையின் உயிர்நாடியாகவுள்ள தவிர்க்க முடியாத ஊழ்வலியை உணர்த்தவல்லதாக இருப்பதுடன் மனித அநுபவத்தையொட்டியும் இருக்க வேண்டும். இவ்விடத்தில் ஆங்கில அறிஞர் லாஸலெஸ் அபெர்குரோம்பி என்பார் கூறியிருப்பது கவனித்தற்குரியது : 'கதை உண்மையானதாக இருத்தல் வேண்டும். இக்கதையை நடுவாக அமைத்து வேறுபல நிகழ்ச்சிகளும் இத்துடன் சேர்த்து இணைக்கப் பெறலாம். இவை எவ்வளவு சிறந்தவையாக இருப்பினும், இவை யாவும் முதற் கதையைச் சிறப்பித்து

[4] Lascelles Abercrombie: The Epic பக்கம் 105

அதன்மீது நம்பிக்கையை உண்டுபண்ணக் கூடியதாக இருத்தல் வேண்டும். இவ்விடத்தில் கதையின் உண்மைப் பொருள் என்ன என்பதைப் பரந்த பார்வையால் காணவேண்டும். அஃதாவது, கதை பொது மக்கள் நன்ருக அறிந்து அவற்றில் தோய்ந்ததாக இருத்தல் வேண்டும். மானிட வாழ்க்கையின் உண்மைகள் அடங்கிய ஒரு கட்டுக் கதை காப்பியத்திற்குச் சிறந்ததாக அமையலாம். ஜூலியஸ் சீஸர் என்ற பெயரை எண்ணும்பொழுதே மக்கள் மனத்தில் எழும் கருத்துக்கள் யாவும் மக்களுக்கு மிகமிக முக்கியமானவையே. அதுபோலவே, சாத்தானைக் கருதும் பொழுது மனத்தில் எழும் கருத்துக்களும் முக்கியமானவையே. இம்முறையில் சாத்தான் சீஸரைப்போலவே உண்மையான பாத்திரந்தான். ஆகவே, மானிடவாழ்வின் அநுபவ சம்பந்தப்பட்ட ஒரு கதையைக் கற்பனை செய்வது ஒரு கவிஞனுல் சாத்தியப்படக் கூடியதே. அவன் கொள்ள வேண்டியதெல்லாம் மனித அநுபவமே ; ஒவ்வொருவரும் அறிந்து, விவாதிக்க முடியாததும் யாவரும் ஒத்துக்கொள்ளக் கூடியதுமான வாழ்க்கை அநுபவமே.'' [5] இந்த முறையில் பார்த்தால் பாரதி எல்லோருக்கும் தெரிந்த ஒரு இதிகாசக் கதையைத்தான் தேர்ந்தெடுத்துள்ளான். இக்கதையின்மூலம் மக்களுக்கு உணர்த்த வேண்டிய உண்மைப் பொருள் அறம் வெல்லும், பாவம் தோற்கும் என்பதுதான். தொடக்கத்தில் தீயவர்கள் வெற்றியடைவது போல் காணப்படினும் இறுதியில் நல்லவர்கள்தாம் கட்டாயம் அறத்தின் பயனை அநுபவிப்பர் என்பது பாரதி காட்ட வந்த உண்மை. காவியத்தில் இதனை அர்ச்சுனன் வாய்மொழியாக,

[5] Lascelles Abercrombie : The Epic பக்கம் 55—56

"தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும் ;
தருமம் மறுபடி வெல்லும் ; எனும் இயற்கை
மருமத்தை நம்மாலே உலகம் கற்கும்
வழிதேடி விதிஇந்தச் செய்கை செய்தான்.
கருமத்தை மேன்மேலும் காண்போம் ; இன்று
கட்டுண்டோம், பொறுத்திருப்போம்; காலம் மாறும்
தருமத்தை அப்போது வெல்லக் காண்போம் :"

என்று கவிஞன் கூறுவதைக் காண்க. விதுரன் கொண்டு வந்த அழைப்பை ஏற்று 'தீங்கதனைக் கருதாத தருமக் கோமான்', தம்பியர், பாஞ்சால விளக்கு, பரிசனங்கள், படை முதலியவர்களோடு 'நெடுங்கரத்து விதிகாட்டும் நெறியில்' தீயோருக்குப் பயணமாகின்றான். பின்னல் வரப்போவதைக் கவிஞன் உணர்ந்து தான் அது குறித்துப் பச்சாதாபப் படுவதைப்போல்,

"நரி வகுத்த வலையினிலே தெரிந்து சிங்கம்
நழுவிவிழும் ; சிற்றெறும்பால் யானை சாகும் ;
வரிவகுத்த வுடற்புலியைப் புழுவுங் கொல்லும் ;
வருங்காலம் உணர்வோரும் மயங்கி நிற்பார் ;
கிரிவகுத்த வோடையிலே மிதந்து செல்லும் ;
கீழ்மேலாம் மேல்கீழாம் கிழக்கு மேற்காம் ;
புரிவகுத்த முந்நூலார் புலையர் தம்மைப்
போற்றிடுவார் விதிவகுத்த போழ்தில் நன்றே."

என்று தன் கூற்றாகவும் ஊழின் ஆற்றலை உணர்த்தியிருப்பது கருதத்தக்கது. இவற்றைத் தவிர, வேறுபல உண்மைகளையும் கவிஞன் ஆங்காங்கு உணர்த்திச் செல்வதைக் காப்பியத்தில் பல இடங்களில் காணலாம்.

இரண்டாவது : ஒரு காப்பியத்திற்குச் சிறப்பு அளிப்பது கதையின் புணர்ப்பு (Plot). பாண்டவர்கள் இராசசூய யாகம் செய்து பெற்ற பெரும்புகழ் துரியோதனன் மனத்தில் பொறாமைத் தீயை மூட்டுகின்றது.

"காண்தகு வில்லுடை யோன்—அந்தக்
காளை அருச்சுனன் கண்களிலும்
மாண்தகு திறல் வீமன்—தட
மார்பிலும் எனதிகழ் வரைந்துளதே"

என்று துரியோதனன் மனநிலையைப் புதிய அழகுடன் கூறும் கவிஞனின் திறன் எண்ணி எண்ணி மகிழ்வதற் குரியது. இந்தக் கட்டத்தில் பாரதி துரியோதனன் மனநிலையைக் காப்பியத்திற்கேற்ற விரிவுடன், மக்கள் மனோதத்துவ உண்மைகள் பொலியுமாறு புனைந்து காட்டுவது நம்மைச் சுவையின் கொடு முடிக்குக் கொண்டு செல்கின்றது. துரியோதனனின் பொறாமைத் தீ,

"நீள்வதால் உள்ளம் நெக்குருகிப் போய்,
மஞ்சன் ஆண்மை மறம்திண்மை மானம்
வண்மை"

யாவற்றையும் மறக்கும்படி செய்து விடுகின்றது. அன்றியும்,

"யாது நேரினும் எவ்வகை யானும்
யாது போயினும் பாண்டவர் வாழ்வைத்
தீது செய்து மடித்திட"

எண்ணும்படியும் அதைச் செய்விக்கவும் தூண்டுகின் றது. அந்தப் பொறாமைத் தீ தான் 'சூதும் பொய்யும் உருவெனக் கொண்ட துட்ட மாமனுடன்' ஆலோசனை செய்து பாண்டவர்களை வஞ்சனையாகச் சூதுக்கிழுக்கத் தூண்டுகின்றது. சூதின் முடிவுதான் பாஞ்சாலியின் சபதத்திற்கு வித்திடுகின்றது ; அதிலிருந்து பாரதப்போர் முளைத்து வளரத் தொடங்குகின்றது.

—ஓம்

"தேவி பராசக்தி ஆணை உரைத்தேன் ;
பாவி துச்சாதனன் செந்நீர்,—அந்தப்
பாழ்த் துரியோதனன் ஆக்கை இரத்தம்,

மேனி யிரண்டும் கலந்து—குழல்
மீதினிற் பூசி நறுநெய் குளித்தே
சீவிக் குழல் முடிப்பேன் யான் ;—இது
செய்யு முன்னே முடியேன்".

என்பது திரௌபதி உரைத்த சபதம்; இதுவே காவியத்தின் மகுடமாகவும் திகழ்கின்றது. காவியத்தின் இறுதிப் பாகமாகிய துகிலுரிதல் சருக்கமும், சபதச் சருக்கமும் அதியற்புதமான படைப்புக்கள் என்றே சொல்லவேண்டும். இந்தக் கட்டங்களில் பாரதியை யும் வில்லியையும் ஒப்பிட்டு நோக்கினுல் பாரதியின் பேராற்றல் புலனுகும். பாண்டவர்கள் அனைத்தையும் தோற்ற பிறகு துரியோதனனுடைய அவையில் நடை பெறும் அக்கிரமங்கள் வில்லி பாரதத்தில் சாதாரண முறையில்தான் சித்திரிக்கப் பெற்றுள்ளன. பாரதி யின் காப்பியத்தில் இக்கட்டங்கள் உயர்ந்த சோக நாடகத் தன்மையுடன் கையாளப் பெற்றிருக்கின்றன. கேட்டவுடன் நெஞ்சு பொறுக்க முடியாத பல அக்கிரமங்கள் அரசவையில் நடைபெறுகின்றன. அவையிலிருந்த 'கேள்வி பல உடையோர், கேடில்லா நல்லிசையோர், வேள்வித் தவங்கள் மிகப்புரிந்த வேதியர்கள், மேலோர்' முதலிய யாவரும் அவ்வடாத செயல்களைத் தடுக்க முடியாது மனஞ்சோர்ந்து மூங்கை யர்போல் வாளா இருக்கின்றனர். அறமே வடிவெடுத் தாற் போன்ற தருமன் அனைத்தையும் பொறுத்துக் கொண்டு 'சும்மா' இருக்கின்றுன். துரியோதனன் முதலிய தீயவர்கள் தங்கள் சூழ்ச்சி பலித்ததென்று கொக்கரித்துக் கொம்மாளம் அடிக்கின்றனர். அண்ணன் ஏது சொன்னுலும் மறுத்திடாதவனும் தீமை யில் அண்ணனை வென்றவனுமான துச்சாதனன் திரௌபதியை வன்மையாக இழுத்துவந்து உலகில் எங்கும் கேட்டிராத முறையில் அவமானப்படுத்து கின்றுன். இதைக் கண்ணுறும் வீமன் குமுறியெழும் தன்

வெஞ்சினத்தை அடக்க முடியாது அண்ணனைப் பழித்துப் பேசுகின்றான். 'எல்லாவற்றையும் இழக்கப் பொறுத்திருந்தோம். துருபதன் மகளையும் இழந்து அவளை இவர்க்கு அடிமை செய்தாய்' என்று கூறி சகாதேவனைப் பார்த்து,

"இது பொறுப்ப தில்லை ;—தம்பி !
எரி தழல் கொண்டு வா
கதிரை வைத் திழந்தான்—அண்ணன்
கையை எரித் திடுவோம்"

என்று கூறுகின்றான். இதனைக் கேட்ட வீரமே உருவெடுத்த அருச்சுனன் இவ்வளவு கொடுமைக்கிடையிலும் தன் மனநிலையைக் காத்து,

"மனமாரச் சொன்னாயே ? வீமா ! என்ன
வார்த்தை சொன்னாய் ? எங்குசொன்னாய் யாவர் முன்னே ?
கனமாருந் துருபதனார் மகளைச் சூதுக்
களியிலே இழந்திடுதல் குற்றம் என்றாய் ;
சினமான தீ அறிவைப் புகைத்த லாலே
திரிலோக நாயகனைச் சினந்து சொன்னாய் ;"

* * *

"தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்
தருமம் மறுபடி வெல்லும் என்னும் இயற்கை
மருமத்தை நம்மாலே உலகம் கற்கும்
வழிதேடி விதி இந்தச் செய்கை செய்தான் ;
கருமத்தை மேன்மேலும் காண்போம் ; இன்று
கட்டுண்டோம் ; பொறுத்திருப்போம் ; காலம் மாறும் ;
தருமத்தை அப்போது வெல்லக் காண்போம் ;
தனுவுண்டு காண்டீவம் அதன்பேர்"

என்று கூறி வீமன் சினத்தைத் தணிவிக்கின்றான். கண்ணன் அருளால் திரௌபதி மானங்காக்கப் பெறுகின்றாள். வீமன், அருச்சுனன், பாஞ்சாலி ஆகிய

மூவரும் சபதம் செய்வதுடன் காப்பியம் முடிவடைகின்றது. மேனுட்டு அறிஞர் கருத்துப்படி கதையின் புணர்ப்பு (Plot) நோக்கத்தின் பெருமையாலும் நிகழ்ச்சியின் மேம்பாட்டாலும் சிறப்படைகின்றது. ஒரு துன்பியல் நாடகத்திற்குக் கொடுக்கப்பெருத காலக் கட்டுப்பாடு இதற்கு இல்லை. இதில் தொடர்ந்தாற்போல் முழு வளர்ச்சியைப் பார்ப்பதற்கு மனிதக் கற்பனைக்கு இடம் உண்டு. சிறு நிகழ்ச்சிகள் கூடியவரை நீக்கப்பெறினும் அவை பெரு நிகழ்ச்சிக்குத் துணை புரியுமாளுல் ஏற்றுக் கொள்ளப்படும். இந்த முறையில் பாஞ்சாலி சபதத்தின் கதைப் புணர்ப்பு நன்கு அமைந்துள்ளது என்றுதான் சொல்ல வேண்டும்.

**மூன்ருவது :** காப்பியத்தின் சிறப்பாகக் கருதப் பெறுவது அதன் ஒருமைப்பாடு (The ideal of unity). அரிஸ்டாட்டில் காலத்திலிருந்து இவ்விதியை மேனுட்டார் சிறப்பாகப் போற்றி வருகின்றனர். துன்பியல் நாடகத்தைப் போலவே காப்பியத்திலும் ஒரே தொடர்ந்த செய்கை (Organic action) வளர்ச்சி பெறவேண்டும்; அது சாதாரணமான ஒரு சந்தர்ப்பத்தின் விளைவாகத் தோன்றி, வளர்ந்து, தெளிந்த அமைதியுடன் முடிவடைதல் வேண்டும். அரிஸ்டாட்டில் கருத்துப்படி ஒரு காப்பியத்திற்குத் தொடக்கம், நடு, முடிவு இருத்தல் வேண்டும்.[6] இராமாயணம் போன்ற ஒரு பெரிய இதிகாசக் காப்பியத்தில் ஒரு தனிச் செயலுடன் எண்ணற்ற கிளைக் கதைகள் அவை பொருந்தும் அளவுக்கு நுழைக்கப்பெறும். ஆனுல், அவையனைத்தும் காப்பியத் தலைவனைப்பற்றியே கூறுவனவாக இருக்கும். பெரும்பாலும் இக் காப்பியம் பேரெடுப்பாகத்தொடங்குவதற்கும் இவ்விணைப்புக்கள் தெளிவாக இருப்பதற்கும்

[6] இவற்றை வடநூலார் உபக்ரமம். மத்திய பாகம், உபசம்ஹாரம் என்று கூறுவர்

ஏதோ ஒரு செயல், எங்கோ ஓரிடத்தில் தொடங்கி பின்னுல் விளக்கத்திற்குத் துணைபுரிவதாக அமையும்.

அழைப்புச் சருக்கம், சூதாட்டச் சருக்கம், அடிமைச் சருக்கம், துகிலுரிதற் சருக்கம், சபதச் சருக்கம் என்ற ஐந்து சருக்கங்களாகப் பாரதியின் காப்பியம் அமைந்துள்ளது. தண்டியாசிரியரின் இலக்கணப்படி 'சருக்கம் இலம்பகம் பரிச்சேதம் என்னும் பான்மையின் விளங்கி' அமைந்துள்ளது என்று சொல்லலாம். அழைப்புச் சருக்கத்தில் காப்பியத்தின் கதை கருக்கொள்கின்றது; துரியோதனன் பொருமையே கதையின் தொடக்கத்திற்கு வித்தாகின்றது. அவனைச் சூழ்ந்துள்ளோர் அதற்கு நீர் வார்த்து வளர்க்கின்றனர். சூதாட்டச் சருக்கத்தில் கதை தொடங்குகின்றது. அரிஸ்டாட்டில் கூறும் 'தொடக்கம்' இங்கு அமைந்துள்ளது என்று சொல்லலாம். இஃது அடிமைச் சருக்கத்தில் நன்கு வளர்ச்சி பெறுகின்றது. கதையின் 'நடுவை' இங்குக் காணலாம். துகிலுரிதல் சருக்கத்திலும் சபதச் சருக்கத்திலும் கதையின் உச்சநிலையைக் (Climax) காண்கின்ருேம். கண்ணன் திருவருளால் துகில் வளரத் தொடங்கும் வரையிலும் கதையின் கொடுமுடியைக் காணலாம். திரௌபதி கண்ணனைத் துதி செய்தல், வீமன், அருச்சுனன் முதலியோர் சபதம் செய்தல் ஆகிய நிகழ்ச்சிகளில் கதையின் 'முடிவு' தென்படுகின்றது. சபதங்களினுல் கதையின் விளக்கம் தெளிவாக்கப்பெறுகின்றது.

**நான்காவது:** கதையில் வரும் நிகழ்ச்சிகளின் உயர்வு காவியமாந்தர்களாலும் சிறப்படையக் கூடியதாக இருக்கும். பாரதத்திலுள்ள காவியங்களின் குண நலன்களைப்பற்றி நாம் ஓரளவு நன்ருகவே அறிந்துள்ளோம். ஆனுல், பாஞ்சாலி சபதத்தில் பாரதி அவர்களைப் படைத்திருப்பதில் ஒரு தனிப்பட்ட உயிர்த்

தத்துவம் மிளர்கின்றது. துரியோதனன் தீய குணங்களை யுடையவன் என்பது நாம் அறிந்ததே. என்றாலும், பாரதி அவனை ஒரு வெறும் அயோக்கியனாக மட்டிலும் காட்டவில்லை. பாரதியின் துரியோதனன் ஒரு சிறந்த இலட்சியவாதிபோல் காட்சியளிக்கின்றான். தனது தீச் செயல்களும் பாண்டவர்கள்பால் தான் கொண் டுள்ள பொறாமைக்கும் ஓர் அரசியல் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டே செயலாற்றுகின்றான். அந்த இலட்சியத்தை நிறைவேற்ற 'சூதும் பொய்யும் உருவெனக் கொண்ட துட்ட மாமன்' சகுனி துணை செய்கின்றான். திருதராட்டிரன் துரியோதனனுக்குப் பல விதமாகப் புத்திமதிகள் கூறுகின்றான். அவற்றைச் செவி மடுத்த அரவக் கொடியோன் பாம்புபோல் சீறிப் பதில் கூறும்பொழுது,

"மன்னர்க்கு நீதி ஒருவகை—பிற
மாந்தர்க்கு நீதிமற் றோர்வகை !"

*          *          *

"குழைதல் என்பது மன்னவர்க் கில்லை ;
கூடக் கூடப்பின் கூட்டுதல் வேண்டும் ;
பிழை யொன்றே யரசர்க் குண்டு, கண்டாய் :
பிறரைத் தாழ்த்து வதிற்சலிப் பெய்தல்.

வெல்வதெங் குலத்தொழிலாம் ;—எந்த
விதத்தினி விசையினுந் தவறில்லை காண் !
நல்வழி தீயவழி—என
நாமதிற் சோதனை செயத் தகுமோ ?"

என்று தன்கொள்கைத் துளிகளைச் சிதறவிடுகின்றான். இக்காலத்தில் மெக்கியவல்லி, ஹிட்லர் போன்ற அரசியல்வாதிகளை நன்கு அறிந்த நமக்கு 'இவர்களும் துரியோதனனுக்கு எம்மாத்திரம்?' என்று எண் ணும்படி தோன்றுகின்றது. துரியோதனனுடன் 'ஒத்து

ஊதும்' சகுனியும் திருதராட்டிரனிடம் துரியோதன னின் உட்கிடக்கையைச் சொல்லும்பொழுது,

" நீபெற்ற புத்திரனே யன்றோ ? மன்னர்
நீதி யியல்பி லறிகின்ருன்,—ஒரு
தீபத்திற் சென்று கொளுத்திய—பந்தம்
தேசு குறைய வெரியுமோ ?—செல்வத்
தாபத்தை நெஞ்சில் வளர்த்திடல்,—மன்னர்
சாத்திரத் தேமுதற் சூத்திரம் ;—பின்னும்
ஆபத் தரசர்க்கு வேறுண்டோ—தம்மில்
அன்னியர் செல்வ மிகுதல் போல் ?''

என்று வரும் பகுதியில் துரியோதனனின் அரசியல் தத்துத்தின் 'வாடை' வீசுகின்றது.

வில்லி திருதராட்டிரனைக் கிட்டத்தட்ட வயது சென்ற ஓர் அயோக்கியனுகவே காட்டுகின்ருர் என்று சொல்லவேண்டும். 'விரகினுக்கோர் வீடுபோல்வான்' என்பது வில்லி காட்டும் திருதராட்டிரனது ஓவியம். இங்கு, தந்தையைக் கேட்காமலேயே துரியோதனன் மண்டபம் சமைத்து விடுகின்ருன். கட்டியபின் தன் மனக் கருத்தைத் தந்தையிடம் வெளியிடுகின்ருன். அதனைக் கேட்ட தந்தை மகிழ்வடைவதுபோல் காட்டு கிருர் வில்லி.

"மகன்மொழி நயந்து கேட்டு வாழ்வுறு தந்தை தானும்
மிக நயந்துருகி நல்ல விரகினுல் வெல்ல லுற்றீர்
அகநெடும் போர் செய்தாலும் ஐவரை அடக்கொணுது
சகுனியை யன்றி வேருர் தரவல்லார் தரணி என்ருன்.[7]

என்று கூறும் தந்தையைக் காண்கின்ரேம். இங்குச் சகு னியின் சூழ்ச்சியைத் திருதராட்டிரன் மெச்சுகின்ருன். மைந்தன் கருத்துப்படியே பாண்டவர்களைக் கூட்டி வருமாறு விதுரனை இந்திரப் பிரத்தத்துக்கு அனுப்பி

7 வில்லிபாரதம்—சூதுப்போர்—49

வைக்கின்றான். ஆனால், பாரதி காட்டும் திருதராட்டிரனோ ஓர் உத்தமன். தனது மைந்தன் மனக் கருத்தைச் சகுனிமூலம் அறிந்த திருதராட்டிரனுக்குச் சினம் பொங்கி எழுகின்றது.

" —அட!
பிள்ளையை நாசம் புரியவே—ஒரு
பேயென நீவந்து தோன்றினாய்;—பெரு
வெள்ளத்தைப் புல்லொன் றெதிர்க்குமோ?—இள
வேந்தரை நாம்வெல்ல லாகுமோ?"

என்று கூறுகின்றான். மற்றும் அவன்,

"சோதரர் தம்முட் பகையுண்டோ?—ஒரு
சுற்றத்தி லேபெருஞ் செற்றமோ?"

என்று கேட்கின்றான். இதற்குமுன் ஆயிரம் சூழ்ச்சியால் பாண்டவரை அழிக்க முயன்றதையும், அவை யாவும் அந்தச் சீதரன் தண்ணருளாலும், பாண்டவர் சீலத்தாலும், புய வலியாலும் பயன்பட்டாது போனமையையும் எடுத்துக்காட்டுகின்றான். இவர்கள் செய்வதெல்லாம் வீணாக முடியுமென்றும், அவை சான்றோர் கருத்துக்கு மாறானவை யென்றும் கூறுபவன்,

"நொள்ளைக் கதைகள் கதைக்கின்றாய்—பழ
நூலின் பொருளைச் சிதைக்கின்றாய்"

என்கின்றான்.

"கவலை வளர்த்திடல் வேண்டுவோர்—ஒரு
காரணங் காணுதல் கஷ்டமோ?"

என்றும் கேட்கின்றான். ஆதிப் பரம்பொருள்தான் கண்ணன் வடிவில் வந்துள்ளான் என்பது அவன் கண்ட உண்மை. அவன் துணை இருக்கும்வரை பாண்டவர்களை ஒன்றும் செய்ய இயலாது என்பது அவனுக்குத் தெரியும். கண்ணனைப்பற்றிச் சகுனியிடம் தான் கூறுவது ஒரு பேய்க்கு வேதம் உணர்த்துவது

போலாகும் என்று பேசுகின்றான். அருகிலிருந்து கேட்ட துரியோதனனுடைய சினம் உச்சநிலைக்குச் செல்லு கின்றது. பலவிதமாகப் பேசியவன்,

"—என்னைக்
"கொல்லினும் வேறெது செய்யினும்,—நெஞ்சிற்
கொண்ட கருத்தை விடுகிலேன் ;—அந்தப்
புல்லியப் பாண்டவர் மேம்படக்—கண்டு
போற்றி உயிர்கொண்டு வாழ்கிலேன்;"

என்று தன் நெஞ்சுறுதியைக் காட்டுகின்றான். தன் விருப்பத்தைத் தந்தை நிறைவேற்றாவிட்டால், தந்தை யின் முன்னர் தான் ஆவியை விட்டுவிடுவதாகக் கூறுகின்றான்.

"ஐய, சூதிற் கவரை யழைத்தால்
ஆடி உய்குதும் ; அஃதியற்றாயேல்
நைய நின்முனர் என் சிரங் கொய்தே
நானிங் காவி யிறுத்திடுவேனால் ;"

என்ற தனயன் சொற்களைக் கேட்ட திருதராட்டிரன்,

"விதி செயும் விளைவி னுக்கே—இங்கு
வேறுசெய்வார் புவி மீதுளரோ ?"

என்று விதியின் வலியை நினைந்து வழியுங் கண்ணீ ரோடு சபையை நிறுவ விடைகொடுக்கின்றான். தூது சொல்லும் விதுரனிடம், விருந்துபற்றிக் கூறும் பேச்சி னிடையில்.

"சகுனி சொற் கேட்டே
பேயெனும் பிள்ளை கருத்தினிற் கொண்ட
தீச்செயல் இஃதென்" றதையும் குறிப்பாற்
செப்பிடு வாய்"

என்று சொல்லும்படி கூறும் திருதராட்டிரனது நல்ல பண்புகளையும் அவன் தன் தம்பி மக்கள்மீது கொண்ட அன்பையும் பரிவையும் காண்கின்றோம்.

மற்றும் துச்சாதனன், கர்ணன், விகர்ணன், தருமன், வீமன், அருச்சுனன், விதுரன் முதலிய பாத்திரங்களின் படைப்பில் பாரதிக்கும் வில்லிக்கும் அதிக வேற்றுமை இல்லை. 'சொல்லிடை நஞ்சு கக்கும் துன்மதியுடைய தம்பி' என்று வில்லி காட்டும் துச்சாதனனைப் பாரதி 'தீமையில் அண்ணனை வென்றவன்' என்று கூறுகின்றான். வில்லியின் 'வென்திறல் விதுரன்' பாரதியிடம் 'மெய்ந் நெறி விதுரன்' ஆகின்றான். 'ஞானக் கஞ்சுக' என்று வில்லி கூறும் தருமனை

"நூல்வகை பல தேர்ந்து தெளிந்தோன்
மெய்யறிந்தவர் தம்முள் உயர்ந்தோன்"

என்று பாரதி காட்டுகின்றான்.

"எப்பொழு தும்பிர மத்திலே—சிந்தை
ஏற்றி உலக மொ ராடல்போல்—எண்ணித்
தப்பின்றி யின்பங்கள் துய்த்திடும்—வகை
தானுணர்ந் தான்"

என்பது பாரதி படைத்துக் காட்டும் சகாதேவனின் சித்திரம். இங்ஙனம் ஒன்றிரண்டு சொற்களால், சொற்றொடர்களால், காப்பிய மாந்தர்கள் மிக அற்புதமாகப் படைத்துக் காட்டப்பெற்றிருப்பது படிப்போர்க்கு இன்பம் பயக்கின்றது.

காப்பியத் தலைவியாகிய பாஞ்சாலியைக் கூறும் சொல்லோவியங்கள் மிக அற்புதமாக அமைந்துள்ளன. பாஞ்சால நாட்டினர் தவப்பயன், ஆவியில் இனியவள், உயிர்த்து அணிசுமந்து உலவிடுசெய் அமுது, ஓவியம் நிகர்த்தவள், அருள் ஒளி, கற்பனை உயிர், கிடைப்பருந் திரவியம், படிமிசையிசையுற நடை பயின்றிடும் தெய்விக மலர்க்கொடி, கடிகமழ் மின்னுரு, கமனியக் கனவு, வடிவுறு பேரழகு, இன்ப வளம்— என்பவை அவளைக் குறிக்கும் சொல்லோவியங்கள்.

இவற்றைப்போலவே நூலின் தொடக்கத்தில் கலைமகளை வருணிக்கும் சொற்கள் பாரதியின் கற்பனை உலகில் வெடித்த முத்துக்கள்; அவை நம் உள்ளத்தில் சிதறும் பொழுது எல்லையற்ற இலக்கிய இன்பத்தை யளித்துப் பாரதியின் கவித்துவத்தைப் புலப்படுத்துகின்றன. பாரதி படைத்துக் காட்டும் காவியமாந்தர்கள் யாவரும் மேனாட்டறிஞர்கள் காப்பிய மாந்தர்களைப் பற்றிக் கூறும் கருத்துக்களுக் கிணங்கவே அமைந்துள்ளன.

ஐந்தாவது : தெய்விக சம்பந்தமான செயல்கள் கலந்து இருப்பது பெருங்காப்பியங்களின் ஒரு கூறு ஆகும். சிலப்பதிகாரம் முதல் பாஞ்சாலி சபதம் ஈருக வுள்ள எல்லாக் காப்பியக் கவிஞர்களும் இந்தக் கூறினைக் கலக்காது காவியங்களை இயற்றவில்லை. மேனாட்டுக் காப்பியங்களில்கூட பெரும்பாலானவற்றில் இந்தத் தெய்விகக் கூறுகள் (Supernatural elements) கலந்தே வருகின்றன. இராமாயணத்தில் பெரும் பாலும் தேவர்கள் மானிடர்களின் செயல்களில் தலை யிடுவதில்லை. மனிதர்களுக்கும் அவர்கள் உதவி செய்வ தில்லை. அவர்கள் பூவுலகில் நடைபெறும் செயல் களை மேலிருந்து கொண்டே கவனித்து வந்ததாகவே காப்பியத்தில் கூறப்பெற்றுள்ளது. சிந்தாமணி யில் காந்தருவதத்தையார் இலம்பகத்தில் மக்களுடன் விஞ்சையரின் தொடர்பு நேரிடுகின்றது. வேறு சில சம்பந்தங்களையும் சிந்தாமணியில் ஆங்காங்குக் காண லாம். பெரிய புராணத்திலும் திருவிளையாடற் புராணத் திலும் கடவுள் சம்பந்தப்படாத நிகழ்ச்சிகளே இல்லை.

பாரதியின் பாஞ்சாலி சபதத்தில் கண்ணன் இத் தெய்விக சக்தியாகக் காட்சியளிக்கின்றான். மனித ஆற்றலுக் கப்பாற்பட்ட செயல்கள் யாவும் கண்ணன் திருவருளால்தான் நடைபெறுகின்றன. இராமாயணத்தி லுள்ள நிகழ்ச்சிகள் போலன்றி, இங்குள்ளவை

தெய்விக சக்திகளால்தான் நடைபெறுகின்றன. கண்ணன் பரம்பொருளின் கூறு என்று எல்லோரும் உணரும்படி மக்களுடன் கலந்து பழகுகின்றான். திருதராட்டிரன், விதுரன், வீட்டுமன், துரோணர் போன்ற பெரியோர்கள் கண்ணனை நன்கு அறிந்திருக்கின்றனர். துச்சாதனன் திரௌபதியின் துகிலுரிதலை அவையிலுள்ளோர் தடுக்கவில்லை; தடுக்கும் ஆற்றலின்றி 'வாளா' இருக்கின்றனர். "'பாஞ்சாலி எவ்வழியுய்வோ' மென்றே இயங்கினாள், இணைக்கை கோத்தாள்." துச்சாதனன் மன்றிடைத் துகிலுரிகையில் திரௌபதி,

> "உட்சோதி யிற் கலந்தாள் ;—அன்னை
> உலகத்தை மறந்தாள், ஒருமை யுற்றாள்."

கண்ணபிரான் அருளால், திரௌபதியின் சேலை வண்ணப் பொற் சேலைகளாக வளர்கின்றது. கொடியன் துச்சாதனனும் கைசோர்ந்து வீழ்ந்து விடுகின்றான்.

வில்லி இக் கட்டத்தை மிக நன்றாகக் கையாண்டுள்ளார். திரௌபதி கண்ணபிரானைத் துதிசெய்வதை,

> "ஆறாகி இருதடங்கண் அஞ்சனவெம் புனல்சோர,
> அளகம் சோர,
> வேறான துகில்தகைந்த கைசோர, மெய்சோர,
> வேறோர் சொல்லும்
> கூறாமல் 'கோவிந்தா! கோவிந்தா!!' என்(று)அரற்றிக்
> குளிர்ந்து நாவில்
> ஊறாத அமிழ்தூற, உடல்புளகித் துள்ளமெலாம்
> உருகி னாளே."[8]

என்று மிக அழகாகக் காட்டுகின்றார். உளவியல் உண்மைப்படி ஒரு பெண் இம்மாதிரியான சந்தர்ப்பத்தில் இவ்வாறுதான் செய்ய முடியும். ஆனால், பாரதியில்

8 வில்லிபாரதம் : சூதுப்போர் சருக்கம் செய். 400

இக் கட்டம் நன்ருக அமையவில்லை. அவள் கண்ணனைத் துதிசெய்யும் பகுதி சற்று நீளமாக அமைந்துள்ளது. படிப்பதற்கும் சற்று விரசமாய்த்தான் இருக்கின்றது ; உளவியல் உண்மைக்கு மாருக, அநுபவத்திற்கு விரோதமாக, உள்ளது என்றுதான் சொல்ல வேண்டும். அருச்சனைப் பாணியில் அமைந்துள்ளது இப்பகுதி.

ஆருவது : காப்பியத்தைப் படைக்கும் கவிஞன் கையாளும் நடையும் காப்பியத்திற்குச் சிறப்பளிக்கும். மேனுட்டு இலக்கிய வரலாற்றைக் கவனித்தால் பற்பல காலங்களில் காப்பியத்தில் கையாளும் பா நடை மாறி மாறித்தான் வந்திருக்கின்றது. மில்டன் சுவர்க்க நீக்கத்தை எழுதின பிறகு அகவல் நடைதான் (blank verse) காப்பியத்திற்கு ஏற்றது என்ற கொள்கை நிலவி வந்தது. தமிழ் இலக்கிய வரலாற்றிலும் பெருங்காப்பியத்தை இயற்றினவர்கள் பற்பல நடையினைத்தான் கையாண்டிருக்கின்றனர். கி. பி. ஏழாம் நூற்ருண்டிற்கு முன்னர் எழுந்த காப்பியங்கள் யாவற்றிலும் பாக்கள், (சிறப்பாக அகவற்பா) பயின்று வந்திருத்தலையும் அதற்குப் பின்னர் எழுந்த காப்பியங்களில் பாவினங்கள் (தாழிசை, துறை, விருத்தம்) பயின்று வந்திருத்தலையும் காணலாம். ஆகவே 'இம்மாதிரித்தான் காப்பிய நடை இருத்தல் வேண்டும்!' என்ற கட்டுப்பாடு என்றும் இருந்ததில்லை ; இருக்கவும் முடியாது என்பதை நாம் அறிகின்ருேம்.

ஆனல், பாரதியின் காப்பியத்தில் பயின்று வந்திருக்கும் யாப்பிலக்கணத்திற்குப் புறம்பான நொண்டிச் சிந்து போன்ற சாதாரணமான நடை சரியான இலக்கியக் கருவியாகுமா என்று சிலர் வினவலாம். ஆம் சரியான கருவிதான். தொல்காப்பியத்தில் கூறப்பெற்

றிருக்கும் 'விருந்து' என்ற தலைப்பில் இவற்றினை அடக்கி இலக்கண அமைதியும் கூற முடியும்.

"விருந்தே தானும்
புதுவது கிளந்த யாப்பின் மேற்றே."[9]

என்பது தொல்காப்பியம். இதற்குஉரைகண்ட பேராசிரியரும் 'புதிதாகத் தாம் வேண்டியவாற்றுற் பல செய்யுளுந் தொடர்ந்துவரச் செய்வது' என்று கூறியிருப்பதும் இதனை வலியுறுத்துகின்றது. தவிர, கடந்த பல நூற்றுண்டுகளாகச் சில சில்லறைப் பிரபந்தங்களைத் தவிர முக்கியமான நூல்கள் யாவற்றையும் விருத்தப் பாக்களில் செய்து கவிஞர்கள் அப்பாக்களின் பரப்புக்கும் ஆற்றலுக்கும் ஓர் எல்லை கண்டுவிட்டனர் என்று சொல்லலாம். இதை நன்கு அறிந்த பாரதி தமது காப்பியத்திற்குப் புது யாப்புக் கருவிகளைத் தேடிக்கொண்டார். விருத்த யாப்பைக் கையாண்டால் அளவைக் கருதி அனுவசியமான சொற்களையும் பாவங்களையும் கையாள நேரிடும் என்றுதான் அதனைக் கையாளவில்லை. என்றாலும், அதனை அடியோடு நீக்கிவிடவும் இல்லை. ஓரிரண்டு இடங்களில் புதிய முறையில் எண்சீர் விருத்தங்களைக் கையாண்டுதான் இருக்கின்றார். புதிய கற்பனைகளும் தற்காலத்திற்கேற்ற கருத்துக்களும் அழகுறப் பொதிய வேண்டுமானால் புதிய யர்ப்பு முறைகள் கட்டாயம் வேண்டும். இந்த யாப்பு முறைகளில் பாரதி வங்கக் கவிஞர் தாகூரைப்போலவே ஒரு புரட்சியையே உண்டுபண்ணிவிட்டார். அவர் ஒரு சொல் அல்லது சொற்றொடரில் மேகத்தினிடையே தோன்றும் மின்வெட்டுப்போல் கூறும் காட்சிகளைப் பழைய முறைப்படி ஒரு செய்யுளால்கூடக் கூற முடியாது. கலைமகளைக் கூறும் 'வேதத்திருவிழியாள்', 'கற்பனைத் தேனிதழாள்', 'சுவைக் காவியம் எனுமணிக்

9. தொல்—பொருள்—செய். சூ. 238.

கொங்கையினுள்' என்றவையும், அத்தினபுரத்துப் பெண்களைச் சுட்டும் 'மலர்விழிக் காந்தங்கள்' என்பதும் நல்ல சான்றுக்கள். காப்பியத்தின் நடை கரடு முரடாய்த்தான் இருக்க வேண்டும் என்று கருதும் அன்பர்கள் பாஞ்சாலி சபதத்தின் சிறப்பை அறிய முடியாது. இம்மாதிரியான புதிய யாப்புக்களைக் கையாண்ட பிறகுதான் பாமர மக்கள் மனத்திலும் இலக்கிய வானம் கவிந்து அவர்களும் கவிதைகளைச் சுவைக்க முடியும் என்ற நிலை ஏற்பட்டது; ஏற்பட்டு வளர்ந்தும் வருகின்றது. இந்த முறையில் பாரதி தமிழ் இலக்கிய உலகில் ஒரு புதிய சகாப்தத்தையே தொடக்கியுள்ளார் என்றுகூடத் துணிந்து கூறிவிடலாம்.

தண்டியாசிரியர் கூறும் இலக்கணப்படிப் பார்த்தாலும் பாரதியின் 'பாஞ்சாலி சபதம்' ஒரு காப்பியம் என்றுதான் சொல்லவேண்டும். அவர் பெருங் காப்பியத்திற்கு இன்றியமையாதவை என்று கூறும் கடவுள் வாழ்த்து, தன்னிகர் இல்லாத் தலைவன் அல்லது தலைவி, நாடு நகர் இவற்றின் வருணனைகள், சூரியன் சந்திரன் இவற்றின் காட்சிகள், மந்திரம், தூது, செலவு, இகல் போன்ற கூறுகள் முதலியவை யாவும் பயின்று சருக்கங்களாகக் காப்பியம் ஆக்கப் பெற்றுள்ளது. காப்பியத்தை ஒருமுறை பயில்வோர் இவ்விலக்கணங்கள் யாவும் செம்மையாக அமைந்திருப்பதை அறிவர். எந்த முறையில் பார்த்தாலும் 'பாஞ்சாலி சபதம்' ஓர் உயர்ந்த காப்பியம் என்ற உண்மை எளிதில் புலனுகும். எவ்வித உளத் தடிப்பும் இன்றிக் காப்பியத்தைச் சுவைப்பவர்தாம் பாரதியின் பேராற்றலை உணர முடியும்.

பரரதி கையாண்டிருக்கும் சில அபூர்வ கற்பனைகள் கல்விச் செருக்குடைய புலவர்களையும் களிப்பிக்குமாறு அமைந்திருக்கின்றன. இனிய, எளிய, சொற்களைப் பயன்படுத்திக் கவிதைகளைச் சுவையூட்டுவதில் பாரதி

ஒரு சிறந்த அறிஞர். நூலின் தொடக்கத்தில் கலைமகள் வணக்கத்தில் அக் கடவுளை,

"வேதத் திரு விழியாள், — அதில்
மிக்கபல் உரையெனும் கருமை யிட்டாள்;
சீதக் கதிர் மதியே — நுதல்
சிந்தனை யேகுழல் என்றுடையாள்;
வாதத் தருக்க மெனுஞ் — செவி
வாய்ந்தநற் றுணிவெனுந் தோடணிந்தாள்;
போதமென் னாசியி னாள் — நலம்
பொங்குபல் சாத்திர வாயுடையாள்;
கற்பனைத் தேனித ழாள் — சுவைக்
காவியம் எனுமணிக் கொங்கை யினாள்"

என்று கூறியிருப்பது புரட்சிகரமான முறையில் புதிய கற்பனைகளைக் கையாண்டு வெற்றி பெற்றதாகும். தெருவில் ஊசிகளும் பாசிமணிகளும் விற்றும் பிச்சை யெடுத்தும் திரிகின்ற பெண்கள், 'மாயக்காரனம்மா — கிருஷ்ணன் — மகுடிக்காரனம்மா' என்ற நடையில் சில இடங்களில் காப்பியத்தை அமைத்திருப்பது அதனை மிகவும் சுவையாக்கியுள்ளது. 'மாயச் சூதினுக்கே — ஐயன் — மனமிரங்கி விட்டான்' என்று தொடங்கும் சூதாட்ட வருணனைப் பகுதிகள் மிகவும் கனிந்த நாடகத் தன்மையுடன் மிளிர்கின்றன.

சில இடங்களில் காப்பியத்தில் அமைந்துள்ள வருணனைப் பகுதிகள் மிக அற்புதமாகச் சொற்கள் அமைந்துள்ளன. அழைப்புச் சருக்கத்தில் காணப்பெறும் அத்தினபுரத்தின் வருணனை 'நொண்டிச்சிந்து' மெட்டில் அமைந்து படிப்போரின் இதயத்தைக் கொள்ளை கொள்ளுகின்றது. இப் பாணி புதிய முறையில் தோற்றுவிக்கப்பட்டதொன்று. அண்ணனிடம் விடை பெற்று 'அடவி மலை யாறெல்லாம் கடந்து, தூது செல்லும் பொழுது பாரத நாட்டின் பல்வளங்கள் பாங்குறக் காட்டப் பெறுகின்றன.

"நீல முடி தரித்தபல மலைசேர் நாடு,
நீர முதம் எனப்பாய்ந்து நிரம்பும் நாடு
கோலமுறு பயன்மரங்கள் செறிந்து வாழும்
குளிர்காவும் சோலைகளும் குலவு நாடு,
ஞாலமெலாம் பசியின்றிக் காத்தல் வல்ல
நன்செய்யும் புன்செய்யும் நலமிக் கோங்கப்
பாலடையும் நறுநெய்யும் தேனும் உண்டு
பண்ணவர்போல் மக்கள் எலாம் பயிலும் நாடு.
"அன்னங்கள் பொற்கமலத் தடத்தின் ஊர
அளிமுரலக் கிளிமழலை அரற்றக் கேட்போர்
கன்னங்கள் அமுதூறக் குயில்கள் பாடும்
காவினத்து நறுமலரின் கமழைத் தென்றல்
பொன்அங்க மணிமடவார் மாடம் மீது
புலவிசெயும் போழ்தினிலே போந்து வீச,
வண்ணங்கொள் வரைத்தோளார் மகிழ மாதர்
மையல்விழி தோற்றுவிக்கும் வண்மை நாடு.
பேரறமும் பெருந்தொழிலும் பிறங்கு நாடு,
பெண்களெல்லாம் அரம்பையர்போல் ஒளிரு நாடு,
வீரமொடு மெய்ஞ்ஞானம் தவங்கள் கல்வி
வேள்வியெனும் இவையெல்லாம் விளங்கும் நாடு,
சோரமுதல் புன்மையெதும் தோன்று நாடு,
தொல்லுலகின் முடிமணிபோல் தோன்றும் நாடு,
பாரதர்தந் நாட்டிலே நாசம் எய்தப்
பாவியேன் துணைபுரியும் பான்மை என்னே.

என்ற கவிதைகள் பன்முறைப் படித்து இன்புறத் தக்கவை. பாண்டவர்கள் அத்தினபுரத்திற்கு வரும் வழியில் பார்த்தன் பாஞ்சாலிக்குப் பரிதியின் எழிலைக் காட்டுவதாக அமைந்த பகுதியும் படிப்போரை எல்லை யற்ற இலக்கியச் சுவையில் ஈடுபடுத்தும்.

'பாரடியோ ! வானத்திற் புதுமை எல்லாம்
பண்மொழீ ! கணந்தோறும் மாறி மாறி
ஓரடிமற் றோரடியோ டொத்த லின்றி
உவகையுற நவநவமாய்த் தோன்றுங் காட்சி ;

யாரடிஇங் கிவைபோலப் புவியின் மீதே
எண்ணரிய பொருள் கொடுத்தும் இயற்ற வல்லார்?
சீரடியாற் பழவேத முனிவர் போற்றும்
செழுஞ்சோதி வனப்பையெலாம் சேரக் காண்பாய்.

'கணந்தோறும் வியப்புக்கள் புதிய தோன்றும்;
கணந்தோறும் வெவ்வேறு கனவு தோன்றும் ;
கணந்தோறும் நவநவமாய் களிப்புத் தோன்றும்;
கருதிடவும் சொல்லிடவும் எளிதோ ? ஆங்கே,
கணந்தோறும் ஒருபுதிய வண்ணங் காட்டிக்
காளிபரா சக்தியவள் களிக்கும் கோலம்
கணந்தோறும் அவள்பிறப்பாள் என்று மேலோர்
கருதுவதன் விளக்கத்தை இங்குக் காண்பாய்.

'அடிவானத் தேயங்கு பரிதிக் கோளம்
அளப்பரிய விரைவினொடு சுழலக் காண்பாய் ;
இடிவானத் தொளிமின்னல் பத்துக் கோடி
எடுத்துஅவற்றை ஒன்றுபட உருக்கி வார்த்து
முடிவான வட்டத்தைக் காளி ஆங்கே,
மொய்குழலாய், சுற்றுவதன் மொய்ம்பு காணாய் !
வடிவான தொன்றுகத் தகடி ரண்டு
வட்டமுறச் சுழலுவதை வளைந்து காண்பாய்.

'அமைதியொடு பார்த்திடுவாய், மின்னே ! பின்னே
அசைவுறுமோர் மின்செய்த வட்டு ; முன்னே,
சமையுமொரு பச்சைநிற வட்டங் காண்பாய் ;
தரணியிலிங் கிதுபோலோர் பசுமை யுண்டோ ?
இமைகுவிய மின்வட்டின் வயிரக் கால்கள்
எண்ணில்லா திடையிடையே எழுதல் காண்பாய்;
உமைகவிதை செய்கின்றாள், எழுந்து நின்றே
உரைத்திடுவோம், "பல்லாண்டு வாழ்க!" என்றே.

என்ற பாடல்கள் கற்பனையின் கொடுமுடிக்குக் கொண்டு செலுத்தும். இவற்றில் காட்டப்பெறும் காட்சிகள் கம்பராமாயணத்தில் சித்திரகூட படலத்தில் இராமன் சீதைக்குக் காட்டும் காட்சிகளை யொத்துள்ளன என்று கூறலாம். இன்னும் துரியோதனன்

திரௌபதியை மன்றுக்கு அழைத்துவரும்படி சொல்லிய பொழுது சகத்தில் உண்டான குழப்பத்தை வருணிக்கும் பகுதியிலும் இத்தகைய காட்சிகளைக் காணலாம். இப் பாடல்கள் யாவும் படிக்கப் படிக்கத் தெவிட்டாத சுவை தருபவை.

சாதாரண மக்களின் பேச்சுக்களில் வரும் சொற்களைக்கூட கையாண்டு சுயம்புவான இலக்கியச் சுவை கொப்புளிக்கும்படி செய்துள்ள பல இடங்களைக் காப்பியத்தில் காணலாம். அத்தினபுரத்து வீரர்களைப்பற்றிக் கூறும், 'கரி, நூறினைத் தனிநின்று நொறுக்க வல்லார்' என்ற வரியும், திருதராட்டிரன் சகுனியைக் கடிந்து கூறும்பொழுது,

—" வெறும்
நொள்ளைக் கதைகள் கதைக்கிறாய்,—பழ
நூலின் பொருளைச் சிதைக் கிறாய்".

என்று சொல்லும் வரிகளும், தந்தையின்மீது சினங் கொண்டு துரியோதனன் கூறும்,

—" கெட்ட
வேம்பு நிகரிவ னுக்குநான்—சுவை
மிக்க சருக்கரை பாண்டவர் ;"

என்ற வரிகளும், விதுரனைப் பாண்டவர்கள் வரவேற்ற பகுதியில் வரும் 'மதுர மொழியில் குசலங்கள் பேசி' என்ற வரியும் இதற்குச் சான்றுகளாக உள்ளன. இம் மாதிரியான வரிகள் பல சூதாட்ட வருணனைப் பகுதியிலும் இருக்கின்றன. துரியோதனன் விதுரனை ஏசிப் பேசும் பகுதியில் வரும்,

"நன்றி கெட்ட விதுரா—சிறிதும்
நாண மற்ற விதுரா
தின்ற உப்பினுக்கே—நாசந்
தேடுகின்ற விதுரா!"

* * *

ஐவ ருக்கு நெஞ்சும்,—எங்கள்
அரண்மனைக்கு வயிறும்
தெய்வ மன்றுனக்கே,—விதுரா,
செய்து விட்டதே யோ ?

* * *

''கன்னம் வைக்கிருேமோ ?—பல்லைக்
காட்டி யேய்க்கிறேமோ ?''

என்ற அடிகளும் இதற்கு நல்ல எடுத்துக்காட்டுக்கள். திரௌபதியை அவமானப்படுத்தும்பொழுது கடுஞ்சினங் கொண்ட வீமன் பேச்சிலும் இதற்குச் சான்றுகள் உள.

ஆகவே, எந்தக் கோணத்தில் ஆராய்ச்சிப் பார்வையைச் செலுத்திஞலும் பாரதியின் 'பாஞ்சாலி சபதம்' ஓர் உயர்ந்த காப்பியம் என்ற உண்மைதான் பெறப்படும். அஃது இக்காலத்துச் சுவைக்கேற்றவாறு, எவரும் எளிதில் சுவைக்கும்படி, எழுதப்பெற்ற ஒரு தமிழ்க் காப்பியம். 'பாட்டுத் திறத்தாலே—இவ்வையத்தைப்—பாலித்திட வேணும்' என்ற கனவு கண்டவர் பாரதி. 'எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொதுமக்கள் விரும்பும் மெட்டு : இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்தில் செய்து தருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோன் ஆகின்றுன்' என்பது அவர் நோக்கம்.

''இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்''

என்ற தமது எண்ணத்திற்கேற்ற ஒரு புதுமுறைக் காப்பியத்தைப் புரட்சிகரமான முறையில் படைத்துத் தமிழன்னையின் திருவடியில் காணிக்கையாக வைத்திருக்கின்றுன். தமிழர்களாகிய நாம் அதனை எடுத்துப் போற்றிப் படித்துச் சுவைப்பது நமது கடமையாகும்.

# 5. திருவள்ளுவர் கண்ட நாடு

ஒரு நாடு இப்படி இருக்கவேண்டும் என்பதைப் பற்றி அறிஞர்களும் கவிஞர்களும் கனவுகள் கண்டிருக் கின்றனர்; காண்கின்றனர். இவ்வுலகிலுள்ள இலக்கியங் களையும் உலக வரலாற்றையும் புரட்டிப் பார்த்தால் இவ்வுண்மை விளங்காமற் போகாது. கவிஞர்கள் காணும் நாட்டைப்பற்றிய கருத்துக்களில் பெரும்பாலும் நமக்கோ அவற்றைப் படிப்போருக்கோ கருத்து வேறு பாடுகள் இருத்தல் முடியாது; அத்தகைய மேதைகள் கவிஞர்கள். கம்பன், வள்ளுவன், ஷேக்ஸ்பியர் போன்ற மகாமேதைகள் காணும் நாட்டைப் பற்றி இன்றும் புலவர்கள் புகழ்கின்றனர்; அறிஞர்கள் மெச்சு கின்றனர்; பொதுமக்களும் பாராட்டுகிறார்கள். காலத் தாலும் இடத்தாலும் பிரிக்கப்பட்டிருந்தாலும் இவர்களை இவ்வுலகம் பாராட்டத்தான் செய்கின்றது. இவர்களு டைய கருத்துக்கள் கால வெள்ளத்தை எதிர்த்துச் செல்லும் பேராற்றலைப் பெற்றுள்ளன. இவர்கள் கருத் துக்கள் எல்லாக் காலத்திற்கும் எல்லா நாட்டினர்க் கும் பொருந்துவதாக உள்ளன.

ஆனல், அறிஞர்களும் அரசியல் அறிஞர்களும் காணும் நாடு திறனையப் பெறுகின்றது; அதனை அவர் களோடு ஒத்த மனப்பான்மையும் கொள்கையினை யும் கொண்டவர்கள் மட்டும் புகழ்கின்றனர்; பாராட்டு கின்றனர். ஆனல், மாறான கருத்துக்களை யுடைவர்கள் வெறுக்கின்றனர்; எதிர்க்கின்றனர்; தூற்றுகின்றனர். தவிர, இவர்களுடைய கருத்துக்கள் எல்லாக் காலத்திற் கும் எல்லா நாட்டினர்க்கும் பொருந்துவதும் இல்லை.

மேனாட்டு மேதை அரிஸ்டாட்டில் கண்ட நாடு ரூஸோவுக்குப் பிடிக்கவில்லை: வால்டயருக்குப் பிடிக்கவில்லை. இதனால், அரிஸ்டாட்டிலின்மீது குறை கூறமுடியாது; மூவரும் வெவ்வேறு காலத்தவர்கள். ஒரு காலத்தில் தோன்றிய கொள்கை பிரிதொரு காலத்திற்குப் பொருந்தவில்லை. அரிஸ்டாட்டில் கண்ட நாடு அவர் காலத்திற்கு ஏற்றது; அது ரூஸோ, வால்டயர் இருந்த காலத்திற்குப் பொருந்தவில்லை. ஆகவே, ஒருவர் கொள்கை மற்றவர்களுடைய கருத்து வேற்றுமைக்குக் காரணமாக இருந்தது. ஆனால், இன்று உலகில் பல நாட்டிலுள்ள அறிஞர்கள் நாடு எப்படியிருக்க வேண்டும் என்று கூறும் கருத்துக்கள் பிறருக்கு முரண்பட்டவைகளாகத் தெரிகின்றன. ஹிட்லர், முஸோலினி, ஸ்டாலின் போன்றவர்கள் நாட்டைப்பற்றிக் கருதின கருத்துக்கள் நமக்குப் பிடித்தனவா? அறிஞர்கள்தாம் அவற்றைப் பாராட்டினரா? அல்லது அம்மூவர்க் குள்ளேயும் ஒருவருடைய கருத்துக்கள் பிறருக்குப் பொருந்துவனவாக இருந்தனவா? இல்லையே! ஏகாதிபத்திய வெறிகொண்டிருந்த ஆங்கிலேயர்களின் கருத்து பண வெறி பிடித்த அமெரிக்கர்களுக்குப் பிடித்தனவா? அல்லது இன்றுவது ஒருவர் கருத்துக்களை மற்றவர்கள் விரும்புகின்றனரா? அல்லது 'இல்லாரும் இல்லை; உடையாரும் இல்லை' என்ற உயர்ந்த கருத்தினைக் கூறும் இரஷ்யாவையாவது எல்லாரும் விரும்புகிறார்களா? இல்லையே! காரணம் என்ன? அவை யெல்லாம் குறைபாடுகளை யுடையவை; ஏதாவது ஒரு விதத்தில் சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டவை. தம் நாடு வாழ வேண்டும், பிற நாடுகள் தாழ வேண்டும் என்ற நோக்கங்களை யுடையவை; பிற நாடுகள் வீழ வேண்டும் என்று எண்ணுவிட்டாலும் கூட, அவற்றைப் பற்றிச் சிறிதும் கவலை கொள்ளாதவை; குறுகிய நோக்கமுடையவை.

கவிஞன் கண்ட நாட்டைப் பற்றிய கருத்துக்கள் பரந்த நோக்கத்துடன் இருத்தலாலும், சாதி வேறுபாடு காரணமாகவும், சமய வேறுபாடு காரணமாகவும், நிற வேறுபாடு காரணமாகவும், தேச வேறுபாடு காரணமாக வும் மாறுபாடு இல்லாது எல்லா நாட்டினர்க்கும் எக் காலத்திற்கும் பொருந்துவனவாக இருப்பதாலும் அவை எவ்வகையான உள்ளச் சார்பும் உள்ளத் தடிப்பும் அற்றவைகளாக இருப்பதாலும், அவை என்றும் போற்றப்படுபவனவாக உள்ளன.

இன்று உலகப் பொதுமறை என்று அறிஞர்களால் பாராட்டப்பெறும் திருக்குறளிலே திருவள்ளுவர் "நாடு" என்பதுபற்றி ஓர் அதிகாரத்தை வகுத்துக்கொண்டு அதில் நல்ல நாட்டின் இயல்புகளைக் குறித்துச் சில கருத்துக்களை நமக்குத் தெரிவிக்கின்றார். நாடு இயற்கை வளம் உடையதாக இருக்கவேண்டும். இயற்கை வளம் உடைய நாட்டில்தான் மக்கள் வருந்தாமல் பயன் பெற முடியும். மக்கள் நாடிப் பாடு படாமலேயே வளம் தருகின்ற நாடே நாடு என்று போற்றத் தக்கது. தேடித் தேடிச் சென்றாலல்லது வளம் பயக்காத நாட்டை ஒரு நாடு என்று சொல்ல முடியுமா? யாதொரு முயற்சியு மின்றி எல்லாருக்கும் எல்லாப் பொருள்களும் கிடைக்கத் தக்கவாறு வளமுள்ளதுதான் நாடு என்கின்றார் வள்ளுவர்.

> "நாடென்ப நாடா வளத்தன ; நாடல்ல
> நாட வளம்தரும் நாடு"[1]

என்பது அவர் திருவாக்கு.

கவிஞர்களின் உலகில் சில நாடுகளைக் காண்கின் றோம். அவை யாவுமே நாடாமல் முயலாமல் பயன் தருவ தாகத் தோன்றவில்லை. ஒரு நாட்டைப்பற்றிக் கூறும் பொழுது அநேகமாக எல்லாக் கவிஞர்களும் ஒரே மாதிரி யாகத்தான் கூறியுள்ளனர் என்று சொல்லவேண்டும்.

1. குறள்-839

மின்னி மேகம் மழை பெய்வதும், பெய்தமழை வெள்ள மாகப் பெருகுவதும், அவ்வெள்ளம் இரு கரையும் மோதி ஆருய் ஓடுவதும் குறித்து அவர்கள் முதலில் கூறு வர். அஃதுடன் அவ்வெள்ளம் குறிஞ்சி நிலத்தில் புரண்டு, முல்லையில் பாய்ந்து, மருதத்தில் தவழ்ந்து கடலில் கலப்பதைப்பற்றி விரிவாகக் வருணிப்பர். ஆற்றிலே வெள்ளம் வரக்கண்ட மள்ளர் மதுவினைப் பருகி விழாவயர்தலும், மங்கல ஏர் பூட்டி உழுவதும், உழுத நிலத்தைச் சமன் செய்வதும், விதைப்பதும், விதை முளைப்பதும்பற்றி உற்சாகமாகப் பல கவிதை களில் விவரிப்பர். பின்பு உழத்தியர் நாற்று நடு வதையும் களை பறிப்பதையும், பயிர் வளர்வதையும் கதிர் காய்ப்பதையும் கதிர் முற்றுவதையும் சொல்லு வர். பிறகு விளைந்த கதிரை அறுப்பதும், அடிப்ப தும், புடைப்பதும் அவற்றை வண்டியில் ஏற்றி வந்து வீடு சேர்ப்பதும் ஆகியவற்றையெல்லாம் ஒன்று விடாமல் வரிசையாகக் கூறுவர். அதன் பிறகே விருந்தும் பிறவும் நடப்பதை அந்த நாடுகளில் காண முடியும். திருவள்ளுவர் கூறுவது இப்படிப்பட்ட நாடா ? உணவைப் பெறுவதற்கு உழவர்கள் எவ்வளவு பிரயாசைப்பட வேண்டியுள்ளது !

தமிழுக்குக் 'கதி'யாகக் கம்பனையும் திருவள்ளுவரை யும் கூறுவார்கள் அறிஞர்கள். இருவருடைய நூல்களை யும் படித்துப் பார்ப்பவர்கள் ஒருவர் மற்றொருவருக்குக் கதியாக இருப்பதை அறிவர். திருவள்ளுவருக்குக் கம்பனும் கம்பனுக்குத் திருவள்ளுவரும் கதியாகின்றனர்! 'வள்ளுவர் கூறும் நாடுபோல் ஒன்று உண்டா ?' என்று கேட்போருக்கு, "இதோ இருக்கிறது கோசல நாடு பாருங்கள் !" என்று காட்டுகின்ருன் கம்பன். கோசல நாடு வள்ளுவர் காட்டும் நாட்டிற்கு ஈடாகுமா ? ஆம், கட்டாயம் ஈடாகும். எப்படி என்ரு கேட்கின்றீர்கள் ?

கம்பனையே கேட்போமே. மழை பெய்வதையும் ஆற்றில் வெள்ளம் வருவதையும் கூறியபின் உழவினைப் பற்றி ஒரு சில வார்த்தைகளைச் சொல்லிவிட்டு நம்மை நேராக நெற் குவியலுக்கே அழைத்துச் சென்று விடுகின்றான் கவிஞன். கோசல நாட்டில் மெய் வருந்திப் பயிர் விளைத்தற்கு ஒரு குறிப்புக்கூட இல்லை. உழவர்கள் உழுகின்றனர்; உழுத சாலிலே முத்தும் மணியும் சிதறும் காட்சிகளைக் காண்கின்றோம். விதைப்பதையும் பிற செயல்களையும் நாம் பார்க்கவில்லை. மெய் வருந்திப் பயிர் செய்யாமல் எல்லாப் பொருள்களையும் உழவர்கள் எளிதில் பெறுகின்றனர் என்பதைக் கம்பன்,

"கதிர்படு வயலின் உள்ள
 கடிகமழ் பொழிலின் உள்ள
முதிர்பல மரத்தின் உள்ள
 முதிரைகள் பலவின் உள்ள
பதிபடு கொடியின் உள்ள
 படிவளர் குழியின் உள்ள
மதுவன மலரில் கொள்ளும்
 வண்டென மள்ளர் கொள்வார்"[2]

[கடிமகழ் - வாசனை வீசுகின்ற; முதிரைகள் - துவரை போன்ற பருப்பு வகைகள்; பதி-பூமி; மள்ளர்-உழவர்கள்.]

என்று காட்டுகின்றான்.

நமக்குத் தெரியும், வண்டுகள் ஆராய்ந்து ஆராய்ந்து இனிய தேனையே கொள்ளும் என்று. அந்தத் தேன் அந்த வண்டுகள் உண்டாக்கியதல்ல. தேனிருக்கும் மலர்களையும், மலர்கள் தோன்றும் செடி கொடி மரங்களையும் வண்டுகள் வளர்த்தனவா? அதுவும் இல்லை. வண்டுகளின் வாழ்க்கையில் நாம் கவனிக்க வேண்டிய முக்கியமாக ஒரு கூறு உள்ளது. அது என்ன? வண்டு தான் மலர்களில் எடுத்த தேனைத்

2. கம்பரா. நாட்டுப்படலம். செய். 21.

தானே உண்டு விடாமல் பொது நன்மைக்காகவே அஃதாவது எல்லா வண்டுகளும் ஒருங்கு சேர்ந்து உண்ணுவதற்காகவே, கூட்டில் சேர்த்து வைக்கும். ஆகவே, நல்ல தேனைச் சேகரித்தல், தேனைத் தரும் மலர்கள் பிறர் முயற்சியின்றி இயற்கையாகவே உண்டா தல், சேகரித்த தேனைச் சேர்ந்தே உண்ணுதல் என்ற வகையில் கோசல நாட்டு உழவர்கள் வண்டுகளை ஒத்துள்ளனர். அவர்கள் வயலிலுள்ள தானியங் களையும், பொழிலிலுள்ள பல மரங்களின் கனிகளையும், கொல்லைகளில் விளையும் துவரை போன்ற பருப்பு வகை களையும், நிலத்தில் கொடியில் உண்டாகும் பொருள் களையும், கிழங்கு வகைகளையும் கொள்ளுவார்கள் என்றல்லவோ கம்பன் நமக்குக் கூறுகின்றான்! இவ்வாறு மெய் வருத்தமின்றி எல்லாப் பொருள்களையும் பெற வல்ல கோசல நாட்டை, "நாடா வளந்தரும் நாடு" என்று சொல்லலாமன்றோ? வள்ளுவர் கண்ட இத் தகைய நாட்டைப் போலவே, ஆவூர் மூலங் கிழார் என்ற புறநானூற்றுப் புலவர்

"ஒருபிடி படியும் சீறிடம்
எழுகளிறு புரக்கும் நாடு".[3]

என்று கூறினரோ என்று நாம் எண்ண வேண்டியுள்ளது. ஒரு பெண்யானை படுத்திருக்கக்கூடிய இடத்தில் விளை வதைக்கொண்டு ஓர் ஆண்டு முழுவதும் ஏழு ஆண் யானைகளைப் பாதுகாக்க முடியும் என்பது இதன் கருத்து. இன்னும் புறநானூற்றுப் புலவர் ஒருவர் ஓர் அரசனை வாழ்த்துங்கால்,

"வேலி ஆயிரம் விளைக நின் வயலே"[4]

என்று வாழ்த்துவதையும், முடத்தாமக் கண்ணியார் என்ற புலவர் கரிகாற் பெருவளத்தானை வாழ்த்தும் பொழுது,

3 புறம்—40 4 புறம்—891.

"சாலி நெல்லின் சிறைகொள் வேலி
ஆயிரம் விளையுட் டாகக்
காவிரி புரக்கும் நாடுகிழ வோயே".[5]

என்று வாழ்த்துவதையும் காண்க.

இயற்கை வளம் வாய்ந்த நாட்டைப்பற்றி மேலும் வள்ளுவர் என்ன கூறுகின்றார்? நல்ல வளமானநாடென்றால், பிறநாட்டு மக்கள் எல்லோரும் அதனை விரும்புவர். எந்தவிதமான கேடுகளும் அந்நாட்டில் தோன்றா. பிற நாடுகளில் வற்கடம், பகைவர் படையெடுப்பு, கொடுங் கோன்மை முதலியவற்றால் மக்கள் அலைப்புண்டு அவர்கள் யாவரும் தம் நாட்டிற்கு வரும்படி நேர்ந்தால் அவர்களை யெல்லாம் மனமார ஏற்று உபசரிக்க வல்லதாகவும், இந்தப் பொறுப்புக்களை யெல்லாம் ஏற்ற காரணத்தால் தன் அரசனுக்கு வரி கட்டப் பணம் இல்லை என்றில்லாதபடி வளமிக்கதாகவும் இருக்க வல்லதே நல்ல நாடு என்று கூறுகின்றார் வள்ளுவர்.

"பொறையொருங்கு மேல்வருங்கால்
தாங்கி இறைவற்(கு)
இறையொருங்கு நேர்வது நாடு".[6]

என்பது அவர் திருவாக்கு. பொறை என்பது பிற நாடுகள் பொறுத்த பாரம்; இறை என்பது தன் அரசனுக்குக் கட்டவேண்டிய வரிப்பணம்.

வருவாய் இல்லாது ஓர் அரசாங்கம் அதிகப் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ள முடியுமா? முடியாது. ஆகவே, வள்ளுவப் பெருந்தகை 'இறைவர்க்கு இறை யொருங்கு நேர்வது நாடு' என்கின்றார். மக்கள் செலுத்த வேண்டிய வரிப்பணம் முழுவதையும் தாங்கள் உடன் பட்டுச் செலுத்தவேண்டும். அரசாங்கத்திற்கு எதிர்

5. பொருநராற்றுப்படை. வரி 246-48.
6. குறள்-733.

பாராது அதிகப் பொறுப்புக்கள் ஏற்படுங்கால் புதிய வரிகள் விதிக்க நேரிட்டால் அவற்றை மக்கள் தாமே முன் வந்து மனமுவந்து கொடுத்தல் அவசியமாகும். வரிகளைப் பல தடவைகளில் செலுத்தாமல் ஒரே தடவையில் முழுத் தொகையையும் செலுத்த வேண்டும்.

இவ்வாறு ஒரு நாடு ஏற்றுக்கொள்ளவேண்டிய பொறுப்புக்கள் பல. அப்பொறுப்புக்களை நாடு ஏற்றுக் கொள்ளாவிட்டால், மக்கட் கூட்டம் பலவித இன்னல்களை அடைய நேரிடும். எடுத்துக்காட்டாக பாகிஸ்தான் பிரிவினை ஏற்பட்ட காலத்தில் நம் நாடு எவ்வளவு அகதிகளை ஏற்க வேண்டியிருந்தது! இன்று கிழக்கு வங்காளக் குழப்பமும் இதே நிலையைத் தோற்றுவித்துள்ளதன்றோ? மக்கள் எவ்வளவு இன்னல்களையும் இக்கட்டுக்களையும் அநுபவித்தனர்! அநுபவிக்கின்றனர்! நம் நாடு இலட்சக்கணக்கான அகதிகளை வரவேற்று அவர்கட்கு உண்டி, உடை, உறையுள் முதலியவற்றைத் தந்து பாதுகாத்ததை பாதுகாப்பதை இவ்வுலகம் கண்டு வியக்கவில்லையா? உலக வரலாற்றிலேயே இவ்வளவு எண்ணிக்கையுள்ள மக்களைப் பாதுகாத்ததாக வேறு சான்றுகள் காணக் கிடைக்கவில்லை என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

மேலும் நாட்டைப்பற்றி வள்ளுவர் கூறும்பொழுது நல்ல நாடென்றால் அது கேடு இல்லாத—கேடு அறியாத—நாடாக இருக்கவேண்டும் என்கின்றார். ஒருக்கால் பகைவர்களால் துன்பம் வந்துற்றாலும், மழையின்மை முதலியவை நேரிட்டாலும், தன் வளம் மட்டிலும் குறையாதிருந்தால், அதுதான் நாடுகள் எல்லாவற்றிலும் சிறந்த நாடு என்பது அவர் கருத்து. நல்ல கிணறுகள், குளங்கள், ஏரிகள் ஆகியவற்றின் கீழ் நீரும், ஆறுகள், அணைகள் முதலியவற்றின் மேல் நீரும் ஒரு நாட்டிற்கு உறுப்புக்கள் என்று சொல்லவேண்டும். இவற்றைத்தான் வள்ளுவர் 'இருபுனல்' என்பர். இவ்வித நீர் நிலைகளின் இன்றியமையாமையைச் சில

சமயம் புலவர்கள் அரசர்கட்கு உணர்த்திய செய்திகளைப் புறநானூறு போன்ற சங்க நூல்களால் அறிகின்றேம். குடபுலவியனூர் என்ற புலவர் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பாட நேர்ந்த பொழுது,

"அடுபோர்ச் செழிய இகழாது வல்லே
நிலன்நெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
தட் டோர் அம்ம இவண் தட்டோரே"
தள்ளாதோர் இவண் தள்ளாதோரே."[7]

என்று பாடியிருப்பது ஈண்டுக் கருதத் தக்கது. "கொல்லும் போரையுடைய பாண்டியனே, இதனைக் கடைப்பிடித்து விரைந்து நிறைவேற்றுக. நிலங் குழிந்தவிடத்தில் நீரைத் தேக்குவோர் இம்மையும் மறுமையும் புகழ் எய்துவர் ; அவ்வாறு நீர் நிலைகளை உண்டாக்காதவர் இவ்வுலகில் தம் பெயரை நிலை நிறுத்தாதவர் ஆவர்" என்பது இதன் கருத்து. அக்காலத்தில் பாண்டியர்கள், சோழர்கள், பல்லவர்கள் ஏரிகள், குளங்கள் முதலியனவற்றை நிறுவிய செய்திகள் கல் வெட்டுக்களாலும் செப்புப் பட்டயங்களாலும் பிறவற்ருலும் அறியக் கிடக்கின்றன.

அன்றியும், மாரிக் காலத்தில் ஆற்றில் வெள்ளம் வருவதற்குக் காரணமாக இருப்பதும், கோடையில் மாரிக்காலத்தில் உண்ட நீரை உமிழ்ந்து ஆற்றில் நீரின்றி இருப்பதைத் தடுக்கவல்லதுமான மலை ஒரு நாட்டிற்கு மிக மிக அவசியம். மலையிலிருந்து வரும் அருவி நாட்டிற்குப் பல நன்மைகளைப் பயப்பதாகும். நீரைத் தேக்கித் தேவையான காலத்தில் பயன்படுத்துவதற்கும் மின்சார உற்பத்தி செய்வதற்கும் அருவி பயன்படுகின்றது. அதைத்தான் வள்ளுவர் 'வருபுனல்' என்று குறிப்பிடுகின்ருர். தவிர, மலை அரணாகவும் உதவு

7. புறம்-18.

கின்றது. கொரியர்கள் சாமர்த்தியமாகப் போர்புரிவதற்கு மலைப் பிரதேசங்கள் சௌகர்யமாக இருந்த வரலாற்றை நாம் அறியத்தான் செய்கின்றோம். பண்டைக் காலத்தில் பாரி முதலிய குறுநில மன்னர்களின் வரலாறு மலையின் அவசியத்தை நன்றாக உணர்த்துகின்றது. அன்றியும், மலை சிறந்த பொருள்களை விளைவித்து நாட்டின் பொருள் வளத்தைப் பெருக்குகின்றது. தேன், மூலிகை, மணி, தேயிலை, காப்பி முதலியன மலைப்பகுதிகளிலிருந்து அதிகமாகக் கிடைக்கின்றன.

மலைக்கு அடுத்தபடியாக ஒரு நாட்டிற்கு அரண் தேவை என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார். பகைவர் படையெடுப்பைத் தடுப்பதற்காகவே பண்டைக் காலத்தில் நீர் அரண், மலை அரண், காட்டு அரண் என்னும் இயற்கை அரணும் செயற்கை அரணும் நாட்டைச் சுற்றி அமையச் செய்தனர். இவற்றையெல்லாம் உள்ளத்தில் கொண்ட வள்ளுவர்,

"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற் (கு) உறுப்பு".[8]

என்று கூறுகின்றார். ஆனால், நொடிப் பொழுதில் பல ஊர்களையும் நகரங்களையும் சேர்த்து ஒருங்கே அழித்துப் பாழாக்க வல்ல அணுகுண்டுகள் தோன்றிய பிறகு இத்தகைய அரண்களால் பயன் இல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

ஒரு நல்ல நாட்டிற்கு அழகு பயப்பவை இவை இவை என்று வள்ளுவர் எடுத்துக்காட்டுகின்றார். மக்கள் நோயின்றி வாழவேண்டும்; 'நோயற்ற வாழ்வில் நான் வாழவேண்டும்' என்று இராமலிங்க அடிகள் ஆண்டவனை வேண்டவில்லையா? சுவரை வைத்துக்கொண்டு தானே சித்திரம் எழுத வேண்டும்? தனிப்பட்ட மனிதர்களின் செல்வ நிலை உயர்தல் வேண்டும்; அப்

8. குறள்-737.

பொழுதுதான் நாட்டின் செல்வநிலை உயரும். உடல் நலத்திற்கு வாழும் நில நலன், பொருள் நலன் முதலி யன வேண்டுமல்லவா? நல்ல விளைவுதான் ஒரு நல்ல நாட்டிற்கு அளவு கோல். உற்பத்திப் பொருள் பெருகினால்தான் ஒரு நாடு வளம்பெறும்; நாட்டின் செல்வநிலையும் உயரும். பிணியின்மை, செல்வம், விளைவு இவற்றைப் பெற்ற மக்கள் இன்ப வாழ்வு வாழ்தல் வேண்டும். இன்பத்தைப் பெற்ற மக்களுக்கு ஒரு பாதுகாப்பு வேண்டாமா? இதை 'ஏமம்' என்ற சொல்லால் குறிப்பிடுவர் வள்ளுவர். வெறும் 'கருவி களைவு மாநாடு' கூட்டி உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுதலால் பயன் இல்லை. பகையை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பெறும் பாதுகாவ லால் பயன் ஒன்றும் இல்லை; அறத்தின் வழி நின்று, அன்பின் அடிப்படையில் பாதுகாவல் அமைதல் வேண்டும். ஆகவே, வள்ளுவர்,

"பிணியின்மை செல்வம் விளை(வு) இன்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்(கு) இவ் வைந்து".[9]

என்று நாட்டின் அணிகளை வகுத்துக் காட்டுகின்றார்.

ஒரு நாடு சிறக்க வேண்டுமானால் குறையாத விளை பொருள் வேண்டும்; அவற்றை எல்லோரும் பெற்று நுகரச் செய்யுமாறு அறத்தைப் போற்றும் அறவோர் வேண்டும்; குற்றம் குறையில்லாத செல்வர்கள் அந் நாட்டில் இருத்தல்வேண்டும். இதனை,

"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு."[10]

என்று கூறுகின்றார் வள்ளுவர். குறையாத விளை பொருள் களை உற்பத்தி செய்யவல்ல நாட்டிற்கு உயிர்நாடி போன்ற நல்ல உழவர்கள் அந்நாட்டில் வாழவேண்டும். என்னென்னவிதமாக வெல்லாம் மக்கள் வருந்திப்

9. குறள்-738 10. குறள்-731

பொருள் ஈட்டினாலும் உணவுக்கு உழவர்கள் கையினைத்தானே எதிர்பார்க்க வேண்டியுள்ளது? இதனால் தானே வள்ளுவரும்,

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்"[11]

என்று கூறினார்.

முடியுடை மன்னனாக இருந்தாலும் உழவர்களின் உழைப்பால்தான் ஒரு நாட்டைச் சிறப்படையச் செய்ய முடியும். அரசனுடைய ஆட்சி செம்மையாக நடை பெறுவதற்கு உழவனின் முயற்சியே தலையாய காரண மாகும். ஆகவே வள்ளுவரும்,

"பலகுடை நீழலும் தங்குடைக்கீழ் காண்பர்
அலகுடை நீழல் அவர்."[12]

என்று கூறுகின்றார். இதையே கம்ப நாடனும் 'மேழி பிடிக்குங் கை வேல் வேந்தர் நோக்குங் கை'[13] என் கின்றான். ஆகவே, ஓர் உழவன் சோம்பியிருந்தால் பலர் தேம்பித்திரிய நேரிடும். பயிரிடுவோர் மனஞ்சலித்தால் உலக மக்கள் பட்டினியாகத் தவிக்க நேரிடும். ஆகவே தள்ளா விளையுளை விளைவிக்கும் உழவர்கள் ஒரு நாட் டிற்கு அவசியம் என்கின்றார் வள்ளுவர். அரசனது வெற்றியையும் உழவன்தான் தருகின்றான் என்பதை,

"பொருபடை தருஉங் கொற்றமும் உழுபடை
ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே."[14]

என்ற புறநானூற்று அடிகளும்,

"இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்
உழவிடை விளைப்போர்"[15]

என்ற சிலப்பதிகார அடிகளும் வற்புறுத்தி நிற்கின்றன.

தக்கார் என்போர் அறவோர் என்று பரிமேலழகர் கூறுவர். அறவோர் எனப்படுவோர் இல்லறம்

11. குறள்-1031 12. குறள்-1034
13. ஏரெழுபது. 14. புறம்—35.
15. புகார்காண். நாடுகாண் வரி (149-150)

துறவம் ஆகிய ஒழுக்கங்களில் நெறி தவருது நடக்கும் சீலர்கள். இவர்கள் நல்ல நாட்டில் இருப்பார்கள் என்பதைச் சிந்தாமணி ஆசிரியரும்,

"நற்றவம் செய் வார்க்கிடம்
தவம் செய்வார்க்கும் அஃதிடம்"[16]

என்று இசைக்கின்ருர். நல் தவம் என்பது வீடுபெறுவ தற்கூஏற்ற தவம் ; துறவறம். தவம் என்பது இல்லறம். இன்றைய நிலையில் தக்கார் என்பதற்கு நாட்டிற்குச் சேவை செய்வோர், அறவழி நிற்போர் என்று பொருள் கொள்ளுதல் பொருத்தமாகும். உழவர்களால் உற்பத்தி செய்யப்பெறும் பொருள்களையும் பிறவற்றையும் வாங்கும் முறையிலும் விற்கும் முறையிலும் அரசினரின் சட்டங்களுக்கு உண்மையாகக் கட்டுப்பட்டு நிற்கும் மனிதர்கள்தாம் தக்கார். வணிகர்கள், செல்வர்கள், அரசாங்க அலுவலர் இதில் அடங்குவர். பொருள் களை வினியோகம் செய்வதில் பலவகைச் சூழ்ச்சிகள் செய்யாது நேர்வழி நின்று பணிபுரியும் மக்கள்தாம்—அவர்கள் எத்துறையைச் சேர்ந்தவர்களாக இருப்பினும் சரி—தக்கார்; அவர்களே நாட்டிற்கு அவசியம் என்பது வள்ளுவரின் கருத்து. இன்று 'தக்காரின் பஞ்சம்' எம்மருங்கும் ஏற்பட்டிருப்பதை நாம் காணத்தான் செய்கின்ருேம். இதன் காரணமாகத்தான் நாடு பலவிதங் களில் சீர்கேடுற்றுள்ளது.

தாழ்விலாச் செல்வர் என்போர் வணிகர் என்பது பரிமேலழகரின் கருத்து. அவர்கள் தாம் கொள்ளும் சரக்கையும் தாம் கொடுக்கும் பொருளுக்கு மிகையாகக் கொள்ளாது, தாம் கொடுக்கும் சரக்கையும் தாம் வாங்கும் பொருளுக்குக் குறையாகக் கொடாமல் இலாபத்தை வெளிப்படையாகச் சொல்லிக் கொடுக்கும் உத்தமர்கள்.

16. சிந்தா. நாமகள் இலம். செய். 48.

பண்டைக்காலத்திலும் சரி, இன்றும் சரி, வணிகர்களே பெருஞ் செல்வர்களாகத் திகழ்கின்றனர். இவர்கள் காலப் போக்கையும் நாட்டின் நிலையையும் எண்ணித் தக்க வழியில் நடந்துகொள்ளவிட்டால் நாட்டின் வளப்பம் பலவிதங்களில் சுரண்டப்பட்டு மக்கள் பட்டினியில் அழுந்துவர். இன்று பொதுவுடைமைக் கட்சி தோன்றுவதற்கும், அது வளர்வதற்கும் இவர்களது செய்கையே முதற்காரணம் என்று சொல்லத்தான் வேண்டும்.

ஆகவே, பல்வகை விளை பொருள்களை விளைவிக்கும் உழவர்களும், ஒழுக்க நெறி தவருத சீலர்களும், நேர்மை வணிகரும் ஒரு நல்ல நாட்டிற்கு மிகவும் இன்றியமை யாதவர்கள் என்பது வள்ளுவரின் கருத்து.

இவ்வாறு ஒரு நாட்டிற்கு இருக்க வேண்டியவை யாவை என்று உடன்பாட்டால் கூறிய வள்ளுவர் நாட்டிற்கு வேண்டாதவை, நாட்டில் இருக்கத் தகாதவை யாவை என்பதையும் எதிர்மறையால் விளக்குகின்ருர். ஒரு நாட்டில் இருக்கத் தகாதவை யாவை? மிக்கபசி, தீராதநோய், அழிக்கும் பகை என்பவைதாம் அவை. உணவுப் பொருள் இன்றிப் பஞ்சம் உண்டாகலாம். உற்பத்திப் பொருளின் பெருக்கத்தால் தொழிலில் மந்தம் ஏற்பட்டு அதனல் வேலையில்லாத் திண்டாட்டம் உண்டாகிப் பஞ்சம் ஏற்படுதலும் உண்டு. உற்பத்திக் குறைவால் பொருள்கள் கிடைப்பது அரிதாகிக் கள்ளத் தனமாய் வாணிகம் செய்பவர்களின் அக்கிரமங்களால், பஞ்சம் ஏற்படுதலும் உண்டு. இந்நிலைகள் ஏற்படாத வாறு நாட்டைப் பாதுகாக்கவேண்டும். அதனுல்தான் பழங்காலத்துப் புலவர்கள் நாட்டினைச் சிறப்பிக்கும் பொழுது, “தொல்பசி யறியாத் துளங்கா இருக்கை” என்றும், “பசியென வறியாப் பணைபயில் இருக்கை” என்றும் கூறியுள்ளனர். வறுமைத் தொல்லையால்,

உணவுப் பொருள் போதாக் குறையால் வரும் பசிக் கொடுமை ஒரு நாட்டில் இருக்கக்கூடாது. அடுத்தது நோய்; முதுமையாலும் தளர்ச்சியாலும் இயல்பாக உடலுக்கு வரும் நோய்கள் போக, இளமையில் நோய்கள் வருவதும், அவை ஓயாமல் வந்து தீராமல் நிற்பதும், தொத்து நோய்களாகப் பெருகுவதும் நாட்டின் பெருமையைக் குறைக்கும். தீக்காற்றினுலும், குளிரினுலும், வெப்பத்தினுலும் இயற்கை நிலை மாறுபடுவதனுலும் நோய் உண்டாகின்றது. காரணமின்றி நோய் வராது.

> "நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
> வாய்நாடி வாய்ப்பச் செயல்"[17]

என்று வள்ளுவர் கூறுகிறபடி நோய்களைப் போக்குதல் வேண்டும். மக்கள் உடல் நலனைப் பாதுகாப்பதற்கென ஓர் அமைச்சர் இருந்து செயலாற்றவேண்டும். நாட்டில் பல இடங்களில் மருத்துவ நிலையங்கள் நிறுவப்பெற்று ஏழை மக்கள் எளிதில் அவற்றுலாய பயனை அடைய வழிகள் அமைத்தல் வேண்டும். மூன்றுவது பகை; கருத்து வேறுபாட்டாலும், உரிமைப் போராட்டத்தாலும் எந்த நாட்டிலும் எதிர்ப்புக்கள் இருக்கத்தான் செய்யும்; அவை அறிவு வளர்ச்சிப் பாதையிலும் அரசியல் முற்போக்கிலும் சென்று மக்களைத் திருத்தி ஆக்க வேலை செய்யும் அளவில் நிற்காமல், அவர்களைக் கெடுக்கும் அழிவு வேலைக்குத் திருப்புமானுல் அது நாட்டிற்குப் பெரியதோர் இழுக்காகும். அன்றியும், அண்டை நாட்டினரின் பகை ஏற்படாதவாறு பாதுகாத்தல் வேண்டும். ஏட்டளவில் "நேச தேச ஒப்பந்தங்கள்" செய்துகொண்டு செயலில் படை பலத்தைப் பெருக்கிக் கொண்டு வஞ்சகம் புரிவதால் பயன் ஒன்றும் இல்லை. அறத்தையும் அன்பையும் புறக்கணித்துப்

---

17. குறள்-948

பொருளிலேயே பொருளுக்குத் தற்காப்புத் தேடும் உலகம், தோற்றக் காட்சிகளைக் கண்டும் அவ்வழியை பின்பற்றுதல் அறிவுடைமை யாகாது. உள்ளத்தில் உண்மை நெறி உண்டாதல் வேண்டும். ஆகவே, பசி, பிணி, பகை ஆகிய மூன்றும் ஒரு நாட்டில் இருத்தல் கூடாதென்பதை வள்ளுவர்,

> "உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
> சேராது இயல்வது நாடு."[18]

என்று கூறுகிறார். பசியும், நோயும், பகையும் ஒரு நாட்டிற்கு வேண்டத் தகாதவை; அவை தலை காட்டாது தடுக்கப்பெற வேண்டியவை.

ஒரு நாட்டிற்கு அழிவுக் காலம் வரநேரிட்டால், அங்கு பலவகைக் கட்சிகள் தோன்றி வளரும்; கட்சி யாளர் தத்தம் கட்சியை வலுப்படுத்தி எதிர்க்கட்சியை அழிக்க முயல்வார்களேயன்றி, நாட்டின் பொது நன்மை யைக் கவனிக்கமாட்டார்கள். வெளிப்படையாக எதிர்ப் பவர்கள் இங்ஙனம் பல குழுக்களாக இருந்துகொண்டு காரியங்களைச் செய்வார்கள். சிலர் தந்திரத்தையும் கையாண்டு உடனிருந்தே கெடுதி செய்ய வல்ல உட் பகையாக மாறுவார்கள். வேறு சிலர் வாணிகம், கைத் தொழில் முதலிய தொழில்களைக் கைப்பற்றிச் செல்வாக் குப் பெற்று அரசாங்கத்தை அலைத்துத் தொல்லை கொடுக்கும் கூட்டமாக இருப்பார்கள்; இவர்கள் எந்த விதமான முற்போக்குச் செயல்களுக்கும் இடங் கொடாது இடையூறுசெய்வார்கள். இவற்றைக் கருத்தில் கொண்டுதான் வள்ளுவரும்,

> "பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
> கொல்குறும்பும் இல்லது நாடு"[19]

---

18. குறள்-734    19, குறள்-735

என்று கூறியுள்ளார். இங்குப் பல் குழுவென்பது கருத்து வேறுபட்டால் தோன்றும் பல கட்சிகள் ; பாழ் செய்யும் உட்பகையென்பது ஆறலைக் கள்வர், கோள் சொல்லுவோர் முதலியோர் ; கொல் குறும்பு என்பது சமயம் பார்த்திருந்து அரசாங்கத்துக்குத் தீங்கு பயக்கும் சிற்றரசர்கள், ஆலை முதலாளிகள், வணிக மன்னர்கள் முதலியோர். இன்றைய உலகில் இவை மிகவும் சர்வ சாதாரணம். நாட்டில் உட்பகை தோன்றும் அறிகுறிகள் காணப்படும்பொழுது அவற்றை 'இளைதாக முள் மரம் களைதல்போல்' களைந்துவிடல் வேண்டும். அறம் என்பது இதுவெனத் தெரியாத கொடியவர்களைத் தொடக்கத்திலேயே அழித்துவிடுதல் சாலப் பயன் தரும். தக்க ஒற்றர்களை வைத்துக்கொண்டால், இதனை எளிதில் அறிந்துகொள்ளலாம்.

ஔவையார் என்ற புலவரும் நாடு நாடாக இருந்தாலும் சரி, காடாக இருந்தாலும் சரி, பள்ளமாக இருந்தாலும் சரி, மேடாக இருந்தாலும் சரி, அதன் பொருட்டுக் கவலை வேண்டாம் என்றும், அங்குள்ள மக்கள் நல்லவர்களாக இருந்தால் நாடும் நல்லதாக இருக்கும் என்றும் கூறியிருப்பது இவ்விடத்தில் கருதத் தக்கது.

" நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே." [20]

[அவல்-பள்ளம்; மிசை-மேடு.]

---

20 புறம்-187.

என்பது அவர் வாக்கு. நல்ல இளைஞர்கள் நாட்டில் ஏராளமாக விருந்தால், அந்த நாடு சிறந்த நாடாக இருக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? காப்பன காத்துக் கடிவன கடிந்து நல்லொழுக்கத்தில் ஒழுகி 'யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற உயர்ந்த குறிக்கோளுடன் வாழும் மக்கள் ஒரு நாட்டில் இருந்தால் அந்நாட்டிலுள்ளார் எதையும் மெய்வருந்திப் பெறவேண்டியதில்லை; எல்லாம் தாமாக வந்தெய்தும். மழையும் தவறாது பெய்யும்; நிலமும் குன்றாது விளையும்.

"வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்"[21]

என்றல்லவோ வள்ளுவர் கூறுகின்றார்? பிறர் பொருட்டு என்ற உண்மையை யறிந்து விருந்தோம்பி வாழ்ந்தவர் நிலம் விதையிடாமலும் விளையக்கூடும் என்றல்லவோ வள்ளுவப் பெருந்தகை கூறுகின்றார்?

இறுதியாக, நல்லதொரு நாட்டிற்கு ஒரு முக்கியமான அம்சத்தைக் கூறுகின்றார். அஃது என்ன? என்னதான் நலங்கள் பல பெற்றிருந்தாலும்; நல்ல வேந்தன் இல்லாத நாடு காடுதான் என்று சொல்லவேண்டும். 'கொடுங்கோல் மன்னர் வாழும் நாட்டில் கடும்புலி வாழும் காடு நன்றே' என்ற உண்மை நாமெல்லாரும் அறிந்தது தானே. அதனால்தான் வள்ளுவப் பெருந்தகையும்,

"ஆங்(கு) அமை(வு) எய்தியக் கண்ணும் பயம் இன்றே
வேந்(து) அமை(வு) இல்லாத நாடு."[22]

என்று கூறுகின்றார். குடியாட்சியுள்ள நாட்டில் வேந்தன் என்பதற்குத் தலைவன், முதல் அமைச்சன் என்ற

21. குறள்-35. 22. குறள்-740.

பொருளை இடத்திற்கும் சந்தர்ப்பத்திற்கும் ஏற்றவாறு கொள்ளுதல் வேண்டும்.

> " முறையறிந்(து) அவாவை நீக்கி
> முனிவுழி முனிந்து வெஃகும்
> இறையறிந்(து) உயிர்க்கும் நல்கும்
> இசைகெழும் வேந்தன் காக்க."[23]

[முறை-நீதி ; அவா-வரிப் பொருள் மீதுள்ள ஆசை ; முனிவுழி-சினங்கொள்ள வேண்டிய இடத்து; வெஃகும்-விரும்பும்; இறை-கடமைப் பொருள், வரிப்பொருள்; இசை-புகழ்.]

அமையும் நாடே சிறந்த நாடென்பது வள்ளுவர் கொள்கை. அத்தகையவனுடைய நாடுதான் நாடாது—நாடா வளந்தரும் நாடாக விருக்கும்.

ஆகவே, திருவள்ளுவர் கண்ட நாட்டில் தள்ளா விளையுளை உண்டாக்கும் உழவர்களும், தக்காரும், தாழ்விலாச் செல்வரும் இருப்பார்கள் ; நாடும் கேடு அறியாததாக இருந்து, கெட்ட விடத்தும் பல்வளங்களும் குன்றாது இருக்கப்பெறும் ; அந்நாடு பிற நாடுகளின் பாரத்தை யெல்லாம் தாங்க வல்லதாகவும், பிறநாட்டார் எல்லோரும் விரும்பத் தக்கதாகவும் இருக்கும் ; பலவித நீர் நிலைகளுடன் பொருந்தி, நாட்டின் அணிகளாகிய பிணியின்மை, செல்வம், விளைவு, இன்பம், பாதுகாப்பு ஆகியவைகளுடன்கூடி விளங்கும் ; சிறந்த மன்னனையும் தலைவனுகப் பெற்றுள்ள அந்நாட்டில் வாழும் மக்கள் தேடி வருந்தாமல், நாடாத வளங்களையெல்லாம் பெறுவார்கள் என்பனபோன்ற வள்ளுவர் கூறும் கருத்துக்களை நெஞ்சகத்தில் இருத்துதல் வேண்டும்.

---

23. கம்பரா. நாட்டு. செய். 19.

## 6. பாவை நோன்பு

பண்டைக் காலந்தொட்டே நம் நாட்டில் பொருள் பொதிந்த பல நல்ல வழக்கங்களும் பழக்கங்களும் இருந்து வருகின்றன. உரிய கருமங்களைத் தவருது நடத்திவரும் நம் நாட்டைக் 'கருமபூமி' என்று ஆன்ருேர் குறிப்பர். இக் கருமங்கள் யாவும் வினைமாசு தீர்தற் பொருட்டும் அந்தக்கரணங்கள் தூயவாதற்பொருட்டும் நம் நாட்டு மக்களால் அனுட்டிக்கப்பெற்று வருகின்றன. இவை பெரும்பாலும் இம்மைப் பயன் கருதியும் ஒரோவழி மறுமைப் பயனை நாடியும் நிகழ்த்தப்பெறுகின்றன. இவ்வாறு இல்லறத்தார் அனுட்டிக்கும் விரதங்களில் பாவை நோன்பும் ஒன்று. பண்டைக்காலத்தில் இந் நோன்பைப் பெரும்பாலும் சிறு பெண்கள் கொண்டாடி வந்தனர். இவர்கள் வைகறையில் துயில் எழுந்து ஆற்றுக்குச் சென்று குளிர்ந்த நறுநீரில் குளித்து விளையாடிய பின், நீர்த்துறையில் படிந்துள்ள வண்டலைக்கொண்டு பாவை செய்து வழிபடுதல் வழக்கமாக இருந்துவந்தது. இவ்வாறு இளமகளிர் தொடங்கி விளையாடும் பாவை யாடலுக்கு முதுமகளிரும் உடனிருந்து செய்யவேண்டிய முறைகளை அவர்களுக்கு உணர்த்துவர். மகளிர் இந் நோன்பை மார்கழி மாதத்திலும் தை மாதத்திலும் கொண்டாடி வந்ததாக இலக்கியங்களால் அறிகின்ருேம். சங்க இலக்கியங்கள் இதைத் 'தைந் நீராடல்' என்றும், பிற்கால இலக்கியங்கள் 'மார்கழி நீராடல்' என்றும் குறிப்பிடுகின்றன. பரிபாடல் இதனை 'அம்பா ஆடல்' என்று சுட்டும். பாவையை வைத்து ஆடப்பாடுதலால் 'அம்பாவையாடல்' என்று வழங்கி 'அம்பாவாடல்' என்று மருவிவந்தது போலும். இதுதான் இன்று 'எம்பாவையாட

லாய்' வழங்கி வருகின்றது. இந் நோன்புக்குப் பாவை இன்றியமையாததாய் இருந்து வந்ததாலும், பாவையர் களால் கொண்டாடப் பெற்று வந்ததாலும் இதை நாம் 'பாவை நோன்பு' என்றே குறிப்போம். இஃது இன்று மார்கழி மாதத்தில் கொண்டாடப் பெறுவதால் 'மார்கழி நோன்பு' என்று வழங்கி வருகின்றது.

பண்டிருந்து இல்லறத்தார் நிகழ்த்தி வந்த இம் மார்கழி நோன்புக்கு நல்ல சான்றுகளாக இருப்பவை ஆண்டாள் அருளிச்செய்த திருப்பாவையும் மணி வாசகப் பெருமான் திருவாய் மலர்ந்தருளிய திருவெம் பாவையும் ஆகும். பழைய நோன்பாகிய மார்கழி நோன்பைத் தமிழ்நாடு மறந்தே விட்டாலும், இன்றும் மார்கழி மாதத்தில் அருணோதய காலத்தில் நீராடிச் சைவர்கள் திருவெம்பாவையையும் வைணவர்கள் திருப்பாவையையும் ஓதி ஆராதனை நடத்தி வருகின் றனர். இவ்வாறு ஆராதனை செய்து சமயச் சடங்கு போலாகிவிட்ட இந்நிகழ்ச்சிக்கு இலக்கியங்களாக நின்று நிலவும் இந்த இரண்டு இசைத் தமிழ்த் செல்வங் களையும் தமிழர்கள் ஒப்பிட்டுப் படிக்கவேண்டும்; படித்துப் பயன் பெறவும் வேண்டும்.

சில ஆண்டுகளாக எங்கும் திருப்பாவை திருவெம் பாவை மாநாடுகள் நடைபெற்று வருவதை நாம் செய்தித் தாள்கள் மூலம் அறிகின்றோம். தமிழ் நாடு விட்டு அலுவல் நிமித்தம் சென்று பம்பாய், கல்கத்தா, டில்லி முதலிய வட நாட்டுப் பகுதிகளில் குடியேறி வாழ்ந்துவரும் தமிழர்களும் இம்மாநாட்டைத் தவறாது நடத்தி வருகின்றனர்.

**திருப்பாவை :** திருப்பாவை 'சந்தம் பொலியும் பாமாலை'யாகத் தமிழ் இலக்கியத்தை அலங்கரித்து நிற்கின்றது. சிறந்த இந்த இசைத் தமிழ்ச் செல்வத்தை

நாலாயிர திவ்விய பிரபந்தம் என்ற நூலில் முதலாயிரத்தில் இரண்டாவது திவ்வியப் பிரபந்தமாகச் சேர்த்திருக்கின்றனர். இதில் முப்பது பாசுரங்கள் உள்ளன! வைணவர்கள் இதனை,

> " பாதகங்கள் தீர்க்கும் பரமன் அடிகாட்டும்,
> வேதம் அனைத்துக்கும் வித்தாகும் !"

என்று பாராட்டிப் புகழ்ந்திருக்கின்றனர். பெண்மைக்குரிய காதலைத் தெய்வக் காதலாக்கியவள் பெரியாழ்வாரின் பெண்கொடி. அவளது தூய்மையான உள்ளத்தில் ஊற்று எடுத்த காதல் திருப்பாவை என்ற அழகிய ஒரு பாமாலையாக வடிவெடுத்து வந்திருக்கின்றது. அந்தத் தெய்வப் பூந்துணர்தான் அன்று முதல் இன்றுவரை மக்கள் மனத்திற்குத் துன்பம் அணுகாத இன்பத்தைத் தந்துகொண்டுள்ளது. இனி என்றும் தந்துகொண்டிருக்கும் என்பதற்கு ஐயமில்லை.

'சின்னஞ்சிறு வயது முதல் தன் தந்தையாகிய 'பட்டர்பிரான்' என்று சிறப்பிக்கப்பெறும் பெரியாழ்வார் வழியாகவும் பிறர் மூலமாகவும் கண்ணன் வரலாறுகளைக் கேட்பதுபோலக் கேட்டு வந்தாள் இவள். அதனால், அந்தக் கண்ணனையே தன் நாயகனாக அடைய வேண்டும் என்ற கருத்து இவள் உள்ளத்தில் கருக்கொண்டு வளர்ந்து வரலாயிற்று. அந்தக் காதலனை எப்படியும் அடைந்தே தீரவேண்டும் என்ற எண்ணம்—பக்திச் சுடர்—இவள் இதயத்தில் அணையாத விளக்காக எரிந்துகொண்டிருந்தது. அந்தக் காதலனை மறக்கவும் முடியவில்லை; அவனை விட்டுத் தப்பிப்போகவும் முடியவில்லை. அந்த அழகுத் தெய்வம் இவளுடைய அகக் கண்ணுக்கும் தரிசனம் தரவில்லை. பாவம், என்ன செய்வாள் ? அந்த அவதார காலத்தில் தான் பிறக்கவில்லையே என்று ஏங்குகின்றாள். இது முடியக்கூடிய செயல் என்று அவளுக்குத் தோன்றவில்லை. அந்தக்

கண்ணன் பிறந்து வளர்ந்து மாடு மேய்த்த இடங்களை யாவது கண்குளிரக் கண்டு ஆறுதல் அடையவும் அவளுக்கு வசதி இல்லை. இந்நிலையில் அவளுக்குப் பாவனுசக்தி (Fantasy) துணை செய்கின்றது.

பக்தி மனமும் குழந்தை மனமும் ஒரு நிலையில் தானே இருக்கும்? குழைந்தைகள் கற்பனை உலகில் சஞ்சரித்துப் பல விளையாட்டுக்கள் விளையாடுவதை நாம் பார்த்துத்தானே இருக்கின்ளேம்? குழந்தையைப் போலவே ஆண்டாளும் தன்னைக் கண்ணன் அவதரித்த காலத்தில் இருந்த கோபிகையாகவே எண்ணிக் கொள்கின்ருள். தான் பிறந்த ஸ்ரீ வில்லிபுத்தூரைக் கோகுலமாகவே பாவித்துக் கொள்கின்ருள்; அவ்வூரி லுள்ள வடபெருங் கோயில் நந்தகோபர் மாளிகையாக மாறுகின்றது. அக்கோவிலிலுள்ள வடபத்திரசாயி என்று சொல்லப்படும் பெருமாள் கண்ணனுகவே காட்சியளிக் கின்ருன். இந்தப் பாவனு சக்தியின் விளைவாகப் பிறந் ததுதான் திருப்பாவை என்ற இசைத் தமிழ்; பாடிய வாய் தோனூறும் பக்திச் சுவைப் பாசுரங்களைக் கொண்ட தெய்வப் பாமாலை. பாவனுசக்தியின் முதிர்ச்சியால் கோகுலத்தில் பாவை நோன்பு நோற்கும் கோபிகை யருளுள் ஒருத்தியாகி விடுகின்ருள் ஆண்டாள். நோன்பு நோற்குங்கால் நிகழும் சில சுவையான நிகழ்ச்சிகளையும் திருப்பாவைப் பாசுரங்களில் என்றும் அழியாதபடி பதிவு செய்து வைத்து விடுகின்ருள்.

இந்தப் பாடல்களைச் சுவைத்துப் பாடும்பொழுது சொற்கள் மறைந்து, சொற்கள் குறிக்கும் ஓசையும் மறைந்து, நம்மையும் அக்காலங்களுக்கு அழைத்துச் சென்று விடுகின்றன! ஆகவேதான், வைணவர்கள் இப் பிரபந்தந்தில் சிறப்பாக ஈடுபாடு கொண்டு மார்கழி மாதத்தில் மாதம் முழுவதுமே இதனை ஓதிவருகின்றனர்; படிக்காதவர்களும் ஓதக் கேட்டு வருகின்றனர்

நாளொன்றுக்கு ஒரு பாசுரமாக முப்பது நாட்களுக்கு முப்பது பாசுரங்கள் ஓதப்பெறுவது வழக்கமாக இருந்து வருகின்றது. அன்றியும்,

"ஐங்கோலும் ஒருகோலும் நீர்க்கோலம் போல்
அழிய முனிந்து அறுசமயம் அகற்றிஎங்கள்
செங்கோலே உலகனைத்தும் செல்ல முக்கோல்
திருக்கையில்கொள் எதிராசன்" [2]

[ஐங்கோல்-மன்மதனுடைய ஐந்து மலரம்புகள்; ஒரு கோல்-அத்துவைத சந்நியாசியின் ஏகதண்டம்; நீர்க் கோலம்-நீரிலிட்ட கோலம்; முனிந்து-கண்டித்து; அறு சமயம்-வைணவத்திற்குப் புறம்பாகிய ஆறு மதங்கள்; செங்கோல்-(இங்கு) வைணவ சமயம்; முக்கோல்-திரி தண்டம்; இதை இராமநுசர் என்றும் கையில் வைத் திருப்பார்.]

என்று சிறப்பிக்கப்பெறும் இராமநுசர், தமிழ் நாட்டில் வைணவ மதத்தைப் பரப்பிய சீலர், இப் பிரபந்தத்தைச் சிறப்பாக மதித்து வழிபட்டு வந்ததாக அவரது வரலாற் றால் அறிகின்றோம். இதை அவர் ஓதாத நாளே இல்லை என்று கூடச் சொல்லலாம். இதனால் அவருக்குத் 'திருப்பாவை ஜீயர்' என்ற பெயரும் வழங்கி வருகின்றது. இத்தகைய சிறப்பு வாய்ந்த பிரபந்தத்துக்குப் பலர் மணிப்பிரவாள நடையில் 'வியாக்கியானங்கள்' செய் திருக்கின்றனர். இவற்றுள் பெரியவாச்சான் பிள்ளை அவர்கள் செய்த வியாக்கியானமே பழமையும் பெருமை யும் உடையதாகும் என்று சொல்லாம்.

**திருவெம்பாவை :** திருவெம்பாவையும் தமிழ் இலக் கியத்தை அணிசெய்து நிற்கும் ஓர் இசைத் தமிழ்ச் செல்வமே. இதில் இருபது பாடல்கள் உள்ளன. இப் பிரபந்தத்தை மணிவாசகப்பெருமான் திருவண்ணா மலையில் அருளிச்செய்தனர். மணிவாசகப்பெருமான் திரு

---

2 சீரங்க நாயக ரூசல்—19.

வண்ணுமலை சென்று சிவபெருமானை வணங்கிக்கொண்டு சில காலம் அத் திருப்பதியில் தங்கியிருக்கும்பொழுது மார்கழி மாதம் வருகின்றது. திருவாதிரை உற்சவத்திற்கு முற்படப் பத்துத் தினங்களிலும் மகளிரெல்லாம் விடியற் காலத்தே எழுந்து வீடுதோறும் சென்று ஒருத்தியை ஒருத்தியும் பலருமாகத் துயிலுணர்த்தி அழைத்துக் கொண்டு பொய்கையில் நீராடி வருவதைக் காண் கின்றார். நீராடப் போகும்பொழுதும், நீராடும்பொழுதும் நீராடித் திரும்பும்பொழுதும் அவர்கள் வாயில் 'அரன், புகழ்' இன்னிசையுடன் தவழ்தலைக் காண்கின்றார். அவர்கள் காதலோடு தம் பக்திக் காதலையும் கலந்து அடிகள் அம்மகளிர் கூற்றில் வைத்து அழகான பாடல் கள் கொண்ட திருவெம்பாவையாகப் பாடினார் என்று திருவாதவூரர் புராணம் கூறுகின்றது. தமிழ் நாட்டி லுள்ள எல்லாச் சிவாலயங்களிலும் இப்பாடல்களை மார்கழி மாதம் திருவாதிரைக்கு முன் பத்துத் தினங்களும் ஓதுவித்துத் தீபாராதனை நடத்திவரும் வழக்கம் இன்றும் இருந்து வருகின்றது. முதல் நாள் பன்னிருதிரு முறைகளையும் முறையே ஓதுவித்துத் திருக்காப்பிடுவர். பிறகு திருவாதிரை நன்னாள் வரும் வரையிலும் திருவெம்பாவையை ஓதித் தனித்தனியாக ஒவ்வொரு பாடலுக்கும் தீபாராதனை புரிவர். இறுதியில் பன்னிரு திருமுறைகளையும் ஓதச்செய்து தீபாராதனை நடத்துவர். இவ்வழக்கம் தொன்றுதொட்டு இருந்து வருவதாகக் கூறப்படுகின்றது.

**இரண்டிலுமுள்ள பொதுக் கருத்துக்கள்:** இந்த இரண்டு பிரபந்தங்களும் வெவ்வேறு தெய்வ வழி பாடுடையாருக்கு உரியவைகளாக இருந்த போதிலும் இரண்டும் ஒரே பொதுக்குறிப்பு உடையவைகளாக உள்ளன. இப் பொதுக் குறிப்புகள் யாவை என்பதை ஈண்டு ஆராய்வோம்.

முதலாவதாக: இரண்டு பிரபந்தங்களிலுமுள்ள பாடல்களை மேம்போக்காகப் பார்க்கும்பொழுதே ஒவ்வொரு பாடலும் 'எம்பாவாய்' என்றே முடிந்து நிற்பதை அறியலாம். இத்தொடர் மாதர்கள் மார்கழி மாதத்தில் விடியற்காலையில் நீராடிய பிறகு தமது வழிபாட்டுக்கென ஈர மணலால் அமைத்த தேவியின் உருவத்தைக் குறிப்பதாகும் என்று ஊகித்தற்கு இடமுண்டு. இந்த ஊகம் பொருந்துவதானால் 'பாவை' என்பது பெண் தெய்வத்தின் பிரதிமையைக் குறிப்பதாகும் என்று திரு. மு. இராகவையங்கார் அவர்கள் கருதுவர்.[3] 'நாமும் நம்பாவைக்குச் செய்யும் கிரிசைகள் கேளீரோ' (திருப். 2), 'நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினல்' (திருப். 3), 'பிள்ளைகள் எல்லாரும் பாவைக்களம் புக்கார்' (திருப். 13) என்ற தொடர்களால் தேவியின் உருவம் ஒன்று அமைத்து வணங்கும் வழக்கம் இருந்திருக்க வேண்டும் என்பது அவர்கள் கருத்தாகும். அது சரியான ஊகம் என்றே தோன்றுகின்றது.

இரண்டாவதாக: மார்கழி மாதத்தில் மாதர்கள் வைகறையில் நீராடுவர் என்ற செய்தியைத் திருப்பாவையின் முதற் பாசுரம்,

> "மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
> நீராடப் போதுவீர் ! போதுமினோ, நேரிழையீர் !"

என்று குறிப்படுகின்றது. இதே நீராட்டம் திருவெம்பாவையின் இறுதிப் பாட்டில்,

> "போற்றியாம் உய்யஆட்
> கொண்டருளும் பொன்மலர்கள்
> போற்றியாம் மார்கழி
> நீராடல்;"

என்று குறிப்பிடப்பெற்றிருக்கின்றது. மார்கழி மாதத்தில்

3 மு. இராகவய்யங்கார்—ஆராய்ச்சித்தொகுதி.

கதிரவன் தோன்றுவதற்கு முன்னர் மகளிர் நீராடித் தேவி வழிபாடு செய்து நோற்கும் நோன்பு குறித்துச் சைவர்களால் ஒரு தத்துவம் கூறப்படுகின்றது. அவர்கள் கொள்கைப்படி ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் முடிய இரவும், தை மாதம் முதல் ஆனி மாதம்முடியப் பகலு மாகத் தேவர்களுக்கு ஒரு நாள் ஆகும். சங்கார காலத் திற்கும் படைப்புக் காலத்திற்கும் பிரமாணமாக இந்த ஆறு மாதமும் பிரிந்து நடக்கும். மார்கழி மாதம் உதய காலமாக நின்று படைப்புக்கு ஏதுவாக இருக்கும். இக் காலத்தில் மனோன்மணி முதல் வாமை ஈருகவுள்ள நவ சக்திகளும் ஒருவரை யொருவர் பிரேரிக்க, அசுத்த மாயை காரியப்பட்டு மண் ஈருன பிரபஞ்சங்கள் உண் டாகும். இங்ஙனம் ஒரு சக்தி ஒரு சக்தியை எழுப் புதலே திருவெம்பாவையின் தத்துவக் கருத்து என்பது சைவர்களின் கொள்கையாக இருந்து வருகின்றது.

வைணவர்கள் பகவத்கீதையில் கண்ணன் தன்னை ‘மாதங்களில் மார்கழியா’கக் கூறியிருப்பதைத் தத்துவ மாகக் கொண்டுள்ளனர். ‘சிறந்த பொருள்களிலெல்லாம் சிறந்த பொருள் பரம்பொருளாகிய நானே’ என்று கூறிய கண்ணன் கூற்றை ஆதாரமாகக் கொண்டுதான் வைண வர்கள் மார்கழி மாதத்தைச் சிறப்பாக மதிக்கின்றனர் என்று கருதவேண்டியுள்ளது.

**மூன்றுவதாக:** பாகவதத்தில் தசம ஸ்கந்தம் 21 ஆம் அத்தியாயத்தில் கண்ணன் கோபியரின் துயில் கவர்ந்த வரலாறு கூறப்பெறுகின்றது. அதில் மார்கழி நோன்பு பற்றிய முக்கியமான செய்திகள் வருகின்றன. பெண்கள் மார்கழி மாதத்தில் காத்தியாயனி விரதம் தொடங்கி அத்தேவியின் உருவம் அமைத்து ஒரு மாத காலம் பூசை செய்து வரும் வழக்கம் இருந்து வந்ததாகத் தெரி கின்றது. இவ்விரத காலங்களில் கோகுலத்துப்

பெண்கள் வைகறையில் துயிலெழுந்து கிருஷ்ண சரித் திரங்களைப் பாடிக்கொண்டு நீராடுவர் என்று தெரிகின் றது. இதே கருத்தைத்தான் பெரியவாச்சான் பிள்ளையும் தமது வியாக்கியானத்தின் அவதரரிகையில் குறித்துள் ளார். ஆனால், பாகவதத்திலுள்ள ஆதாரத்தை அவர் குறிக்கவில்லை. திருவெம்பாவையின் பாடல்களை நோக் கும்பொழுது, மார்கழி மாதத்தில் கோகுலத்துப் பெண் கள் ஒருவரை யொருவர் அதிகாலையில் துயிலெழுப்பி நீராடிக் கண்ணனைக் கணவனாக அடைய வேண்டியது போலவே, திருவண்ணாமலையிலுள்ள பெண்கள் ஒருவரை யொருவர் அதிகாலையில் துயிலெழுப்பி நீரா டிச் சிவனடியாரைத் தம் கணவர்களாக அடைய வேண்டும் என்று நோற்பதை உணர்த்துகின்றது. ஆகவே, இரண்டு பிரபந்தங்களும் காத்தியாயனி தேவி யின் விரதத்தை உணர்த்துவதாகவே கொள்ளலாம். பதிமூன்காம் திருவெம்பாவையில்,

> " பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை தன்
> பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்"

என்று பராசக்தியைச் சிறப்பாக வணங்கியுள்ளனர். 'முன்னிக் கடலை' (திருவெம். 16) என்ற பாட்டில் பராசக்தி உவமையாகத் கூறப்பெற்றுள்ளாள். அன்றி யும், திருவெம்பாவையின் தலைப்பில் 'சக்தியை வியந் தது' என்ற குறிப்பும் காணப்பெறுகின்றது. இம் மூன்று காரணங்களாலும் திருவெம்பாவை சக்தியின் நோன் பைத்தான் குறிக்கின்றது என்ற கொள்கை வலியுறுகின் றது என்று திரு. மு. இராகவய்யங்கார் அவர்கள் குறிப் பிடுவர்.

**நான்காவதாக :** இரண்டு பிரபந்தங்களிலும் மகளிர் ஒருவரை யொருவர் துயிலுணர்த்தும் காட்சிகள் கூறப்

4 ஷை ஆராய்ச்சித் தொகுதி.

பெறுகின்றன. இவற்றுள் பல ஒற்றுமையாகவும் இருக்கின்றன. ஒன்றை மட்டிலும் இவ்விடத்தில் நோக்குவோம். கோகுலத்திலுள்ள பெண்கள் கூட்டம் ஒன்று தோழி ஒருத்தியைத் துயிலெழுப்புவதற்காக அவள் வீட்டையடைகின்றது. முதல் நாள் அப்பெண்களிடம் "நாளை நானே வந்து உங்களை எழுப்புவேன்!" என்று கூறினவள் அவள். அவள் இன்னும் எழுந்து கூட்டத்துடன் கலந்துகொள்ளவில்லை. அவள் வீட்டை யடைந்த கூட்டம்,

" எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய்! எழுந்திராய் நாணாதாய்! நாவுடையாய் "
திருப்பாவை-14.

[ நாணாதாய்-வெட்கமில்லாதவளே ]

என்று கூப்பிட்டு அவளை எழுப்புகின்றது. இந்தத் திருப்பாவை அடிகளை,

" மானேநீ நென்னலை நாளைவந்து உங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ"
—திருவெம்பாவை-6

[ நென்னல் - நேற்று ; புலர்ந்தின்றே - பொழுது விடியவில்லையோ ? ]

என்ற திருவெம்பாவை அடிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம். திருவண்ணாமலையிலுள்ள பெண்கள்கூட்டம்ஒன்று, "உங்களை நாளை நானே வந்து துயிலுணர்த்துவேன்!" என்று சொன்ன ஒருத்தியின் வீட்டிற்கு வந்து எழுப்புவதாக அமைந்த காட்சியை இவ்வடிகள் சித்திரிக்கின்றன. இவ்வாறு ஒற்றுமையுடைய செய்திகள் இரண்டிலும் உள்ளன.

**ஐந்தாவதாக :** இரண்டு பிரபந்தங்களும் நோன்பின் பயனைக் கிட்டத்தட்ட ஒரே விதமாகவே குறிக்கின்றன.

நாடுவளங் குன்றியபொழுது மழை பெய்யவும், நல்ல நாயகர்களை அடைந்து இம்மை நலம் எய்தவும், கன்னியர் காத்தியாயனி தேவியைக் குறித்து மார்கழி முழுவதும் நோற்கின்றனர் என்று இரண்டிலும் குறிக்கப்பெற்றுள்ளது. இரண்டிலும் கூறப்படும் மழைப்பாட்டுக்களை நோக்க இது நன்கு வலியுறும். இவ்வுலக நன்மைகளுக்கெல்லாம் மழை இன்றியமையாததால் அம்மழையினை உலகினர் அமிழ்தம் என்று கருதுகின்றனர். இதனை நன்கு உணர்ந்த ஆயச் சிறுமியர் மழைக் கடவுளைக் குறித்து வரம் வேண்டுகின்றனர். "மழையே! மழையே! வா, வா" என்று குழந்தையின் பாணியில் மழையின் அதிதேவதையை வரம் வேண்டுகின்றனர். மழைக் கடவுளை நோக்கி,

" ஆழி மழைக்கண்ணா! ஒன்றும் நீ கைகரவேல்!"

என்று வேண்டுகின்றனர். 'நீ ஒரு வள்ளல் போல் வாரி வழங்க வேண்டும்; ஒன்றையும் கையிருப்பாக வைத்துக் கொள்ளாதே!' என்பது அவர்களின் வேண்டுகோள்.

மழை வருதலைக் குறித்து அவர்கள் மானசிகமாகக் காணும் காட்சி மிக அழகாக உள்ளது; தம்முடைய குறிக்கோளை மிக அழகாக வெளியிடுகின்றனர். மேகங்களின் கருமை மழை வளத்திற்கு அறிகுறியல்லவா? ஆகவே, மழைக் கடவுள் கடலினுள் புகுந்து அங்குள்ள நீரை முகந்துகொண்டு, மிக்க ஆரவாரத்துடன் வானத்தில் தோன்றுவான் என்று எண்ணுகின்றனர். தவிர, மேகத்தின் நிறம் கண்ணனுடைய அருள் வடிவத்துக்கு ஒத்திருக்கின்றதல்லவா? மேகத்தின் கருநிறம் ஊழி முதல்வனுடைய உருவத்தை நினைவுபடுத்துகின்றதாம். மழை பெய்யும்பொழுது கருமேகங்களிடையே 'பளீச், பளீச்' என்று மின்னல் வெட்டு காணப்பெறுகின்றது. அம் மின்னல் அவனுடைய

திருவாழியை நினைவுபடுத்துகின்றதாம். மின்னலுக்குப் பின் கேட்கப்பெறும் இடியோசை அவன் கையிலுள்ள வலபுரிச் சங்கின் நாதத்தை நினைவுபடுத்துகின்றதாம். மழைக்காலத்தில் சில சமயம் வானத்தில் தோன்றும் வானவில், அவனுடைய சார்ங்கம் என்ற வில்லின் அறிகுறியாகத் தோன்றுகின்றதாம். 'சோ' என்று பெய்யும் மழையோ வில்லிலிருந்து வெளிப்படும் அம்பு மாரியை நினைவுக்குக் கொண்டு வருகின்றதாம். ஆகவே, அந்த ஆயச் சிறுமியர்,

" ஆழியுள் புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்து
பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய் !" —திருப்-4.

[ஆழி-கடல்; ஆர்த்து-ஆரவாரம் செய்து; ஊழி முதல்வன்-கடவுள்; மெய்-உடல்; பாழி-வலிமை, பெருமை; அம்-அழகிய ; ஆழி-சக்கரம் ; வலம்புரி-வலமாகச் சுழிந்திருக்கும் சங்கு; அதிர்ந்து-முழங்கி; தாழாதே-தாமதமில்லாமல்; சார்ங்கம்-திருமாலின் வில்.]

என்று மழை வரம் வேண்டுகின்றனர். இவ்வுலகம் செழித்து மக்கள் உய்ய வேண்டும் என்று வைகறையில் நீராடும்பொழுது இவ்வழிபாடு நடைபெறுகின்றது. மழைபெய்து நாடு நலம் செழிக்கவேண்டுமென்று வெளிப்படையாக விரதம் பூண்டவர்கள், கண்ணனுடைய காதலைப் பெற்றுத் தாங்களும் இன்ப நலம் பெற்று வாழ வேண்டும் என்றும் ஆசைப்படுகின்றனர். மழையின்றித் தவிக்கும் நிலபுலங்கள் கண்ணன் அருளின்றித் தவிக்கும் மாதர் இதயங்களை ஒத்திருக்கின்றன.

ஆண்டாள் கோபியரின் கூற்றாக மழை வரம் வேண்டியதைப்போலவே, மணிவாசகப் பெருமானும்

திருவண்ணுமலையில் மார்கழி மாதத்தில் வைகறைப் பொழுதில் நீராடும் பெண்களின் வாய்மொழியாக மழை வரம் வேண்டுகின்ருர்.

“ முன்இக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்துஎம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நம்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே.
என்னப் பொழியாய்!” (திருவெம்-16.)

[முன்-எதிரேயுள்ள; சுருக்கி-வற்றச் செய்து; எழுந்து-மேலே கிளம்பி ; உடையாள்-எம்மையுடைய உமாதேவி ; இட்ட இடை-சிறிய இடுப்பு (இட்ட-குறுகிய); பொலிந்து-பிரகாசித்து; பிராட்டி-தலைவி; சிலம்பின்-சிலம்பைப்போல் ; சிலம்பி-ஒலித்து; குலவி-விளங்கப்பெற்று.]

என்பது அடிகள் அவர்களின் வேண்டுகோள். மழை வரம் வேண்டி நிற்கும் வைணவ பக்தராகிய ஆண்டாளின் மனக் கண்ணுக்கு முன்னே திருமால் உருவம் காட்சியளிப்பதுபோலவே, மழைவரம் வேண்டும் சைவ அடியாராகிய மணிவாசகப் பெருமானின் மனக்கண் முன் ஐயனை விட்டுப் பிரியாத அம்மையின் வடிவம் தோன்றுகின்றது. அன்றியும், பெண் பக்தரின்முன் கடவுளின் வடிவம் ஆண்பாலாகத் தோன்றுவதும், ஆண் பக்தரின் முன் கடவுளின் உருவம் பெண்பாலாகத் தோன்றுவதும் சிந்தித்து மகிழ்வதற்குரிய செய்தியாகும்.

கடலில் நீர் முகந்துகொண்டு வானத்தில் பரவிக் கிடக்கும் கார்மேகத்தின் காட்சி நீலநிறத்தையுடைய அம்மையின் திருமேனியை நினைவு படுத்துகின்றது. மேகங்களுக்கிடையே தோன்றிப் பொலியும் மின் வெட்டு, தேவியின் சிறிய இடையை நினைவூட்டுகின்றது.

மின்னல் தோன்றிச் சற்று நேரத்திற்குப் பிறகு கேட்கப் பெறும் இடிமுழக்கம், பிராட்டியின் திருவடியில் அணிந் துள்ள சிலம்பின் ஒலிபோல் உள்ளது. வானத்தில் காட்சியளிக்கும் வானவில் அம்மையின் திருப்புருவத்தை நினைவுக்குக்கொண்டு வருகின்றது. மேகத்தினின்று பொழியும் மழையோ அடியவர்களிடம் சுரக்கும் ஆண் டவன் அருள்போல் காட்சியளிக்கின்றது.

சமயக் கோட்பாட்டிற்குத் தகுந்தாற்போல் இரண்டு பாட்டுக்களிலும் மாறுபட்ட ஐதிகங்கள் கூறப்பெற்றிருந் தாலும் இரண்டிலும் பொற்சரடுபோல் ஊடுருவி நிற்கும் மழையின் தன்மை, ஆண்டவன் பக்தர்கள்பால் காட்டும் அருள் தன்மை, ஒன்றுதானே ?

**இறுவாய் :** ஆகவே, திருப்பாவை, திருவெம்பாவை ஆகிய இரண்டு பிரபந்தங்களும் சமய வேறுபாடுகளால் சில ஐதிகங்களில் மாறுபட்டாலும் தேவி நோன்பு போன்ற வழிபாட்டிலும், வழிபாட்டின் குறிக்கோள் களிலும் ஒன்றுபட்டே இருக்கின்றன. இந்த இரண்டு இசைத் தமிழ்ச் செல்வங்களும் தமிழ் இலக்கியப் பூங் காவை அழகு செய்துநிற்கும் வாடாத கவிதைப் பூந் துணர்களாக மிளிர்கின்றன. இரண்டிலுமுள்ள பாடல் களில் நகைச்சுவையோடு ஒருவித நாடகத்தன்மையும் ஓசையின்பமும் ஏற்றதொரு முறையில் கலந்து இன்ப மணம் கமழ்கின்றது. அடிக்கடி மழையின்றி எம் மருங்கும் பஞ்சம் தலைவிரித்தாடும் இக்காலத்தில் பண்டைத் தமிழ்ப் பெண்மணிகளைப் போலவே இன்றைத் தமிழ்ப் பெண்மணிகளும் மார்கழியில் பாவை நோன்பு நோற்று மழைவரம் பெற வேண்டியது அவர்களுடைய தலையாய கடமையாகும். தமிழ்நாடு உய்வது பக்தியும் ஆன்ம ஆற்றலும் மிக்க பெண்களின் கையில்தான் உள்ளது. இல்லையா ?

## 7. பண்டைத் தமிழரின் அறிவியல் அறிவு

பன்னெடுங் காலமாகவே தமிழர்கள் நாகரிகத்தில் சிறப்புற்று விளங்கினர் என்பது வரலாற்று அறிஞர்கள் ஒப்புக்கொண்ட உண்மை. அறிவியற்கலைகள் அவர்களிடம் பயன்முறைக் கலைகளாக மிளிர்ந்தன என்பதற்குப் பல்வேறு சான்றுகள் உள்ளன. இன்று மேனாட்டார் 'சயன்ஸ்' என்ற பெயரால் குறிப்பதைத்தான் நாம் அறிவியல் என்று வழங்குகின்றோம். 'சயன்ஸ்' என்ற சொல் 'அறிவு' எனப் பொருள்படும் கிரேக்க சொல்லினின்று தோன்றியது ; மனிதன் வாழும் சூழ்நிலை, சுற்றியுள்ள உலகம், பிற அண்டங்கள் முதலியவற்றின் தன்மைகளைத்தான் அறிவியற்கலைகள் உணர்த்துகின்றன. பண்டைத் தமிழர்கள் இன்றிருப்பதுபோன்ற அறிவியல் துறைகளைத் தனித்தனிக் கலைகளாக வளர்த்து வைத்திருந்தனர் என்பதற்குத் தக்க சான்றுகள் இல்லாது போயினும் அக்கலைகளைப்பற்றி ஓரளவு அறிந்திருந்தனர். அவை அவர்கள் வாழ்வில் பயன்முறை அறிவியல் துறைகளாக (applied sciences) மிளிர்ந்தன என்பதற்குப் பல்வேறு சான்றுகள் உள ; அவற்றுள் இலக்கியச் சான்றும் ஒன்று. இதை ஓரளவு ஆராய்ந்து காண்போம்.

வானியல், கோளியல், உயிரியல், பௌதிகஇயல், பொறியியல் முதலிய பல்வேறு துறைகளிலும் அவர்கள் வல்லுநர்களாகத் திகழ்ந்தனர் என்பதற்குப் பல இலக்கியச் சான்றுகள் உள. என்ன காரணத்தாலோ அவர்கள் இன்றுள்ளதுபோல் அத்துறைகளைத் தனியாக வரையறை செய்து பாதுகாக்கவில்லை. ஒருக்கால் அவ்வாறு வரையறுத்து வைத்திருந்திருக்கவும் கூடும் ;

அவை அழிந்துபட்டனவோ என்னவோ யாம் அறியோம். ஆனால் அவர்கள் அத்துறைகளில் அறிவுடையவராயிருந்தனர் என்பது மட்டிலும் ஒருதலை.

**பண்டைய அறிவியல் அறிஞர்கள் :** உறையூர் முதுக் கண்ணன் சாத்தனார் என்ற புலவர் பண்டையில் அறிவியல் அறிஞர்கள் இருந்தனர் என்பதை,

"செஞ்ஞா யிற்றுச் செலவுமஞ் ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புமச் சூழ்ந்தமண் டிலமும்
வளிதிரிதரு திசையும்
வறிது நிலைஇ காயமும் என்றிவை
சென்றளந் தறிந்தோர் போல என்றும்
இனைத்தென் போரும் உளரே;"[1]

என்று குறிப்பிடுகின்றார். 'செஞ்ஞாயிற்றினது வீதியும் அஞ்ஞாயிற்றினது இயக்கமும், அவ்வியக்கத்தாற் சூழப்பட்ட பார்வட்டமும் காற்றியங்கும் திக்கும் ஓராதாரமுமின்றித் தானே நிற்கின்ற ஆகாயமும் என்று சொல்லப்பட்ட இவற்றை ஆண்டாண்டுப் போய் அளந்தறிந்தவர்களைப்போல நாளும் இத்துணையளவை யுடையனவென்று சொல்லும் கல்வியை யுடையோரும் உளர்' என்ற புலவர் கூற்றில் அத்தகைய அறிஞர்கள் இருந்தமை பெறப்படுகின்றது.

**வானியல் அறிவு :** பண்டையோர் வானியல் துறையில் அறிவுமிக்கு விளங்கினர் என்பதைப் புறநானூறு போன்ற சங்க இலக்கியங்களால் அறியலாம். விண்ணில் மதி செல்லும் வழியாகிய வட்டத்தை இருபத்தேழு பிரிவுகளாகப் பிரித்து அப்பிரிவுகளை அறிந்துகொள்ளும் அடையாளமாக "எறிகடல் ஏழின் மணல் அளவாக"[2]வுள்ள விண்மீன்களில் இருபத்தேழு விண்மீன்களைக் குறித்து அமைத்தனர் பண்டைய அறிஞர்கள். புறம்—160-ல்

1 புறம்-30. 2 திருமந்—2258.

''மதிசேர் நாள் மீன்போல'' எனவரும் அடிக்கு உரையாசிரியர் ''திங்களைச் சேர்ந்த நாளாகிய மீனை ஒப்ப'' எனக் கூறும் உரையாலும் இதனை அறியலாம்.

கோள்களின் இயக்கத்தால் இயற்கை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன என்பதை அவர்கள் நன்கு அறிந்திருந்தனர். வெள்ளி ஒரு மழைக்கோள். அது தெற்கே விலகியிருப்பது மழையில்லாமைக்கு அறிகுறியாகும் என்பதை.

''வெள்ளி தென்புலத் துறைய விளைவயல்
பள்ளம் வாடிய பயனில் காலை''[3]

என்ற மள்ளனூர் பாட்டின் பகுதி சுட்டுகின்றது. இதைப் போலவே வால் வெள்ளி தோன்றுவதும், சனிமீன் புகைவதும் எரிகொள்ளி வீழ்தலும் தீக்குறிகளாகக் கொள்ளப் பெற்றிருந்தன. இவற்றை,

மைம்மீன் புகையினும் தூமம் தோன்றினும்
தென்திசை மருங்கில் வெள்ளி ஓடினும்
வயலகம் நிறையப் புதற்பூ மலர'' [4]

என்ற அடிகளால் அறியலாம்; ''சனி கரியநிறமுடையதாதலின் மைம்மின் என்றார்; சனி புகைதலாவது இடபம், சிங்கம், மீனம் இவற்றோடு மாறுபடுதல்; இவற்றுள் சனி தனக்குப் பகை வீடாகிய சிங்கராசியிற் புகின் உலகிற்குப் பெருந்தீங்கு விளைவிப்பான் என்பதை 'மகத்திற் புக்கதோர் சனியெனக் காணாய்'...(தேவாரம்) என்பவற்றால் உணர்க; (விண்மீன்களுள் மகம், பூரம், உத்திரத்தின் முதற்பாதம் சிங்கராசிக்கு உரியவை); தூமம் புகைக்கொடி என்றும் கூறப்படும்; தூமகேது என்பதும் இதுவே; இது வட்டம், சிலை,

3 புறம்-117. 4 புறம்-388

நுட்பம், தூமம் என்னும் கரந்துறை கோள்கள் நான்கனுள் ஒன்று ; இதன் தோற்றம் உலகிற்குப் பெருந் தீங்கு விளைவிக்கும் என்பர்'' என்ற இவற்றின் உரைப் பகுதி இதனை நன்கு விளக்குகின்றது.

> " மிகவானுள் எரி தோன்றினும்
> குளமீனொடுந் தாட்புகையினும்''[5]

என்ற அடிகளும் "எரி, குளமீன், தாள் என்பன வான் மீன் விசேடங்கள் ; இவை முறையே தோன்றுதலும் புகைதலும் உலக வறுமைக்கு ஏதுக்கள்'' என்ற அவற்றின் உரைப் பகுதியும் உணர்த்துகின்றன. இக் கருத்துக்களையே இளங்கோ அடிகள் காவிரியின் சிறப்பைக் கூறுமிடத்து,

> " கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும்
> விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்''[6]

என்று குறிப்பிடுகின்றார்.

சங்கப் புலவர்களில் ஒரு சிலர் கணியர்களாகவும் இருந்தனர். கூடலூர்கிழார் என்ற புலவர் ஒரு கணி. அவர் வானத்தில் ஒரு விண்மீன் தீப்பரக்கக் காற்றால் பிதிர்ந்து கிளர்ந்து வீழ்ந்தது கண்டார். அம் மீன் விழுந் ததனால் அரசனுக்குக் கேடுவரும் என அஞ்சினார். அஞ் சினபடியே ஏழாம்நாள் கோச்சேரமான் யானைகட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை விண்ணோடு புக்கான். இதனை அவர் புறம் 229இல் குறிப்பிடுகின்றார்.

> " ஆடியல் அழற்குட்டத்து
> ஆரிருள் அரையிரவின்
> முடப்பனையத்து வேர் முதலாக்
> கடைக்குளத்துக் கயங்காயப்

---

5 புறம்—395

6 சிலப்—நாடுகாண்—வரி 102—103

பங்குனிஉயர் அழுவத்துத்
தலைநாள்மீன் நிலைதிரிய
நிலைநாள்மீன் அதனெதிர் ஏர்தரத்
தொன்னாள்மீன் துறைபடியப்
பாசிச் செல்லாது ஊசி முன்னாது
அளக்கரத்திணை விளக்காகக்
கனையெரி பரப்பக் காலெதிர்பு பொங்கி
ஒருமீன் விழுந்தன்றால் விசும்பின்னே.'' ²

என்ற அப்பாட்டின் முதற்பகுதியையும் அதன் உரைப் பகுதியையும் ஆராய்வதால் பல வானநூற் கருத்துக்கள் புலனாகின்றன.

ஆடு என்பது மேடராசி; அழற்குட்டம் என்பது கார்த்திகை நாள். அக்கினியை அதிதேவதையாகவுடைமையின் கார்த்திகைக்கு அழல் என்பது பெயராயிற்று. அசுவதி, பரணி என்ற இரண்டு விண்மீன்களும் கார்த்திகையின் முதற்காலும் மேடராசிக்குரியன. பங்குனி மாதத்தில் கார்த்திகை நட்சத்திரம் உள்ள தினம் பூர்வ ஷஷ்டி அல்லது சப்தமி என்பது கணிதநூல் துணிபு; அத்தினத்தின் பாதி இரவு நிறைந்த இருள் சூழ்ந்திருக்கும். அனுடம் ஆறு மீன்களின் தொகுதி; அது வளைந்த பனைபோல் இருக்கும். கடைக்குளத்துக் கயம் என்பது குளம்போன்ற வடிவுடைய புனர்பூசம். பங்குனி மாதத்தில் தலைநாள் மீன் உத்தரம்; நிலைநாள் மீன் என்பது உத்தரத்தின் பின் எட்டாகிய மூலம்; தொன்னாள் மீன் என்பது உத்தரத்தின் முன் எட்டாகிய மிருகசீரிடம். உத்தரம் உச்சியிலிருந்து சாய, மூலம் எழ, மிருகசீரிடம் மறைய ஒருமீன் வடக்கும் கிழக்கும் போகாமல் இடைநடுவே தீப்பரக்க விழுந்தது. பங்குனி மாதத்தில் நட்சத்திரம் வீழின் இராசபீடை என்பர் சோதிடநூலார். "ஆடுகயல் தேள் தனுச்சிங்கத் தெழுமீன் விழுமேல் அரசழிவாம்'' என்பது சோதிடநூற் கூற்றாகும்.

வெட்டவெளியும் அதனுள் அடங்கியிருக்கும் அண்டங்கள் யாவும் சேர்ந்ததுதான் இப்பிரபஞ்சம். கோடிக் கணக்கான மீன் மண்டலங்களும், அவற்றினின்று விடுபட்ட தனித்தனி மண்டலங்களும், வால் மீன்களும் எரி மீன்களும் எண்ணற்றவை சுழன்று கொண்டிருக்கின்றன. இவற்றின் பிறப்பு, மூப்பு, சாக்காடு இவைபற்றிய செய்திகளை இன்றைய வானநூல் அறிஞர்கள் வெளியிட்டுள்ளனர். மணிவாசகப் பெருமான் இப்பிரபஞ்சத்தைப் பற்றி,

“ அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன;”[7]

என்று கூறுகின்றார். பேராசிரியர் ஐன்ஸ்டைன் பிரபஞ்சத்தின் வெளி வளைந்துள்ளது என்றும், அது விரிந்துகொண்டே போகின்றது என்றும் கூறுகின்றார். ஓர் இரப்பர் பலூனின்மேல் பல புள்ளிகளை வரைந்து அப்பலூனை ஊதினால் அது பெரிதாக ஆக ஆக, அப்புள்ளிகளின் இடையிட்ட தூரமும் அகன்றுவிடுகின்றது. இதைப்போல வெளியும் மீன்மண்டலங்களை ஏந்திக் கொண்டு அகன்றுகொண்டே போகின்றது என்பது இன்றைய அறிவியலார் கண்ட முடிபு. மேற்கூறியவை போன்ற பல வானியற் கருத்துக்களைப் பண்டைத் தமிழ் இலக்கியங்களில் காணலாம்.

**பொறியியல் :** பண்டைத் தமிழர்கள் பொறியியலிலும் வல்லுநர்களாக இருந்திருக்கவேண்டும் என்று ஊகிக்க இடம் உண்டு. சிந்தாமணியில் வரும் மயிற்பொறியும், பெருங்கதையில் யூகியால் செய்விக்கப்பெறும் இயந்திர யானையும், இராமாயணத்தில் வரும் புட்பக விமானமும் இயந்திர அறிவினால் அமைக்கப்பெற்ற சாதனங்கள்

7 திருவாசகம் : திருவண்டப் பகுதி வரி—(1—4.)

என்று கருதலாம். இன்று வளர்ந்துள்ள அளவு அன்றைய அறிவு இருந்ததா என்பதை எடுத்துக்காட்டற்குரிய சான்றுகள் ஒன்றும் கிடைக்கவில்லை. இலக்கியங்களில் காணும் குறிப்புக்களால் ஊகிக்கலாமேயன்றி அறுதி யிட்டு உரைக்க இயலாது.

**உயிரியல் :** இன்று உயிரியல் துறையில் டார்வின் போன்ற அறிஞர்களால் குறிப்பிடப்பெறுவது கூர்தல் அறம் (Doctrine of Evolution) என்பது. இதுபற்றி அறி வியல் அறிஞர்களிடையே மாறுபட்ட கருத்துக்கள் இல்லாமல் இல்லை. இத்தகைய கொள்கை போன்றதொரு கருத்தினை,

" புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்"[8]

என்று மணிவாசகப் பெருமானும் கூறியுள்ளார்.

**பௌதிக இயல் :** பௌதிக இயல்பற்றிய ஒரு சில கருத்துக்களையும் இலக்கியங்களில் காணலாம். மேலே செல்லச் செல்லக் காற்று இலேசாயிருக்கும் என்பது பௌதிக உண்மை. இதைக் கம்பன் மிக சமத்காரமாகக் கூறுகின்றான். இலங்கையிலுள்ள மாளிகைகள் தேவர் உலகை எட்டும்படியான நிலையில் உள்ளன. மேருவையும் வருத்தக்கூடிய வாயு அந்த உயரமான இடங்களில் தென்றலாய் வீசுகின்றதாம்.

8 திருவாசகம் : சிவபுராணம்—வரி (26-31).

"நாகா லயங்களொடு நாகர்உல குந்தம்
பாகார் மருங்குதுயில் என்னஉயர் பண்ப ;
ஆகாயம் அஞ்ச அகன் மேருவை அனுக்கும்
மாகால் வழங்குசிறு தென்றல்வர நின்று."[9]

என்பது கம்பன் வாக்கு,

கதிரவன் மகரரேகைக்குத் தெற்கே செல்லுவதில்லை. என்பது மிக சமத்காரமாகக் கூறப்பட்டுள்ளது. இலங்கை மகரரேகைக்குத் தெற்கே நெடுந் தொலைவில் இருப்பதால் அங்கு சூரிய ஒளி படுவதில்லை. இதைக் கம்பன்,

"முன்னம் யாவரும் இராவணன்
முனியுமென் றெண்ணிப்
பொன்னின் மாநகர் மீச்செலான்
கதிரெனப் புகல்வார்
கன்னி யாரையின் ஒளியினிற்
கண்வழுக் குறுதல்
உன்னி நாடொறும் விலங்கினன்
போதலை உணரார்."[10]

என்று கூறுகிறான். 'கதிரவன் இராவணனது ஆணைக்கு அஞ்சி இலங்கை நகரத்துக்கு மேலே தன் வெப்பக் கதிர்களை வீசுவதில்லை என்று கூறுவது தவறு; இலங்கை மதிலின் ஒளியினால் கண் கூசுவதால் அவன் விலகிச்செல்லுகிறான்' என்பது இதன் கருத்து.

நாம் இந்த இரண்டையும் கற்பனையாகவே கொள்ள வேண்டும். சூரியன் மகரரேகைக்குத் தெற்கே செல்வதில்லை என்ற உண்மையைத்தான் கவிஞன் இங்ஙனம் மாற்றி சுவைதரும்படி கூறுகின்றான் என்று கொள்ள வேண்டும்.

---

9 கம்ப—சுந்தர-ஊர்தேடு-2.
10 கம்ப—சுந்தர—ஊர்தேடு-21.

மேகநீர் மிகவும் வெப்பமாக இருக்கும் என்பது பௌதிக நூலார் கண்ட உண்மை; கிட்டத்தட்ட 100°c-க்கு குறையாது அதன் வெப்பம் இருக்கலாம். இரணியனுடைய சுகானுபவத்தைக் கம்பன்,

"கொண்டல் கொண்டநீர் குளிர்ப்பில
என்றவன் குளியான்" [11]

என்று கூறுகின்றான். மேகநீர் மிகவும் சூடாயிருப்பதால் அதில் அவன் நீராடமாட்டான் என்பது குறிப்பு. வேறு சில இடங்களில் நீராடான் என்று கூறி இதையும் குறிப்பிடுகின்றான் கவிஞன்.

**மருத்துவ இயல்:** பண்டை இலக்கியங்களில் மருத்துவ இயல்பற்றிய செய்திகளையும், சிகிச்சை முறைகளையும் காணலாம். திருக்குறளிலுள்ள 'மருந்து' என்னும் அதிகாரத்தில் நோய் வருவதன் காரணங்களை யும், அது வராது தடுக்கும் முறைகளையும், வந்தால் தீர்க்கும் வழியையும் பற்றிய பல்வேறு செய்திகள் தரப் பெறுகின்றன.

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்." [12]

என்பது வள்ளுவரின் மருத்துவ முறை. நோய் வருவதன் காரணத்தையும் நோய் இன்னதென்பதையும் ஐயமறத் துணிந்து மருந்து செய்தல், உதிரங்களைதல், அறுத்தல், சுடுதல் முதலிய முறைகளை மேற்கொண்டு அந் நோயைப் போக்கவேண்டும் என்பது பண்டைய மருத்துவ முறையாகும். இன்றைய மருத்துவ முறையும் அதுதான். இன்னும் சில முறைகளைக் காண்போம்.

கண் முதலிய நுட்பமான பகுதிகளில் இரும்புத் தூள் முதலியவை புகுந்து கொண்டால் காந்தத்தைக் கொண்டு இக்காலத்தில் சிகிச்சை செய்கின்றனர்.

11 கம்ப—யுத்த—இரணியவதை-4 12 குறள்—948

பண்டையோரும் இம்முறையை அறிந்திருந்தனர் என்பதைக் கம்பன் காட்டுகின்றான். இராவண வதம் முடிந்த பிறகு தயரதன் உம்பருலகத்திலிருந்து பூமிக்கு வந்து இராமனுடன் உரையாடும்பொழுது தன் மகிழ்ச்சியை இவ்வாறு தெரிவிக்கின்றான் :

"அன்று கேகயன் மகள்கொண்ட
வரமெனும் அயில்வேல்
இன்று காறுமென் இதயத்தின்
இடைநின்ற தென்னைக்
கொன்று நீங்கல திப்பொழு
தகன்றதுன் குலப்பூண்
மன்றல் ஆகமாங் காந்தமா
மணியின்று வாங்க."[13]

அன்று கைகேயி தன் இதயத்தில் பாய்ச்சின வரமெனும் அயில்வேல், இன்று இராமனைத் தழுவியதனால், அவன் மார்பாகிய காந்தம் அதனை வாங்கிவிட்டது என்று கூறுவதில் நவீன சிகிச்சை முறையின் குறிப்பைக் காண்க.

கருவுயிர்த்த மங்கையர் குழந்தையை நீராட்டி மருந்தூட்டி வளர்க்கும் திறம் நம் சிந்தாமணியில் காட்டப் பெறுகின்றது.

"காடி யாட்டித் தராய்ச்சாறும்
கன்னல் மணியும் நறுநெய்யும்
கூடச் செம்பொன் கொளத்தேய்த்துக்
கொண்டு நாளும் வாயுறீஇப்
பாடற் கினியப் பகுவாயும்
கண்ணும் பெருக உகிர்உறுத்தித்
தேடித் தீந்தேன் திப்பிலிதேய்த்(து)
அண்ணா உரிஞ்சி மூக்குயர்த்தார்."[14]

---

13 கம்பரா—யுத்தகா—மீட்சி—118

14 சிந்தாமணி—2703

[காடி-கஞ்சி ; தராய்ச்சாறு-பிரமிச்சாறு ; கன்னல்மணி-கருப்புக்கட்டி ; வாயுறீஇ-வாயில் உறுத்தி ; பெருக-பெரிதாகும்படி ; உகிர் உறுத்தி-நகத்தால் அகலமாகும்படிசெய்து ; அண்ணு-உள் நாக்கு.]

இப் பாடலில் குறிப்பிடப்பெறும் செய்திகளை எண்ணி எண்ணி உணர்க. நவீன மருத்துவர்களும் அறியாத எவ்வளவு செய்திகள் இதில் காட்டப்பெறுகின்றன.

அறிவியல் செய்திகள் யாவும் மனத்தைப் பற்றியவை ; இலக்கியச் செய்திகள் யாவும் உணர்வை அடிப்படையாகக் கொண்டவை. அறிவியல்பற்றிய தனி நூல்கள் தோன்றியிருந்து அவை நமக்குக் கிடைக்குமாயின் பல்வேறு நுட்பமான அறிவியல் துறைபற்றிய செய்திகளை நாம் அறிந்துகொள்ளலாம். அத்தகைய நூல்கள் நமக்கு இதுகாறும் கிடைக்கவில்லை. உணர்வை அடிப்படையாகக் கொண்ட இலக்கிய நூல்களில் அறிவு பற்றிய செய்திகளை அதிகமாக நுழைத்தற்கு வாய்ப்பு எங்ஙனம் இருத்தல் முடியும்? எனவே, மேற்காட்டிய ஒருசில சான்றுகளைக் கொண்டு பண்டைத் தமிழர்களின் அறிவியல் அறிவை ஒருவாறு ஊகித்து உணர்ந்து கொள்வதே இன்றைய தமிழர்களின் கடமையாகும்.

## 8. தமிழுடன் ஆங்கில உறவு

உலகத்தின் பல பாகங்களிலுமுள்ள மக்கள் பல்வேறு மொழிகளைப் பேசி வருகின்றனர். மக்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளுவதற்குச் சிறந்த கருவியாக இருப்பது மொழியாகும். இயற்கையிலேயே மனிதன் கலந்து வாழும் பிராணி யாதலால் அவனிடம் வேறு பிராணிகளிடமில்லாத மொழி தோன்றி வளர்ந்து பண்பட்டு இருக்கும் ஒரு சிறந்த சாதனமாகும். இன்றைய நிலையில், மக்கள் நெருங்கி உறவுகொண்டு வாழும் நேரத்தில், மொழி கலப்பு ஏற்படுவது, ஒரு மொழி பிற மொழிகளுடன் உறவு கொள்ளுவது, மிகவும் இன்றியமையாதது என்பது நாம் அறிந்து கொள்ளவேண்டும். தமிழ் ஆங்கிலத்துடன் ஏன் உறவு கொள்ளவேண்டும்? எத்தகைய உறவு கொள்ளவேண்டும்? எந்த அளவுக்கு உறவு கொள்ளவேண்டும்? அங்ஙனம் உறவு கொள்வதால் தமிழ் மொழிக்கு ஏற்படும் ஆக்கங்கள் யாவை? கேடுகள் யாவை? இவை போன்ற செய்திகளை ஈண்டு ஆராய்வதே நமது நோக்கமாகும்.

உலகின் எல்லாப் பகுதிகளிலும் அறிஞர்கள் தோன்றிப் பல துறைகளில் பல செய்திகளைக் கண்டறிந்து அவரவர் மொழிகளில் நூல்களாக எழுதி வைத்து விட்டுப் போயுள்ளனர்; உயிருடன் இருப்போர் எழுதி வெளியிட்டுக்கொண்டு மிருக்கின்றனர். இப்புதிய செய்திகளை யெல்லாம் தமிழில் கொண்டு வரவேண்டுமானால் தமிழ் பிற மொழிகளுடன் உறவு கொண்டால்தான் முடியும். இங்ஙனம் தமிழ் மொழியின் புது வாழ்வியக்கத்திற்கும் அறிவியல் வளர்ச்சிக்கும் புதிய இலக்கியப் பெருக்கிற்கும் மொழி

களின் கலப்புத் தேவை என்பதை எவரும் மறுக்க முடியாது. ஆனால், தமிழ் வளரும் புதிய புதிய துறைகளில் எல்லாம் தமிழின் உயிர் நாடி பேச வேண்டும்; சங்க இலக்கியங்களில் கொலுவிருக்கும் அரசிளங் குமரியின் அதிகார முத்திரை பெறவேண்டும்; அதாவது தமிழ் தமிழாக வளர வேண்டும். இவ்வாறு தமிழ்மொழியில் கருத்துச் செல்வம் பெருகி வரும்பொழுது புதிய புதிய சொற் செல்வங்களும் பெருகும்; வேற்று மொழிகளின் சொற்கள் தமிழில் வந்து கலக்கும். அவற்றையெல்லாம் தமிழின் நீர்மைக்கேற்றவாறு செப்பனிட்டு நமதாக்கிக் கொள்ளவேண்டும்; செப்பனிட வேண்டாத இடங்களில் அப்படியே ஏற்றுக்கொள்வதிலும் தவறு ஒன்றும் இல்லை. ஏற்றுக் கொள்வதில் எவ்விதத் தயக்கமும் கூடாது.

தமிழ் ஓர் உயர் தனிச் செம்மொழி என்பது பல அறிஞர்களும் ஒப்புக்கொண்ட மறுக்க முடியாத உண்மையாகும். இன்று தமிழிலுள்ள பிற மொழிச் சொற்களையெல்லாம் நீக்கிவிட்டாலும் அது தனித்து இயங்கும் ஆற்றல் வாய்ந்த மொழி என்பதை டாக்டர் கால்டுவெல் போன்ற மேனாட்டு அறிஞர்களும் ஒப்புக் கொண்டுள்ளனர். ஒரு மொழி தனித்து இயங்கினால் மட்டிலும் போதுமா? போதாது. அங்ஙனம் தனித்து இயங்கினாலும் எல்லாத் துறைகளிலுமுள்ள கருத்துக் களைத் தெளிவாகவும் எளிதாகவும் எடுத்து விளக்க முடியும் என்று உறுதியாகச் சொல்ல முடியாது. எடுத்துக்காட்டாகச் சங்க காலத்திற்கு முன்பிருந்தே வடமொழிச்சொற்கள் தமிழில் கலந்து வந்துள்ளன. அதனால் தமிழ் மொழி பெற்றுள்ள செல்வந்தான் எவ்வளவு? சொற் செல்வம் ஒரு புற மிருந்தாலும் கருத்துச் செல்வந்தான் கொஞ்சமா? இதனால் தமிழில் சொற்களுக்கும் கருத்துக்களுக்கும் பஞ்சம் உள்ளது

என்று தவருக எண்ணி விடுதல் கூடாது. ஒருவரிடம் அதிகமான செல்வமிருப்பினும், மேலும் செல்வம் வந்து சேரும்பொழுது, 'வேண்டாம்'! என்று சொல்வரா? தமிழில் என்னதான் இருந்தாலும் புதிதாக, புதிய துறைகளில் எல்லாம், சொற் செல்வமும் கருத்துச் செல்வமும் வந்து சேரும்பொழுது வளர விரும்பும் எந்த உண்மைத் தமிழனும் 'வேண்டாம்!' என்று சொல்லமாட்டான். இன்று தமிழில் உள்ள வடசொற்களை யெல்லாம் நீக்கி விட்டால் சமய சம்பந்தமான கருத்துக்களும் தத்துவ சம்பந்தமான கருத்துக்களும் மறைந்துவிடும் என்றுதான் சொல்லவேண்டும். வட சொற்களையெல்லாம் நீக்கி விட்டுச் சமயக் கருத்துக்களையும் தத்துவக் கருத்துக்களையும் தெளிவாக எடுத்துச் சொல்லவே முடியாது. ஏன்? மருத்துவம், ஒளிநூல், கணிதம், சிற்பம், கட்டிடக்கலை முதலிய பல்வேறு துறைகளிலும் நாம் ஏழைகளாகப் போய்விடுவோம். ஆனல் ஒரு செய்தி; ஏற்கெனவே தமிழில் இருக்கும் சொற்களுக்கெல்லாம் வேண்டுமென்றே பிறமொழிச் சொற்களை வலிந்து புகுத்துவதைத் தவிர்த்தல் வேண்டும்.

இன்று, உலகம் பல துறைகளிலும் விரைவாக முன்னேறிக்கொண்டிருக்கும் நேரத்தில், தமிழுக்கு ஆங்கில மொழியின் உறவு மிகவும் இன்றியமையாதது என்று கூறினல் அதில் உண்மை இருக்கத்தான் செய்கின்றது. ஏன்? அதற்குப் பல காரணங்கள் உள.

இன்று ஆங்கிலம் உலகப்பொது மொழியாக வழங்கி வருகின்றது. அமெரிக்கா, ஆஸ்திரேலியா கண்டங்களில் அது பொதுமொழி என்ற நிலையையும் பெற்று உள்ளது. உலகிலுள்ள அறிஞர்களில் பெரும் பாலாரும் ஆங்கில மொழியை அறிந்துள்ளனர். உலகிலுள்ள எல்லாப் பகுதிகளிலும் இம்மொழி வழங்கி வருகின்றது. உலகில் இம்

மொழி வழங்காத நாகரிக நாடுகளே இல்லை என்றுகூடக் கூறிவிடலாம் ; அவ்வளவு தூரம் இம்மொழி ஆட்சி பெற்றுள்ளது. ஆகவே, உலகில் எந்தப் புதிய உண்மைகள் தோன்றினலும் அஃது ஆங்கில மொழியில் உடனே வெளி வந்துவிடும் என்பதற்கு ஐயம் இல்லை. தமிழ் மொழி ஆங்கில மொழியின் உறவைப் பெற்றுல், இப்புதிய கருத்துக்களையும் புதிய உண்மைகளையும் தனது நூல்களில் ஏற்றுக்கொள்ளமுடியும். இம்மாதிரியாக உண்மைகளைப் புதிதாகப் பெறும்பொழுது சொற் செல்வமும் பெருகத்தான் செய்யும். வேறு நாடுகளிலிருந்து கலைச் செல்வமும், அறிவியற் செல்வமும் வந்து சேரும்பொழுது சொற்செல்வமும் வந்து சேர்ந்து வீட்டுக் கருவூலத்தை நிரப்பத்தான் செய்யும்.

உலகின் பல இடங்களில் பல மொழிகளிலும் தோன்றியுள்ள நூல்கள் யாவும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பெற்றுள்ளன. அக் கருத்துக்களை யெல்லாம் தமிழர்கள் அறிந்துகொள்ள வேண்டுமானல், அம்மொழிகளை யெல்லாம் கற்றுக் காலத்தை யெல்லாம் மொழிகளைக் கற்றலிலேயே போக்காது ஆங்கில மொழி ஒன்றைமட்டிலும் கற்று அச்செல்வங்களையெல்லாம் தமிழ்மொழியில் பெயர்த்தும் தழுவியும் எழுதித் தமிழ் மொழியை வளப் படுத்தவும் முடியும். இச்செய்கையால் பல ஆங்கிலச் சொற்கள் தமிழ்மொழியில் வந்து கலக்க நேரிடும்.

தமிழில் அறிவியல், மருத்துவம், பொறியியல், வானநூல், கணிதம் போன்ற துறைகளில் அதிகமான நூல்களே இல்லை. அத்துறைகளில் தமிழர் அதிகமாக வளரவில்லை. பண்டைத் தமிழர் இத் துறைகளில் பெரும்புகழ் பெற்றிருந்தனர் என்பதற்குச் சான்றுகள் கிடைக்கின்றன. ஆனல், இத் துறைகளைக் கலைகள்

என்ற நிலைக்கு ஒரு திட்டமாக ஒழுங்குபடுத்தி நூல்களாக எழுதி வைக்கவில்லை என்று உறுதியாகச் சொல்லி விடலாம். இன்று ஆங்கிலத்தில் இத்துறைகள் யாவும் வியத்தகு முறையில் வளர்ச்சியடைந்துள்ளன. பௌதிகம் வேதியியல், நில இயல், உயிரியல், தாவர இயல், பொறியியல், வானநூல், கணிதம் ஆகியவற்றில் ஏராளமான நூல்கள் வெளிவந்துள்ளன. அவைகளை யெல்லாம் தமிழர் அறிந்துகொள்ள வேண்டாமா? அந்நூல்கள் எல்லாம் தமிழில் மொழிபெயர்க்கப்படுதல் வேண்டும் என்பதை எவராவது மறுப்பார்களா? அந்நூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பெறும்பொழுது புதிய கலைச் சொற்கள் தமிழில் உண்டாகவேண்டாமா? இன்றியமையாத இடங்களில் ஆங்கிலச் சொற்களை அப்படியே ஏற்றுக்கொள்ளத்தானே வேண்டும்? தமிழின் நீர்மைக் கேற்றவாறு ஒலி வடிவு கொடுத்து ஏற்றுக்கொண்டால் அதனுல் என்ன குறை நேர்ந்துவிடும்? இவை போன்றவற்றை யெல்லாம் நன்கு சிந்திக்கவேண்டும்.

ஆங்கிலேயர்கள் நமது நாட்டிற்கு வந்த பிறகுதான் ஆங்கிலத்தின் உறவு தமிழுக்குக் கிடைத்தது. ஆங்கிலத்தின் உறவைத் தமிழ் பெற்ற பிறகு அது பல துறைகளிலும் வளமடைந்துள்ளது என்பதை எவர்தான் மறுக்க முடியும்?

**முதலாவது:** தமிழ் ஆங்கிலமொழித் தொடர்பைப் பெறுவதற்கு முன்பு தமிழில் உரைநடை நூல்களே இல்லை. சிலப்பதிகாரம் போன்ற உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் நூல்களிலும், இறையனுர் அகப்பொருள் உரையிலும், நச்சினுர்க்கினியர், பரிமேலழகர், அடியார்க்கு நல்லார் போன்ற உரையாசிரியர்கள் எழுதியுள்ள உரை நூல்களிலும், ஆங்காங்கு அத்தி பூத்தமாதிரி காணப்படும் உரைநடைகளைத் தவிர வேறு தனி உரைநடை

நூல்களே தமிழில் இல்லை. ஆங்கில மொழியிலோ உரை நடைச் செல்வம் ஏராளமாக வளர்ந்துள்ளது. அம்மாதிரி தமிழ் மொழியில் உரை நடை நூல்கள் தோன்றாத வரையில் பாமரத் தமிழ் மக்கள் தக்க கல்வியறிவு பெற முடியாது. இத்துறையில் ஏற்பட்டிருக்கும் இத்தகைய உரை நடை நூல்கள் சிலவும் ஆங்கில மொழியின் உறவு ஏற்பட்ட பிறகுதான் தோன்றியுள்ளன. சமயத் தொண்டு புரிவ தற்கு நமது நாட்டிற்கு வந்த கிறித்தவப் பாதிரிமார்கள்-தாம் இத்துறையில் முதன் முதலாகத் தொண்டாற்றத் தொடங்கினர். இந்த விழுமிய தொண்டினைத் தொடங்கி வைத்தவர் வீரமாமுனிவர் என்று வழங்கப்பெறும் ரெவரெண்ட் பெஸ்கி என்ற இத்தாலி நாட்டுப் பாதிரி யாவார்.

ஆங்கில மொழியின் உறவால் தமிழுக்கு ஏற்பட் டிருக்கும் இரண்டாவது நன்மை புதினம் (Novel) என்ற துறையிலாகும். ஆங்கில மொழியில் சிறந்த புதினங்கள் ஏராளமாகத் தோன்றியுள்ளன. 17-ஆம் நூற்றாண்டு தொடங்கியே இக்கலை மேனாட்டில் அரும்பி வியத்தகு முறையில் வளர்ந்து வருகின்றது. இன்று மேனாடுகளில் புதினம் ஒரு சிறந்த கலை என்ற நிலையை யடைந்து விட்டது என்றுகூடக் கூறலாம். தமிழில் இத்துறை இப் போதுதான் தோன்றி வளர்கின்றது என்று சொல்ல வேண்டும். மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்களால் எழுதப்பெற்ற 'பிரதாப முதலியார் சரித்திரம்,' பி.ஆர். ராஜமையர் எழுதிய 'கமலாம்பாள் சரித்திரம்' ஆகியவை தமிழில் முதன் முதலாகத் தோன்றிய புதினங்கள். அவற் றிற்குப் பிறகு தமிழில் எத்தனையோ புதினங்கள் தோன்றிக் கொண்டிருக்கின்றன. இவை யெல்லாம் ஆங்கில மொழி பயின்ற அறிஞர்கள் தமிழுக்குச் செய்த தொண்டால் ஏற்பட்டவையாகும். ஆங்கில மொழியில்

தோன்றியுள்ளமாதிரி புதினங்கள் தமிழில் தோன்ருவிட்டாலும், புதினக் கலை வளரவேண்டும் என்ற ஆர்வம் தமிழ் மக்களிடம் நன்ருக ஏற்பட்டுள்ளது என்பதற்கு ஐயம் இல்லை. இத்துறையில் தமிழில் அதிக நூல்கள் தோன்றுவதற்குத் தமிழ்த்தாய் ஆங்கிலத்தாயை எதிர் நோக்கி யுள்ளாள் என்று சொல்லுவதில் எவ்வித மறுப்பும் இருத்தல் முடியாது.

இதற்கு அடுத்த நிலையில் வைத்து எண்ணக்கூடிய மூன்ருவது நன்மை, சிறுகதை வளர்ச்சியிலாகும். ஏதோ கதைகள் என்ற பெயருக்கேற்றவாறு, விக்கிரமாதித்தன் கதை, நளமகாராஜன் கதை என்பனபோன்ற கதைகள் தமிழில் இருந்தனவேயன்றி இன்று மேல்நாட்டு இலக்கிய வகைகளில் ஒன்ருகக் கதைகள் வளர்ந்துள்ள மாதிரி தமிழில் பண்டைக் காலத்தில் இல்லை என்று துணிவாகச் சொல்லிவிடலாம். சிறுகதையில் கதைப்போக்கு சுருக்கமாகத்தான் இருக்கும். கதையில் வரும் மாந்தர்களும் ஒரு சிலராகத்தான் இருப்பர். ஆனல், அவர்களுடைய உணர்ச்சியையும் பாவத்தையும் நுட்பமான நாடகச் சுவையுடன் தோற்றுவிக்கும் சிறு காட்சிகள் அடங்கின சித்திரம்தான் சிறுகதையாக வளர்ந்துள்ளது என்பதை நாம் உணரவேண்டும். படிப்போர் மனத்தில் கதையுடன் ஒருமைப்படக்கூடிய உணர்ச்சியும் எழுந்தால்தான் அஃது உயர்ந்த கதைச் சித்திரமாக வைத்து எண்ணப்படும். இத்தகைய பண்புகளைக் கொண்ட கதைகள் இன்று தமிழில் நாடோறும் ஏராளமாகத் தோன்றிக் கொண்டு வருகின்றன. இத்துறையில் முதன் முதலில் வ. வெ. சு. ஐயர் இட்ட வித்து நன்கு முளைத்து, புதுமைப்பித்தன் போன்ற ஆசிரியர்களால் வளர்க்கப்பட்டு, இன்று பல ஆசிரியர்களால் தரம் குறையாது பாதுகாக்கப்பெற்று வருகின்றது. ஆங்கில மொழித் தொடர்பால்

தான் தமிழில் சிறுகதை இலக்கியம் தோன்றி வளர்ந்தது என்று சொல்லுவதில் எவ்வித மறுப்பும் இருத்தல் முடியாது.

**நான்காவது :** இன்று ஆங்கிலத்தில் Literary Criticism என்று வழங்கி வருவதைத் தமிழில் 'இலக்கியத் திறனாய்வு' என்ற தொடரால் குறிக்கலாம். 'இத்துறை ஆங்கிலத்தில் ஒரு இமயமலைபோல் வளர்ந்துள்ளது. அம்மொழியில் தோன்றும் நூல்களுக்கெல்லாம் திறனாய்வு நூல்களும் தோன்றியுள்ளன. எடுத்துக்காட்டாக செகப்பிரியரின் நூல்களுக்கெல்லாம் திறனாய்வு நூல்கள் பல உள்ளன. அவரது மூல நூல்களின் எண்ணிக்கையைவிடத் திறனாய்வு நூல்களின் தொகையே அதிகமுள்ளது என்று கூறப்படுகின்றது. இன்று ஆங்கில மொழியில் ஏராளமான திறனாய்வு நூல்கள் உள்ளன. திறனாய்வு எங்ஙனம் செய்யப்பெறல் வேண்டும் என்பதற்குக் கூடத்'திறனாய்வு விதிகள்' (Principles of Literary Criticism) என்ற இலக்கண நூல்களும் பல தோன்றியுள்ளன. இந்த முறையில் பார்த்தால் தமிழ் மொழியில் இன்னும் இத்துறை சரியான தொடக்கம் பெறவில்லை என்றுதான் சொல்லவேண்டும். இலக்கிய நயங்காணல், பா நயங்காணல் என்ற போக்கில் மட்டிலும் நச்சினார்க்கினியர், பரிமேலழகர், அடியார்க்கு நல்லார் போன்ற உரையாசிரியர்களின் உரைகளில் இத்துறையின் மணம் காணப்படுகின்றது என்றாலும், தொல்காப்பியத்திலுள்ள மெய்ப்பாட்டியல், உவமை இயல் ஆகிய பகுதிகள் ஓரளவு இத்துறையைத்தான் குறிக்கின்றன என்று சொன்னாலும், இன்று மேனாட்டு இலக்கியங்களில் ஒரு கலை என்று சொல்லும் அளவுக்கு வளர்ந்த மாதிரி தமிழில் திறனாய்வு பண்டைக் காலத்தில் தோன்றவில்லை. இன்று ஆங்கிலக் கல்வி பெற்ற

அறிஞர் சிலரால் சில நூல்கள் தமிழுக்குக் கிடைத்துள் ளன என்றாலும், இத்துறையில் தமிழர்கள் வளர்ச்சி பெற் றனர்கள் என்று சொல்லுவதற்கில்லை. தமிழிலுள்ள ஒவ்வொரு நூலுக்கும் திறனாய்வு நூல்கள் தோன்ற வேண்டும். இதற்கு ஆங்கில மொழியின் உறவு இருந் தால்தான் நல்ல பயன் காணமுடியும்.

**ஐந்தாவது :** ஆங்கில மொழியின் உறவால் தமிழ் அடைந்திருக்கும் நன்மை மொழித்துறையிலும் உள்ளது. மொழிகளைக் குடும்பங்களாகப் பிரித்து ஒவ்வொரு குடும் பத்திலுமுள்ள மொழிகளையும், 'ஒப்பு நோக்கு முறை' என்ற முறையில் ஆராயும் மனப்பான்மை ஆங்கில மொழி அறிவால் விளைந்தது என்றுதான் சொல்லவேண் டும். மேனாட்டிலேயே 18-ஆம் நூற்றாண்டில் பிறந்த இத்துறை சென்ற நூற்றாண்டில் தமிழ் மொழியில் தோன்றிவிட்டது. டாக்டர் கால்டுவெல் என்ற அறிஞர் முப்பத்தேழு ஆண்டுகள் தமிழைக் கற்று, டாக்டர் குண்டர்ட் என்பார் மலையாள மொழியில் செய்துள்ள ஆராய்ச்சிகளையும், கிட்டல் என்ற அறிஞர் கன்னட மொழியில் ஆராய்ந்தவைகளையும், சி. பி. பிரௌன் என்ற பெரியார் தெலுங்கு மொழியில் கொண்ட முடிவு களையும் கொண்டு பதினைந்து ஆண்டுகள் இத்துறையில் அல்லும் பகலும் ஓயாது உழைத்து, 'திராவிட மொழி இனம் என்ற ஒரு மொழியினம் இருப்பதை உலகத்திற்கு உணர்த்தினார். அதற்கு முன்னர் இத்துறையில் உழைத்த மாக்ஸ் முல்லர் போன்ற மொழிநூல் வல்லுநர் தமிழ் முதலிய திராவிட மொழிகளை ஆரிய மொழி இனத்தில் வைத்தே எண்ணலாயினர். தமது ஆராய்ச்சி யின் முடிவுகளை யெல்லாம் தொகுத்து டாக்டர் கால்டு வெல் அவர்கள் கி. பி. 1856-ல் "திராவிட மொழியின் ஒப்பிலக்கணம்" என்ற அரியதோர் நூலை வெளியிட்டார்.

சிறிது திருத்தங்களுடன் அதன் இரண்டாவது பதிப்பை 1875-ல் அவரே வெளியிட்டார். அவருக்குப் பிறகு அத்துறையில் அறிஞர் ஒருவரும் தீவிரமாகக் கவனம் செலுத்தவில்லை. செலுத்தியுள்ள ஒரு சிலரும் ஒரு சில பகுதிகளை மட்டிலும் ஆராய்ந்து கட்டுரைகள் எழுதியிருக்கின்றனரேயன்றி முழுநூல் வடிவில் யாருமே வெளியிடவில்லை. இத்துறையில் ஆரிய மொழிகளைப் பற்றியும், இந்தோ — ஐரோப்பிய மொழிகளைப் பற்றியும் பல நூல்கள் வெளிவந்துள்ளன. அவை யாவும் ஆங்கிலத்திலும் வெளியாகியுள்ளன. இத்துறையிலும் தமிழன் ஒரு சிறந்த வளர்ச்சியைக் காண வேண்டுமானால் ஆங்கில மொழியின் உறவு இன்றியமையாததாகும்.

**ஆறுவது :** ஆங்கில மொழியின் உறவு தமிழுக்கு ஏற்பட்ட பிறகே தமிழில் அகராதி நூல்கள் தோன்றின. வீரமாமுனிவர் என்ற இத்தாலியப் பாதிரியார்தான் அகராதியை முதன் முதலாகத் தமிழுக்குத் தந்தார். அதற்கு முன்னர் எல்லாம் தமிழர்கள் சொற்களஞ்சியத்தை 'நிகண்டுகள்' என்ற பெயர்கொண்ட பாவடிவுள்ள நூல்களாகவே தொகுத்து வைத்திருந்தனர். வீரமாமுனிவரின் அகராதியை ஒரு சிறந்த அகராதி என்று சொல்ல முடியாவிட்டாலும், அதன் பிறகு வெளிவந்த அகராதி நூல்கள் யாவும் அதனை அடிப்படையாகக் கொண்டே வெளிவந்தன என்று கூறலாம். இன்றுள்ள அகராதி நூல்கள் யாவற்றிலும் சிறந்தது சென்னைப் பல்கலைக் கழகத்தார் வெளியிட்டுள்ள தமிழ் லெக்ஸிகன் ஆகும். இன்று ஆங்கில மொழியில் அகராதித்துறை சிறந்த முறையில் வளர்ந்துள்ளது. இலக்கியம், அறிவியல், வானநூல், கணிதம், மருத்துவம், பொறியியல் முதலிய ஒவ்வொரு துறையிலுமுள்ள கலைச் சொற்களுக்கும் தனித்தனி அகராதிகள் தோன்றி

யுள்ளன. அறிவியலிலும் பௌதிகம், வேதியியல், தாவரஇயல், நில இயல், உயிரியல் முதலிய ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனியாக அகராதிகள் வெளிவந்துள்ளன. ஒவ்வொரு துறையிலும் பல அகராதி நூல்களைப் பல அறிஞர்கள் பதிப்பித்துள்ளனர். இம் மாதிரியான நூல்கள் தமிழில் தோன்றவேண்டும். தோன்றுவதற்கு ஆங்கில மொழியின் உறவு மிகவும் அவசியம் என்று சொல்லத் தேவையில்லை.

ஏழாவது: தமிழில் இன்று திரு. தி. சு. அவிநாசிலிங்கம் அவர்கள் கலைக் களஞ்சியம் பணியைத் தொடங்கி வைத்துள்ளார். ஆங்கிலத்தில் 'என்சைக்ளோபிடியா' என்று வழங்கும் இத்துறை தமிழில் வெற்றியடைய வேண்டுமானால் ஆங்கிலத்தின் தொடர்பு மிகவும் அவசியமாகும். ஆங்கிலத்தில் எத்தனைக் கலைக் களஞ்சியங்கள் உள்ளன? அகராதிகளைப் போலவே ஒவ்வொரு துறைக்கும் கலைக் களஞ்சியம் உள்ளது. ஆங்கில மொழியில் உள்ள அத்தனை உண்மைகளும் சுருக்கமான முறையில் தமிழில் வரவேண்டுமல்லவா? அதற்கு ஆங்கிலத்தோடு பல கலைகளையும் பயின்ற எத்தனை அறிஞர்களின் உழைப்பு எத்தனை யாண்டுகளுக்கு வேண்டியிருக்கும்? தமிழுக்கு ஆங்கில மொழியின் உறவு மட்டிலும் இல்லாவிட்டால் தமிழில் 'கலைக் களஞ்சியம்' வருதல் என்பது குதிரைக் கொம்பாகும் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆகவே, எந்தக் கோணத்தில் பார்த்தாலும் தமிழுக்கு ஆங்கிலத்தின் உறவு மிகமிக அவசியம் என்பது உறுதிப்படுகின்றது. தமிழ் சிறந்த முறையில் வளர வேண்டுமானால் நாம் என்ன செய்ய வேண்டும்? பாரதியாரைக் கேட்போம்:

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்." [1]

என்றல்லவோ மகாகவி கூறுகின்றார்? இவ்வாறு தமிழைச் சிறந்த முறையில் வளர்த்துத் தேமதுரத் தமிழோசையை உலகமெல்லாம் செழிக்கச் செய்வதற்குத் தமிழுக்கு ஆங்கிலத்தின் உறவு மிகவும் அவசியம் என்பதற்கு என்ன தடை?

1 பாரதியார் கவிதைகள் — 22. தமிழ் — 3.

## 9. திராவிட மொழிநூலின் வரலாறு

மொழி நூல் நமது நாட்டுக்குப் புதிது. சொற்கள், சொல்லாக்க முறைகள், இலக்கண அமைதி முதலியவற்றைப் பற்றிப் பல மொழிகளிலுள்ள தொடர்பை ஆராயும் கலையை அறிஞர்கள் மொழிநூல் என்று குறிப்பர். இக்கலை மேனாட்டிலே 18-ஆம் நூற்றாண்டில் தான் தொடங்கிற்று. ஐரோப்பாவில் ஆரிய மொழிகளைப் பற்றியே அறிஞர்கள் அதிகமாக ஆராய்ந்தனர். செருமானிய நாட்டு அறிஞர்கள்தாம் இத்துறையில் அதிகமாகக் கவனம் செலுத்தினர்; கிரிம் (Grimm) பாப் (Bopp) போன்ற அறிஞர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவ்வறிஞர்கள் பல மொழிகளைக் கற்று அவற்றின் இலக்கணங்களைத் தமது மொழிகளில் எழுதி வெளியிட்டனர். இனமொழிகளை யெல்லாம் ஒப்பிட்டு அவற்றைப் பல குடும்பங்களாகவும் வகுத்துக் காட்டினர். இவ்வாறு எழுதப்பெற்ற நூல்களையெல்லாம் கற்றுப் புலமையடைந்த மாக்ஸ் முல்லர் என்ற அறிஞர் சென்ற நூற்றாண்டில் உலகமொழிகளில் பெரும்பாலானவற்றை ஆராய்ந்துத் தமது மதி நுட்பத்தால் ஒப்பியல் மொழி நூலை (Comparative Philology) உருவாக்கினார். ஆனால் இவ்வறிஞர் திராவிட மொழிகளைச் சரியாக ஆராயவில்லை ; திராவிட மொழிகள் வட மொழியின் கிளைகள் என்ற தவறான முடிவுக்கும் வந்துவிட்டார். ஆகவே, திராவிட மொழிகள் ஒரு தனிக் குடும்பத்தைச் சார்ந்தவை என்ற உண்மையை மக்கள் அறிய முடியாது போயிற்று. ஆனால், சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் இவ்வுண்மையை மக்கள் அறிந்தனர் ; அறிஞர்கள் இவ்வுண்மையைப் பாராட்டினர். கால்டுவெல் என்ற

பேரறிஞர் திராவிட மொழிகள் வடமொழிச் சார்பற்றவை என்று பல சான்றுகளால் எடுத்துக் காட்டிய தோடன்றி அவை ஒரு தனிக் குடும்பத்தைச் சார்ந்தவையென்றும் பல சான்றுகளால் மெய்ப்பித்தார். தமது கருத்துக்களை யெல்லாம் தொகுத்து "திராவிட மொழிகளின் ஒப்பிலக் கணம்" (A Comparative Grammar of Dravidian Languages) என்ற ஆங்கில நூலாக, கி. பி. 1856-ல் வெளியிட்டார். இதுதான் முதன்முதலாகத் தோன்றிய "திராவிட மொழி நூலின் தந்தை" என்று அறிஞர் உலகம் இன்று பராட்டுகின்றது.

கால்டுவெல் தமது இருபதாவது வயதில் இலண் டன்மா நகரிலிருந்த சமயத் தொண்டர் சங்கத்தில் உறுப்பினராகி அதன் சார்பில் கிளாஸ்கோ பல்கலைக் கழகத்தில் சேர்ந்து கிரேக்க மொழி, இலத்தின் மொழி முதலிய ஐரோப்பியத்தொன் மொழிகளிலமைந்த சமய நூல்களையும் நீதி நூல்களையும் கற்க நேரிடும்பொழுது அவரிடம் மொழி நூல் பற்றிய பல கருத்துக்கள் ஆழ்ந்து அமைந்தன. அங்கு கிரேக்க மொழி பயிற்றிய பேராசிரியர் சர் டேனியல் சேண்ட்ஃபோர்டு என்பார் கிரேக்க மொழியின் அருமை பெருமைகளை யெல்லாம் பிற உயர் தனிச் செம் மொழிகளுடன் ஒப்புமைப் படுத்திக் காட்டிய திறமை இவர் உள்ளத்தைக் கவர்ந்தது; ஆகவே, அத்துறையில் இவர் கவனம் சென்றது. எனவே, பிற்காலத்தில் "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்ற நூல் தோன்றுவதற்கு இன்றி யமையாத மொழி நூல் முறையை எடுத்துரைத்தும் அத்துறையில் ஆர்வத்தை எழுப்பியும் அடி கோலிய பெருமை அப்பேராசிரியருக்கே உரியதாகும். இலண்டன்மாநகரத் தொண்டர் சங்கம் இந்தியாவில் சமயத் தொண்டாற்றக் கால்டுவெலைத் தேர்ந்தெடுத்து

அவரை இந்தியாவிற்கு அனுப்பிற்று. அக்காலத்தில் மரக் கலத்தில் இந்தியாவிற்கு வந்து சேர நான்கு மாதம் செல்லும். இவ்வளவு நீண்ட காலத்தைக் கால்டுவெல் வீணுகக் கழிக்க விரும்பவில்லை. கலைச் சுவை தேடும் கற்ருரைக் காணக் கலமெங்குந் துருவி சி. பி. பிரௌன் என்ற அறிஞரைக் கண்டார். அவர் ஆந்திர நாட்டில் பல்லாண்டு அரசாங்க அலுவல் பார்த்த பெரியார்; வட மொழியிலும் தெலுங்கு மொழியிலும் அவர் நல்ல அறிவு பெற்றிருந்தார். அவ்வறிஞரிடம் கால்டுவெல் அவ்விரு மொழிகளைக் கற்றதுமன்றி நாடோறும் உரையாடித் தென்ணுட்டு மக்களைப்பற்றிப் பல விவரங்களையும் அறிந்து கொண்டார். கால்டுவெல் சென்னையில் மூன் ருண்டுகள் தங்கியிருந்தபொழுது தமிழறிவு பெற்றிருந்த துரு (Drew) உவின்சுலோ (Winslow) ஆண்டர்சன் (Anderson) போப், பவர் முதலியோரின் நட்பைப் பெற்ருர்; இதனுல் இவரது தமிழார்வம் மிகுந்தது. துரு என்பவரிடம் முறையாகத் தமிழ்ப் பயின்ருர்; அம் மொழியில் நல்ல புலமையையும் அடைந்தார்.

கால்டுவெல் இந்தியாவுக்கு வந்த காலத்தில் இந்தி யாவில் பேசப்படும் மொழிகள் அனைத்தும் ஆரிய இனத்தைச் சார்ந்தவையே என்று ஐரோப்பிய மொழி நூலறிஞர் கருதியிருந்தனர். நேப்பாள நாட்டில் நீண்ட காலம் உயர் அலுவலராக இருந்த டாக்டர் ஹாட்சன் (Dr. Hodgson) என்பார் மத்திய இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் வழங்கி வரும் மொழிகளிலமைந்த சொற்களைத் தொகுத்தும் வகுத்தும் ஆராய்ந்து ஆங்கிலப் பருவ இதழ்களில் வெளியிட்டார். அவற்றை ஊன்றிக் கற்ற மேனுட்டு அறிஞர்கள் ஆரிய இனத்தைச் சேராத மொழிகளும் இந்திய நாட்டில் உள்ளன என்ற உண்மையை அறிந்தனர். பம்பாய் நகரில் பல்லாண்டு

உயர்தர நீதிமன்றத் தலைவராக இருந்த 'பெரி' என்ற பெரியார் இமயம் முதல் குமரிவரை வழங்கும் மொழிகளை யெல்லாம் ஆராய்ந்து தாம் கண்ட உண்மைகளைக் கட்டுரை வாயிலாக வெளிப்படுத்தினர்; வட நாட்டில் வழங்கும் மொழிகள் ஆரிய இனத்தைச் சேர்ந்தவை என்றும், தென்னாட்டில் வழங்கும் மொழிகள் தமிழ் வகுப்பைச் சேர்ந்தவை என்றும் தமது கொள்கையை வெளியிட்டார். இக்கொள்கை பல மேனாட்டு அறிஞர் களின் கருத்தைக் கவர்ந்தது.

இஃதிவ்வாருக, தென்னாட்டில் பல துறைகளிலும் பணியாற்றிய ஐரோப்பிய அறிஞர்கள் தென்னாட்டில் வழங்கிய மொழிகளில் தமது ஆராய்ச்சியைச் செலுத் தினர். டாக்டர் குண்டர்ட் (Dr. Gundert) என்பார் கேரள நாட்டில் வழங்கும் மலையாள மொழியைச் செவ்வனே கற்று "வட மொழியில் திராவிடக் கூறுகள்' (Dravidian Elements in Sanskrit) என்ற ஆராய்ச்சிக் கட்டுரையை கி. பி. 1869-ஆம் ஆண்டில் செருமானி யக் கீழ் நாட்டுக் கலைக் கழகத்தின் இதழில் (The Journal of the German Oriental-Society) வெளியிட்டார். பின்னர் டாக்டர் கிட்டல் (Dr. Kittel) என்ற அறிஞர் கருநாடக நாட்டில் வழங்கும் கன்னட மொழியை முட்டறுத்துணர்ந்து கி. பி. 1872-ஆம் ஆண்டில் "வட மொழி அகராதிகளில் திராவிடச் சொற்கள்" என்ற கட்டுரையை வெளியிட்டார். தாம் எழுதிய கன்னட அகராதியிலும் வடமொழி கடன் வாங்கின சொற்கள் என 420 சொற்களை வகைப்படுத்திக் காட்டினர். ஆந்திர நாட்டில் அலுவல் பார்த்த சி. பி. பிரௌன் என்ற அறிஞர் தெலுங்கு மொழியினைத் துருவி ஆராய்ந்து, தமது கருத்துக்களைக் கட்டுரைகளாக வெளிப்படுத்தினர். நீலகிரியில் வாழும் தோடர் மொழிச்

சொற்களைப் போப்பையர் திரட்டி வெளியிட்டார். இந்த நிலையில்தான் கால்டுவெல் தென்னாட்டிற்கு வந்து தமிழ் மொழியிலுள்ள நூல்களை முறையாகக் கற்றார். மொழியாராய்ச்சியில் முன்னணியில் நின்ற செருமானிய அறிஞர் எழுதியுள்ள நூல்களை யெல்லாம் அறிவதற்காக செருமானிய மொழியையும் கற்றார். ஏற்கெனவே அறிஞர்கள் வெளியிட்டிருந்த கருத்துக்களையும் தாம் பெற்ற தமிழ் அறிவையும் கொண்டு தமது நுண்ணறிவால் திராவிட மொழிநூல் ஒன்று வரைவதற்கான திட்டம் இவர் உள்ளத்தே உருக்கொள்ளலாயிற்று.

பழந்தமிழ்ச் சொற்களைப் பழங்கன்னடச் (ஹளகன்னடம்) சொற்களோடும் ஆதித் தெலுங்குச் சொற்களோடும் கால்டுவெல் ஒப்பிட்டுநோக்கியபொழுது நூற்றுக்கணக்கான இயற்சொற்களின் வேர்கள் (roots) மும்மொழிகளிலும் ஒன்று பட்டிருப்பது தெரிந்தது. மேனாட்டு மொழி நூல்களிற் கண்ட தெள்ளிய ஆராய்ச்சி முறைகளைத் துணைக்கொண்டு, தென்னிந்திய மொழிகளைத் துருவி ஆராய்ந்தார். இத்துறையில் பதினைந்து ஆண்டுகள் அல்லும் பகலும் ஓயாது உழைத்தார். அவ்வாராய்ச்சியின் பயனாகத் திராவிட மொழிகளின் இலக்கணக் கூறுகளும் சொல்லாக்க முறைகளும் அடிப்படையான ஒற்றுமையுடன் விளங்கக் கண்டார். தமது ஆராய்ச்சியில் கண்ட முடிவுகளைத் தொகுத்து கி. பி. 1856-ஆம் ஆண்டில் "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்ற அரியதொரு நூலாக வெளியிட்டார். 1875-ஆம் ஆண்டில் இதன் இரண்டாம் பதிப்பைக் கால்டுவெலே திருத்தம் செய்து வெளியிட்டார். முதற் பதிப்புக்குப் பிறகு தாம் கண்ட உண்மைகளைச் சேர்த்தும் முதற்பதிப்பில் ஆராய்ச்சிக் குறைவால் ஏற்பட்ட சில தவறான முடிவுகளைத் திருத்தம் செய்தும், இரண்டாம் பதிப்பு

வெளி வந்தது. கால்டுவெல்லின் மருகர் ஜே. எல். வயட் பாதிரியார் (Rev. J. L. Wyatt) கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப்பேராசிரியராக இருந்தபொழுது இந் நூலை மேலும் திருத்தம் செய்து வெளியிட உதவி புரிந் தார் ; 1913-ஆம் ஆண்டில் இதன் மூன்றும் பதிப்பு வெளி வந்தது. அதற்குப் பிறகு இந்நூல் வெளி வரவே இல்லை ; இன்று பிரதிகளும் எங்கும் அகப்படவில்லை.[1] திராவிட மொழிகளை ஆராய்வோருக்கு இந்நூல் ஒரு சிறந்த துணையாகவும், வழிகாட்டியாகவும் இருக்கும் என்பதற்கு எள்ளளவும் ஐயமில்லை.

திராவிட மொழிக் குடும்பத்தில் பன்னிரண்டு மொழிகள் உள்ளன என்று கால்டுவெல் விளக்கிப் போந்தார். அவற்றுள் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம், குடகு ஆகிய ஆறு மொழிகளும் திருந்தியவை ; நீலகிரியில் வாழும் தோடர் பேசும் **துதம்** மொழியும், அதே மலையில் உறையும் கோதர்கள் பேசும் **கோதம்** மொழியும், நடு இந்தியாவில் குன்றுகளி லும் காடுகளிலும் வதியும் கோண்டர் பேசும் **கோண்டு** மொழியும், கோண்டவனத்தின் கிழக்குப் பக்கத்திலும் ஒட்டர நாட்டின் (Orissa) குன்றுகளிலும் வாழும் மக்கள் பேசும் **கந்தம்** அல்லது கு மொழியும், வங்க நாட்டைச் சார்ந்த இராசமாமலையில் வாழும் மாலர்கள் பேசும் **இராஜ்மஹால்** மொழியும், சூடிய நாகபுரியிலும், அதைச் சுற்றிலும் வாழும் மக்கள் பேசும் **ஒராவோன்** மொழியும் திருந்தாத திராவிட மொழிகளாகும். இந்திய நாட்டின் வடமேற்கு எல்லையிலமைந்த பெலுச்சிஸ்தா னத்தில் வழங்கும் பிராஹுயி மொழியும் திராவிடக் குடும்பத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. தென்னாட்டு மொழி

---

1 இப்பதிப்பு இன்று சென்னைப் பல்கலைக் கழகத்தின ரால் திரும்பவும் அச்சிடப் பெற்றுள்ளது.

களுள் மலையாளம் நெடுங்காலம் தமிழொடு நெருங்கிய தொடர்புடையதாயிருந்த தென்றும், பிற்காலத்தில் வட மொழிச் சொற்களையும் போக்குகளையும் தழுவியதால் தற்கால மலையாளம் முற்கால மலையாளத்தினின்று வேறு பட்டிருக்கிறதென்றும், கால்டுவெல் தக்க சான்று களுடன் நிறுவியுள்ளார். இங்ஙனமே தெலுங்கும் கன்னடமும் வடமொழிச் சொற்களை அளவின்றி ஏற்றுக் கொண்டமையால், அம்மொழியின் உதவியின்றித் தனித்தியங்க முடியாத நிலையை அடைந்து விட்டன என்றும் குறித்துள்ளார். தமிழ்ப் புலவர்கள் தொன்று தொட்டு இயன்றவரை இயற்றமிழ்ச் சொற்களையே நூல் களில் போற்றியமைத்தமையானும் இன்றியமையாத இடங்களில் வழங்கும் பொழுது அவற்றைத் தமிழின் நீர்மைக் கேற்றவாறு மாற்றி வழங்கி வந்தமையானும், தமிழ் மொழி இன்றளவும் பண்டைத்திறம் குன்றாது வளர்கின்றதென்றும், தமிழில் இன்று வழங்கும் வட சொற்களைக் களைந்துவிடினும் தமிழ் தனித்தியங்கும் ஆற்றல் வாய்ந்த தென்றும் தெளிவாக்கியுள்ளார். இன்னும் இந்நூலில் திராவிடக் குடும்பத்தில் தொன் மையும் செம்மையும் வாய்ந்து விளங்கும் மொழி தமிழ் மொழியென்றும், ஆசிய நாடுகளில் வழங்கும் சித்திய குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளுக்கும் நெருங்கிய ஒற்றுமை காணப்படுவதால், அவ்விருவகை மொழிகளும் ஓரினத்தைச் சேர்ந்தவை என்றும் விளக்கியுள்ளார். இரண்டாவது கொள்கையை நிலைநாட்டுவதற்குரிய சான்றுகளை இந்நூலில் எம்மருங்கும் காணலாம்.

கால்டுவெல் காட்டிய வழியைக் கடைப் பிடித்து பிளீக் (Bleek) என்பார் 'தென் ஆப்பிரிக்க மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்ற நூலையும், பீம்ஸ் (Beames) என்பார் வட இந்திய பேச்சு மொழிகளை (Vernaculars) ஆராய்ந்து, 'இந்தியாவின் நவீன ஆரிய மொழிகளின்

ஒப்பிலக்கணம்' என்ற நூலையும் வெளியிட்டுள்ளனர். மூன்றாவது பெரிய குடும்பமாக இலங்கும் கோலாரிய மொழியினத்தை ஆராய்ந்து இன்னும் நூல் ஒன்று வெளி வந்ததாகத் தெரியவில்லை. கிளாஸ்கோ பல்கலைக் கழகத்தில் "கிரேக்க மொழி பயிற்றிய பேராசிரியர் இளங் கால்டுவெல்லின் உள்ளத்தில் ஊன்றிய மொழி நூல் வித்து முளைத்தெழுந்து, துரு வார்த்த நன்னீரால் தளிர்த் தோங்கி வளர்ந்து, திராவிடக் கிளைகளில் விரைந்து படர்ந்து, ஒப்பிலக்கணம் என்னும் செழுங்கனி பயப்ப தாயிற்று."[2] இக்காலத்து மொழி நூலறிஞர்கள் சித்திய குடும்பத்தனவாகக் கருதப்படும் துருக்கியம், மங்கோலியம், துங்கேசியம், ஃபினீயம் முதலிய மொழிகளின் இலக்கண அமைதிகள் நன்முக ஆராயப்படும் அளவும், அவற்றின் மொழித்திறன் குறித்து முடிந்த முடிபாக ஒன்றுங் கூறுவதற்கில்லை என்று கருதுகின்றனர். டாக்டர் கிரியர்சன் என்பார் திராவிட மொழிகளை உலகிலுள்ள எவ்வகை மொழிகளோடும் இணைப்பதற்கு ஒப்பவில்லை.

கிட்டத்தட்ட 600 பக்கங்கள் கொண்ட கால்டு வெல்லின் ஒப்பிலக்கண நூல் பல மொழி நூலறிஞர் களின் கண்களைத் திறந்தது. திராவிட மொழிகளில் சிறப்பாகத் தமிழ் மொழியின் தொன்மை, திராவிட மக்களின் சிறப்பு போன்ற உண்மைகள் அறிஞர் உலகத் திற்குப் பரவின. பிறநாட்டு நல்லறிஞர்கள் தமிழின் சிறப்பை உள்ளவாறு உணர்ந்தனர். அரியதோர் ஆராய்ச்சி நூலை வெளியிட்ட கால்டுவெல்லைப் பாராட்டி கிளாஸ்கோ பல்கலைக் கழகத்தார் டாக்டர் (LL. D. என்ற பட்டத்தையும் வழங்கினர்.

---

2 ரா. பி. சேதுப்பிள்ளை: கால்டுவெல் அய்யர் சரித்திரம் பக்கம் 49.

தென்னிந்திய மொழிகளைக் குறித்தற்குத் 'திராவிடம்' என்ற குறியீட்டைக் கையாண்டதன் காரணத்தை நூலின் முற்பகுதியில் விளக்குகின்றார் கால்டு வெல். கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் விளங்கிய வடமொழி வாணர் குமாரில்ல பட் என்பார் தென்னிந்திய மொழியினத்தைக் குறித்தற்கு "ஆந்திர-திராவிட பாஷா" என்ற தொடரை எடுத்தாண்டதாலும், மனு ஸ்மிருதியில் பத்தாவது பிரிவில் 'திராவிடர்' என்ற மக்கட் பிரிவு இருப்பதாலும், இந்தியப் பெரு மூதாதையரில் ஒருவரான சத்திய விரதரைக் குறிக்குமிடத்துப் பாகவத புராணம் 'திராவிட மன்னர்' என்று குறிப்பதாலும் ஸ்மிருதி காலத்திற்குப் பிறகு வந்த மொழியாராய்ச்சியாளர்கள் 'திராவிடம்' என்ற சொல்லைத் தென்னாட்டு மொழியினத்தைக் குறித்தற்கு எடுத்தாண்டிருத்தலாலும், தாமும் திராவிடம் என்ற சொல்லை எடுத்தாண்டிருப்பதாகக் கால்டுவெல் கூறுகின்றார்.

இம் மொழிநூல் துறையில் ஆராய்ச்சி செய்வதற்கு எவ்வளவோ இடம் உள்ளது. மேனாட்டுக் கல்வி கற்று எம். ஏ. முதலிய பட்டங்களைப் பெற்ற அறிஞர்கள் இத் துறையில் அதிகக் கவனம் செலுத்தவில்லை. கடந்த ஐம்பதாண்டுகட்கு மேல் சென்னைப் பல்கலைக் கழகத்தாரால் நடத்தப்பெறும் பி. ஏ., எம். ஏ., தேர்வுகளுக்கு மொழிநூல் பாடப் பகுதியாக இருந்தும் வருகின்றது; பலர் பட்டமும் பெற்றுக்கொண்டுதான் வருகின்றனர். பெரும்பாலோர் இப்பகுதியைச் சரியாகப் படிப்பதும் இல்லை. கற்பிப்பவர்கள் கற்பிப்பதுடனும் கற்பவர்கள் கற்பதுடனும் நின்று விடுகின்றனர். டாக்டர் கால்டு வெல் அவர்கள், இத்துறையில் ஆராய்ச்சி செய்யும் மனப் பான்மையைத் தமிழையும் பிற திராவிட மொழிகளையும் அழுத்தமாகக் கற்ற அறிஞர்களிடம் உண்டாக்கிவிட்டால் இத்துறை விரைவில் வளர்ச்சியடையும் என்ற

"பேராசை" கொண்டிருந்தார். தமிழ்ப் புலவர்களின் கல்வி ஆழத்தில் செல்லுகின்றதே யன்றி அகலத்தில் செல்லவில்லை; 'மொழிகளின் இனம்' என்ற கருத்தையே பெரும்பாலோர் புரிந்து கொள்வதில்லை; புரிந்து கொள்ளவும் முயற்சி செய்வதில்லை. மொழிகளை ஒப்பிட்டுப் பார்க்கும் மனப்பான்மையே இராதிருக்கும் பொழுது அவர்களது ஆராய்ச்சி அறிவியல் முறையில் இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது அதிகமே. அழுத்தமான மொழியறிவு பெற்ற தமிழ்ப் புலவர்கள் இத்துறையில் கவனம் செலுத்துவார்களாயின், தனியாக ஒரு மொழியின் இலக்கணத்தைக் கற்றலால் பெறும் பயனை விட அதிகமான பயனையே அடையலாம்; அடையமுடியும். இலக்கணச் சூத்திரங்களை மனப்பாடம் செய்வதுடன் அவரது அறிவு நின்றுவிடாது, மொழிகளின் உண்மையான நோக்கங்களும் பயன்களும் யாவை என்று அறிவதிலும் அவரது கவனம் செல்லுவதற்கு ஏதுவாகவிருக்கும்; ஒவ்வொரு மொழிக்கும் தனி வரலாறு ஒன்று உண்டு என்பதையும்,[3] இம்மொழி வரலாற்றால் எல்லா வரலாறுகளையும் தெரிந்து கொள்ளமுடியும் என்பதையும் அறிந்து கொள்ள முடியும். மொழிகளையும் அவற்றின் இலக்கணங்களையும் ஒப்பிட்டுக் கற்றால், அவர்களது மனப்பான்மை விரிவடையும் என்றும், மக்கள் மனத்

---

3 Were all history lost save that of the language of the world, past and present, the history of the man can be rewritten in broad outline from philological history. For example, the "loan-word" which Jesperson likens unto the mile stones of the history—not only of linguistic but of general history, give some indication of the mental influence of nation upon nation By them we may learn when and in what respect the history of a people was influenced by another and by whom the influence was exorted." James B. Stroud ; Psychology in Education (page 178)

-தைக் கவரும் பல்வேறு பொருள்களில் அவர் கவனம் இழுக்கப்பெறும் என்றும் அறிவர். திறனாய்ந்து கற்கும் மனப்பான்மை, ஆராய்ச்சி செய்யவேண்டும் என்ற அவா, உண்மை காணவேண்டும் என்ற உணர்ச்சி முதலிய பண்புகளும் அவர்களிடம் உண்டாகும். பல தொடரட்டுக்களுடனும் சந்தியுடனும் எழுதும் உரை நடைகளை விட்டு தெளிவான தீந்தமிழ் நடையைக் கையாண்டு திராவிட மொழிகளில் உரை நடை வளத்தைப் பெருக்குவதற்குரிய வாய்ப்புக்கள் எல்லாம் உண்டாக வழிகள் தோன்றும். ஐரோப்பிய அறிஞர்கள் இத்துறையில் கவனம் செலுத்தி வருதல் போலவே, ஒவ்வொரு மாவட்டத்தில் உள்ள புலவர்களும் கவனம் செலுத்தினுல் இதுகாறும் மொழிநூல் அறிஞர்களின் மனத்தைக் குழப்பிவரும் பல பொருள்கள் தெளிவாகும்.

ஆங்கில அறிவு பெற்ற தமிழ்ப் புலவர்களும் மொழித்திறம் பெற்ற தமிழ்ப் புலவர்களும் இத்துறையில் கவனம் செலுத்த வேண்டும்; அதற்கு முன்னர் திராவிட மொழிகளின் இலக்கணங்களை நன்குகப் பயின்று, தமிழ் மொழியில் 'மொழி நூல்' சம்பந்தமான ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் நூல்களையும் எழுதவேண்டும். டாக்டர் மு. வரதராசனுர் 'மொழிநூல்' ஒன்று வெளியிட்டு இருப்பது போல பல நூல்களையும் பலர் வெளியிடுதல்வேண்டும். அம்மாதிரியான நூல்களை மொழி நூற்கலையை ஆராய்வோர் படித்தால், தமது புலமையைக் கொண்டு இன்னும் பல உயர்ந்த நூல்களை வெளியிடலாம்; வெளியிடமுடியும். ஏற்கெனவே, வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார், மாகறல் கார்த்திகேய முதலியார், கா. சுப்பிரமண்ய பிள்ளை, யாழ்ப்பாணம் சுவாமி ஞானப்பிரகாசர் முதலியோர் இத்துறையில் தொண்டாற்றித் தமிழ் மொழியிலேயே நூல்களையும் இயற்றி யுள்ளனர். இன்று இத்துறையில் தமிழறிஞர்

களின் தொண்டு ஒன்றிரண்டு கட்டுரைகளுடன் நின்று விட்டது. திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை கால்டுவெல் ஒப்பிலக்கணக்கில் "வேர்ச் சொற்கள்" (Roots) என்ற பகுதியை மொழிபெயர்த்துள்ளார். டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார் கரந்தைத் தமிழ்ச் சங்க வெள்ளி விழா மலரிலும், அண்ணமலைப் பல்கலைக் கழகத்து ஆராய்ச்சி வெளியீடுகளிலும் இத்துறையில் சில கட்டுரைகள் எழுதியுள்ளார். திரு. சேதுப்பிள்ளை அவர்கள் Words and their significance என்று ஆங்கிலத்தில் ஓர் அரிய கட்டுரை எழுதியிருக்கின்றார். திரு. வே. வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கள் மொழி சம்மந்தமாகப் பல அரிய கட்டுரைகளை எழுதியுள்ளார்கள். சென்னைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி வெளியீட்டில் அவை பதிப்பிக்கப் பெற்றுள்ளன. சில சொற்களைப் பற்றியும் சொல்லமைதியைப் பற்றியும் அவர்கள் கூறியுள்ள கருத்துக்கள் அவர்களது ஆராய்ச்யின் நுட்பத்தினைக் காட்டுகின்றது. டாக்டர் கால்டுவெல் அவர்களின் ஒப்பிலக் கணத்திலுள்ள "மூவிடப்பெயர்" என்ற பகுதியில் மட்டிலும் அவர்கள் அதிகக் கவனத்தைச் செலுத்தி அதைச் செவ்வனே ஆராய்ந்து பல ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் "திராவிட மொழியின் மூவிடப் பெயர்" என்ற ஆராய்ச்சி நூலை எழுதியுள்ளார்கள். அதில் கால்டுவெல் அவர்களின் கருத்துக்களுடனும் பிற அறிஞர்களின் கருத்துக்களுடனும் மாறுபட்ட கருத்துக்கள் வெளிப்படும்பொழுதுதான் திரு. ரெட்டியார் அவர்களின் நுண்மாண் நுழைபுல அறிவையும் ஆராய்ச்சித் திறனையும் நாம் அறிய முடிகின்றது. இத்தகைய நூல்கள்தாம் இனி ஆராய்பவருக்குக் கண் திறக்கும் வழிகாட்டி நூல்களாம். திரு. ஞா. தேவநேயப் பாவாணர் இத்துறையில் ஒன்றிரண்டு நூல்களை வெளியிட்டுள்ளார்கள்; மொழிநூல்பற்றிய அவருடைய அரிய

கட்டுரைகள் அடிக்கடி 'செந்தமிழ்ச் செல்வி'யிலும், 'தமிழ்ப் பொழிலி'லும் வெளிவருகின்றன. இங்ஙனம் பல அறிஞர்கள் பல பகுதிகளைப் பற்றி ஒரு சில கட்டுரைகள் எழுதி வருகின்றார்களேயன்றி ஒருவராவது மொழிநூல் முழுவதையும் பற்றி எழுதத் துணியாதது தமிழ் மக்களின் தீப்பேறு என்றுதான் எண்ண வேண்டும்.

திருவாளர் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள் கூறியிருப்பது இவ்விடத்தில் கருதத் தக்கது. அவர்கள் கூறுவதாவது: "மிகவும் நன்றாகத் தொடங்கி கால்டுவல் செய்துவந்த மொழியாராய்ச்சிப் பணியை அவரைப் பின்பற்றி ஒருவரும் தொடர்ந்து செய்யாமை பெரிதும் வருந்தத் தக்கது. இப்பொழுதாவது தக்க அறிஞர் யாவரேனும் அப்பணியைச் செய்ய முற்படுதல் வேண்டும். கி. பி. 1875-ஆம் ஆண்டில் கால்டுவெல் அவர்களின் ஒப்பு நோக்கு இலக்கணத்தின் இரண்டாம் பதிப்பு வெளியிடப் பெற்றது. அக் காலத்திற்குப் பின், மொழியாராய்ச்சி செய்யும் முறை பலபடியாகத் திருத்தம் பெற்றுள்ளது. தமிழில் தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் முதலிய முக்கியமான நூல்கள் நன்றாகப் பதிப்பிக்கப் பெற்று வெளிவந்துள்ளன. கல் வெட்டுச் சாசனங்கள் நூற்றுக்கணக்காக வெளிவந்துள்ளன. நாட்டு வரலாற்று உணர்ச்சியும் மிகவும் பெருகியிருக்கின்றது. அறிஞர்கள் பல துறைகளிலும் ஆராய்ச்சி செய்து நம் அறிவைப் பெருக்கியிருக்கின்றார்கள். பிற திராவிட மொழிகளிலும் இங்ஙனமே அறிவு பெருகி வளர்ந்திருக்கின்றது. இவ்வாறு பெருகியுள்ள அறிவைப் ஒப்பு நோக்கு இலக்கணங்களுடன் பயன்படுத்தவேண்டுவது மிகவும் அவசியம். இவற்றை நோக்குமிடத்து கால்டுவெல் அவர்களது நூலை நான்கு புதுக்கி எழுதுதல் எத்துணை அவசியம் என்பது புலப்படும். உண்மையில், இங்ஙனம் புதுக்கிய நூல் வெகு காலத்திற்கு முன்னரே

இயற்றப் பெற்றிருத்தல் வேண்டும்.''[4] திரு. பிள்ளை அவர்கள் மொழிநூல் நிலையினை எடுத்துக் கூறியதோடன்றி ஆராய்ச்சி செய்வோருக்கு வழியையும் வகுத்துத் தந்திருப்பதை நாம் அவசியம் பயன் படுத்திக் கொள்ளவேண்டும்.

ஆகவே, தமிழுக்குப் புதிதாகவுள்ள மொழிநூல் துறையில் தொண்டாற்றுவது தமிழ் மொழிக்குச் செய்யும் விழுமிய தொண்டாகும்.

'' யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்'' [5]

என்ற முழக்கத்துடன் நின்றுவிடாது,

பிறர் நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்.[6]

என்ற பாரதியின் கனவை நனவாக்கினால்தான் பண்டைச் சிறப்புக்களுடன் விளங்கும் தமிழ் மொழி இன்றைச் சிறப்புக்களையும் பெற்று உலக மொழிகளில் சிறந்தனவற்றுள் ஒன்றாகக் கருதப்படும் நிலையையும் பெற்று விளங்கும் என்பதற்கையமில்லை.

---

4. எஸ். வையாபுரிப் பிள்ளை: ''திராவிட மொழிகளில் ஆராய்ச்சி''—பக்கம் 33.

5. பாரதியார் கவிதைகள்—தமிழ் 1.

6. பாரதியார் கவிதைகள்—தமிழ் 2.

## 10. சோழர்கால வாணிகம்

சற்றேறக்குறைய நானூறு ஆண்டுகள் விசாயலய வம்சாவழிச் சோழர்கள் ஆண்ட காலத்தில் நாட்டில் வாணிகம் எவ்வாறு இருந்தது ? பொருளாதார உலகையே இன்று வணிகர்கள் கைப்பற்றிக் கொண்டிருப்பதுபோல அன்றைய நிலை இருந்ததா ? அரசாங்கத்துக்கும் வாணிகத் துறைக்கும் எவ்வளவு சம்பந்தம் இருந்தது ? பொருள்களை உற்பத்தி செய்தல், அவைகளை விற்றல், வாங்கல் ஆகிய செயல்களில் அரசாங்கம் எவ்வளவு தூரம் தலையிட்டது ? இவற்றை இங்கு ஆராய்வோம்.

'வாழ்க்கையின் திறனாய்வே இலக்கியம்' என்று பேரறிஞர்கள் கூறியிருத்தலால் இலக்கியங்களிலிருந்தும் வாழ்க்கைத் துறையாகிய வாணிகத்தைப் பற்றி ஓரளவு தெரிந்துகொள்ள முடியும். சங்ககாலச் சோழர்களைப் போலவே, பிற்காலச் சோழர்களும் இலக்கியத்திற்கும் கலைக்கும் ஆக்கம் கொடுத்தனர். சோழர் காலத்தில் தோன்றிய சீவக சிந்தாமணி, கலிங்கத்துப் பரணி, கம்ப ராமாயணம், பெரிய புராணம் ஆகிய நூல்களிலிருந்து வாணிகத்தைப்பற்றி ஒன்றும் அதிகம் தெரிந்து கொள்வதற்கில்லை ; சங்க காலத்தில் தோன்றிய பட்டினப்பாலை சங்கமருவிய காலத்தில் எழுந்த சிலப்பதிகாரம் ஆகிய நூல்கள்போல் பிற்காலச் சோழர்கள் காலத்தில் பிறந்த நூல்கள் நமது தமிழகத்தில் நிலவிய வாணிக நலத்தை எடுத்தோதும் சிறப்புக்களைப் பெறவில்லை. ஏதோ அத்தி

பூத்தாற் போல சிந்தாமணி யவனப் பேழையையும்[1] யவனர் கைவினைச் செப்பையும்[2] குறிப்பதிலிருந்து அக்காலத்தில் யவனருடன் வாணிகம் நடைபெற்றதை ஒருவாறு அறிய முடிகின்றது. ஆனால், இன்று வாணிகத்தைப் பற்றிக் குறிப்பிடும் செய்திகள் யாவும் கல்வெட்டுக்கள் மூலம் அறிந்தவையே யாகும்.

சோழர்கள் காலத்தில் ஆட்சி முறை மிகத் திறம்பட அமைந்திருந்ததால் நாட்டில் குழப்பமே இல்லாமல் இருந்தது. ஏதோ ஒரு சில சந்தர்ப்பங்களில் குறுநில மன்னர்கள் விளைத்த கலகங்களை அடக்குவதற்குச் சில படையெடுப்புக்கள் இருந்தன என்றாலும், ஆட்சி மிக அமைதியுடன் நடைபெற்று வந்தது என்றுதான் சொல்ல வேண்டும். நாடு அமைதியாக இருந்தால்தான் கைத்தொழில்கள் பெருகி பொருளின் உற்பத்தி அதிகமாகும். உள்நாட்டுப் பயணத்தில் பயம் இல்லாமல் இருந்தால்தான் உள்நாட்டுச் சந்தைகளுக்கு நாட்டின் பல பாகங்களிலிருந்து பொருள்கள் வந்து குவியும். தனிப்பட்ட வணிகர்களும் வணிகர் சங்கங்களும் வெகு மும்மரமாக வாணிகம் செய்து வந்தனர். சோழ நாட்டுக்குட்பட்ட பல பகுதிகளில் உள் நாட்டு வாணிகம் மிக நன்றாக நடைபெற்று வந்தது. நாட்டின் பல பகுதிகட்கும் வணிகர்கள் சென்றனர் என்பதைக் கல்வெட்டுக்களால் அறிகின்றோம். எடுத்துக் காட்டாக, இக்காலத்தில் மலையாளம் என்று குறிக்கப்பெறும் மலை நாடு என்ற பகுதியிலுள்ள வணிகன் ஒருவன் செங்கற்

1. பொன்சொரி கதவு தாளிற் றிறந்து பொன் யவனப் பேழை (செய். 113.)

அருமணி வயிரம் வேந்த அருங்கலப் பேழை ஐந்நூற்(று)
எரிமணி செம்பொன் ஆர்ந்த விராயிரம் யவனப் பேழை
(செய். 557.)

2. மணியியல் யவனச் செப்பின் மங்கலத் துகிலை வாங்கி (செய். 1146.)

பட்டு மாவட்டத்தில் வாணிகம் செய்ததையும், சென்னை-மயிலாப்பூர் வணிகன் ஒருவன் தஞ்சையில் வாணிகம் செய்ததையும் இன்று இலங்கை எனப்படும் ஈழ நாட்டு வணிகன் ஒருவன் தென் திருவிதாங்கூரைச் சார்ந்த சுசீந்திரம் கோவிலுக்கு விளக்குத் திருப்பணி செய்ததையும் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

உலோக சம்பந்தமான கைத்தொழில்கள் நல்ல நிலையிலிருந்தன. அன்றாட உபயோகத்திற்கு வீடுகளில் தேவையாக இருக்கும் உலோகப் பாத்திரங்களைச் செல்வர்களே அநுபவித்தனர். ஏழை மக்கள் மண் பாண்டங்களையே பயன்படுத்தினர். சமைப்பதும் உண்பதும் அக்கலங்களிலேயே நடைபெற்று வந்தன. அறச்சாலைகளிலும் அவற்றையே பயன்படுத்தின செய்தியைக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. அக்காலத்தில் செய்யப்பட்ட வெண்கலப் பாத்திரங்கள் இன்றும் கெடாது இருப்பதை நோக்கும் பொழுது, அக்காலத்தில் கன்னார்கள் கலவை உலோகங்களைத் தயாரித்து அவற்றைக் கொண்டு மிக நயமான பாத்திரங்களை வார்ப்பதில் மிகத் திறமையடைந்திருந்தனர் என்பது தெரிய வருகின்றது. தாமிரம், பித்தளை, வெண்கலம் ஆகிய உலோகங்கள் பயன் படுத்தப்பெற்றன; வெள்ளியும் தங்கமும் அரிதாக வழங்கின. தங்கத்தினால் உயர்ந்த நகைகளும், அணிகளும், கல் இழைத்த அணிகளும் செய்யப்பட்டன. நாட்டின் செல்வத்தின் பெரும்பகுதி பொற்கொல்லர்களின் வாணிகத்தில்தான் மூழ்கி விட்டதோ என்று சொல்லும்படி, அவ்வளவு உன்னத நிலையில் அத் தொழில் திகழ்ந்தது. கம்மியர் கலையும் பொற்கொல்லர் கலையும் மிக உயர்ந்த நிலையில் இருந்தன என்பதைத் தஞ்சைக் கல்வெட்டுக்களால் அறிகின்றோம். இன்றும் நகைகளின் மூலமும் பிற அணிகளின் வாயிலாகவும் மக்கள் செல்வத்தைச்

சேமித்து வைக்கும் பழக்கத்தை விடவில்லை என்பதை நாம் அறியாமல் இல்லை. கோயிலுக்குரிய செல்வம் நகைகளின் வடிவில் இருப்பதை இன்றும் நாம் காண்கின்றோம்.

உப்பு எடுக்கும் தொழில் அரசாங்கத்தின் பார்வையில், அவர்களின் ஆணைக்குட்பட்டே, நடைபெற்று வந்ததாகத் தெரிகின்றது. கடற்கரையை யொட்டியுள்ள மரக்காணம், கன்னியாகுமரி, வாரியூர், ஆய்துறை ஆகிய இடங்களில் உப்பளங்கள் அமைக்கப்பெற்று உப்பு உற்பத்தி நடைபெற்று வந்ததாகக் கல்வெட்டுக்களால் அறிகின்றோம். பாப்டாவாவிலிருந்த சில உப்பளங்களை கி. பி. 1112-இல் கடல் ஆக்கிரமித்துவிட்டதாகக் கல்வெட்டுக் குறிப்பு ஒன்று காணப்படுகின்றது.

சில கைத்தொழில்கள் நீதி மன்றத்தின் பார்வையிலோ அல்லது கோயிலின் அங்கீகாரத்தின் கீழோ நடைபெற்று வந்தன. எடுத்துக்காட்டாக ஒன்றைக் காண்போம். பட்டசாலியர் எனப்படும் நெசவாளர்கள் காஞ்சியில் நான்கு 'பாடிகளில்' (வார்டுகளில்) வசித்து வந்தனர். அவர்கள் அரசர்க்குரிய ஆடைகளை நெசவு செய்யும் சிறப்பான பணியைப் பெற்றிருந்தனர். உத்தமச் சோழன் அவர்களைக் காஞ்சியிலுள்ள 'ஊரகம்' என்ற கோயிலின் பொருளாதார சம்பந்தப்பட்ட செயல்களைக் கவனித்து வருமாறு நியமனம் செய்திருந்தான். 'சோழர்-நியமம்' என்ற ஊரிலுள்ள ஏழை மக்களுக்கு எல்லா அரசாங்கப் பாக்கிகளும் தள்ளுபடி செய்யப்பெற்றன. அதற்குப் பதிலாக அவர்கள் கோயிலுக்குரிய கணக்குகளைச் சரியாக எழுதிக் கோயில் அலுவல்களைக் கண்காணித்து வந்த நெசவாளர்களிடம் சரிபார்ப்பதற்காகத் திங்கள்தோறும் ஒப்புவிக்கும்

கடமையை மேற்கொண்டிருந்தனர். இந்த ஏற்பாட்டைக் காஞ்சியிலுள்ள 'நகரம்' என்ற சபை செய்தது.[3]

உள்நாட்டு வாணிகம் நடைபெறுவதற்குப் போக்குவரத்துச் சாதனங்கள் எவ்வாறு இருந்தன என்பதைப் பற்றி விரிவான செய்திகளை அறியக்கூட வில்லை. தென்னிந்தியாவில் வியாபாரச் சரக்குகளைக் கடத்துவதற்கான 'இயற்கை நீர்வழிகள்' இல்லை; ஆறுகளும் வாய்க்கால்களும் பயிர்த் தொழிலுக்குத்தான் பயன் பட்டனவே யன்றி சரக்குகளைக் கடத்துவதற்குப் பயன் படவே இல்லை. இன்று சென்னைக்கு நெடுந்தொலைவி லுள்ள இடங்களிலிருந்து தேங்காய், விறகு, வைக்கோல் போன்ற பொருள்கள் படகுகளின் மூலம் பக்கிங்காம் கால்வாய் வழியாக வந்திறங்குவது போல், சரக்குகள் வருவதற்கும் போவதற்கும் அக்காலத்தில் இயற்கைச் சாதனங்கள் ஒன்றும் இல்லை. நாட்டின் பல்வேறு பகுதிகளில் சாலைகள் இருந்தன வென்று பல்வேறு இடங்களிலுள்ள கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. கல்வெட்டுக்களில் இரண்டுவித சாலைகள் குறிக்கப்பெறு கின்றன. கால்நடைப் பாதையைவிட சற்று நல்ல நிலையிலுள்ள 'வாடிகள்' என்பன ஒருவகை. இவை வண்டிகள் செல்லுவதற்குத் தகுதியற்றவை. உத்தர மேரூரிலுள்ள இத்தகைய வாடியொன்று வெள்ளத்தால் அழிந்து பட்டதாகவும், அப்பாதை கால்நடைகள் செல்லுவதற்குப் பயனற்றுப் போனதாகவும், அதைத் திருத்துவதற்கும் அகலப்படுத்துவதற்கும் அவ்வூரவை பக்கத்து உழவர்களின் நிலங்களைக் விலைக்கு வாங்கின தாகவும் அவ்வூர்க் கல்வெட்டு ஒன்று குறிப்பிடுகின்றது. மற்றொரு வகை 'பெருவழிகள்' என்று சொல்லப் படுபவை; இவை இக்காலத்துள்ள Highways எனப் படும் சாலைகளைப் போன்றவை என்று சொல்லலாம்.

3. Museum plates of Uttama Chola.

வடுகப் பெருவழி அல்லது ஆந்திரப் பாதை, கொங்கப் பெரு வழி, தஞ்சாவூர்ப் பெருவழி ஆகிய சாலைகளைக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. தஞ்சாவூர் மாவட்டத்தில் கிடைத்த கல்வெட்டு ஒன்று கல்யாணபுரப் பெருவழி என்ற ஒரு பெரிய சாலையைக் குறிப்பிடுகின்றது. இச்சாலைகளின் அகலம் இரண்டு 'கோல்' ஆகும்; அது கிட்டத்தட்ட இருபத்து நான்கு அடி அளவு இருக்கும். பெருஞ்சாலைகளையும் சிறு சாலைகளையும் சீர்திருத்தும் பொறுப்பு அவ்வவ்விடத்து மக்களையே சார்ந்திருந்தது. ஊர் மக்கள் இனமாகச் செய்யும் சாலை சம்பந்தமான வேலையை 'வெட்டி,' 'அமஞ்சி' என்று கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

சோழர்களின் ஆட்சியில் வெளி நாட்டு வாணிகமும் மிகச் சிறப்பாக நடைபெற்று வந்தது. ஒன்பதாம் நூற்றாண்டில் தென்னாசிய நாடுகள் யாவுமே இதுகாறும் வரலாற்றிலேயே புகழ்பெறாத அளவு கடல் வாணிகத்தை வளர்த்தன என்று சொல்ல வேண்டும். சீனம், கிழக்கிந்தியத் தீவுகள், அரேபியா ஆகிய நாடுகள் இவ் வாணிகத்தில் பெரும் பங்கெடுத்துக் கொண்டன. தஞ்சையில் முதலாம் இராச ராசன் ஆண்ட காலத்திலும், அவன் அருமை மகன் முதலாம் இராசேந்திரன் ஆண்ட காலத்திலும் சோழ நாடு சீனாவுடன் நல்ல உறவு கொண்டிருந்தது. இது சம்பந்தமான பல செய்திகளை வரலாறு ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். ஸ்ரீ விஜயாவுக்கு விரோதமாக இராசேந்திரன் எடுத்த கடற்படையெடுப்புக்குப் பிறகு தெற்கிலுள்ள நாடுகளுக்கும் சீனாவுக்கும் நல்ல உறவு ஏற்பட்டது என்றே சொல்ல வேண்டும். விசய ராசேந்திரன் காலத்தில் இப்பொழுது பர்மா என்று சொல்லப்படும் கடார நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்பத்தின் காரணமாக அந்நாட்டரசன் சோழர்களுடைய உதவியை நாடிய செய்தி

சோழநாட்டிற்கும் கிழக்கேயுள்ள நாடுகளுக்கும் நல்லுறவு ஏற்பட்டிருந்தது என்ற செய்தியை அரண் செய்கின்றது. சுருக்கமாகக் கூறினுல், சோழ நாடு மேற்கே இலட்சத் தீவுகள், அரேபியா, பாரசீகம் ஆகிய நாடுகளுடனும் தெற்கே இலங்கை, மாளயத் தீவுகள் ஆகியவற்றுடனும், கிழக்கே பர்மா, ஜாவா, சுமத்தரா, சீனு முதலிய நாடுகளுடனும் கடல் வாணிகம் செய்து வந்தது என்று சொல்ல வேண்டும்.

இம்மாதிரி தொலைவிலுள்ள நாடுகளுடன் வாணிகம் நடைபெற்றபொழுது எவ்வித சரக்குகள் புழக்கத்திலிருந்தன என்பதை யோசித்துப் பார்க்கத்தான் வேண்டும். அளவில் குறைவாகவும் விலையில் உயர்வாகவும் உள்ள சரக்குகள்தாம் இங்கிருந்து போயிருக்க வேண்டும்; அதேமாதிரியான சரக்குகள் அங்கிருந்து வந்திருக்கவும் வேண்டும். அராபி நாட்டு வரலாற்று ஆசிரியர் ஒருவர் இந்தியாவிலிருந்து ஆம்பர், கீற்பூரம், உயர்ந்த இரத்தினக் கற்கள், பலவித வாசனைப் பொருள்கள், மூங்கில், யானைத் தந்தம், கருங்காலி மரம், காகிதம், சந்தனக் கட்டை மருந்துச் சரக்குகள், தாளித சாமான்கள் முதலியவற்றைத் தம் நாடு கொண்டதாகக் குறிப்பிடுகின்ருர். நகர்ப்புறங்களில் உயர்ந்த கைகுட்டைகள், லினன் திரைகள், முத்துக்கள் முதலியவற்றிற்கு அதிக கிராக்கி இருந்தது இன்னெரு வரலாற்று ஆசிரியர் இந்தியாவிலிருந்து விலை உயர்ந்த பருத்தி ஆடைகள், நகைகள், காண்டாமிருகக் கொம்புகள், ஆம்பர், முத்து, பவளம், வாசனைத் திரவியங்கள் முதலியவை சீனுவில் இறக்குமதியாயின என்று குறிப்பிடுகின்ருர். விலை மிகுதியின் காரணமாகவும் சீன அரசாங்கம் இவ்வாணிகத்தைத் தானே நடத்தும் பொறுப்பை மேற்கொண்டது. அனுமதி பெற்ற ஒரு சில வணிகர்கள் மட்டிலுந்தான் இச் சரக்குகளை

அரசாங்கத்தினிடமிருந்து பெற முடிந்தது. தொடக்கத்தில் இம் முறை பயனுள்ளதாகத்தான் இருந்தது. ஆனால், நாளடைவில் இத்துறையில் பல அக்கிரமங்கள் தோன்றி அரசாங்கத்திற்குக் கவலையை உண்டாக்கி விட்டது. பன்னிரண்டாவது நூற்றாண்டில் இக்குறைகள் யாவும் நன்கு வெளியாயின. உடனே சீன அரசாங்கம் மலையாளத்திலிருந்தும் சோழ மண்டலக் கடற்கரையிலிருந்தும் விலையுயர்ந்த சரக்குகள் தன் நாட்டிற்கு வரக் கூடாது என்று சட்டம் செய்ய வேண்டி நேரிட்டு விட்டது. ஆகவே, பதின் மூன்றாவது நூற்றாண்டின் இறுதியில் சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இருந்த வாணிகத் தொடர்பு நின்று போய் விட்டது.

தமிழ் நாட்டு வணிகர்கள் சீனாவிலும் பாரசீக வளை குடாவருகிலுள்ள நாடுகளிலும் குடியேறி இருந்தனர் என்ற செய்தியை அறியும்பொழுது உண்மையிலேயே நாம் பெருமை கொள்ளுகின்றோம். இன்றுகூட மலேயா, பர்மா, இலங்கை முதலிய நாடுகளில் தமிழர்கள் குடியேறி இருக்க வில்லையா? தமிழ் நாட்டுச் சிற்பங்கள் சீனக் கோவில் ஒன்றில் இருப்பதாகக் கண்டறியப்பெற்றுள்ளன. இவை புராணச் செய்திகளைத் தழுவியனவாகவும் உள்ளன. கஜேந்திர மோட்சம், உரலில் கட்டப்பட்ட கிருஷ்ணன் இருமரங்களை முறித்துக் கொண்டு ஓடுதல் போன்ற செய்திகள் அவற்றுள் சில. சீனாவைத் தவிர, வேறு நாடுகளிலும் தமிழர்கள் குடியேறியிருந்தனர் என்பதற்குச் சான்றுகள் உள்ளன.

பல நூற்றாண்டுகளாகப் புகழ் பெற்றிருந்த குதிரை வாணிகம் சோழப் பேரரசு ஓங்கியிருந்த காலத்திலும் சிறப்புற்றிருந்தது. முக்கியமாக அராபி நாட்டுடன்தான் இக்குதிரை வாணிகம் நடைபெற்று வந்தது. சோழர்கள் சிறந்த குதிரைப் படைகளை வைத்திருந்தனர் என்பதற்குக் கல்வெட்டுச் சான்று உள்ளது. கல்வெட்டுக்களில் "குதிரைச் செட்டிகள்" என்ற தொடர் காணப்

படுகின்றது. பர்மாவிலுள்ள பெகுவுடனும் இவ்வியாபாரம் நடந்ததாகத் தெரியவருகின்றது. பெரும்பாலும் இக் "குதிரைச் செட்டிகள்" மலை நாட்டிலிருந்து குறிக்கப்படுவதால், தென்னிந்தியாவுக்குத் தேவையாக இருந்த குதிரைகளில் பெரும் பகுதி அராபி நாட்டிலிருந்துதான் இறக்குமதி செய்யப்பட்டது என்று ஊகித்து முடிவு கட்டுவதில் தவறு ஒன்றும் இல்லை. மார்க்கோபோலோ, வாசாப் என்ற அறிஞர்கள் பதின்மூன்காம் நூற்றுண்டில் இக்குதிரை வாணிகம் சிறப்பாக இருந்தது என்று சொல்லுவதிலிருந்து நாம் அறியும் உண்மை ஒன்று உண்டு. திடீரென்று அவ்வாணிகம் வளர்ந்திருக்க முடியாது. மிக முன்னதாகக் கொள்ளாவிட்டாலும், சோழர்கள் காலத்தில் இவ்வாணிகம் தொடங்கிற்று என்று கொள்வதில் தவறு ஒன்றும் இல்லை.

தனிப்பட்ட வணிகர்களைத் தவிர பல வணிகர்கள் சேர்ந்து சங்கங்கள் அமைத்துக்கொண்டு வாணிகம் செய்து வந்த செய்திகளையும் கல்வெட்டுக்களால் அறிகின்றோம். கல்வெட்டுக்கள் இரண்டுவகையான சங்கங்களைக் குறிப்பிடுகின்றன. உள்நாட்டில் வாணிகம் செய்து வந்த 'நகரம்' என்று சொல்லப்படும் சங்கங்கள் ஒருவகை. இவை மாமல்லபுரம், காஞ்சிபுரம் போன்ற பெரிய நகரங்களில் இருந்தன. மற்றொரு வகை வெளி நாடுகளில் வாணிகம் செய்துவந்த 'மணிக்கிராமம்', 'வலஞ்சியர்' என்பவை. இந்த இரண்டு வகை சங்கங்களுக்கும் உள்ள சம்பந்தங்களைப் பற்றித் திட்டமாக ஒன்றும் அறிந்துகொள்ள இயலவில்லை.

கொடும்பாளூர் என்ற இடத்தில் 'மணிக் கிராமம்' என்ற சங்கமும், திருப்புறம்பியத்தில் 'வலஞ்சியர்' என்ற சங்கமும் இருந்ததாகக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. 'சத்திய வாசகர்கள்', 'தன்ம வாஞ்சியர்' என்ற வணிகக் கூட்டத்தார் திருவண்ணமலையில் ஆண்டு

தோறும் நடைபெறும் திருவிழாவுக்குத் திருக்கொடி வழங்கும் திருப்பணியை மேற்கொண்டிருந்தனர். 'சூசகர் கருணைகர வீரர்' எனப்படும் தென்னிலங்கை வலஞ்சியர் திருக்கண்ண புரத்திலிருந்த வைணவ மடத்திற்குக் காணிக்கை செலுத்தி வந்தனர். நெல்லூர், நாராயண புரம், ஆர்க்காடு, மயிலாப்பூர், திருவொற்றியூர், பூவிருந்தவல்லி, நெடும்பிறை, தமனகச் சேரி, பெருங் காலூர், திருநீறு ஆகிய இடங்களிலிருந்த வணிகப் பெருமக்கள் ஒரு சிற்றூரையே விலைக்கு வாங்கி அதைத் திருப்பாசூர் கோவிலுக்கு மதில் எழுப்பும் திருப்பணிக்குத் தேவதானமாகக் கொடுத்த செய்தி யைக் கல்வெட்டுக்களால் அறிகின்றோம். அம்பில் கல்வெட்டு ஒன்றினால் சித்திர மேழிப் பெரிய நாட்டார், திசை ஆயிரத்து ஐந்நூற்றுவர், தவனச் செட்டிகள், சயபாலர்கள், முனைவீர கோடியர், முடற்படைக் கலைஞர், ஆகிய வணிகக் கூட்டத்தார் தம்மை 'இராச ராசப் பெரு நீரவியோம்' என்று குறிப்பிட்ட செய்தியை அறிகின்றோம். அன்றியும், வலஞ்சியரும், நானா தேசியத் திசை ஆயிரத்து ஐந்நூற்றுவரும் திருவிளக்குடியிலுள்ள கோவிலுக்குத் திருப்பணி செய்ததைக் கல்வெட்டு ஒன்று குறிப்பிடுகின்றது.

நானாதேசத் திசையாயிரத்தைந்நூற்றுவர் என்ற வணிக சங்கந்தான் பெரும் புகழ் பெற்றுத் திகழ்ந்த தாகத் தெரிகின்றது. பன்னெடு நாட்களாகவே இச்சங் கம் பணியாற்றி வந்துள்ளது. விசயாலய மரபுச் சோழர்கள் தலையெடுப்பதற்கு முன்பே இச்சங்கம் இருந்தமை புதுக்கோட்டைப் பகுதியில் முனி சந்தை என்ற இடத்திலுள்ள இரண்டு சிறிய கல் வெட்டுக்களால் அறிகின்றோம். விசயாலயன் அல்லது முதற் பராந்தகன் காலத்தில் தோன்றியதாகக் கருதப் பெறும் அக்கல்வெட்டுக்கள் அங்குள்ள குளத்தைச் சீர்

திருத்துவதற்கு மானியம் விட்ட செய்தியையும் குறிக்கின்றது. அக்குளமும் அவ்வணிகச் சங்கத்தின் பெயராலேயே வழங்கி வருகின்றது.

சுமத்ராதீவில் லோபாடோவா என்ற இடத்திலுள்ள தமிழ்க் கல்வெட்டு ஒன்ருல் இச்சங்கத்தைப் பற்றிய குறிப்பு காணப்பெறுவதால், அலைகடலுக்கப்பாலும் இச்சங்கம் வாணிகம் செய்து வந்தமை தெரிகின்றது. மைசூர் மாநிலத்திலுள்ள சில கல்வெட்டுக்கள் இச்சங்கங்கள் தோன்றிய கதையைப் புராணச் செய்திகள் போலக் குறிப்பிடுகின்றன. அன்றியும், அவை அவர்கள் எடுத்துச் சென்ற விற்பனைச் சரக்குகளையும் தாம் சென்ற ஊர்களையும் நாடுகளையும் சரக்குகளை எடுத்துச் செல்லக் கையாண்ட சாதனங்களையும் குறிப்பிடுகின்றன. சேர நாடு, சோழநாடு பாண்டி நாடு, மலைய நாடு, மகத நாடு, கோசல நாடு, சௌராஷ்டிர நாடு, கும்ப நாடு, காம்போஜ நாடு, நேபாள நாடு ஆகிய நாடுகளுக்கெல்லாம் சென்ற அவ்வணிகர்கள் 'பகவதி'யைத் தெய்வமாகக் கொண்டிருந்தனர். தரை வழியாகவும் கடல் வழியாகவும் அவர்கள் எல்லாக் கண்டங்களுக்கும் சென்றனர். அவர்களிடம் மொத்த வியாபாரமும் இருந்தது. தனிப்பட்டவர் சரக்குகளைத் தலையில் சுமந்து சென்று சில்லறை வியாபாரம் செய்த வழக்கமும் இருந்தது. சிலர் தம் சரக்குகளைக் கழுதைகளின்மீதும், எருமைக்கடாக்களின் மீதும் கொண்டு சென்றனர். அவர்கள் ஐந்நூறு வீரசாசனங்களை ஏற்படுத்தியிருக்கின்றனர்.

அந்தணர்களும் வலஞ்சியர்களுடன் சேர்ந்து தென்ஞர்க்காட்டு மாவட்டத்திலுள்ள எண்ணுயிரம் என்ற ஊரின் தெற்குக் கடைத் தெருவில் வாணிகம் செய்தனர் என்பதற்குக் கல்வெட்டுச் சான்று உள்ளது. சில குறிப்பிட்ட செயல்கட்குத் தேவையுள்ள பொழுது

'நகரங்கள்' தம் உறுப்பினரிடையே காணிக்கைகளை தண்டல் செய்யும் வழக்கத்தையும் மேற்கொண்டிருந்தன. கி. பி. 1037-ஆம் ஆண்டில் வாலையூர் என்ற ஊரிலிருந்து 'நகரம்' அவ்வூர்க் கோவிலில் விளக்குகள் எரியும் திருப்பணிக்காகத் தமது வாணிகத்தில் சில முறைகளைக் கையாண்டது. தானியங்களை விற்போரும் வாங்குவோரும் ஒரு காலத்தில் 'ஒரு நாழியில் நால் அளவு பாட்டம்' தானியம் கொடுத்தனர்; நிறையொன்றுக்கு ஒரு பலத்தில் 'கோல் கூலி'யும், 1000 பாக்கிற்கு 10 பாக்கும் கொடுத்து வந்தனர். இம்மாதிரி பல சான்றுகள் உள.

'நானு தேசிகள்' ஏற்படுத்திய வணிக சங்கங்களே பேராற்றல் வாய்ந்தவையாக இயங்கின; அவற்றின் நடவடிக்கைகளில் எந்த அரசாங்கமும் தலையிடுவதில்லை, எல்லா நாடுகளிலும் அவைகட்கு நல்ல மரியாதை இருந்து வந்தது. சோழ நாட்டிலும் மத்திய அரசாங்கமும் சரி, உள்ளூர் அவைகளும் சரி, அவற்றிற்குச் சிறப்பு அளித்தன. அச்சங்கங்கள் தம் சரக்கறைகளைக் காக்கவும் சரக்குகளைக்கொண்டு பயணம் செய்யும்பொழுது பாதுகாவலாக இருக்கவும் சம்பளம் கொடுத்து வீரர்களடங்கிய சிறு சேனையை வைத்திருந்தன. எங்கெங்கு சென்று தங்கினார்களோ அங்கங்கெல்லாம் அந்நாட்டு உள்நாட்டு விவகாரங்களில் அக்கறைகொண்டு இருந்தனர். சான்றாக ஒன்றைக் குறிப்பிடலாம். மேலூர்ப் பட்டணத்திலிருந்தபொழுது அவ்வூரிலுள்ள ஸ்ரீ வைணவர்களுடன் ஒத்து உழைத்து சோழமா தேவி சதுர்வேதி மங்கலம் என்ற வாண்டூர் அவையிடம் வழக்கமாக வாங்கப்பட்டு வந்த காணிக்கையைத் தண்டல் செய்தனர். அவர்கள் சென்ற நாடுகளில் நேரிடும் போர்களும் அமைதியும் அவர்கள் வாணிகத்தைச் சிறிதும் பாதிக்கவில்லை என்றே சொல்லவேண்டும்.

ஹட்சன் என்ற மேனுட்டு அறிஞர் ஒருவர் ஐரோப்பாவிலும் சீனுவிலும் வணிகர் சங்கங்கள் எவ்வாறு இருந்தன என்பதைக் குறிப்பிடும்பொழுது, சீனுவில் வணிகர்களுக்கு அரசாங்கத்தில் செல்வாக்கு இல்லையென்றும், ஐரோப்பாவில் வணிகர்தாம் அரசியலை நடத்துகின்றனர் என்றும் கூறுகின்றுர். ஆனுல், சோழர் காலத்தில் தென்னிந்தியாவிலிருந்த வணிகர்களுக்கு நல்ல உரிமை இருந்தது; அவர்கள் உற்சாகத்துடன் வாணிகம் செய்து வந்தனர். அரசாங்கம் அவர்கள் செயல்களில் குறுக்கிடுவதில்லை. தம்முடைய செயல்களைத் தாமே கவனித்துக் கொள்ளும் உரிமை அவர்களிடம் இருந்தது. அவர்களாக வேண்டாதவரையில் அரசாங்கம் அவர்கள் செயல்களில் தலையிடுவதில்லை; தலையிட விரும்புவது மில்லை. ஆனுல், ஐரோப்பிய நாடுகளில் அரசாங்கம் வெளி நாடுகளில் வாணிகம் செய்வோருக்கு உதவுவதுபோல, சோழர் அரசாங்கம் வெளி நாடுகளில் வாணிகம் செய்தவர்களுக்கு உதவவில்லை; உதவவும் முடியாது. அக் கால வணிகர்களுக்கோ அரசாங்கத்திற்கோ பொருளாதார ஏகாதிபத்திய (Economic imperialism) எண்ணமே இருந்ததில்லை. வாணிகத்தைத் தவிர பிற விவகாரங்களில் அவர்கட்கு அக்கறை இல்லை; நிலைமை சரியாக இருந்தால் வாணிகத்தை நடத்துவார்கள்; நடத்தவும் விரும்புவார்கள். வாள் முனையைக் காட்டி வெளி நாடுகளில் பொருள்களை வாங்கும்படியும் செய்யலாம், விற்கும்படியும் செய்யலாம் என்ற எண்ணமே அவர்கள் சிந்தையில் எப்பொழுதுமே எழுந்ததில்லை.

# 11. புத்தர் காட்டிய நெறி

சமயங்கள்யாவும் வாழ்வின் அடிப்படையில் அமைந்தவை; உணர்வை நிலைக்களனுகக் கொண்டவை. சமயப் பெரியார்கள் யாவரும் தாம் வாழ்க்கையில் கண்ட அநுபவங்களையே சமய உண்மைகளாகக் கூறியுள்ளனர்; தாம் நுணுகி உணர்ந்தவற்றையே வையத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்குரிய நெறிகளாக உணர்த்திச் சென்றுள்ளனர். சமய வாழ்க்கை வேறு, உலக வாழ்க்கை வேறு என்ற எண்ணம் அவர்களிடத்தில் இல்லை. பிற்காலத்தில் வந்த சமயப் பிரசாரகர்களும் பொது மக்களும் அந்நெறிகளைத் தவருக உணர்ந்து கொண்டதால் சமய வாழ்க்கை வேறு உலக வாழ்க்கை வேறு என்ற தவருன கருத்து தோன்றிவிட்டது; வெறும் சொல்லாடலுக்கும் வேடத்துக்கும் சமயம் இரையாகி விட்டது. இதனுல்தான் எல்லாச் சமயங்களிலுமே வாழ்க்கைக்கு ஒவ்வாத கருத்துக்கள் இருக்கின்றன. ஒருசில கருத்துக்களுக்கும் திரித்துப் பொருள் உரைக்கப் பெறுகின்றன. வந்தனைகளையும் வழிபாடுகளையும் வெறும் சடங்குகளாகக் கொண்டால்மட்டிலும் பயனில்லை; அவை வாழ்வோடு ஒட்டி அமைதல் வேண்டும். சில சமயங்கள் செல்வாக்கின்றிப் போனதற்கு அவை வாழ்வுடன் மேற்கொள்ளப்பெருமையே காரணம் என்று கூறுவதில் தவறு ஒன்றும் இல்லை.

### பௌத்த சமயம்:

பௌத்த சமயம் பாரதநாட்டுப் பழைய சமயங்களுள் ஒன்று. இற்றைக்குச் சரியாக 2500 ஆண்டுகட்கு முன்னர் இமயமலையின் அடிவாரத்திலுள்ள நேபாள

நாட்டில் கபிலவாஸ்து என்ற நகரில் சாக்கிய குலத்திலே கௌதம குடும்பத்தைச் சேர்ந்த சுத்தோதனர் என்ற அரசருக்கும் அவரது மனைவியாகிய மாயா தேவிக்கும் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக் குழந்தைக்குப் பெற்றோர் சித்தார்த்தர் என்று பெயர் சூட்டினர். அக்குழந்தைதான் இன்று உலகம் எல்லாம் பாராட்டும் புத்தர் பெருமானாக விளங்கியது. இளமையிலேயே இவ்வுலக வாழ்க்கை நீர்மேல்குமிழி போலவும் புல் நுனிமேல் நீர்போலவும் நிலையற்றதென்று உணர்ந்தார் சித்தார்த்தர். தமக்குரிய அரச பதவியையும் பெருஞ் செல்வத்தையும், பெற்று வளர்த்த பெற்றோரையும், அழகிய மனைவியையும் அருமைக் குழந்தையையும் விட்டுத் துறவியானார். இன்று வடநாட்டில் 'கயைக்கு' அருகில் ஐந்து கல் தொலைவிலுள்ள 'புத்த கயை' என வழங்கும் ஓர் இடத்தில் ஆற்றங் கரையிலுள்ள அரச மரத்தின் கீழ் அமர்ந்து தவம்புரிந்து உண்மையறிவை அடைந்தார். அவர் இவ்வாறு பெற்ற அறிவை மக்களுக்குப் போதித்தார். அவர் காட்டிய நெறிதான் புத்தசமயம் என்று பெயர் பெற்று விளங்குகின்றது.

**திரிபிடகம் :**

புத்தர் பெருமான் வாழ்ந்த காலத்தில் வட இந்தியாவில்பெருகிப் பயின்ற மொழி பாலி மொழியாகும். மக்களறிந்த அம்மொழியில் புத்தர் பெருமான் தம் கருத்துக்களை வெளியிட்டார். கிட்டத்தட்ட நாற்பத்தொன்பது ஆண்டுகள் தமது கொள்கைகளை அவர் நாடெங்கும் பரப்பிவந்தார். ஆனால், அவற்றை அவர் நூல்வடிவமாக எழுதி வைக்கவில்லை. அவருடைய சீடர்கள் அவர் போதித்த கருத்துக்களை இரண்டு தொகுப்புக்களாகத் தொகுத்து வைத்தனர். புத்தர் பெருமான் நிர்வாண மோட்சம் அடைந்த சில மாதங்களுக்குப் பிறகு மகதநாட்டுத் தலைநகரான இராஜகிருஹ நகருக்கு

அருகில் ஸத்தபணி என்னும் மலைக்குகையில் கார் காலத்தைக் கழிப்பதற்காக ஐந்நூறு தேரர்கள்—வயது முதிர்ந்த பிட்சுக்கள்—ஒருங்கு கூடினர். இதுவே பிட்சுக்கள் கூட்டிய முதல் மாநாடாகும். இம்மாநாட்டிற்குப் புத்தருடைய முக்கிய சீடர்களுள் ஒருவரான மகா காசிபர் என்பார் தலைமை தாங்கினார். உபாலி என்ற மற்றொரு முக்கிய சீடர் புத்தர் பெருமான் அருளிய விநய போதனைகளைத் தொகுத்து ஓதினார். இவை பிட்சுக்களும் பிட்சுணிகளும் ஒழுகவேண்டிய ஒழுக்கங்களைப் பற்றியவை. இன்னொரு முக்கிய சீடராகிய ஆநந்தர் புத்தர் அருளிய தம்ம போதனைகளை ஓதினார்; இவை அறநெறிகள் பற்றியவை. இவை முறையே விநய பிடகம், தம்மபிடகம், அல்லது **அபிதம்மபிடகம்** என்று பெயர் பெற்றன. பிற்காலத்தில் அபிதம்ம பிடகத்திலிருந்து சூத்திர பிடகம் என்று மூன்றாவது பிடகம் தொகுக்கப்பெற்றது. இவை மூன்றும் இன்று "திரிபிடகம்" என்று வழங்குகின்றது; இவையே பௌத்த வேதங்களாகும். பிடகம் என்றால் பாலிமொழியில் கூடை என்பது பொருள். திரிபிடகம் என்றால் மூன்று கூடை என்று பொருள்படும்: அதாவது, மூன்று தொகுப்பு என்பது கருத்து. ஒவ்வொரு பிடகத்திலும் பல பிரிவுகள் உள. திரிபிடகம் தொகுக்கப்பெற்ற பிறகும் அவை எழுதாமறையாகவே இருந்தன; ஆசிரிய-மாணாக்கர்வழி முறையாக நெடுங்காலம் ஓதப்பெற்று வந்தன.

**பௌத்த சமயப் பிரிவுகள் :**

புத்த மதத்தில் பிற்காலத்தில் பிளவுகள் ஏற்பட்டன; பல பிரிவுகள் உண்டாயின. பிட்சு சங்கத்தில் புதிதாகச் சில பழக்க வழக்கங்கள் புகத்தொடங்கின. அவற்றைக் கண்டிக்கும் பொருட்டு வைசாலி நகரத்தில் 700 பிட்சுக்கள் மாநாடு கூடி எட்டு மாதம்

ஆராய்ந்தனர். கண்டிக்கப்பெற்ற 10,000 பிட்சுக்கள் தனிப்பிரிவாக பிரிந்துபோய் விட்டனர் என்று **தீபவம்சம்** என்ற நூலால் அறியக்கிடக்கின்றது. புத்தரது ஆதி கொள்கைகளைப் பின்பற்றிவரும் புத்தமதத்தைத் **தேரவாத பௌத்தம்** என்றும், புத்தர் காலத்தில் இல்லாத புதிய கொள்கைகளைக் கொண்ட மதத்தை **மகாயான பௌத்தம்** என்றும் வழங்குவர். தேரவாத பௌத்தமே பிற்காலத்தில் **ஹீனயான பௌத்தம்** என்று பெயர் பெற்றது. ஹீனயானம் பர்மா நாட்டிலும் இலங்கைத் தீவிலும் பரவியுள்ளது ; மகாயானம் நேபாளம், திபேத், சீனம், சப்பான் ஆகிய நாடுகளில் நடைபெறுகின்றது. தேரவாத பௌத்த நூல்கள் யாவும் பாலி மொழியில் எழுதப்பெற்றவை ; மகாயான பௌத்த நூல்கள் வடமொழியில் எழுதப்பெற்றவை. மணிமேகலையில் கூறப்பெறும் பௌத்த சமயக் கருத்துக்கள் யாவும் தேரவாத பௌத்தத்தைப் பற்றியவையாகும். இவற்றைச் சாத்தனூர் திரிபிடகத்திலிருந்து மிக அழகாகச் சொல்லுக்குச் சொல் மொழிபெயர்த்துக் கூறியுள்ளார்.

**பன்னிரு நிதானங்கள் :**

பௌத்த சமயம் பன்னிரண்டு நிதானங்களையுடையது. நிதானம் என்பது, காரணம். இவை பாலி மொழியில் அவிஜ்ஜை, ஸங்க்காரம், விஞ்ஞானம், நாமரூபம், ஷளாயதனு, பஸ்ஸவேதனு, தண்ஹா, உபாதானம், பவம், ஜாதி, ஜராமாணம் என்று வழங்குகின்றன. இவை தமிழில் முறையே பேதைமை, செய்கை, உணர்வு, அருவுருவாயில், ஊறு, நுகர்வு, வேட்கை, பற்று, பவம், தோற்றம், வினைப்பயன் என்று வழங்குகின்றன.

“ பேதமை செய்கை உணர்வே அருவுரு
வாயில் உள்ளே நுகர்வே வேட்கை
பற்றே பவமே தோற்றம் வினைப்பயன்

இற்றென வகுத்த இயல்பீ ராறும்
பிறந்தோர் அறியில் பெறும்பேறு அறிகுவர்
அறியார் ஆயின் ஆழ்நர கறிகுவர்"[1]

என்று சாத்தனார் கூறுகின்றார். இந்தப் பன்னிரு சார்புகளின் தன்மைகளைத் தம் மணிமேகலையில் 30-ஆம் காதையில் மிகத்தெளிவாக விளக்குகின்றார் சாத்தனார். இச்சார்புகளினால்தான் பிறப்பு இறப்பு உண்டாகின்றன. சார்புகளைச் சிறிது சிறிதாகக் களைந்தால்தான் நிர்வாண மோட்சம் எனப்படும் வீடு பேற்றினை எய்தலாம்.

" சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரும் நோய் "[2]

என்ற பொய்யா மொழியாரின் கருத்தும் இதுவேயாகும்.

**நான்கு உண்மைகள் :**

நிர்வாண மோட்சம் அடைவதற்கு நான்கு உயர்ந்த உண்மைகளை அறியவேண்டும். அவை துக்கம், துக்கோற்பத்தி, துக்கநிவாரணம், துக்கநிவாரணமார்க்கம் என்பன. புத்தர் பெருமான் போதி மரத்தினடியில் மெய்ஞ்ஞானம் பெற்ற பொழுது இவற்றை அறிந்தார். இந்த நான்கின் அடிப்படையில்தான் புத்தர் பெருமான் எழுப்பிய சமயக் கருத்துக்களாகிய கட்டடங்கள் யாவும் நின்றன.

**துக்கம் :**

துக்கம் என்பது நோய். பிறப்பு துன்பம்; பிணி துன்பம்; மூப்பு துன்பம்; இறப்பு துன்பம்; அன்பில்லாரோடு தொடர்பு துன்பம்; அன்புள்ளாரிடத்தினின்றும் பிரிவு துன்பம்; விரும்பியதைப் பெறுமை துன்பம்; சுருங்கக் கூறின், புலன்களால் உண்டாகும் பற்றுக்கள் யாவும்

---

1 மணிமேகலை-24 , 105-110 ; 30: 45-50.

2 குறள்-359.

துன்பம் தருவன என்று அறிதலே துக்கம் என்னும் முதல் உண்மையாகும். இதைச் சாத்தனுர்,

" உணர்வே அருவுரு வாயில் ஊறே
நுகர்வே பிறப்பே பிணிமூப்புச் சாவே
அவலம் அரற்றுக் கவலை கையாறெனு
நுவலப் படுவன நோயாகும்மே "[3]

என்று கூறுகின்ருர்.

**துக்கத் தோற்றம் ;**

துக்கோற்பத்தி என்பது நோய்த் தோற்றம். இன்னும் அவர் பிறப்புக்குக் காரணமாகவுள்ள துக்கத் தோற்றத் தைப்பற்றி இவ்வாறு விளக்கிக் கூறுகின்ருர் :

" பேதமை சார்வாச் செய்கை யாகும் ;
செய்கை சார்வா உணர்ச்சி யாகும் ;
உணர்ச்சி சார்வா அருவுரு வாகும் ;
அருவுரு சார்வா வாயி லாகும் ;
வாயில் சார்வா ஊரு கும்பே ;
ஊறு சார்ந்து நுகர்ச்சி யாகும் ;
நுகர்ச்சி சார்ந்து வேட்கையாகும் ;
வேட்கை சார்ந்து பற்ரு கும்மே ;
பற்றிற் ருேன்றும் கருமத் தொகுதி ;
கருமத் தொகுதி காரண மாக
வருமே ஏனை வழிமுறைத் தோற்றம் ;
தோற்றம் சார்பின் மூப்புப்பிணி சாக்காடு
அவலம் அரற்றுக் கவலைகை யாறெனத்
தவலில் துன்பம் தலைவரும் என்ப "[4]

பன்னிரு சார்புகளின் தொடர்புதான் பிறப்புக்கும் காரணமாகும் இங்கும் அங்கும் சிறுபான்மையே நிறை வேறுவதற்குரியன வாகிய காமலோபங்களோடு சேர்ந்த வேட்கை என்பதே இது ; இதுவே பிறப்பினும் வித்து.

---

[3] மணி-30: 179-182. [4] மணி. 30: 104-117

" அவாவென்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து "[5]

என்ற வள்ளுவப் பெருமானின் கூற்றும் இதையே குறிக்கின்றது. இன்பவேட்கையும், அதிகார வேட்கையும் இதுவேயாகும். இஃது இரண்டாவது உண்மை. சாத்தனாரும்,

" அந்நோய் தனக்குப்
பேதைமை செய்கை அவாவே பற்றுக்
கரும வீட்டமிவை காரணமாகும்."[6]

என்று கூறுவது ஈண்டு கவனிக்கத் தக்கது.

**துக்க நீக்கம் :**

துக்க நிவாரணம் என்பது நோய் நீங்கும் வாய். ஆசைக்குச் சிறிதும் இடங்கொடாமல் அதனை வேருடன் களைந்து நீக்குவதே மூன்ருவது உண்மையாகும்.

" துன்பம் தோற்றல் பற்றே காரணம் "[7]

என்னும் உண்மையை உறுதியாக உணர்வதே இதுவாகும்.

துக்கத்தை நீக்கிளுல் பிறவாமையாகிய இன்பத்தை அடையலாம். இதைப்பற்றி விநயபிடகத்தில் காணப்பெறுவதைச் சாத்தனுர்,

" பேதைமை மீளச் செய்கை மீளும் ;
செய்கை மீள உணர்ச்சி மீளும் ;
உணர்ச்சி மீள அருவுரு மீளும் ;
அருவுரு மீள வாயில் மீளும் ;
வாயில் மீள ஊறு மீளும் ;
ஊறு மீள நுகர்ச்சி மீளும் ;
நுகர்ச்சி மீள வேட்கை மீளும் ;
வேட்கை மீளப் பற்று மீளும் ;
பற்று மீளக் கருமத் தொகுதி

---

[5] குறள்-361. [6] மணி. 35 . 183-185

[7] மணி. 30 : 186

மீளும்; கருமத் தொரு மீளத்
தோற்றம் மீளும்; தோற்றம் மீளப்
பிறப்பு மீளும்; பிறப்புப் பிணிமூப்புச்
சாக்காடு அவலம் அரற்று, கவலை
கையாறு என்று இக் கடையில் துன்பம்
எல்லாம் மீளும்."[8]

என்று தெளிவாக மொழி பெயர்த்துக் காட்டுகின்றார்.

**துக்க நீக்க நெறி:**

துக்க நிவாரண மார்க்கம் என்பது நோய் நீக்கும் நெறி

" இன்பம் வீடே பற்றிலி காரணம் "[9]

என்று சாத்தனார் கூறுகின்றார். நற்காட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற் செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நல்லமைதி ஆகிய எட்டுவித ஒழுக்கத்தை மேற்கொண்டு ஒழுகுவதே நான்காவது உண்மையாகும். இவற்றை 'அஷ்டாங்க மார்க்கம்' என்று வழங்குவர். இதைத்தான் விசுத்தி மார்க்கமென்றும் பழுதிலா வாழ்க்கையென்றுங் கூறுவர்.

இந்த மார்க்கத்தை மேற்கொண்டு ஒழுகுபவர்கட்கு முக்கியமாக மூன்று குணங்கள் வேண்டும். அவை சீலம், சமாதி, பிரஜ்ஞை என்பன. சீலமாவது விலக்கிய வற்றையே செய்தல். சமாதியாவது மனத்தை ஒருமுகப் படுத்துதல். பிரஜ்ஞையாவது மெய்ஞ்ஞானம். இம்மூன் றும் திரிபிடகத்தில் அடிக்கடி சொல்லப்பெறுகின்றன.

**சீலங்கள்:**

சீலம் பஞ்சசீலம் என்றும், அஷ்டசீலம் என்றும், தச சீலம் என்றும் மூன்று வகைப்படும். கொல்லாமை,

---

8 மணி. 30: 119-133

9 மணி. 30-187

திருடாமை, வியபிசரியாமை, பொய்யாமை, கள்ளுண்ணுமை என்னும் இவை பஞ்சசீலமாகும்; இஃது இல்லறத்தார் எல்லோருக்கும் உரியது. இவ்வைந்திேனுடு இரவில் தூய்மையில்லாத உணவைப் புசியாமை, சந்தனம் முதலிய நறுமணமுள்ள பொருள்களை நுகராமை, பஞ்சணை போன்றவற்றைப் பயன்படுத்தாமை என்ற மூன்றும் சேர்ந்து அஷ்டசீலம் எனப்படும்; இஃது இல்லறத்தாரில் சற்று உயர்நிலையடைந்தவர்களுக்குரிய ஒழுக்கமாகும். இவ்வெட்டனேடு நாட்டியம், இசை முதலியவற்றை விரும்பாமை, பொன், வெள்ளிகளைத் தொடாமை என்ற இரண்டும் சேர்ந்து தச சீலமாகும்; இஃது துறவிகளுக்குரிய ஒழுக்கமாகும்.

சங்கம்:

சங்கமே பௌத்த மதத்தின் ஆணிவேர்போல் நின்று அம்மதம் உலகமெங்கும் பரவுவதற்குக் காரணமாக இருந்தது. சங்கம் என்பது பௌத்த பிட்சுக்களின் கூட்டம். சங்கம் மட்டிலும் நியமிக்கப்பெருதிருந்தால் புத்தர்பிரானுக்குப் பிறகு பௌத்தமதம் நடைபெற்றிராது. பௌத்தர்கள் புத்தரையும் தருமத்தையும் சங்கத்தையும் மும்மணிகளாகப் போற்றுவர். முதன் முதலாகக் காசி நகரத்தில் புத்தர் பெருமான் ஐந்து முனிவருக்கு உபதேசம் செய்து தொடங்கப்பெற்ற சங்கம் நாளடைவில் பெரிதாக வளர்ந்து பல்லாயிரக் கணக்கான துறவிகளையுடையதாயிற்று. ஆண்பாலாரும் பெண்பாலாரும், சிறுவரும், சிறுமியரும், வறிஞரும் செல்வரும், அறிஞரும் பேதையரும் அனைவரும் சாதி வேறுபாடின்றி சங்கத்தில் இடம் பெற்றனர். இல்லறத்தாருக்கும் துறவறநெறியில் வாழ்வோருக்கும் ஏற்றவாறு இச்சமயத்தில் கொள்கைகள் உள்ளன. மருத்துவ வசதி, கல்வி வசதி, உணவு வசதி முதலிய வசதிகளைக்

கொடுத்து துறவிகள் வாழ்க்கையோடொட்டிய சமயத் தொண்டாற்றி வந்ததால், ஏராளமான மக்கள் இந்தச் சமயத்தை மேற்கொண்டனர். அசோக மன்னர் காலத்தில்தான் தமிழ்நாட்டில் பௌத்தசமயம் பரவியது என்று ஊகிக்க இடம் உள்ளது. அசோகர் காலத்துக் கல்வெட்டுக்களாலும் விகாரைகளாலும் தூபிகளாலும் இதை ஊகிக்கலாம்.

**சங்கத்தில் சேரும் முறை :**

தொடக்கத்தில் எல்லோரும் சங்கத்தில் சேரலாம் என்ற விதி இருந்தது. நாளடைவில் சில நியமங்கள் விதிக்கப்பெற்றன. தொத்து நோய்களால் பீடிக்கப்பெரு திருத்தல், கடனில்லாதிருத்தல், அரசசேவையில் ஈடு படாதிருத்தல், தாய் தந்தையரது இசைவுபெறல் முதலியவை துறவியாவதற்கு நடைமுறை விதிகளாக அமைந்தன. தொடக்கத்தில் தலையை மழித்துக் கொண்டு துவராடையை உடுத்திக்கொண்டு த்னியாக இருந்தாலே பிட்சுத் தன்மை அடைந்துவிட்டதாகக் கருதப்பெற்றது. நாளடைவில் இதிலும் மாற்றம் ஏற்பட்டது. இருபது ஆண்டு நிறைவு எய்தியவர்கள் நேராகவே துறவியாகி சங்கத்தில் சேர்ந்துவிடலாம்; எட்டுமுதல் இருபது வயதுள்ளவர்கள் பிற்காலத்தில் துறவறத்தை ஏற்பதற்கு வேண்டிய சாதனைகளைப் பெற முயன்று கொண்டு சங்கத்தை ஒட்டினவர்களாக இருக்கலாம்.

**துறவு நிலையில் இரண்டுபடிகள் :**

துறவு நிலையை அடைதலிலும் இரண்டு படிகள் உண்டு. முதற்படியை ப்ரவாஜ்யை என்றும், இரண்டாவது படியை உபஸம்பதையென்றும் வழங்குவர். பிரவாஜ்யையாவது பழையநிலையிலிருந்து நீங்குதல்; உபஸம்பதையாவது பிட்சுக்களின் நிஷ்டையைப் பெற்றுக்

கொண்டு சங்கத்தாரில் தானும் ஒருவனுகி விடுதல். முதல் நிலையை அடைந்த ஒருவர் வெளியாருக்குச் சங்கத்தைச் சேர்ந்தவராகக் காணப்பெற்ருலும், சங்கத்தில் அவருக்கு உள்ள பதவி தாழ்ந்ததே. சிலருக்கு இரண்டு படிகளும் ஒரே காலத்தில் அளிக்கப்பெறும். ஆனல், முதற்படியை அடைந்த சில காலத்திற்குப் பிறகுதான் இரண்டாவது படியை அளிப்பது வழக்கம். முதல் நிலையைப் பெறுவோர் சங்கத்தார் எதிரில் சென்ருே ஆண்டில் முதிர்ந்த ஒரு பௌத்த துறவி யிடமோ அதைப்பெற்றுக் கொள்ளலாம். தலையை மழித்துக்கொண்டு துவராடையை அணிந்து கொண்டு முதல் நிலையை அளிக்கும் துறவியிடம் சென்று வணக்கத்துடனும் பக்தியுடனும் மூன்று தடவை, "புத்தம் சரணம் கச்சாமி, தர்மம் சரணம் கச்சாமி, சங்கம் சரணம் கச்சாமி" என்று சொல்லவேண்டும். பிறகு துறவியருக்குரிய தச சீலங்களையும் மேற்கொண்டு ஒழுகுவதாக விரதம் செய்துகொள்ளவேண்டும். இரண்டாவது படியை அடையும்பொழுது சங்கத்தார் முன் சென்று "பெரியீர், அடியேனுக்குத் துறவறங் கொடுத்தருள்க. அடியேனையும் சங்கத்தாருள் ஒருவனுக ஏற்றருள்க. அடியேன்மாட்டுக் கருணைகாட்டுக." என்று இரண்டு மூன்று தடவை சொன்ன பிறகு சங்கத்தார் அவனைப் பெயர் கூறி அழைத்து சில வினுக்களைக் கேட்பர்; அவற்றிற்குச் சரியான விடை யிறுத்த பிறகு எல்லோரும் அறியும் வண்ணம் குரு சீடர் இயற்பெயர் சொல்லி சங்கத்தில் ஒருவராகச் சேர்த்துக் கொள்ளப் பெறுவர். அதன்பிறகு பிச்சை எடுத்த உணவைத் தான் உண்ண வேண்டும்; பிறர் விட்டெறிந்த கந்தைகளையே உடுத்தவேண்டும்; காட்டிலுள்ள மரத்தடியைத்தான் இருப்பிடமாகக் கொள்ள வேண்டும்; கோமூத்திரந்தான் அவருக்குத் தக்க மருந்தாக அமைய

வேண்டும். பிறகு தன் ஆசிரியருடன் கூடவே இருந்து தருமத்தையும் சீலத்தையும் அறிந்துகொண்டு தந்தையிடம் மைந்தன் நடப்பதுபோல் நடந்துகொள்ளல் வேண்டும். இந்த நியமங்களை மேற்கொள்ள இயலாதவர்கள் இல்லற நிலைக்கே வந்து விடலாம்.

**புத்தருக்குமுன் :**

புத்த பெருமான் அவதரிப்பதற்கு முன்னதாகவே நம் நாட்டில் பௌத்த சமயத்துக்கு இன்றியமையாத கொள்கைகள் வழக்கத்தில் இருந்தன என்பதற்குச் சான்றுகள் உள்ளன. இதைப் பௌத்த நூல்களும் தெரிவிக்கின்றன. சாத்தனாரும்,

> " இறந்த காலத் தெண்ணில்புத் தர்களும்
> சிறந்தருள் கூர்ந்து திருவாய் மொழிந்தது "[10]

என்று சுட்டுகின்றார். தத்துவ விசாரணை மிகுதியாக இருந்த காலத்தில் புத்தர் பெருமான் தோன்றியதால், அத்தகைய மணம் அவருடைய கொள்கைகளிலும் கமழ்கின்றது. முன்னோர் ஞானமே அவருக்கு மூலதனமாக இருந்ததால் வேதாந்தத்திற்கும் பௌத்த சமயத்திற்கும் பலவற்றிலும் ஒற்றுமை நிலவுகின்றது. எடுத்துக்காட்டாக

> " பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம் ;
> பிறவார் உறுவது பெரும்பே ரின்பம் ;
> பற்றின் வருவது முன்னது ; பின்னது
> அற்றோர் உறுவது. "[11]

என்ற பௌத்தக் கொள்கையில் வேதாந்தக் கருத்தைக் தழுவியிருத்தல் காணலாம்.

**பௌத்தசமய மறைவின் காரணம் :**

புத்த சமயம் நம்நாட்டில் ஆதிக்கம் இல்லாது போனதற்குப் பல காரணங்கள் உள்ளன. நம் நாட்டிலுள்ள

10. மணி. 30 : 14-15 11. மணி. 2 : 64-67

சமணம், வைதிகம் ஆகிய சமயங்களின் தாக்குதல் களாலும், புத்த சமயத்திலிருந்து தோன்றிய உட்பிரிவு களிடையே நேரிட்ட வாதப்போர்களாலும் நாளடைவில் அதன் வலிமை குன்றி விட்டது. புத்தர் பெருமான் வேதாந்தக் கொள்கையில் அடங்கியிருக்கும் அப்பிரத்தி யட்சமான தத்துவங்களை அநுமான வாதங்களால் சாதிக்கமுடியாதென்ற கருத்தை யுடையவராயிருந்தார். தெய்வம் உண்டென்னும் உறுதியும், ஆன்மாக்கள் உண்டென்னும் உறுதியும் அவற்றின் இலக்கணங் களையும் சம்பந்தத்தையும் அறிந்து கொள்ளுதல் நல்லொழுக்கத்திற்கு அடிப்படை என்று அவர் உறுதியாக எண்ணுதிருந்தமையும், அவர் சமயம் வலியற்றுப்போன தற்குக்காரணம் என்றும் கருதலாம். ஆன்மாவைப்பற்றி யும் பிரம்மத்தைப்பற்றியும் வழக்காடுவதைக் காட்டிலும் ஒழுக்கத்தைத் தூய்மையாக்கி நடைமுறையில் கொண்டு வந்தால் துன்பங்குறையும் என்று எண்ணங்கொண்டே அவர் தம் தருமத்தை வெளியிட்டுப் பரவச் செய்தார். சொந்தப் பயனை நாடி முயல்வது அறமன்று என்பதும் பயன் கருதாது பிறருக்காகப் புரியும் கருமமே துன்பத்திற் கேதுவான உலகப்பற்றினை அறுப்பதென்பதும் அவருடைய கொள்கையாகும்; அதுவே அவருடைய வாழ்க்கை நெறியாகவும் அமைந்திருந்தது.

### பௌத்தசமயச் சின்னங்கள் :

இன்று புத்த சமயத்தின் ஆதிக்கம் நம் நாட்டில் இல்லாது போயினும், அதன் சின்னங்கள் அடியோடு அழிந்துபடவில்லை. ஒரு சில கொள்கைகள் இந்து மதத் தில் கலந்து காணப்படுகின்றன. புத்தரை அவதாரமாக ஏற்றுக்கொண்டது, பௌத்த சிறு தெய்வங்களைப் புதுப் பெயர்களைச் சூட்டி ஏற்றுக்கொண்டது, வேள்வியில் உயிர்க்கொலை நீக்கியது, அரசமரத்தைத் தொழுவது

மடங்களை ஏற்படுத்தியது முதலியவைகள் இந்து மதத்தில் வந்து கலந்த பௌத்த சமயக் கொள்கை களாகும். ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்ருகிய 'மணிமேகலை' பௌத்தசமயப் பெருமைக்குச் சான்ருக நிற்கின்றது; 'வீரசோழியம்' என்னும் இலக்கணநூல் அம்மதத்தைச் சேர்ந்த புத்தமித்திரனாரின் புலமைத் திறத்தை விளக்கி நிற்கின்றது. அதுமட்டுமா? இன்று நமது நாட்டுக் கொடியில் பொறிக்கப் பெற்றுள்ள அசோகச் சக்கரம் புத்த சமயத்தின் அடிப்படையில் தோன்றியதுதானே. முதல் புத்த சங்கம் தோன்றிய காசிநகரம் இன்றிருந்து (24—5—56) 'வாரணசி' என்ற பழம் பெரும் பெயருடன் விளங்கப்போகின்றது. இன்றிருந்து பல்வேறு செய்திகளையும் பிறவற்றையும் சுமந்து செல்லும் தபால் பில்லைகளிலுள்ள 'மாறனை வென்ற வீரனை' போதிநாதர் உருவம் அவருடைய கொள்கைகளையும் 'பேசாத பேச்சாக' போதித்து நிற்கும் என்பதற்கு என்ன தடை?

## 12. வளரும் பயிர்

பயிர்த் தொழிற் கலையை நன்கு அறிந்தவர்கள் சிறு பயிர்களை நன்கு கவனித்துப் போற்றினால்தான் பின்னால் அதிக பயனை எதிர்பார்க்க முடியும் என்பதை அறிவர். இது காரணமாகத்தான் பயிர்த் தொழில் செய்வோர் நல்ல விதைகளைத் தேர்ந்தெடுத்துக் காப்பாற்றி வைக்கின்றனர். சிறு செடிகளை வளர்த்துக் காப்பாற்றும் இடங்களிலும் நாற்றங்கால்களிலும் (Nurseries) அவற்றுக்குப் பொறுப்பாளர்களாக இருப்பவர்கள் அதிகக் கவனம் செலுத்தி வருவதைக் கவனித்தால் இவ்வுண்மை நன்கு விளங்கும். சிறந்ததொரு வளர்ப்புத் தோட்டத்திற்குச் சென்று அங்குச் சிறு செடிகள் எவ்வாறு புரக்கப்பட்டுப் பராமரிக்கப் பெறுகின்றன என்பதைக் கவனித்தால் எதிர் காலத்தில் அச்செடிகள் எவ்வளவு பெரிய தோப்பாகும் என்பதையும், எந்த அளவு மக்கள் சமுதாயத்திற்கு அவை பலன் கொடுக்கும் என்பதையும் முன்னதாகவே ஓரளவு கூறிவிடலாம். கோடூர் முதலிய இடங்களில் ஆரஞ்சுச் செடிகளும், சேலம் போன்ற இடங்களில் ஒட்டு மாங்கன்றுகளும், திருச்சி குளித்தலை வழியிலுள்ள எட்டரை, கோப்பு என்ற ஊர்களில் கத்தரிச் செடிகளும் இவ்வாறு கவனிக்கப்பட்டுப் பாதுகாக்கப்படுகின்றன. இவ்வாறே நெற்பயிர், கரும்பு முதலியவையும் பிற இடங்களில் நன்கு கவனிக்கப்படுகின்றன. கோயம்புத்தூர் விவசாயக் கல்லூரியில் பல பயிர்கள் இங்ஙனம் நன்கு கவனம் செலுத்தப்பெறுகின்றன.

பயிர்த் தொழிலுக்குச் சிறு பயிர்கள் மிகவும் முக்கியமாக இருத்தல்போலவே, மக்கட் சமுதாயத்திற்குச் சிறு

குழந்தைகள் மிகவும் முக்கியமானவர்கள். வருங்கால சமுதாயம் உயர்ந்த நிலையில் இருக்க வேண்டுமானால் இன்று சமுதாயத்தில் வளரும் பயிர்களாகிய சிறு குழந்தைகளை வளர்ப்பதில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். இன்றைய சமுதாயம் இருக்கும் நிலையினையும் இச் சமுதாயத்தைப் பொறுப்பாளர்களாக இருந்து ஆள்வோரின் தகுதியையும் திறமையையும் ஒழுக்கத்தினையும் கவனித்தால், இருபது அல்லது நாற்பது ஆண்டுகட்டு முன்னர் அக்காலத்திலிருந்த அரசாங்கம் குழந்தைகளின் கல்வியில் எவ்வளவு தூரம் கவனம் செலுத்தி வந்தது என்பதை ஓரளவு அறிந்துகொள்ளக்கூடும்; இன்றைய அநுபவத்திலிருந்து வருங்கால சமுதாயத்தை ஆக்கும் அரசாங்கம், இன்று குழந்தைகளின் கல்விப் பொறுப்பில் எவ்வளவு அக்கறை காட்ட வேண்டும் என்பதன் உண்மைகளைத் தெரிந்து அதற்கேற்றவாறு செயலாற்ற வேண்டும்.

> "நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
> வாய்நாடி வாய்ப்பச் செயல்."[1]

என்று வள்ளுவப் பெருந்தகை கூறும் பொன்மொழியினை ஆராய்ந்து பார்க்க வேண்டும். கேவலம் உடலின் நோய்க்கே நோயின் மூலகாரணத்தை ஆராய்ந்து அதற்கேற்ப மருந்து கொடுக்க வேண்டும் என்று சொல்லும் பொழுது, மனித சமுதாயத்தின் மனத்தைப் பற்றும் நோய்களின் மூலகாரணத்தைக் கண்டறிந்து அதற்கேற்ற வாறு அந்நோய்களைப் போக்க வேண்டாமா? நோய்கள் வந்துற்ற பிறகு போக்குவதை விட அவை வருமுன் காப்பது அறிவுடைமையல்லவா?

இன்றைய குழந்தைகளின் கல்விப் பொறுப்பில் கவனம் செலுத்தும் அரசாங்கம் முதலில் ஆசிரியர்களின்

1. குறள்—948

பொருளாதார நிலையினை உயர்த்த வேண்டும். என்ன தான் கல்வித் துறையில் பல சீர்திருத்தங்களைச் செய் தாலும், பாடத்திட்டங்களை மாற்றியமைத்தாலும் அதி காரத்திலுள்ளவர்கள் பல சுற்றறிக்கைகளையும் உத்தரவு களையும் பிறப்பித்தாலும் ஆசிரியர்களின் பொருளாதார நிலையினை உயர்த்தினாலன்றிக் குழந்தைகளின் கல்விப் பொறுப்பில் அரசாங்கம் ஒருவித நல்ல பலனையும் எதிர் பார்க்க முடியாது. ஆசிரியர்களின் நிலையினைச் சிறிதும் கவனியாது வெறும் கல்விச் சீர்த்திருத்தங்களை மட்டிலும் கவனிப்பது அடிப்படையில் பலம் இல்லாத பழைய வீட்டைச் சீர்திருத்துவது போலாகும்; வெறும் பூச்சு வேலையாலும் வண்ண வேலையாலும் யாது பயன்? கட்டடத்தின் பலத்துக்கு அவற்றால் ஒன்றும் செய்ய முடி யாதே. மேடைகளில் சிலர் சுட்டுகிறமாதிரி, பழைய காலத்து குருகுல வாழ்க்கையில் ஆசிரியர்கள் குறைந்த ஊதியத்தில் வாழவில்லையா என்று சுட்டிக் காட்டினால் போதாது; சமுதாயம் அன்றிருந்த மாதிரி இன்றுள்ளதா? அன்றைய சூழ்நிலை என்ன? இன்றைய சூழ்நிலை என்ன என்பவற்றைச் சிந்தித்துப் பார்த்தால் இம்மாதிரியான எண்ணம் எழுவதற்கே இடமிருக்காது.

வாழ்க்கை நிலையினை உயர்த்தும் பொறுப்பு அரசாங் கத்தினிடமிருந்தாலும், ஏனைய நிலைகளையெல்லாம் உயர்த்திக்கொள்வது ஆசிரியர்களிடந்தான் உள்ளது. தங்கள் அறிவை அதிகமாக வளர்த்துக் கொள்வதுடன், உயர்ந்த எண்ணங்களையும் குறிக்கோள்களையும் கொண்டு எடுத்துக்காட்டான ஒழுக்க சீலர்களாக வாழ் வதற்கு முயற்சி செய்யவேண்டும். இன்றைய வாழ்க் கைக்கு வருவாய் ஒரு பெருங்காரணமாக இருந்தாலும், பிறர் மதிக்கத் தக்கவாறு இருப்பதற்கு ஏனைய கூறு களும் உள்ளன என்பதைச் சிந்தித்துப் பார்த்தால் தெரிய வரும். வெறும் கட்டடங்களையும் ஏனைய தள

வாடங்களையும் பெருக்கிக் கொண்டால் மட்டிலும் ஒரு கல்லூரியோ பல்கலைக் கழகமோ உயர்வு அடைய முடியாது; அவையெல்லாம் கட்டாயம் தேவைதான். இருந்தாலும், எல்லாவற்றிலும் உயர்ந்ததாக வைத்து எண்ணக் கூடியது அங்கு பணியாற்றி வரும் ஆசிரியர் கூட்டந்தான் என்பதை மறக்கக் கூடாது; ஆசிரியர்களின் ஆளுமைதான் (Personality) எல்லாவற்றையும் விட, பரிமளிக்கக் கூடியது. பண்டைக் காலத்தில் ஆசிரியர்களுக்கு சமூகத்தில் எவ்வளவு மதிப்பு இருந்தது என்பதைக் கூட, மகாகவி கம்பன் ஓரிடத்தில் சுட்டியுள்ளான். இராமலட்சுமணர்களுடன் மிதிலைக்கு வந்த விசுவாமித்திர முனிவர் சனக மகாராசனின் வேள்விச் சாலைக்கு வருகின்றார்; மூவரும் சனகன் அருகில் அமர்கின்றனர். இராமலட்சுமணர்களின் முகத் தழகு சனகன் கண்களைக் கொள்ளை கொள்ளுகின்றது; அந்த அழகைத் தனது இரு கண்களாலும் பருகி அவர்களை யாவர் என்று வினவுகின்றான் சனகன். விசுவாமித்திரர் அவர்கள் தசரதனுடைய புதல்வர்கள் என்றும், வசிட்டமாமுனிவரிடம் கல்வி பயின்று வளர்ந்தவர்கள் என்றும் அறிமுகம் செய்து வைக்கின்றார்.

" திறையோடும் அரசிறைஞ்சும்
செறிகழற்கால் தசரதனும்
பொறையோடும் தொடர் மனத்தான்
புதல்வரெனும் பெயரேகாண்!
உறையோடு நெடுவேலாய்!
உபநயன விதிமுடித்து
மறைஓது வித்(து) இவரை
வளர்த்தானும் வசிட்டன்காண்"[2]

என்பது கம்பனின் வாக்கு.

---

2. கம்பரா-பாலகா'—குலமுறை-24.

"பெற்ற காரணத்தால் தசரதனுக்குப் பெயரளவில் புத்திரர்கள் என்றாலும், இவர்களுக்கு உபநயனம் முடித்து, கல்வி முதலியவற்றைக் கற்பித்து வளர்த்த தெல்லாம் முனி சிரேட்டராகிய வசிட்டனே" என்று கூறும்பொழுதுதான், ஆசிரியனை எவ்வளவு உயர்ந்த நிலையில் வைத்துக் கம்பன் பேசுகின்றான் என்பது தெரிய வரும். வசிட்டனுக்குள்ள பெருமை, தசரதச் சக்ர வர்த்திக்குக் குருவாக இருந்ததனால் அல்ல; அவன் அளித்த உயர்வாலும் பிறவற்றாலும் அல்ல; அவரது பெருமைக்கெல்லாம் அவரேதான் காரணம்.

"நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும், தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும், நிலையினும்
மேன்மேல் உயர்த்து நிறுப்பானும், தன்னைத்
தலையாகச் செய்வானும் தான்"[3]

என்ற சமண முனிவரின் திருவாக்கை ஆசிரியர்கள் எண்ணிப் பார்த்தால் இவ்வுண்மை விளங்காமற் போகாது. இவற்றையெல்லாம் சிந்தித்து ஆசிரியர்கள் தமது வாழ்க்கையினைத் திருத்தி அமைத்துக் கொள்வார் களானால், சமுதாயம் அவர்களைக் கட்டாயம் நன்கு மதிக்கத்தான் செய்யும்.

இன்றைய சமுதாயத்தில் சமுதாயத்தின் வளரும் பயிர்களாகிய குழந்தைகள் நல்ல நிலையில் வளர்ந்து, வருங்காலத்தில் உயர்ந்த சமுதாயத்தை உண்டாக்கு வது ஆசிரியர்கள் கையில் மட்டிலும் இல்லை. இதில் வேறு இருவரது பொறுப்பும், உள்ளது. கல்விக் கூடங்களை ஆட்சி புரிபவர்களுக்கும் பெற்றோர் களுக்கும் இதில் பெரும் பங்கு உண்டு என்பதை அவர்கள் அறிய வேண்டும். ஒரு பள்ளிக்கூடத்தை வருங்கால மனிதப் பயிர்கள் வளரும் சமபக்க

3. நாலடியார்-248

முக்கோண வடிவமுள்ள ஒரு வளர்ப்புத் தோட்டத் திற்கு ஒப்பிடலாம். அத்தோட்டத்தை ஆசிரியர்கள் ஒரு பக்கத்திலும், பெற்றோர்கள் மற்றொரு பக்கத்திலும் பள்ளி ஆட்சியினர் பிறிதொரு பக்கத்திலும் இருந்து கொண்டு பாதுகாத்து வருவதாகக் கொள்ளலாம். இம் மூன்று பக்கத்திலும் உள்ளவர்கள் ஒற்றுமையுடன் இருந்து கொண்டு தத்தம் கடமைகளைச் செவ்வனே அறிந்து நிறைவேற்றினால்தான் தோட்டத்தினுள் வளர்ந்து வரும் பயிர்கள் செம்மையாக வளர முடியும்; இவர்களில் ஒருவர் தமது கடமைகளில் வழுவினாலும், உள்ளே வளர்ந்து வரும் பயிர்களுக்குப் பேராபத்துதான். இன்றைய சமுதாயம் மிகச் சிக்கலான நிலைமையில் உள்ளது. கல்விக் கூடங் களில் பயிலும் மாணாக்கர்களைத் தனித்தனியே கவனிப் பதற்கு முடியாத நிலைதான் இருந்து வருகின்றது என்றே சொல்ல வேண்டும். ஒரு பக்கம் ஆசிரியப் பொறிகள் ஒலித்துக்கொண்டு செல்ல, இன்னொரு பக்கம் மாணாக்கப் பொறிகள் அமைதியுடனிருந்து கேட்டுவரும் காட்சிகள் தாம் இன்று நாம் காண்பவை. நேராக ஆசிரியமாணாக் கத் தொடர்பு இருப்பதற்கேற்ற சூழ்நிலை ஏற்படுவதற்கு வசதிகளே இல்லை; இருக்க வழிகளை அமைப்பதும் எளி தான காரியமுமல்ல. பெற்றோர்களோ தம் குழந்தை களுக்குச் சம்பளம் கட்டுவது, தேவையான நூல்கள் முதலியவற்றை வாங்கிக் கொடுப்பது ஆகியவற்றைத் தவிர, தம் குழந்தைகளின் கல்விப் பொறுப்பில் வேறு கூறுகளில் கவனம் செலுத்துவதில்லை. பள்ளி ஆட்சி யினரும் ஒரு பொறிபோல் இயங்கி வருகின்றனரேயன்றி, குழந்தைகளின் தேவைகளைக் கவனிப்பது இல்லை. குழந் தைகளும் படக் காட்சிகளுக்குப் போய் வருவது போலக் கல்விக் கூடங்களுக்குப் போய் வருகின்றனரே யன்றி, வேறு தனிப்பட்ட சிரத்தை ஒன்றும் எடுத்துக் கொள்வ தில்லை. படக்காட்சிகளிலாவது படங்களைக் கூர்ந்து

கவனிக்கின்றனர். கல்விச்சாலைகளில் பாடநேரத்தில் அவ்வாறு கவனம் செலுத்துவதுகூட இல்லை. இந்தச் சூழ்நிலையில் வளரும் பயிர்கள் எங்ஙனம் கல்வி பெறுவது? சிந்தித்துப் பார்த்தால் மனத்திற்கு மிக்க வருத்தத்தைத் தான் தருகின்றது.

உலகிலுள்ள உயிர்ப்பிராணிகளையும் மனிதனையும் உற்றுக் கவனித்தால் பலவித உண்மைகள் தெரியவரும். படைப்பு ஏணியிலேயே மனிதன்தான் உயர்ந்த, உன்னத நிலையிலிருக்கின்றான். கூர்தல் அறக் கொள்கையின்படியே (Doctrine of Evolution) மனிதன்தான் உயர்ந்த நிலையிலிருக்கின்றான்; பிற உயிர்களுக்கும் மனிதனுக்கும் இயல்பான தொடர்புகளே இல்லையென்று கூடச்சொல்லலாம். படைப்பு ஏணியின் கீழ்ப்படியிலுள்ள பிராணிகளின் வாழ்க்கையெல்லாம் இயல்பூக்கங்களின் (Instincts) அடிப்படையில் அமைந்துள்ளது; ஏணியின் மேற்படிக்குப் போகப்போக அவைகளின் வாழ்க்கை அறிவின் அடிப்படையில் அமைந்திருப்பதைக் காணலாம். ஏணியின் உயர்ந்த படியில் இருக்கும் குரங்கின் வாழ்க்கை கிட்டத்தட்ட அறிவு நிலையின் அடிப்படையிலிருப்பதையும் அதற்கு மேற்படியிலுள்ள மனிதனுடைய வாழ்க்கை, முழுவதும் அறிவின் அடிப்படையிலமைந்திருப்பதையும் அறிய முடிகின்றது. மேலே செல்லச் செல்ல உயிர்ப் பிராணிகளின் வாழ்க்கையில் இயல் பூக்கங்களின் ஆதிக்கம் குறைந்துகொண்டு வந்து, மனிதனிடம் அவற்றின் ஆதிக்கம் மிகக் குறைவாக இருப்பதைக் காணலாம். விளக்கில் விழும் விட்டில் பூச்சிகள் தம் அநுபவத்தை மறந்து மீண்டும் விளக்கில் விழுவதையும், ஒரு தடவை நெருப்பைத் தொட நேர்ந்த குழந்தை மீண்டும் நெருப்பைத் தொட அஞ்சுவதையும் கவனித்தால், இவ்வுண்மை நன்கு விளங்கும். கீழ் நிலையிலுள்ள பிராணிகளுக்குத் தம் முன் அநுபவம் பயன்படா

திருப்பதும் மனிதன் தன் அநுபவ அறிவால் சூழ்நிலைக் கேற்றவாறு தன்னை அநுசரித்துக் கொள்வதும் நாம் நாள்தோறும் காணும் உண்மைகளாகும்.

இயல்பூக்கங்களின் குறைவைத் தவிர, மனிதனிடம் இன்னொரு சிறப்பும் அமைந்துள்ளது. உயிர்ப் பிராணிகளிலேயே திமிங்கலத்தையும் யானையையும் தவிர மனிதன்தான் பெரிய மூளையைப் பெற்றுள்ளான் என்று சொல்ல வேண்டும். இயல்பூக்க நிலையிலிருந்து அறிந்துகொண்டவை யாவும் பகுத்தறிவு நிலைக்குக் கொண்டுவரப்பட்டு பாகுபாடு செய்யும் தன்மையும் முன்னநுபவத்தைப் பயன்படுத்தக் கூடிய திறனும் மனிதனிடம் இயல்பாகவே அமைந்துள்ளன.

இதைத்தவிர, இன்னொரு உண்மையும் மனிதனிடம் அமைந்துள்ளது. ஏனைய பிராணிகளின் இளமைப் பருவத்தையும் மனிதனுடைய இளமைப் பருவத்தையும் உற்று நோக்கினால், ஏனைய பிராணிகளின் இளமைப் பருவத்தை விட மனிதனுடைய இளமைப் பருவம் நீடித்திருப்பது தெரியவரும். மனிதனுடைய இளமைப் பருவம் மட்டிலும் இங்ஙனம் நீடித்திருப்பதற்குக் காரணம் என்ன? சிந்தனை செய்து பார்த்தால், சில உண்மைகள் விளங்காமற் போகா. ஏனைய பிராணிகள் யாவும் இயல்பூக்கங்களின் அடிப்படையில் மட்டிலும் சூழ்நிலைக்கேற்றவாறு தம்மைச் சரிப்படுத்திக் கொள்ளவேண்டியிருத்தலும் மனிதன் மட்டிலும் இத்துடன் அறிவு நிலையிலும் தன்னைச் சூழ்நிலைக் கேற்றவாறு சரிப்படுத்திக்கொள்ள வேண்டியிருத்தலும் தெரியவரும். ஏனைய பிராணிகள் தம் அநுபவத்தையும் மட்டிலும் கொண்டு வாழ்கின்றன; ஆனால், மனிதன் தன் அநுபவத்துடன் தனது மூதாதையரின் அநுபவத்தையுங் கொண்டு தனது வாழ்க்கையை

அமைத்துக்கொள்ள வேண்டியவனுக உள்ளான். இவ்வாறு தனது மூதாதையரின் அநுபவங்களை யெல்லாம் மனிதன் அறிந்துகொள்ள வேண்டுமானுல், அதிகக் காலம் வேண்டுமல்லவா? கோழிக்குஞ்சு, பசுங் கன்று, இவற்றின் இளமைப் பருவத்தைவிட குரங்குக் குட்டியின் இளமைப் பருவம் நீடித்தும், குரங்குக் குட்டியின் இளமைப் பருவத்தைவிட 'உர்ராங் உட்டாங்' என்ற பிராணியின் இளமைப் பருவம் அதிக மாக நீடித்தும் உள்ளன. இவை யெல்லாவற்றையும் விட மனிதனுடைய இளமைப் பருவம் மிக அதிகமாக நீடித்து உள்ளது. ஏனையவற்றின் இளமைப் பருவம் நாள், வார, மாதக் கணக்கிலிருக்க, மனித னுடைய இளமைப் பருவம் மட்டிலும் ஆண்டுகள் கணக்கில் உள்ளது. ஏனைய பிராணிகளின் குட்டிகள் சில நாட்களிலேயே பெற்ருேர் உண்ணும் உணவை ஏற்கும், நிலையையடைய, மனிதக் குழந்தை அவ்வாறு தனது பெற்ருேர் உண்ணும் உணவுகளையெல்லாம் புசிப்பதற்குச் சில ஆண்டுகளாகின்றன. ஏனைய பிராணிகளின் குட்டிகள் சில நாட்களில் ஓடி விளையாடுகின்றன; ஆனுல், நம் குழந்தையால் ஓர் ஆண்டு முடிந்த பிறகு கூட நடக்க முடிவ தில்லை. இரண்டு ஆண்டுகள் முடிந்த பிறகே பேசத் தொடங்குகின்றது. மருத்துவ நியாயப்படி (Medical jurisprudence) ஏழாண்டுகள் வரை குழந்தைதான்; சிவில் சட்டப்படி இருபத்தொரு ஆண்டுகள் முடிவுற்ற பிறகுதான் மேஜர் ஆகின்ருன்; அப்பொழுதுதான் கல்லூரி யில் படிப்பும் முடிவு அடைகின்றது. இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்தால் மனிதன் தன்னை மிகச் சிக்கலான வாழ்க்கைக்குத் தயார் செய்து கொள்வதற்கு இவ்வளவு காலம் வேண்டியுள்ளது என்பது தெரியவரும். தனது மூதாதையரின் அநுபவத்தை யெல்லாம் தான் பெறு

வதற்காகத்தான் மனிதனுடைய குழந்தைப் பருவம் நீடித்துள்ளது. இந்தக் காலத்தைத் தான் நாம் "பள்ளிப் பருவம்" என்றும், மூதாதையரின் அநுபவத்தைப் பெறுவதைத்தான் "கல்வி கற்றல்" என்றும் சொல்லுகின்றோம்.

கல்விக் கூடங்களில் கல்வி பெற்று வரும் மாணாக்கனை வளரும் ஒரு மரத்திற்கு ஒப்பிடலாம். மரத்தின் வாழ்க்கை இரண்டு பிரிவினையுடையது; தான் பலன் கொடுப்பதற்கு முன் தன்னைச் சரியான நிலைக்கு அமைத்துக் கொள்ளும் தனிவாழ்வு, தக்க வளர்ச்சியடைந்த பிறகு பிறருக்குப் பலனைத் தந்து வாழும் பொது வாழ்வு ஆகியவை அவை. தான் நல்ல வளர்ச்சியடையும் வரை மரம் பலன் தருவதில்லை; நல்ல முழுவளர்ச்சியும் அடைந்த பிறகுதான் அதன் நிழல்கூடப் பிறருக்குக் கிடைக்கின்றது. தனி வாழ்வில் மரம் தன்னை வளர்த்துக் கொள்வதில் மட்டிலும் கண்ணும் கருத்துமாக இருந்து வருவதும், தான் நன்றாக வளர்ந்த பிறகு தான் பிறருக்குப் பலன் தருவதும், கல்விக் கூடங்களில் பயின்று வரும் மாணாக்கனுக்கு நல்ல படிப்பினைகளாக உதவுகின்றன. தாவர உலகில் மரத்தின் வளர்ச்சிக்கும் மானிட உலகில் மாணாக்கனின் வளர்ச்சிக்கும், சிந்தித்துப் பார்த்தால், யாதொரு வேற்றுமையும் இருத்தல் முடியாது. மரம் வளரும்பொழுது தோட்டக்காரன் தரும் உரத்தையும் இயற்கையாகப் பூமியில் கிடைக்கக் கூடிய சத்துக்களையும் தேவையான அளவு ஏற்று வளர்ச்சியடைகின்றது. அது போலவே, மாணாக்கனும் கல்விக் கூடங்களில் ஆசிரியன் அளிக்கும் கருத்துக்களையும் நூலகத்தின் மூலம் பெறக் கூடிய கருத்துக்களையும் உளங்கொண்டு தன்னை எல்லாத் துறைகளிலும் தயாராக்கிக் கொள்ள வேண்டும். இதுதான் மாணாக்கனின் தனிவாழ்வு. மரம் முழுவளர்ச்சியடையும்

வரையிலும் பிறருக்குப் பயன் தராதது போலவே, மாணுக்கனும் கல்வியைத் தவிர வேறு துறைகளில் கவனத்தைச் சிதற விடாதிருத்தல் வேண்டும். அஃதாவது, அரசியல் கட்சி வேறுபாடுகள் முதலியவைகளில் தனது கவனத்தைச் செலுத்தக்கூடாது. மரம் முழு வளர்ச்சி எய்தியதும் சமுதாயத்துக்குப் பல விதங்களில் பயன் தந்து உதவுவது போலவே, மாணுக்கனும் தன் கல்வி முற்றுப் பெற்ற பிறகுதான் பொதுவாழ்வில் இறங்கிப் பொது விவகாரங்களில் தலையிடுதல் வேண்டும்.

சில மரங்கள் தக்க வளர்ச்சி யடைவதற்கு முன்பே பலன் கொடுக்கத் தொடங்குவதுண்டு. இவ்வாறு பலன் அளிப்பதைக் கண்டால் தோட்டக்காரனுக்கோ உழவனுக்கோ கவலை ஏற்படும். இவ்வாறு மரம் பலன் அளிக்கத் தொடங்கினுல் அது மரத்தின் வளர்ச்சிக்கே கேடு தருவதுடன் அதனுடைய ஆயுளும் கெட்டு எதிர் காலத்தில் தான் எதிர்பார்க்கும் பலனும் கிடைக்காது போகும் என்ற கவலை தோட்டக்காரன் மனத்தை வாட்டும். இளமையிலேயே பலன் தருவதைக் கண்டால் பூவைக் கிள்ளி யெறிந்தும் பிஞ்சுகளைப் பிய்த்தெறிந்தும் பிறவற்றைச் செய்தும் தோட்டக்காரன் அம் மரம் பலன் தராதவாறு செய்து விடுவான். இங்ஙனமே கல்விக் கூடங்களில் பயின்றுவரும் மாணுக்கனும் தன் கல்வியில் நாட்டம் செலுத்துவதை விட்டு அரசியல் கட்சி சமூகச் சீர்திருத்தக் கட்சி முதலிய கட்சிகளில் கலந்து கொண்டு திரிந்தால், ஆசிரியருக்கும் பெற்றேருக்கும் பள்ளி ஆட்சியினருக்கும் அது கவலையைத் தரக்கூடியதாகவே யிருக்கும். அவர்கள் அம்மாணுக்கனின் நன்மையின் பொருட்டும், அவனுடன் சேர்ந்து பயிலும் பிற மாணுக்கர்களின் நலத்தை முன்னிட்டும், அவன்மீது தக்க நடவடிக்கை யெடுத்து அவனைத் திருத்துவதற்கு முயல்வர். இஃது அவசியம் செய்யப்பெற வேண்டிய

காரியம் என்பதை எவரும் மறுக்க முடியாது. ஆகவே, வளரும் பயிராகிய மாணுக்கன் ஒரு மரத்தின் தனி வாழ்வையும் பொது வாழ்வையும் கவனித்துத் தனது தனி வாழ்வையும் பொதுவாழ்வையும் அமைத்துக் கொள்ள வேண்டும்.

இறுதியாக, கல்வி கற்கும் மாணுக்கன் கவனிக்க வேண்டிய சில முக்கியமான செய்திகள் உள. கல்விச் சாலைகளில் பயிலும் மாணுக்கன்,

“ பொழுதொடு சென்று வழிபடல் முனியான்
குணத்தோடு பழகி அவன் குறிப்பிற் சார்ந்(து)
இருஎன இருந்து சொல்லெனச் சொல்லிப்
பருகு வன்ன ஆர்வத்தன் ஆகிச்
சித்திரப் பாவையின் அத்தக(வு) அடங்கிச்
செவிவா யாக நெஞ்சுகளன் ஆகக்
கேட்டவை கேட்டவை விடா(து) உளத்(து) அமைத்து
போவெனப் போதல்”[4]

என்று ஆன்ருேர் சொல்லியபடி ஒழுக வேண்டும். நன்ருகக் கற்கக் கற்கத்தான் இவன் அறியாமை வெளிப்படும். ஆழ்ந்து கற்கும்பொழுதுதான் கற்போனது அறியாமை வெளிப்படச் செய்யும். “அறிதோறும் அறியாமை கண்டற்று”[5] என்ற கூற்று பொய்யாகப் போகுமா? ஆழ்ந்து கற்ருல்தான் கற்பவனுடைய அறிவும் வளரும் “கற்ருனைத்து ஊறும் அறிவு”[6] என்று வள்ளுவப் பெருந்தகையும் சொல்லியுள்ளார் அல்லவா?

கல்வி கற்கும் மாணுக்கன் உயர்ந்த எண்ணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். உயர்ந்த எண்ணங்கள், நோக்கங்கள் கைகூட வில்லையே என்ற

4. நன்னூல்—நூற்பா-40
5. குறள்—1110
6 குறள்—396

கவலையே மாணுக்கனுக்கு வருதல் கூடாது. எந்தச் செயலாக இருந்தாலும் "செய்ய முடியாதது" என்ற சோர்வை மாணுக்கன் அடைதல் கூடாது. அருமை உடைத்து என்று அசாவாமை வேண்டும்; எண்ணம் இருந்தால், அந்த எண்ணம் திண்மையாக மட்டிலும் இருந்து விட்டால், மாணுக்கன் எண்ணிய எண்ணி யாங்கு எய்துவான் என்பதற்கு எள்ளளவும் ஐயம் இல்லை.

"உள்ளுவ(து) எல்லாம் உயர்(வு) உள்ளல்; மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து"[7]

"ஊழ் காரணமாகக் காரியம் கைகூடாவிடினும் உயர்ந்த கருத்துக்களையே எண்ணுக" என்ற பெய்யாமொழி யாரின் வாக்கு மாணுக்கனுக்கு என்றும் வாழ்க்கையின் வழிகாட்டியாக அமைய வேண்டும்.

இவ்விடத்தில் மாணுக்கன் ஒரு முக்கிய கருத்தினைச் சிந்தித்தல் வேண்டும். நீர்ப் பூக்களையுடைய தடாகம் அவனது வாழ்க்கைக்கே வழிகாட்டியாக அமைவ தைக் கவனிக்கவேண்டும். தடாகத்தில் நீர் நிறைந்து இருக்கும்பொழுதும் நீர்ப்பூக்கள் மேலே காணப்படும்; நீர் குறைந்து விட்டாலும் பூக்கள் நீர் மட்டத்தில்தான் இருக்கும், நீர்மட்டம் தாழ்ந்திருக்கும்பொழுது நீர் மட்டத்திலிருந்த பூக்கள், நீர்மட்டம் உயர்ந்தபொழுது எப்படி நீர் மட்டத்திற்கு வந்தன? இது சிந்திக்க வேண்டிய செய்தியல்லவா? நீரின் அளவுக்குத் தகுந் தாற் போல பூக்களின் நாளங்கள் இருத்தல் விளங்க வில்லையா? இதிலிருந்து வள்ளுவப் பெருந்தகை ஒரு பெரிய உண்மையை நமக்கு வடித்துத் தருகின்ருர். மக்க ளும் அவரவர்களுடைய ஊக்கத்தின் அளவுதான் உயர்வு

7. குறள்—596.

அடைவர் என்ற உண்மையை இந்த எடுத்துக்காட்டால் தெளிய வைக்கின்றார்.

" வெள்ளத் தனைய மலர்நீட்டம்; மாந்தர்தம்
உள்ளத் தனைய(து) உயர்வு."[8]

என்ற குறள் இப்பேருண்மையை மக்கட் கூட்டத்திற்கு எடுத்துரைத்துக் கொண்டுள்ளது. நல்ல கருத்துக்களுக்கு ஆயுள் வரையறை கூட உண்டா ? அவை என்றும் இருக்கக்கூடிய சாகா வரம் பெற்றவை அல்லவா ? இல்லாவிட்டால் இயேசு மகான், புத்தர் பிரான், ஆதிசங்கரர், திருவள்ளுவர் போன்ற பெரியார்களின் கருத்துக்கள் இன்றளவும் காலத்துக்கேற்றவாறு புதுப் பொருள்களைத் தோற்றுவித்துக் கொண்டு என்றும் மார்க்கண்டேயமாக நிலைத்திருக்க முடியுமா ?

ஆகவே, வளரும் பயிர்களாகிய வருங்கால மக்களாகும் மாணக்கர்களும், வளர்க்கும் பொறுப்பிலிருக்கும் ஆசிரியர்கள், பெற்றோர்கள், பள்ளி ஆட்சியினர் ஆகியோரும், தத்தம் கடமைகளில் வழுவாது காரியங்களைச் செய்து வருவார்களேயானால், வருங்கால மனித சமூகம் செம்மையுற அமையும் ; மக்களும் வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் பெருமையளிக்கக் கூடிய வண்ணம் உயர்வு அடைவர். இவையெல்லாம் சரிவர நடைபெறுமாறு ஆட்சியிலிருக்கும் கல்வி அமைச்சர் பொறுப்பேற்றுச் செய்தால் அவரை இன்றைய சமுதாயம் பாராட்டுவதுடன், வருங்காலச் சமூகமும் பெரிதும் பாராட்டும். வருங்காலச் சமூகத்தின் அமைப்பு இன்றைய கல்வி அமைச்சரின் கையில்தான் உள்ளது என்று சொன்னாலும் அது மிகையாகாது.

---

8. குறள்—595.

## பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியாரின் நூல்கள்

**ஆசிரியம் :**

| | | | |
|---|---|---|---|
| 1. | தமிழ் பயிற்றும் முறை | 10 | 00 |
| 2. | அறிவியல் பயிற்றும் முறை | 6 | 00 |
| 3. | கல்வி உளவியல் | 6 | 00 |
| 4. | யுனெஸ்கோ : அறிவியல் பயிற்றும் மூலமுதல் நூல் | 10 | 00 |

**இலக்கியம் :**

| | | | |
|---|---|---|---|
| 5. | கவிஞன் உள்ளம் | (அச்சில்) | |
| 6. | கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி | (அச்சில்) | |
| 7. | காதல் ஓவியங்கள் | 2 | 50 |
| 8. | அறிவுக்கு விருந்து | 2 | 50 |
| 9. | முத்தொள்ளாயிர விளக்கம் (பல்கலைக்கழக வெளியீடு) | 7 | 00 |
| 10. | காந்தி நெஞ்சுவிடு தூது | (அச்சில்) | |
| 11. | மலைநாட்டுத் திருப்பதிகள் | 4 | 00 |
| 12. | காலமும் கவிஞர்களும் | 3 | 00 |

**திறனாய்வு :**

| | | | |
|---|---|---|---|
| 13. | பரணிப் பொழிவுகள் | (அச்சில்) | |
| 14. | கவிதையநுபவம் | 10 | 00 |
| 15. | தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை | 9 | 00 |

**அறிவியல் :**

| | | | |
|---|---|---|---|
| 16. | மானிட உடல் | 5 | 00 |
| 17. | அணுவின் ஆக்கம் | 8 | 00 |
| 18. | இல்லற நெறி | 10 | 00 |
| 19. | அறிவியல் விருந்து | 2 | 50 |
| 20. | இளைஞர் வானொலி | 2 | 00 |
| 21. | இளைஞர் தொலைக்காட்சி | 2 | 00 |
| 22. | இராக்கெட்டுகள் (தமிழக அரசு பரிசு பெற்றது) | 2 | 50 |
| 23. | நமது உடல் (தமிழக அரசு பரிசு பெற்றது) | 2 | 50 |
| 24. | அதிசயமின்னணு | 2 | 50 |
| 25. | அ ௱புலிப் பயணம் | (அச்சில்) | |
| 26. | தொலை உலகச்செலவு | (அசிச்ல்) | |
| 27. | வாழையடி வாழை | (அச்சில்) | |